சித்தவேதம்

சுவாமி சிவானந்த பரமஹம்ஸரால்

உபதேசிக்கப்பட்ட

மோக்ஷ சூத்திரம்



சித்தசமாஜம் ஜெனரல் பிரசிடெண்டினல்

பிரசுரம் செய்யப்பட்டது

மொழிபெயர்ப்பு அதிகாரம்

சித்தசமாஜம் தலைமை ஆபீஸுக்கு உரியது.

மதராஸ் லா ஜர்னல் (பிராஞ்சு) அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1948 விலை ரூ. 4.

இரண்டாம் பதிப்பு.

The M.L.J. Branch Press, Tirubuvanam T.D.R.
Q. H. T. E. 149. Copies—5000

முகவுரை

(o)

சித்தவேதம் என்னும் இத் தத்துவ நூல் சுவாமி சிவானந்த பரமஹம்ஸரால் உபதேசிக்கப்பட்டதும் அதுமுதன் முதலாக சென்ற 1922-ம் வருடத்தில் மலையாள மொழியில் 5000 காப்பிகள் கள்ளிக்கோட்டை மிதவாதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டும், பிரசித்தம் செய்யப்பட்டும், இரண்டாவதாக தமிழ்மொழியில் முதற் பதிப்பாக 2500 காப்பிகள் 1928-ம் வருடத்தில் கோயம்புத்தூர் எலக்ட்ரிக் ப்ரிண்டிங் ஒர்க்ஸ் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டுப் பிரசித்தம் செய்யப்பட்டுமிருக்கிறது. அவைகள் முதலில் இருபத்தொரு அத்தியாயங்களாக இருந்தன. பின்னர் 1934-ம் வருடத்தில் சுவாமிகள் கர்னாடகமொழியில் ஒரு அத்தியாயம்கூடச் சேர்த்து 22 அத்தியாயங்களாக்கி முதற்பதிப்பாக 2500 காப்பிகளை மங்களாபுரம் ரதவீதி மங்களூர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு பிரசாரப்படுத்தியும், அதன் பிறகு கர்னாடக மொழியில் எழுதிய சித்தவேதத்திற்குச் சரியான மொழிபெயர்ப்பாகத் தெலுங்கு மொழியில் முதற்பதிப்பாக 1941-ம் வருடத்தில் 500 காப்பிகள் பெஜவாடா ஆந்திர கிரந்தாலய முத்திராக்ஷரசாலே அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு பிரசித்தம் செய்யப்பட்டும் இருக்கின்றது. ஆனால் மலையாளத்திலும், தமிழிலும், சித்தவேத புத்தகங்கள் தீர்ந்து போனதினாலும், பல இடங்களிலிருந்தும் ஜனங்கள் தேவைப்பட்டுக்கொண்டிருக்கின்றதினாலும் அவ் விவரத்தைச் சுவாமிகளுக்குத் தெரிவித்தபோது மலையாளத்திலும் தமிழிலும் உள்ள சித்தவேத புத்தகங்களைச் சுவாமிகள் பரிசோதித்து எல்லா அத்தியாயங்களிலும் புதியதாக பல

தத்துவங்களையும் அதிகம் சேர்த்தும், அதல்லாமல் 9-ம் அத்தியாயத்தில் பிரம்மாவைப் பற்றியும், சரஸ்வதியைப் பற்றியும், அதிக கம்பீரமாகிய அதாவது மிக உயர்ந்ததாகிய தத்துவங்களையும் சேர்த்ததன் பிறகு புதிதாக் ஆருதாரங்கள் பிரம்மானந்தம் என்பவைகளைப் பற்றியும் மிக விரிவாயும் 22-ம் அத்தியாயமாகச் சேர்த்தும் இரண்டாம் பதிப்பாக அச்சடிக்கப்பட்டிருக்கிறது. மலையாளத்திலும், தமிழிலும் முதற்பதிப்பில் இல்லாத சில தத்துவங்களும் 22-ம் அத்தியாயமும் புதிதாக சேர்த்ததின் நிமித்தம் இந்தப் பிரகாரம் ஒரு முகவுரை வாசிப்பவர்கள் தெரிந்துகொள்ளு வதற்கு வேண்டி எழுதப்பட்டதாகும்.

இங்ஙனம்

S. விசுவம்

ஜெனரல் பிரசிடெண்டு

சித்தசமாஜம்.



HIS HOLINESS

Swami Sivananda Paramahamsa.

சித்தவேதம்

இரண்டாம் பதிப்பு

சுவாமி சிவானந்த பரமஹம்ஸரால்

உபதேசிக்கப்பட்ட

மோக்ஷ ஸூத்திரம்

———:x:———

ஓம் தத் ஸத்.

"ராகாதி ரோகான் சததானுஷக்தா
நசேஷகாய ப்ரஸ்ருதா நசேஷான்
ஔத் ஸுக்ய மோஹாரதிதான்ஜகான
யோபூர்வ வைத்யாய நமோஸ்துதஸ்மை:"

பொருள்: தேகத்தினுடைய சகலவிதமான பாகங்களிலும் வியாபித்து எப்பொழுதும் விட்டுப் பிரியாமல் சிநேகம், மோஹம் முதலிய கெட்ட வழக்கங்களை உண்டாக்கிக்கொண் டிருக்கின்ற விருப்பு வெறுப்பு முதலான ராகத்வேஷாதி பெரும் வியாதிகளை அதாவது ஆசாபாசங்கள் யாரொருவரால் வேரற நாசம் செய்யப்படுகிறதோ அந்த அசாதாரண வைத்திய ருக்கே நமஸ்காரம்.



HIS HOLINESS

Swami Sivananda Paramahamsa.

சித்தவேதம்

சுவாமி சிவானந்த பரமஹம்ஸரால்
உபதேசிக்கப்பட்ட

மோக்ஷ ஸூத்திரம்

"வந்தே பரம்பிரம்ம சிதாத்மகம்ஸ
துவந்தே குரும் சாந்தமுமேசமீசம்
வந்தே சிவானந்த குருப்ரவீரம்
வந்தே சதான்யாநபி வந்தனீயான்."

"அனந்த சுகதா தார
மகண்டானந்த விக்ரஹம்
தயாளுமதி சந்துஷ்டம்
வந்தேஹம் மமஸத்குரும்."

அத்தியாயம் 1

சிஷ்யன்: ஸத்குருவே, மாயா சமுத்திரத்திலிருந்து அலைந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற எனக்கு அதிலிருந்து கரையேறுவதற்குள்ள நல்ல மார்க்கத்தைக் காண்பித்துத் தரவேண்டி பக்தி விசுவாசத்துடன் கேட்டுக் கொள்கின்றேன்.

குரு: அன்புள்ள சிஷ்யா! மாயா சமுத்திரத்தில் இருந்து எங்கே கரையேறுவதற்குள்ள மார்க்கத்தைக் காண்பித்துத் தரவேண்டும்?

சி: எல்லாம் வல்ல ஈஸ்வரனிடம் சேருவதற்கு.

கு: ஈஸ்வரன் என்று சொல்லப்பட்டது இன்னதென்று உனக்குத் தெரியுமா?

சி: ஈஸ்வரன் என்பது உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் அதாவது உண்டாக்குதல், காப்பாற்றுதல், நாசஞ் செய்தல், முதலியவை செய்தற்குரியவர்களாகிய பிரம்மா, விஷ்ணு, மஹேஸ்வரன் என்கிற இவர்களென்று சொல்லுகிறார்கள். அவர்களைப் பலவிதத்திலும், பல கோயில்களிலும் பிரதிஷ்டாதிகள் செய்து, அநேகரும் சேவித்துக் கும்பிட்டு பூஜை நைவேத்தியம் செய்து வருகிறார்கள். ஆகையால் இவ்வண்ணமே இருக்குமென்று யானும் கருதியிருக்கிறேன்.

கு: ஆனால் இவ்வண்ணமே நீர் கருதி வந்தபோதிலும், ஈஸ்வரனுக்கு ஸர்வ வியாபகத்துவம் உண்டென்றோ! இல்லையென்றோ! உமது நம்பிக்கை?

சி: ஈஸ்வரன் ஸர்வ வியாபி. அதாவது எங்கும் நிறைந்தவர் என்றேதான் எனது பூர்ண நம்பிக்கை.

கு: ஆனால் சர்வ வியாபியான ஈஸ்வரனுக்கு நாமமோ, ரூபமோ, உண்டாவதற் கிடமுண்டோ?

சி: ஈஸ்வரனுக்கு நாமரூபங்கள் உண்டாகிறபோது, சர்வ வியாபகத்துவம் உண்டாக இடமில்லை.

கு: ஈஸ்வரன் நாம ரூபாதிகளில்லாமல் சர்வ வியாபி என்றே நீர் சொல்லுகின்றீர். அப்பொழுது ஈஸ்வரன் நம் உள்ளிலும் இருக்கின்றதோ? இல்லையோ?

சி: ஈஸ்வரனுக்கு சர்வ வியாபகத்துவம் இருப்பதினால் நம் உள்ளிலும் இருக்கிறார்.

கு: நம் உள்ளில் ஈஸ்வரன் இருக்கையில், நாம் ஈஸ்வரன் அல்லவென்றும், ஈஸ்வரன்; பிரம்மா, விஷ்ணு, மஹேஸ்வரராகும் என்றும், அதல்லாவிடில், கோவில்களில் பிரதிஷ்டை செய்துள்ள பிம்பங்களே ஈஸ்வரராகுமென்றும் சங்கற்பித்து நம்பும்போது நாம் யார்? ஈஸ்வர மதஸ்தர்களோ? அல்லது நிரீஸ்வர மதஸ்தர்களோ?

சி: சர்வ வியாபியான ஈஸ்வரனை, எவ்விதம் சங்கற்பித்தாலும் அதை ஈஸ்வர மதம் அல்லவென்று சொல்லுவதற்கிடமுண்டோ?

கு: ஈஸ்வரன் நம்முள்ளில் இல்லாவிடில், நமக்கு எதையும் கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ, பேசுவதற்கோ முடியுமா?

சி: முடியாது.

கு: அதற்கொரு உதாரணம் சொல்லுகிறேன். அதாவது ஒருவன் செத்தால் பிணமாகிறான். அதற்கு ஏதேனும் கேட்பதற்கோ, காணுவதற்கோ, அறிவதற்கோ, பேசுவதற்கோ, அசைவதற்கோ முடியுமா?

சி: முடியாது.

கு: அது என்ன காரணம்?

சி: அதில் ஈஸ்வர சைதன்யம் இல்லாததினால்.

கு: அதனால் ஈஸ்வர சைதன்யம் இல்லாவிடில் நமக்கு யாதொரு உணர்வுமில்லை. இக் காணுகிற உலகம் முதலிய யாதொரு நிலைமையுமில்லை. ஆகையினால் ஈஸ்வர சைதன்யத்தினாலேதான், நமக்கு இவைகளெல்லாவற்றையும் கேட்கவும்,

காணவும், அறியவும் இடமுண்டாயிற்று. அச்சந்தர்ப்பத்தில் ஈஸ்வரனே, இவைகளெல்லாவற்றையும் அறிகிருரென்று நம்பவேண்டியது. அந்த விதம் ஈஸ்வரனுயிருக்கின்ற, 'தான்' தானல்ல ஈஸ்வரன் என்றும், ஈஸ்வரன்; பிரம்மாவாகும், விஷ்ணுவாகும், மஹேஸ்வரராகும் என்றும், அது கோவில்களிலுள்ள பிம்பங்களிலாகும் என்றும், மற்றும் சங்கற்பிக்கும் போது நம்மை ஈஸ்வர மதஸ்தர் என்று சொல்லக்கூடுமோ?

சி: அவ்விதம் ஆலோசித்துப் பார்க்கும்போது, நாம் நிரீஸ்வரமதஸ்தர்கள். அதாவது ஈஸ்வரன் இல்லாதே நாசம் செய்கிறவர்களே யாகின்ருேம்.

கு: ஆனல் தன்னிலுள்ள ஈஸ்வர சக்தியை வெளியில் விடாமல், எவனெருவன் தன்னிலேயே நிறுத்துகிறனே, அவனே ஈஸ்வரமதஸ்தன்.

சி: குருவே! என்னிலுள்ள ஈஸ்வர சக்தியை வெளியில் விடாமல், என்னில், எவ்விதம் நிறுத்துவது. அந்த மார்க்கத்தை, எனக்குக் காண்பித்துக் கொடுக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

கு: அந்த மார்க்கத்தைக் காண்பித்துத் தருகிறவர் யார்?

சி: அவரே குரு.

கு: குரு என்பவர் யார்?

சி: குரு என்பது ஈஸ்வரனென்று எனது நம்பிக்கை.

கு: ஈஸ்வரனெருக்காலும் குருவாய் வருவதற்கிடமில்லை. ஏனென்றல் ஈஸ்வரன் நாமரூபாதிகளில்லாமல் எங்கும் நிறைந்திருக்கின்ற வஸ்துவென்று நீரே சொன்னீரல்லவா? அப்படியுள்ள வஸ்து நம்மிலிருந்து வேறு படாமலிருக்கின்றதா? வேறுபட்டிருக்கின்றதா?

சி: அது அபின்னமாய், அதாவது வேறு படாமலிருக்கின்றது.

கு: அப்படியிருக்கிற வஸ்து நமது குருவாக வருவதற்கிடமில்லை. காரணம்; குருவென்று வருகையில் நம்மிலிருந்து வேறுபடுத்திச் சங்கற்பிக்கின்ருேம். அப்போது குரு வேறு

படுகின்றது. அப்படி வேறுபடும்போது ஈஸ்வரன் குருவாய் வருவதற்கிடமுண்டா? தவிர, ஈஸ்வர சைதன்யம் நம்மில் இல்லாவிடில் பிணமாகின்றோம். அவ்விதமான சைதன்னிய வஸ்துவை, நம்மிலிருந்து குருவாய் வேறுபடுத்தும்போதும், நாம் பிணமாகின்றோமல்லவா? அவ்விதம் பார்க்கும் போதும், ஈஸ்வரன் குருவாய் வருவதற்கிடமுண்டா?

சி: அவ்விதம் ஆலோசித்துப் பார்க்கும் பொழுது, ஈஸ்வரன் குருவாக வருவதற்கிடமில்லை.

கு: அதல்லாமல், ஈஸ்வரன் குரு அல்ல, என்பதற்கு உதாரணம் என்னவென்றால், ஈஸ்வரன் உண்டென்றோ, இல்லையென்றோ, உமது நம்பிக்கை?

சி: ஈஸ்வரன் உண்டென்றேதான்.

கு: ஆனால் அந்த ஈஸ்வரன் ஒரு சமயத்தில் மாத்திரமிருக்கின்றதோ? அல்லது எப்பொழுது முள்ளதோ?

சி: அது எல்லா சமயத்திலுமுள்ளது.

கு: ஆனால் நீர் தூங்கும் சமயத்தில் ஈஸ்வரன் உண்டோ, இல்லையோ?

சி: உண்டு.

கு: அந்தச் சமயத்தில் குரு உமதருகில் வந்திருந்தால் நீர் அறிகிறதுண்டா?

சி: அறிகிறதில்லை.

கு: என்ன காரணம்? நீர் தூங்கும் சமயத்தில் ஈஸ்வரன் உண்டல்லவா? அந்தச் சமயத்தில் நீர், அறியாமலிருப்பதற்குக் காரணமென்ன? அதைச்சொல்ல முடியுமா?

சி: சொல்ல முடியாது.

கு: ஆனால் அதன் காரணம், ஈஸ்வரனுக்கு இரண்டு நிலைகளிருக்கின்றன. அவைகள் என்னவென்றால், சகளத்துவம், அதாவது களங்கமுடையதும், நிஷ்களத்துவம் அதாவது களங்கமில்லாதது மெனப்படும். எப்பொழுது ஈஸ்வரனுக்கு சகளத்துவம் சம்பவிக்கின்றதோ, அந்தச் சமயத்தில் ஈஸ்வரன் சகுணனாகி அதாவது குணமுடையவனாகி

அப்போது விகாராதிகளுண்டாகி படைப்பு, காப்பு, அழிப்பு இவைகளுண்டாகி, ராகத்துவேஷியாக அதாவது விருப்பு வெறுப்பு இவைகளாய் அமைகிறது. எப்பொழுது ஈஸ்வரனுக்கு நிஷ்களத்துவம், அதாவது களங்கமில்லாமல் ஆகின்றதோ, அப்பொழுது, ஈஸ்வரன் நிர்க்குணனாய், அதாவது குணமில்லாதவனாய், நிர்விகாரியாய், அதாவது விகாரமில்லாதவனாய், சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாராதிகளிலதாய், ராகத்துவேஷமில்லாததாகி அமைகின்றது. ஆனாலிவைகளனைத்துமுண்டாகின்றதெவ்விட மிருந்தென்றால், தன்னிலிருந்தேயாகும். அதென்னவென்றால், ஒரு பிணத்திற்கு இவைகளொன்றுமில்லை. அது ஏனென்றால், பிணத்தில் ஈஸ்வர சைதன்னியமில்லாததினாலாகும். ஈஸ்வர சைதன்னியம், தன்னிலிருக்கும்பொழுது மாத்திரமே, இந்த அவஸ்தைகள் உண்டாகின்றன. அதெப்படி என்றால், தன்னிலுள்ள ஈஸ்வர சக்தி, தன்னிலேயே லயித்து, வெளியில் வியாபிக்காமலிருக்கும் பொழுது, நிஷ்களனாகிறது. அது நம்முடைய தூக்கத்திலுள்ள நிலைமை. அப்போதும் நமக்கு ஜீவனுண்டு. ஜீவனுக்கு யாதொரு களங்கமுமில்லை. அது களங்கமின்றி, நிர்மலமாய், அதாவது பரிசுத்தமாய் ஆத்மாவாயிருக்கின்ற நிலைமை.

அதற்கு உதாரணம்:—மிகக்கொடுமையும், கடூரமுமுள்ளவனும், கொலைபாதகனுமாயிருக்கின்ற ஒருவன் தூங்குகிற சமயத்தில் அவனுக்கு ஜீவனுண்டு. அப்பொழுது அந்த ஜீவனுக்கு யாதொரு களங்கமுமில்லை. அச்சமயம் ஜீவன் நிஷ்களனாயிருக்கின்றது. அந்த ஜீவனே சிவன். அப்பொழுதாகும் "ஜீவ: சிவோஹம்" என்கிற நிலைமை. அந்த நிலைமை தவறி, வெளியில் வியாபித்து மற்றொன்றாய்ப் பிரதிபிம்பிக்கும்போது அதாவது பிரதிபலிக்கும்போது ஜீவனும், அந்த பிரதிபிம்பித்தலைவிட்டு வெளியிலே வியாபிக்காமல், தன்னில் தானே லயிக்கும்போது சிவனுமாகிறது. இதன் காரணமாகத்தான் "ஜீவ: சிவோஹம்" என்று சொல்லக் காரணம். சிவனே ஈஸ்வரன். அந்த ஈஸ்வரனுக்கேயாகும் மேற்சொல்லிய விதத்தில் நிஷ்களத்துவம் உண்டாயிற்று. அப்பொழுது ஈஸ்வரன் நிர்க்குணனாகிறது. நிர்க்குணனென்றால் குணமில்லாதவன். குணங்கள், ஸாத்வீகம்,

ராஜஸம், தாமஸம் என்பவைகளாகும். இம் மூன்று குணங்களுமில்லாமல் ஆகின்ற நிலைமையில் நிர்க்குணன். அப்பொழுது நிர்விகாரியாய் நிர்மோகியாய், ராகத் துவேஷாதிகள் இல்லாமலாய், அமைகின்றது. அதுதான் நாம் தூங்கும் சமயத்திலுள்ள நிலைமை. அப்பொழுது தன்னிலே யிருக்கின்ற ஈஸ்வர சைதன்னியம், தன்னிலடங்கி, நிர்க்குணன், நிஷ்களன், நிர்விகாரி என்றிவ்விதமாய் அமைகிறது. எப்பொழுது தூக்கம் விழித்து, தனது சக்தி வெளியில் வியாபிக்கின்றதோ, அப்பொழுது சகளனாகிறது. சகளன் என்றால் களங்கத்தோடு கூடியவன் என்றாகும். அப்போது விகாரியும், சகுணனுமாகிறான். சகுணன் என்பது, முன் விவரித்த மூன்று குணங்களோடு கூடியவன். அந்த மூன்று குணங்களும் உண்டாகும்பொழுது சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் உண்டாகின்றன. இவைகள் எல்லாம் தன்னிடத்திலிருந்துண்டானவைகளாகும். தான் இல்லாவிடில் இவ்விதமான யாதொரு நிலைமையுமில்லை. அப்பொழுது, தான் தானே சகளனாகிறதும் நிஷ்களனாகிறதும், சகுணனாகிறதும், நிர்க்குணனாகிறதும், விகாரியாகிறதும், நிர்விகாரியாகிறதும். ஆகையினால், தான் தானேயாகும் ஈஸ்வரன். தானாயிருக்கின்ற ஈசுவர சைதன்னியம், தன்னிலே அடங்கித் தூங்கும்பொழுது, ஈஸ்வர சைதன்னியம் ஒன்று மாத்திரமே யுள்ளதாயும், மற்றெல்லாம் இல்லாததாயும் ஆகின்றது. அதனாலேதான், தூங்கும் சமயத்தில் குரு வந்து அருகிலிருந்தபொழுது, தெரியாமலிருக்கக் காரணம். ஆனால் குரு வந்திருக்கிறார் என்றுள்ள சங்கற்பம் உமக்கு எப்பொழுது உண்டாகிறது?

சி: தூக்கம் விழித்தபொழுது.

கு: தூக்கம் விழித்தபொழுது சங்கற்பம் எவ்விடத்திலிருந்து உண்டாகிறது?

சி: என்னிலிருந்தே உண்டாகிறது.

கு: என்னில் என்றால் எவ்விடத்திலிருந்து? தூங்கும் பொழுது நீர் இல்லையா? அப்பொழுது சங்கற்பம் உண்டாயிருந்ததா? தூக்கம் விழித்தபொழுது அது எவ்விதம் உண்டாகிறது?

சி: தூக்கம் விழித்தபொழுது எனக்கு விகாராதிகளுண்டாகி, அவ்விகாராதிகளிலிருந்து உண்டாகிறது.

கு: விகாராதிகள் எவ்விடமிருந்து உண்டாகின்றன?

சி: ஜீவனிலிருந்து உண்டாகின்றன.

கு: ஜீவனிலிருந்து எப்படி உண்டாகிறது? தூங்கும் சமயத்தில் உங்களுக்கு ஜீவனில்லையா? அப்போது விகாராதிகள் உண்டாயிருந்தனவா? தூக்கம் விழித்தபொழுது உமக்கு என்ன உண்டாயிற்று?

சி: சங்கற்பம் உண்டாயிற்று?

கு: அந்தச் சங்கற்பம் எவ்விடமிருந்து உண்டாகிறது?

சி: மனதிலிருந்து உண்டாகிறது.

கு: மனதில்லாவிடில் யாதேனும் இருக்கின்றதோ?

சி: இல்லை.

கு: அப்பொழுது குரு என்கின்ற சங்கற்பம் எவ்விடமிருந்து உண்டாயிற்று?

சி: மனதிலிருந்தே.

கு: அப்பொழுது குரு யார்?

சி: மனம்.

கு: சங்கற்பம் செய்கிறதற்குள்ள சக்தி யாருக்கு இருக்கின்றதோ, அவராகும் புரோகிதர். அவரே குரு. அதற்கு உதாரணம்:—ஒரு கோவில் உண்டாக்கி அதில் ஒருவர் ஒரு சங்கற்பம் செய்கிறார். யார் அங்கே சங்கற்பம் செய்கின்றவரோ அவரே அவ்விடத்தில் புரோகிதர். சங்கற்ப சக்தி எவருக்கிருக்கின்றதோ அவராகும் சங்கற்பிக்கின்றவர். அப்படியுள்ளவரைத்தான் அவ்விடத்தில் தந்திரி என்றும், புரோகிதர் என்றும், சொல்லுகின்றோம். இந்த விதமாக நமக்கு, உலகென்ற சங்கற்பம் எங்கிருந்து உண்டாகிறது?

சி: மனதிலிருந்து.

கு: அப்பொழுது சங்கற்ப சக்தி யாருக்கிருக்கின்றது?

சி: மனதிற்கு.

கு: அப்பொழுது புரோகிதர் யார்?

சி: மனதாகும்.

கு: ஆனால் நமக்கு எத்தனை குரு உண்டு?

சி: ஒரே குரு.

கு: அது ஒருபொழுதும் வராது. அவனவனுக்கு அவனவனுடைய மனதே குருவாகும். வேறு குரு இல்லை. ஆனால் குரு சிஷ்யன் என்கிற நிலைமையுமில்லை. அது எப்படியென்றால், மனதில்லாவிடில் யாதொன்றுமில்லை. எல்லாம் மனதிலிருந்தே தானுண்டாகின்றது. ஆனதால் மனதேயாகும் குரு. தவிர ஒன்றிலிருந்து இரண்டுண்டானதோ? அல்லது இரண்டிலிருந்து ஒன்றுண்டானதோ? எப்படி உம்முடைய நம்பிக்கை?

சி: ஒன்றிலிருந்தே இரண்டுண்டானதென்றுதான் சொல்லி வருகிறார்கள். அதுபோலவேதான் நானும் கருதியிருக்கிறேன்.

கு: ஆனால் அப்படிக் கருதுவது தவறு. ஒன்றிலிருந்து இரண்டுண்டாவதில்லை. இரண்டிலிருந்தேயாகும் ஒன்றுண்டானது. அதன் காரணம் "ஒன்று" எனச் சொல்லவேண்டுமேயானால், அதனுடைய ஆதியும் அந்தமும், அதாவது அடியும் முடியும் காணவேண்டும். ஆதியந்தம் உண்டாகும்பொழுது மாத்திரமே, ஒரு வஸ்துவென்று தீர்மானிக்க முடியும். ஆதியந்தமில்லையானால், ஒரு வஸ்துவென நிச்சயிக்க முடியாது. ஒருவஸ்துவெனத் தீர்மானிக்கும்பொழுது, அதற்கு ஒரு ஆதியுண்டு. ஆதியுண்டாகும்பொழுது, அது நிற்பதற்கு ஒரு அடி ஸ்தானம் வேண்டும். அடி ஸ்தானமில்லாவிடில் அது நிற்க முடியாது. அந்தம் வேண்டுமென்றால் அதற்குமேலே ஒரு வெளி வேண்டும். வெளியாயிருக்கின்ற ஆகாசம் மேலேயில்லாவிடில், அந்தம் உண்டாகிறதில்லை. அப்படியிருக்க, ஆதியாயிருக்கின்ற வஸ்து நிற்பதற்காக அடி ஸ்தானமாகிய ஆதாரம் ஒன்று கீழும், அந்தம் காணவேண்டியதிற்கு வெளியான ஆகாசமாயிருக்கின்ற ஒன்று மேலேயும் உண்டாகின்றன. அவ்விதம் உண்டாகும்போது, இரண்டாகி, அந்த இரண்டிலாகும் ஒன்று நிற்பது. தவிர, பூமியென்றும், ஆகாசமென்றும், இரண்டு நிலைமைகளில்லாவிடில், யாதொரு வஸ்துவும் உண்டாகுமா?

சி: உண்டாகாது.

கு: ஆகையால் எல்லா வஸ்துக்களும் இரண்டிலிருந்தே தான் உண்டாகின்றன. அதற்கு உதாரணம், ஏதேனும் ஒரு விதையை எடுப்போம். அதன் உள்ளில் உள்ள அவ்வித்தின் பருப்பு காணுவதில்லை. ஏனெனில் அந்த வித்தின் உள்ளில் அது அடங்கி, நிறைந்து அடிமுடியில்லாமலிருப்பதினுலாகும். ஆனல், அதிலிருந்து ஒரு முளை கிளம்பவேண்டுமென்றுல் அவ் வித்து எவ்விதமாக வேண்டும்?

சி: அவ்வித்தினுடைய முகம் இரண்டாகிப் பிளவுபட வேண்டும்.

கு: அப்பொழுது எதிலிருந்து அந்த ஒன்று அதாவது முளை உற்பத்தியாகின்றது?

சி: இரண்டிலிருந்தே.

கு: அஃதே போன்று நம் உத்பவமும் இரண்டிலிருந்தே யாகும். ஏனெனில் ஸ்திரீ மாத்திரமிருந்தால் அவளிட மிருந்தோ, அல்லது புருஷன் மாத்திரமிருந்தால் அவனிட மிருந்தோ சந்தானமுண்டாகிறதில்லை. ஸ்திரீயும் புருஷனும் சேர்ந்தால் மாத்திரமே சந்தானம் உண்டாகும். அப்போது நாமும் இரண்டிலிருந்தேதான் உண்டானேம். இதைக் கொண்டு ஒன்று எதிலிருந்து உண்டாகின்றது என்று வெளிப் படுகின்றது?

சி: இரண்டிலிருந்தே உண்டாகின்றது.

கு: இரண்டில்லாவிடில் என்னவாகும்?

சி: ஒன்றுமில்லாததாகும்.

கு: இதற்குத்தான் "அத்துவைதம்", என்று சொல்லு கிறது. அத்துவைதமென்றுல் "துவைதாஹிதம்." அதாவது இரண்டில்லாதது. ஆனல் இரண்டென்றுள்ள நிலைமை எவ்விடமிருந்துண்டாயிற்று என்றுல், அது தன்னிலிருந்தே யாகும். தன்னுடைய சக்திக்குச் சலனம் உண்டானபோது, இரண்டென்கிற நிலைமை உண்டாயின. "தான்" என்றுல் "அக்ஷரம்." "அக்ஷரம்" என்றுல் "க்ஷரஹிதம்." அதாவது நாசமில்லாதது. ஏனென்றுல் நாம் கேட்கிறதும், காண்கிறதும், அறிகிறது என்றல்லாமல் ஆதியந்தமுள்ள எல்லா வஸ்துக்களும்

நசித்துப் போகின்றதும், எந்த வஸ்துவுக்கு ஆதியந்த மில்லாமலிருக்கின்றதோ, அந்த வஸ்து நசிக்காததுமாகும். அந்தவஸ்துவாகும் "ஈஸ்வரன்." அப்போது ஈஸ்வரனாய், தானாய் ஆதியந்தமில்லாததாகி, அக்ஷரமாயிருக்கின்றதிலிருந்து வெளியென்னும், ஆகாசமுண்டாயிற்று. அந்த ஆகாசத்தில் "தான் தானே" சக்தியாய் சலிக்கின்றதும், அப்பொழுது அதிலிருந்து எல்லா நிலைமைகளும் உண்டாகின்றன. எப்பொழுது "தான்" வெளியாயிருக்கின்ற ஆகாசமாகி, சக்தியாய் சலிக்கத் தொடங்கிற்றோ, அப்பொழுது அது இரண்டாயிற்று. அதற்கே பிரம்மம் என்றும், மாயை என்றும் சொல்லுகிறது.

சி: ஓ! குருவே! நாசரஹிதமான வஸ்துவிலிருந்தே பிரம்மமென்றும், மாயையென்றும், இரண்டு நிலைமைகள் உண்டானதென்று அருளிச்செய்தீர்களல்லவா? அதை இன்னும் விபரமாய்த் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கு: ஆதியந்தமின்றி நாசமில்லாததாயிருக்கின்ற வஸ்து, எப்பொழுது, ஆகாசமாகின்றதோ, அப்பொழுது, மேல் என்றும், கீழ் என்றும், இரண்டு நிலைமைகளுண்டாகின்றன. அவைகளில் மேலாயிருக்கின்றவஸ்து பிரம்மமும், கீழாயிருக்கின்ற வஸ்து மாயையும் ஆகும். மாயையிலிருந்தே எல்லாம் உண்டாயிருப்பது. நாம் எவைகளை எல்லாம் கேட்கின்றோமோ, காண்கின்றோமோ, அறிகின்றோமோ அவைகளெல்லாம் அம்மாயையிலேயே இருக்கின்றன. மாயையில்லாவிடில் யாதொரு வஸ்துவுமில்லை. மாயையில்லையானால் பிரம்மம் என்கிற ஒரு நிலைமையுமில்லை. அதென்னவென்றால் பிரம்மமாய் தானாயிருக்கின்ற வஸ்துவிற்குச் சலனம் உண்டானது. அந்தச் சலனத்திற்குத்தான் மாயையென்று சொல்வது. மாயையாயிருக்கின்ற தனது சக்தி, எப்பொழுது தன்னில் லயிக்கின்றதோ, அப்பொழுது யாதொன்றுமில்லை. பிரம்மம் என்கிற ஒரு நிலைமையுமில்லை. தனக்குச் சலனம் உண்டாகும்பொழுது, பிரம்மம் என்கிற ஒரு நிலைமையும் உண்டானது. அது பிரமையாகும். எப்பொழுது பிரமையாயிருக்கின்ற சலனம் தன்னிலடங்குகின்றதோ, அப்

போது அடிமுடியில்லாமல். ஓசையற்றதாய், காண முடியாததாய், சூன்ய பதவியாகிய ஆனந்த முண்டா கிறது. அந்தச் சந்தர்ப்பத்தில் பிரம்மமென்கிற நிலைமையில்லை. ஓசை முதலானவைகளாகிய எல்லா நிலைமைகளும் உண்டா கின்றது; மாயையிலிருந்தேயாகும். மாயையென்றால் யாதொன்று இல்லாததோ அதுவேயாகிறது. இக்காணுகின்ற சராசரங்களல்ல. ஆனால் உலகத்தில் மாயையென்று சொல்லி வருகின்றது, இக்காணுகின்ற சராசரங்களுக்கேயாகும். அது சரியல்ல. மாயையிலேதான், எல்லாம் நிலைகொண்டிருக் கின்றது. இதற்கெல்லாம் அடிப்படை மாயை. மாயையில்லா விடில் யாதொன்றுமில்லை. அது எப்படியென்றால், இதோ பாருங்கள்! ஒரு குத்து விளக்கு. இந்த விளக்கை உண்டாக்கு வதற்கும், இங்கே கொண்டுவந்து வைப்பதற்கும், எடுத்துக் கொண்டுபோவதற்கும், இதைக் கழட்டுவதற்கும், துடைப்ப தற்கும், மற்றும் பல செய்வதற்கும், அடிப்படையாயிருக் கின்றது பூமி. பூமியில்லாவிடில் இதை உண்டாக்குவதற்கோ, கொண்டுவந்து வைப்பதற்கோ, கழட்டுவதற்கோ, துடைப் பதற்கோ, யாதொன்றும் செய்ய முடியாது. ஆனால் இந்த விளக்கிற்குப் பூமி என்று சொல்வதற்கிடமில்லை. பூமிக்கு பூமி என்றும், விளக்கிற்கு விளக்கென்றும்தான் பெயர். ஆனால் மேற்சொன்ன பிரகாரம் செய்வதற்குப் பூமியே அடிப் படையாகவிருக்கின்றது. இதுபோலவேதான், ஏதாவதொன்று உண்டாவதற்கோ, உண்டாக்குவதற்கோ, நசிப்பதற்கோ, நசிப் பிப்பதற்கோ, கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ, எல்லாவற்றிற்கும் அடிப்படையாயுள்ளது மாயை. மாயை இல்லாவிடில், மேற்சொன்னவை யாதொன்று முண்டாக இடமில்லை. ஆகையால் காணப்படுகின்ற இச்சராசரங்கள் யாவும் மாயையிலேயே இருக்கின்றன. இதற்கு அடி ஸ்தானம் மாயை. பார்க்கின்ற இவை யாவும் மாயையல்ல. மாயை என்கின்றது யாதொன்று யில்லாததாகின்றதோ அதுவே யாகும். அதாவது யாதொன்று என்பது நித்தியமாயிருக் கின்றது. அந்த நித்தியமான வஸ்து அறிவு. அறிவென் கிறது ஞானம். ஞானம் என்பது போதம். அந்த போதம் என்பது வித்தை. வித்தை என்பது அக்ஷரம். அந்த அக்ஷரம்

என்பது "தான்." அப்பொழுது, தானும், அக்ஷரமாயும், வித்தையாயும், போதமாயும், ஞானமாயும், அறிவாயும், நித்தியமாயும் உள்ளது, இல்லாமல் போகின்றதற்கே "மாயை" என்று பெயர். மாயை என்பது அநித்தியமாகி, அறிவில்லாததாகி, அஞ்ஞானமாகி, போதமில்லாததாகி, வித்தையில்லாததாகி, அக்ஷரமில்லாததாகி, தானில்லாததாகித் தீருகின்ற நிலைமையாகும். அதெவ்வாறெனில் இப்பொழுது நமக்கு அறிவு உண்டோ? இல்லையோ?

சி: அறிவு உண்டு.

கு: அந்த அறிவு என்று சொல்வது, எதுவென்று உம்மால் சொல்லுவதற்கு முடியுமோ?

சி: சொல்லுவதற்கு முடியாது.

கு: அறிவென்பது நாம் கேட்கிறதும், காண்கிறதும் அறிகிறதுமல்ல. ஆனால் இவ்விதம் கேட்கின்றதும், காணுகின்றதும், அறிகின்றதுமாகிய இவையாவும் தான் என்னும், அறிவாயிருக்கின்ற வஸ்து, தன்னிடமிருந்து, வெளியே வந்து வியாபிக்கும்போது, அதில் பிரதிபிம்பமாகியும், எதிரொலியாகியும், கேட்பதும், காணுவதும், அறிவதுமாகும். ஆனால் அறிவு என்கிற வஸ்து, நம்மில் இல்லை என்றால், நமக்கு யாதொன்றும் கேட்கவோ, காணவோ, அறியவோ முடியாது. அதெப்படியென்றால் ஒருவன் செத்துப்போகிறான். செத்துப் போனால் பிணமாகிறது. அந்தப் பிணத்திற்கு ஏதாவது கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ முடியுமா?

சி: முடியாது.

கு: அது ஏன்?

சி: செத்துப்போனதினால்.

கு: செத்தபோது அதற்கு என்ன இல்லை.

சி: அறிவு இல்லை.

கு: அறிவு இல்லாதிருப்பதற்குக் காரணம் என்ன?

சி: ஜீவன் இல்லாததினால்.

கு: ஜீவன் இல்லை என்று எவ்விதம் தீர்மானித்தீர்?

சி: யாதொரு அசைவும், சேஷ்டையுமில்லாததினால்.

கு: ஒரு மனிதன் தூங்கும்போது சலனமோ, சேஷ்டையோ ஏதேனுமுண்டோ?

சி: இல்லை.

கு: அப்பொழுது அவன் செத்து விட்டானென்று சொல்லுவதுண்டோ?

சி: இல்லை.

கு: ஏன்?

சி: அவனுக்கு ஜீவனிருப்பதனால்.

கு: அவனுக்கு அப்பொழுது ஜீவன் உண்டென்று எதைக்கொண்டு தீர்மானித்தீர்?

சி: அவன் சுவாச உச்சுவாசம் செய்கிறதினால்.

கு: செத்தானென்று என்ன காரணத்தால் தீர்மானிக்கப் பட்டது?

சி: சுவாச உச்சுவாசம் இல்லாமற் போனதினால்.

கு: அப்பொழுது ஜீவனுடைய சக்தியாகிய "வாயு" நம்மில் இருக்கின்றபோது மாத்திரமே, நமக்கு அறிவு இருக்கின்றது. நம்மிலிருக்கின்ற ஜீவ சக்தியாகிய வாயு, முழுவது மில்லாமற் போனால், நமக்கு யாதொரு அறிவுமில்லை. அது எப்படி என்றால், ஒருவன் செத்துப் போகிற சமயத்தில், மேல் மூச்சு வாங்கி புருவமத்தியத்திற்குக் கீழாய் கொஞ்சம் ஜீவன் மாத்திரம் இருக்கின்றபோது, கண்களினாலும், முகத்தினாலும், சேஷ்டைகளைக் காண்பிக்கின்றான். மற்ற யாதொரு அவயவங் களையும் அசைக்க முடியாது. அந்த ஜீவசக்தியாகிய வாயு, வெளியே போய்விட்டால், அந்தப் பிணம் யாதொரு சேஷ்டை யும், அசைவு மில்லாமல், ஒரு மரத்துண்டிற்கு ஒப்பாய், அங்கு மிங்கும் உருட்டினால் உருளவும், தீயில் வைத்தால் எரிந்து போகவுமாகிறது. அப்பொழுது அதற்கு யாதொரு அறிவு மில்லை. அதன் காரணம் என்ன?

சி: அதற்கு ஜீவசக்தியான வாயு இல்லாததினால்.

கு: தவிர ஒருவன் படுத்துத் தூங்கும்பொழுது அவனுள்ளில் வாயுவின் கதி உண்டோ?

சி: உண்டு.

கு: அவனைத் தட்டிக் கூப்பிட்டாலோ?

சி: அறியும்.

கு: அதற்குக் காரணமென்ன?

சி: அவனுள்ளில் வாயு நடனம் அதாவது கதாகதம் செய்வதனால்.

கு: பிணத்திற்குள் வாயு கதாகதம் செய்கிறதுண்டோ?

சி: இல்லை.

கு: ஆனால் அந்தப் பிணத்தை, தட்டினாலோ, உருட்டினாலோ, நெருப்பில் எரித்தாலோ, அறிகிறதுண்டோ?

சி: அறிகிறதில்லை.

கு: ஏன்? அது என்ன காரணம்?

சி: அதனுள் வாயு கதாகதம் செய்யாததால்.

கு: அப்பொழுது அறிவாயிருக்கின்ற வஸ்து எது?

சி: ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு.

கு: தவிர நீர் ஐந்தாறு தினங்களுக்கு முன் ஒரு காரியத்தைப்பற்றி ஆலோசித்திருந்தீர். அந்தக் காரியம் உம்முடைய ஞாபகம் விட்டுப்போயிருக்கிறது. அதைப் பற்றி மறுபடியும் ஞாபகம் வருகிறதற்கு நீர் என்ன செய்யவேண்டும்?

சி: அதைப்பற்றி ஆலோசிக்கவேண்டும்.

கு: அப்படி ஆலோசிக்கின்ற சமயத்தில், உம்முடைய சுவாச கதியானது உமதுள்ளில் அடங்குகின்றதோ? அல்லது வெளியில் போகின்றதோ?

சி: அதுவெளியில் போகாமல் எனதுள்ளிலேயேதான் அடங்குகின்றது.

கு: அவ்விதம் ஆழ்ந்து ஆலோசித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் உமது முன்னிலையில் ஒருவன் போவானேயானால், அவனை நீர் காணவோ, அறியவோ, முடியுமா?

சி: முடியாது.

கு: அது ஏன்?

சி: அந்த சமயத்தில் என் ஆலோசனை, மற்றொன்றிலுமில்லாமல், என்னிலேயே அடங்கியிருந்ததினாலேயாகும்.

கு: ஆனால், நீர் மற்றொருவனோடு ஒரு காரியத்தைப் பற்றி பேசிக்கொண்டிருக்கும்பொழுது, உமது முன்னிலையில் ஒருவர் போனால், அவரைக்காணவோ, அறியவோ, உம்மால் முடியுமா?

சி: முடியும்.

கு: அதன் காரணம் என்ன? உமது ஆலோசனை அச்சமயம் அந்த சம்பாஷணையில் இல்லாதிருந்ததா?

சி: அதிலேதானிருந்தது. ஆனால் என்னுடைய மனம் அப்போது வெளியில் வியாபித்திருந்தது. முற்கூறிய ஆலோசனை சமயம், எனது மனம், என்னிலேயே நிறுத்தி ஆலோசிப்பதாயிருந்தது. அதனால்தான் எதிரில் போனவரைக் காணுவதற்கோ அறிவதற்கோ, சாத்தியப்படவில்லை.

கு: அந்த மனம் வெளியில் வியாபிக்காமல், அச்சமயத்தில் உம்மில் அடங்கியிருந்ததின் காரணம் என்ன?

சி: என்னுடைய மனம் ஒன்றிலேயே ஆழ்ந்து ஆலோசித்ததால்.

கு: அது எப்படி உம்மில் அடங்கிற்று? அப்படி அடங்கியதின் காரணம் சொல்லமுடியுமா?

சி: முன்சொன்னபடி யல்லாமல் மற்றெவ்விதமென்பது எனக்குத்தெரியவில்லை.

கு: ஆனால் உமது ஆலோசனை சமயத்தில் "எனது கதி அதாவது மூச்சு என்னில் அடங்குகிறது, வெளியில் போகிறதில்லை" என்று நீர் சொன்னீரல்லவா? அந்த மூச்சு என்று சொல்லுவது ஜீவசக்தியாகிய வாயுவாகும். அந்த ஜீவசக்தி வெளியில் வருகிறதற்கு "வாயு" என்று பெயர். வாயுவென்றால் சலிக்கின்றது என்றாகும். அந்தச் சலனத்திலிருந்தாகும் விசாரம் உண்டாகின்றது. அந்த விசாரத்துக்கு கர்த்தாமனம். அவ்வாறு சலனமுள்ள வஸ்து உம்மில் அடங்க, அப்பொழுது, உம்முடைய மனமும் உம்மிலேயே அடங்கிற்று. ஆகையினால் தான், உமக்கு மற்றொன்றைக் காண்பதற்கும், அறிவதற்கும் முடியாமலிருந்தது. அப்பொழுது, தன்னிலிருந்து வெளியே சலித்து, அதாவது பரவிக்கொண்டிருக்கின்ற சக்திக்குத்தான், வாயுவென்று சொல்லுகின்றது. அது தன்னிலிருந்து வெளியே போகாமல், தன்னுள்ளில் கூடி, மேல் கீழாய் கதாகதம் செய்து அதாவது நடத்தி பிரம்மரந்திரத்தோடு தாக்கிக்கொண்டிருக்கிறபோது, அதற்குச் "சமீரணன்" என்று பெயர். சமீரணன் என்றால், பிரம்மரந்திரத்தோடு ஈரணம் செய்தல் அதாவது தாக்கிக்கொண்டிருத்தல். பிரம்மம் எது வென்றால் நித்தியமாயிருக்கின்றவஸ்து. அந்த வஸ்துவுடன் தொட்டு வேறுபடாமல் முட்டிக்கொண் டிருக்கின்றகதியே அதாவது நடப்பே ஈரணம். அவ்விதமாயுள்ள கதியானது, தன்னுள்ளில் கூடி, மேல் கீழ்நடந்து, வெளியே விட்டுப் போகாமல் பிரம்மரந்திரத்தோடு தாக்கிக்கொண்டிருப்பதற்கு, சமீரணன் என்றும், அப்படியல்லாமல் வெளியே சலித்துக்கொண் டிருக்கின்ற கதிக்கு, வாயுவென்றும் பெயர். அதனால் தன்னுடைய சக்தி, எப்பொழுது தன்னில்லயிக்கின்றதோ, அச்சமயத்தில் மற்றொன்றையும் அறிகிறதில்லை என்றும், நமக்கு திருஷ்டாந்தம் அதாவது அனுபவப்படுகிறதும், தன்னுடைய சலனத்திலிருந்தேயாகும் தனக்கு எல்லா அவஸ்தைகளும், அதாவது நிலைமைகளும், உண்டாகிறதென்றும், விளக்கமாகத் தெரிகின்றது. தவிர, தன்னுடைய சலனம் தன்னிலடங்கி ஆலோசித்துக் கொண்டிருக்கும்போது, நமக்கு உணர்வு உண்டாகின்றது. அதாவது ஆலோசித்துக் கொண்டிருக்கிற காரியம் ஞாபகத்திற்கு வருகிறது. அப்பொழுது உண!

வாகின்ற ஞாபகம் எவ்விடமிருந்துண்டாகிறதென்றால் பிரகாசத்திலிருந்தேதான். பிரகாசம் அக்கினியிலிருந்துண்டாகின்றது. அக்கினி உண்டாகிறது வாயுவிலிருந்து. அப்பொழுது வாயுவாகி, அக்கினியாகி, பிரகாசமாகி, அறிவாயிருக்கின்ற ஜீவசத்தி தன்னிலேயே அடங்கும்பொழுதுதான், நமக்கு உணர்வு உண்டாகிறது. அப்பொழுது அறிவாயிருக்கும் வஸ்து எது?

சி: ஜீவசக்தியே.

கு: அறிவாகி ஜீவசக்தியாயிருக்கின்ற வஸ்து சலித்து, வாயுவாகி, நம்முள்ளிலிருந்து வெளியே போய்க்கொண்டிருப்பதற்கே "மாயை" என்று சொல்லுகிறது. இதற்காகவே "யாதொன்று இல்லாததாகின்றதோ அது மாயை" என்று சொல்லுவதன் காரணமாகும். "யாதொன்று" என்பது அறிவு. அந்த அறிவு வாயு ரூபமாய் வெளியில் போய் நசித்துக்கொண்டிருப்பதற்கே மாயை என்று பெயர். இதற்காகவே தன்னுடைய மாயை என்றும், தன்னிலிருந்து உத்பவித்தது, அதாவது உண்டானது, என்றும் சொல்லக் காரணம். "தான்" என்றால் யாரென்பதாய் நீர்கருதியிருக்கின்றீர்?

சி: தானென்றால் அவனவனே.

கு: அப்பொழுது மாயையினுடைய உத்பவம் அதாவது உத்பத்தி எவ்விடமிருந்து?

சி: அவனவனிடமிருந்தே.

கு: ஆகையினால் மாயை என்பது மேலே சொல்லிய பிரகாரம் உண்டானதாகும். அதற்குப் பிறகேயாகும் மனதினுடைய உத்பத்தி. அந்த மனதாகும் குரு.

அத்தியாயம் 2

சி: குருவே! உலகம் முழுவதும் அவனவனது மனதாகும் என்றும், அந்த மனதே குருவென்றும் சொன்னீர்கள். அப்படியானால் உலகமே குருவாகிறதல்லவா?

கு: ஆம்! ஆனால் அது நீர் கிரஹித்த பிரகாரமல்ல. அது எப்படி என்றால், முன் அத்தியாயத்தில் விவரித்த மாயையிலிருந்து, இரண்டு நிலைமைகள் உண்டாகின்றன. அது, முதலாவது காரணமும், இரண்டாவது காரியமுமாகும். இவ்விதம் இரண்டு நிலைமைகள் கூடும்போது மாத்திரமே, உலகம் உண்டாகின்றது. அதில் காரியம் என்பது என்னவென்றும், காரணம் என்பது என்னவென்றும், நாம் அறியவேண்டும். ஆனால் காரியம் என்பது, ஏதாவது அனுபவத்திலோ, பலத்திலோ, வருவதும், கிடைக்கின்றதுமாகும். அவை எவ்விதமாய் வருகின்றதோ, கிடைக்கின்றதோ, அதற்குள்ள பிரயத்தனம் எதுவோ, அது காரணமுமாகின்றது.

சி: சுவாமி! உலகம் இல்லை என்றால் இந்த இரண்டு நிலைமைகளும் உண்டாகுமா?

கு: ஆனால் உலகம் என்பது எந்தவிதமாக இருக்கிறதென்று உமக்குத் தெரியுமா?

சி: தெரியாது.

கு: உலகம் என்பது, மூன்று நிலைமைகளாக இருக்கின்றன. அதாவது, கேட்பது, காண்பது, அறிவது இவைகளல்லாமல், வேறு யாதொன்றும் இல்லை. எப்படி என்றால் கேட்பதற்கும், காண்பதற்கும், அறிவதற்கும் அல்லாது உலகம் என்கிற நிலைமை உண்டோ?

சி: இல்லை.

கு: ஆகையினால் இந்த மூன்று நிலைமைகளே உலகம். இந்த மூன்று நிலைமைகளும் நமக்கு என்னவாகின்றன; காரியமாகின்றதோ, காரணமாகின்றதோ?

சி: காரியமாகின்றது.

கு: அப்பொழுது உலகம் நமக்கு என்னவாகின்றது?

சி: காரியமாகின்றது.

கு: அதனால் உலகத்தைக் கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ நமக்கு என்ன உண்டாயிருக்கவேண்டும்?

சி: மனம் உண்டாயிருக்கவேண்டும்.

கு: மனம் இல்லையானால் ஏதேனும் கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ முடியுமா?

சி: முடியாது.

கு: ஆனதினால் இவை எல்லாம் கேட்பதற்கும், காணுவதற்கும், அறிவதற்கும் காரணமென்ன?

சி: மனம்.

கு: அப்பொழுது, மனம் காரணமும், மற்றெல்லாம் காரியமுமாகின்றன. அது எப்படி என்றால், உமக்கு இப்பொழுது அவசரமாய் பத்து ரூபாய் தேவையாயிருக்கிறது. தற்சமயம் கையில் இல்லை. உமது சிநேகிதர் ஒருவரிடம் பணம் இருப்பதாகத் தெரிந்து அவரிடமிருந்து உமக்குத் தேவையான பணம் கிடைக்கவேண்டுமானால் நீர் என்ன செய்ய வேண்டும்?

சி: அவரிடம் கேட்கவேண்டும்.

கு: கேட்டபோது கிடைத்தது. அவரிடமிருந்து கிடைக்கின்றபொழுது அது காரியமோ, காரணமோ?

சி: காரியமாயிற்று.

கு: அதற்குக் காரணமென்ன?

சி: அது கிடைப்பதற்குள்ள கேள்வி.

கு: அப்பொழுது எது ஒன்று நமக்கு கிடைக்கின்றதோ அது காரியமும், கிடைக்கவேண்டியுள்ள முயற்சி எதுவோ அது காரணமுமாகும். அப்பொழுது அந்த முயற்சி எதாயிருந்தது?

சி: கேட்பதாயிருந்தது.

கு: அந்தக்கேள்வி எவ்விடமிருந்துண்டாயிற்று?

சி: மனதிலிருந்து.

கு: அப்பொழுது காரணம் எது?

சி: மனம்.

கு: ஆகையினால் காரணம் என்பது அவனவனுடைய மனமும், காரியமென்பது உலகமுமாகிறது. உலகம் என்பது சர்வசராசரங்களும் அடங்கியது; அதாவது பிரம்மா முதல் எறும்பு வரையிலுமாகும். அவ்விதமிருக்க பிரம்மா என்ற ஒருவர் இருக்கின்றதாக நீர் கருதியிருக்கின்றீரல்லவா? அந்த பிரம்மா வந்து உமக்கு ஒரு உபதேசம் கொடுத்தால் அதை நீர் செய்வதில்லையானால் பலன் கிடைக்குமா?

சி: கிடைக்காது.

கு: எறும்பு ஒரு உபதேசம் கொடுத்தது. அதையும் நீர் செய்வதில்லையானால் பலன் கிடைக்குமா?

சி: கிடைக்காது.

கு: பிரம்மா கொடுத்த உபதேசத்தை நீர் சரிவர செய்தாலோ?

சி: அதன் பலன் கிடைக்கும்.

கு: எறும்பு கொடுத்த உபதேசத்தையும் சரிவரச் செய்தாலோ?

சி: அதன் பலனும் கிடைக்கும்.

கு: அப்பொழுது பிரம்மாவையும், எறும்பையும் வித்தியாசமாக கருதுவதற்கு இடமுண்டா?

சி: இடமில்லை.

கு: அது எவ்விதமென்றால் பிரம்மா கொடுத்த உபதேசமாகும் என்றும், பெரியவராகுமென்றும், சிருஷ்டிகர்த்தாவென்றும் கருதி, அதன்படி செய்யாமலிருந்தால் அதன் பலன் கிடைக்கிறதில்லை. எறும்பு குடுத்த உபதேசமாகுமென்றும், அது சிறிய ஜீவி ஆகுமென்றும், அல்ப்ப ஜீவனென்றும் கருதி அதைச் சரிவரச் செய்தாலோ பலன் கிடைக்காமலிருக்கிறதும் இல்லை. அதனாலாகும் பிரம்மாவும் எறும்பும் வித்தியாசமில்லை என்று சொல்லக்காரணம். ஆனால் நமக்குப் பலன் கிடைத்தது எவ்விடமிருந்து?

சி: நம்முடைய தொழிலிலிருந்து.

கு: அத்தொழில் எவ்விடமிருந்துண்டாயிற்று?

சி: மனதிலிருந்து.

கு: அவ்விதமாயுள்ள மனம் இல்லையானால் தொழிலோ பிரம்மாவோ, எறும்போ, உலகமோ யாதேனும் உண்டாகுமா?

சி: உண்டாகாது.

கு: அதனாலாகும் பந்தத்திற்கும், மோக்ஷத்திற்கும் மனமே காரணமென்றும், குரு சிஷ்யன் என்கிற நிலைமை இல்லை என்றும் சொல்லக்காரணம். அவனவனுக்கு அவனவன் மனமே குருவாகும். அம்மனமாகின்ற குருவின் இடம் எவ்விடமென்பதைச் சொல்லுவீரா?

சி: அது என்னுடைய இருதயத்திலாகும்.

கு: "இருதயம்" என்று சொல்லுகிற இடம் எதென்பதை தொட்டுக்காண்பியும்?

சி: இதோ! எனது இந்த இரண்டு மார்புக்கிடையில், கொஞ்சம் குழியாய்க் காணும்படியான இந்த இடம், அதாவது நெஞ்சுக்குழி.

கு: அது ஒருக்காலும் இருதயமல்ல. இருதயமென்று சொல்லுவது மனதினுடைய ஸ்தானமல்லவா?

சி: ஆம்.

கு: ஆனால் மனமில்லை என்றால் ஏதேனும் ஒரு சிருஷ்டி உண்டாகுமா?

சி: உண்டாவதில்லை.

கு: ஆனால் இன்று பிரசவித்து விழுந்த ஒரு குழந்தைக்கு மனம் இருக்கின்றதா? இல்லையா?

சி: இருக்கின்றது.

கு: அது அழுகிறதும், பால் குடிக்கிறதும் உண்டல்லவா?

சி: ஆம்: உண்டு.

கு: ஆனால் அந்த குழந்தை தூங்கும்போது அழுகிறதோ, பால் குடிக்கிறதோ உண்டா?

சி: இல்லை.

கு: என்ன காரணம்?

சி: அப்பொழுது அதற்கு யாதொரு ஸ்மரணை அதாவது நினைவுமில்லை.

கு: அது என்ன காரணம்? அப்பொழுது அதில் என்ன இல்லை?

சி: அப்பொழுது அதில் ஒன்றுமில்லை.

கு: அது எப்படி? அதில் ஒன்றுமில்லை என்று சொல்ல முடியுமா? ஒன்றுமில்லை என்றால் அது பிணமல்லவா? அதனால் அதில் என்ன இருக்கிறது?

சி: ஜீவனிருக்கிறது.

கு: ஆனால் ஜீவன் மாத்திரமிருக்கும்போது இம்மாதிரி ஏதேனும் கேட்பதற்கோ, காணுவதற்கோ அறிவதற்கோ முடியுமா?

சி: முடியாது.

கு: ஜீவனுக்கு யாதேனும் கேட்பதற்கோ, காணுவதற்கோ அறிவதற்கோ முடியுமா?

சி: முடியாது.

கு: அப்பொழுது கேட்பதற்கும், காண்பதற்கும், அறிவதற்கும் என்ன உண்டாயிருக்க வேண்டும்?

சி: மனம் உண்டாயிருக்க வேண்டும்.

கு: மனம் இல்லாவிட்டால், யாதேனும் கேட்பதற்கோ காண்பதற்கோ, அறிவதற்கோ முடியுமா?

சி: முடியாது.

கு: ஆனால் தூங்கும்போது மனம் உண்டாயிருந்ததா?

சி: உண்டாயிருந்தது. ஆனால் தூங்கும்போது மனம் அடங்கிப் போயிற்று,

கு: எங்கே அடங்கிப் போயிற்று?

சி: அதனுடைய உள்ளிலடங்கிப் போயிற்று.

கு: ஆனால் அதனுடைய உள்ளிலடங்க என்ன உண்டாயிருக்கவேண்டும்?

சி: ஜீவன் உண்டாயிருக்க வேண்டும்.

கு: ஜீவனில்லாவிட்டால் மனம் உண்டாகுமா?

சி: உண்டாகாது.

கு: அப்பொழுது மனம் எங்கிருந்து உண்டானது?

சி: ஜீவனிலிருந்து.

கு: ஆனால் தூங்கும்போது மனமானது ஜீவனில் கரைந்து அதாவது லயித்து மற்றொன்று மில்லாமலாய் விட்டது. அது எவ்வாறென்றால் ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து வைத்து அதில் கொஞ்சம் உப்பைப் போட்டால் அது என்னவாகிறது?

சி: அந்த உப்பு தண்ணீரில் கரைந்து அதில் லயித்துப் போகிறது.

கு: அதே மாதிரியாகும் நாம் தூங்கும்போது மனமானது ஜீவனில் லயித்து ஜீவரூபம் மாத்திரமாய் வேறொன்றும் இல்லாமலானது. ஆனால் மனமானது ஜீவனில் லயிக்கக் காரணம் எப்படியென்றால், உப்பு ஜலத்தில் லயிக்கக் காரணம் என்னவென்றறிய வேண்டும். ஆனால், அந்த உப்பு எங்கிருந்து உண்டாயிற்று என்று அறிந்தால்தான், உப்பு தண்ணீரில் லயிக்கும் காரணம் அறியமுடியும். ஆனால் உப்பு எங்கிருந்து உண்டாயிற்று?

சி: உப்பு தண்ணீரிலிருந்து உண்டாயிற்று.

கு: அப்பொழுது உப்பினுடைய சுயரூபம் என்ன?

சி: ஜலரூபமாகும். அதாவது தண்ணீராகும்.

கு: ஆனால் ஜலத்திலிருந்தே உப்புண்டானது. அதனால் உப்பினுடைய சுயரூபம் ஜலமாகும். அந்த ஜலத்திலுண்டான உப்பு தானுண்டாயிருந்த வஸ்துவில் சேரும்போது அதே ரூபமாகி வேறு ரூபமில்லாமல் ஆயிற்று. இம்மாதிரியேதான் ஜீவனிலிருந்து மனம் உண்டானது. அந்த மனம் தானுண்டான ஜீவனில் சேர்ந்தபோது, ஜீவனில் லயித்து வேறொன்று மில்லாமலாய், ஜீவரூபம் மாத்திரமாய்த் தீருகிறது. அதனால் தான் தூங்கும்போது யாதொன்றும் கேட்பதற்கும், காண்பதற்கும், அறிவதற்கும் முடியாமலாயிற்று. ஆனால் அந்தக் குழந்தை தூக்கம் விழித்தபொழுது அழுவதும், பால் குடிப்பதும் செய்கிறதல்லவா?

சி: செய்வதுண்டு.

கு: அப்பொழுது மனம் இல்லாவிடில் அழுகிறதற்கோ, பால் குடிக்கிறதற்கோ முடியுமா?

சி: முடியாது.

கு: அது அழவும், பால் குடிக்கவும் செய்கிறது. ஆனால் பால் எப்படி உண்டாகிறதென்றும், அது எங்கிருந்து உண்டாகிறதென்றும், அது எங்கிருந்து கிடைக்கிறதென்றும் அக் குழந்தை ஆலோசிப்பதற்கு முடியுமா?

சி: முடியாது.

கு: அதன் காரணம் என்ன?

சி: அதற்குச் சக்தி இல்லாததினால்.

கு: அதற்குச் சக்தியில்லையென்று சொல்லக் கூடாது. ஏனென்றால் சக்தியில்லாவிடில் அதற்கு அழுகிறதற்கோ, பால் குடிக்கிறதற்கோ முடியாது. ஆனால் ஆலோசனை எவ்விட மிருந்து உண்டாகின்றது?

சி: மனதிலிருந்து.

கு: ஆலோசிப்பதற்கு என்னவேண்டும்?

சி: மனம் உண்டாயிருக்கவேண்டும்.

கு: மனம் உண்டாயிருந்தாலும் ஆலோசிப்பதற்கு முடிகிறதில்லை. ஏனென்றால், அக்குழந்தை அழும்பொழுதும், பால் குடிக்கும்பொழுதும், அதற்கு மனமில்லையா? அப் பொழுது அதற்கு ஆலோசிப்பதற்கு முடியுமா?

சி: முடியாது.

கு: அதற்குக் காரணமென்ன? குழந்தைகளுக்குச் சாதா ரணமாய் என்ன இல்லை என்று சொல்லுவது?

சி: புத்தியில்லையென்று சொல்லுகிறார்கள்.

கு: புத்தியில்லாவிடில் ஆலோசிப்பதற்கு முடியுமா?

சி: முடியாது.

கு: அப்பொழுது ஆலோசிப்பதற்கு என்ன உண்டா யிருக்கவேண்டும்?

சி: புத்தி உண்டாயிருக்கவேண்டும்.

கு: அப்பொழுது ஆலோசிக்கின்றது புத்தியாகின்றது. அந்த புத்தி பல காரியங்களைக் குறித்தும் ஆலோசிக்கின்ற தாகும். அவ்விதம் ஆலோசிப்பதற்குள்ள காரியங்களை எவ் விடம் வைத்துக்கொண்டிருக்கின்றது?

சி: மனதில்.

கு: அப்பொழுது பல காரியங்களைக் குறித்தும் ஆலோசிப் பதற்காக பத்திரப்படுத்தியிருக்கின்ற இடமாகும் மனம். அந்த மனமாயிருக்கின்ற இடத்தில் புத்திபோய் ஆலோசிக்கின்றது. ஆனால் அந்த மனத்தின் இடம் எதுவென்றால், நீர் ஒரு காரியத்தைப்பற்றி ஆலோசிக்கும் பொழுது உம்முடைய ஆலோசனையும் உமது கண் விழிகளும் எந்தப் பக்கமாகப் போகின்றன?

சி: மேல் பக்கமாய்ப் போகின்றன.

கு: அப்பொழுது ஆலோசிப்பது எவ்விடத்தில்?

சி: மனதில்.

கு: மனதினுடைய இடம், கீழே நெஞ்சுக்கு மத்தியில் இருக்கும் என்றால், ஆலோசனை மேல்பாகம் போகக் காரணம் என்ன? கீழ்பாகத்திலுள்ள நெஞ்சுக்குழியில் அல்லவா பார்க்க வேண்டியது?

சி: ஆம். கீழே நெஞ்சுக் குழியில்தான் பார்க்க வேண்டியது.

கு: ஆலோசிக்கும் சமயம் அவ்விதம் பார்க்கிறதுண்டா?

சி: அவ்விதம் பார்க்கிறதில்லை.

கு: ஆனால் ஏதோ! இந்த வீட்டின் வடபக்கத்தறையினுள் ஒரு சாமானை நீர் வைத்துவிட்டு, தேவையானபோது, அதை அந்த வீட்டின் தென்புறமிருக்கும் அறைக்குள் போய்ப் பார்த்தால் கிடைக்குமோ?

சி: கிடைக்காது.

கு: ஏன்?

சி: வைத்தஇடத்தில் பார்க்காததினால்.

கு: வைத்த இடத்தை விட்டு மற்றொரு இடத்தில் பார்த்தால் கிடைக்குமோ?

சி: கிடைக்காது.

கு: இந்தப் பிரகாரத்தில்தான் நமக்கு ஏதேனும் காரியங்களைப் பற்றியும் ஆலோசிப்பதற்குப் பத்திரப்படுத்தி யிருக்கிற இடமெங்கே?

சி: மனதில்.

கு: ஆகையினால் ஆலோசிப்பதற்குள்ள காரியங்களைப் பத்திரப்படுத்துவது மனதில்தான். அதனாலாகும் மனதினுடைய இடம், புருவ மத்தியம் என்று சொல்லக் காரணம். "புரு" என்று சொல்லுவது இரண்டு கண்களினுடைய புருவங்கள். அதனுடைய மத்தியத்திற்கே "புருவ மத்தியம்" என்று சொல்லுவது. அதுவேயாகும் மனதினுடைய இடம். அந்த இடத்திற்கே இருதயமென்று பெயர். அந்த இருதயம் நீர் தொட்டுக் காண்பித்த நெஞ்சுக் குழியிலாகும் என்றால் அங்கு மூடுவதற்கோ, திறப்பதற்கோ ஏதாகிலும் உண்டோ?

சி: இல்லை.

கு: இருதயம் இல்லையென்றால் நமக்கு யாதொரு பிரகாசமோ யாதொன்றும் காண்பதற்கோ சாத்தியமாகுமா?

சி: இல்லை.

கு: அப்பொழுது பிரகாசிப்பது எவ்விடமிருந்து?

சி: இருதயத்திலிருந்து.

கு: நீர் குருடனைப் பார்த்திருக்கின்றீரா?

சி: ஓ! பார்த்திருக்கின்றேன்.

கு: அவருக்கு யாதொரு பிரகாசமும் இருக்கிறதா? அல்லது ஏதேனும் காண்பதற்கு முடியுமோ?

சி: அவருக்கு யாதொரு பிரகாசமுமில்லை. யாதொன்றும் பார்ப்பதற்கும் முடியாது.

கு: என்ன காரணம்? அவருக்குக் கண்களோ, இருதயமோ குருடு?

சி: கண்கள் தாம் குருடு.

கு: இருதயம் நீர் சொல்லிய இடமாயிருந்தால் அவ்விடத்திலிருந்து ஒளியோ மற்று ஏதாவது காட்சியோ உண்டா?

சி: இல்லை.

கு: ஏன்?

சி: கண்கள் குருடானதினால்.

கு: உமக்கு இப்பொழுது கண்கள் குருடா?

சி: இல்லை.

கு: உமக்கு இப்பொழுது பிரகாசமில்லையோ? இவையெல்லாம் காண்பதில்லையோ?

சி: பிரகாசமும் உண்டு, காண்பதும் உண்டு.

கு: ஆனால் உங்கள் கண்களை மூடினால் உமக்குப் பிரகாசிப்பதோ அல்லது ஏதேனும் காண்பதோ உண்டா?

சி: இல்லை.

கு: என்ன காரணம்?

சி: கண்களை மூடியதினால்.

கு: கண்களை மூடினால் என்னவாகின்றது?

சி: இருட்டாகின்றது.

கு: ஏன்? நீர் உமது கண்களை மூடினீரா? இருதயத்தை மூடினீரா?

சி: கண்களையேதான் மூடியது.

கு: நீர் சொல்லிய பிரகாரம் இருதயம் நெஞ்சுக் குழியிலாயிருந்தால், ஏன் அவ்விடமிருந்து பிரகாசிப்பதற்கோ, காண்பதற்கோ, முடியவில்லை?

சி: கண்களை மூடியதினால்.

கு: கண்கள் திறந்திருந்தாலோ?

சி: பிரகாசம் உண்டாகிறது.

கு: அந்தப் பிரகாசம் நமக்கு எவ்விடமிருந்து உண்டாகிறது?

சி: மேல் பாகத்திலிருந்து.

கு: அப்பொழுது எந்தப் பிரகாரம் பார்த்தாலும், மேலேயிருந்தல்லாமல் கீழே யிருந்து பிரகாசம் உண்டாகிறதில்லை. தவிர இராத்திரியானால் நமக்கு என்னவாகின்றது?

சி: இருட்டாகின்றது.

கு: பகல் ஆனாலோ?

சி: வெளிச்சமாகின்றது.

கு: அந்த வெளிச்சம் எங்கிருந்து உண்டாகிறது?

சி: ஆகாசத்திலிருந்து.

கு: அவ்வாகாசம் மேலேயா? கீழேயா?

சி: மேலேதான்.

கு: அப்பொழுது, எவ்விதத்தில் பார்த்தாலும் மேலேயிருந்துதான் பிரகாசம் உண்டாகின்றது. கீழே யிருந்ததல்ல. அதல்லாமல் நாம் ஏதாவது ஒரு விளக்கைப் பொருத்தி வைத்தால் அந்த விளக்கின் எந்தப் பாகத்திலிருந்து வெளிச்சம் உண்டாகின்றது?

சி: மேல் பாகத்திலிருந்து.

கு: அதில் பிரகாசம் உண்டாகிறதற்கு என்னவேண்டும்?

சி: அக்கினி வேண்டும்.

கு: அக்கினி இல்லாவிடில் பிரகாசம் உண்டாகுமா?

சி: உண்டாகாது.

கு: அப்பொழுது வெளிச்சம் எதிலிருந்து உண்டாகிறது?

சி: அக்கினியிலிருந்து.

கு: வெளிச்சமில்லாவிடில் அக்கினி இல்லையென்று சொல்ல முடியுமா?

சி: முடியாது.

கு: அப்பொழுது வெளிச்சம் இல்லையானாலும் அக்கினி இருக்கிறது. அக்கினி இல்லாவிட்டால் வெளிச்சம் இல்லை. ஆகையினால் அக்கினியிலிருந்தாகும் வெளிச்சம் உண்டாகிறது. அந்த அக்கினி நம்மில் இருக்கின்றதா? இல்லையா?

சி: நம்மில் இருக்கின்றது.

கு: அந்த அக்கினி நம்மில் எங்கேயிருக்கின்றது.

சி: நம்முடைய வயற்றில் இருக்கின்றது.

கு: வயிற்றில் உள்ள அக்கினியால் ஆகும் குணம் என்ன?

சி: நாம் உண்டவற்றையெல்லாம் தகிப்பது அதாவது எரியச் செய்வது அதன் குணம்.

கு: ஆனால் இதுவரையிலும் இவ்வுலகத்திலுள்ள யாருக்காவது சாப்பிட்ட உணவுகள் எரிந்ததுண்டா?

சி: எரிந்திருக்கிறது.

கு: ஒருக்காலும் இல்லை. ஏனென்றால் நாம் உணவுகளை எல்லாம் உண்பது எப்படி என்றால், மசாலைகள், அதாவது மிளகு, மல்லி முதலிய சாமான்களை, அம்மியில் வைத்து அரைத்து உருண்டையாக்கி எடுக்கின்றோமோ, அதே விதத்தில், நாம் உண்ணும் உணவுகளை வாயில் போட்டு பற்களால் மெல்லுகின்றதே அரைக்கின்றதாகும். இந்தப் பிரகாரம் அரைத்தரைத்து உள்ளில் விழுங்குகிறோம். அந்தப் படி விழுங்கிய உணவு உருண்டை உருண்டையாய் மலமாக வெளியில் வருகின்றது. அவைகள் எரிந்ததாக காணப்படுவ

தில்லே. அதல்லாமல் நாம உண்ணுகின்ற உணவுகளில், ஏதாவது காய்களுடைய துண்டுகள் மெல்லாமல் விழுங்கிப் போனல் அவை எந்த விதத்தில் வெளி வருகின்றன?

சி: அதே விதத்தில் வெளியில் வருகின்றன.

கு: அது என்ன காரணம்? வயற்றில் நெருப்பு இருக்கிற தல்லவா? அந்த நெருப்பில் போட்ட பொருள்கள் எரிந்து போக வேண்டியதல்லவா? அதல்லாமல் நெருப்பில் ஏதாவது ஒரு பொருள் போட்டால் அந்தப் பொருள் நெருப்பின் சூடு கொண்டு வாடி கரி பிடிக்கிறதல்லவா? அது அந்தவிதமல்லாமல் விழுங்கிய விதமாகவே யாதொரு வித்தியாசமு மில்லாமல் வெளியில் வந்ததைக் காண்கின்றோமல்லவா?

சி: ஆம்; அது யாதொரு வித்தியாசமுமில்லாமல் அப்படியே வெளியில் வந்ததைக் காண்கின்றோம்.

கு: அது என்ன காரணம்? தவிர நாம் இங்கே ஒரு அக்கினி குண்டம் உண்டாக்கி அதில் பல வஸ்துக்களேயும் போட்டு எரித்தால் அவைகளெல்லாம் என்னவாகின்றன?

சி: அவை எரிந்து போகின்றன.

கு: எரிந்தால் என்னவாகின்றது?

சி: சாம்பலாகின்றது.

கு: அப்போது நெருப்பில் என்ன பொருள் போட்டாலும் அது எரிந்து சாம்பலாகின்றது. அப்படியிருக்க நம்முடைய வயற்றில் நெருப்பு இருக்கிறதென்றல்லவா, தாங்கள் சொன்னது. ஆனல் நாம் நாளதுவரை உண்டதெல்லாம், அந்த நெருப்பில் அல்லவா சென்று விழுந்தது. அப்பொழுது அவை யாவும் எரிந்து சாம்பலாயிருக்க வேண்டுமல்லவா? ஆனல் இந்த உலகத்தில் யாராகிலும், நாளது வரை கொஞ்சம் சாம்பலேக் கழிந்ததுண்டா?

சி: இல்லே.

கு: அதுவுமன்றி, நமக்கு இங்கே உட்காருவதற்கு முடியாமல் என்னவோ ஒரு பொருள் கெட்டு நாறி சகிக்க முடியாமல் நாமெல்லாம் மூக்கைப் பிடித்துக்கொண்டிருக்கும் போது, ஒருவர் வந்து ஒரு குழி தோண்டி அதில் நெருப்பை வளர்த்து அந்தப் பொருளே போட்டு எரித்தால் என்ன வாகிறது?

சி: சாம்பலாகிறது.

கு: அந்தச் சாம்பலுக்கு நாற்றமுண்டா?

சி: இல்லே.

கு: அப்பொழுது எந்த விதமான அசுத்தவஸ்துக்களேயும் நெருப்பில் போட்டால் அவைகளினுடைய அசுத்தத்தைத் தீர்த்துச் சுத்தமாக்குகிறது. இதுதான் அக்கினியின் குணம்,

அப்படியிருக்க நாம் மிகவும் பரிமளமுள்ளதான ஒரு பொருளை உண்டு நம்முடைய வயற்றிலிருக்கிற நெருப்பில் சென்று விழுந்து அது வெளிக்கு வரும்போது எவ்விதமிருக்கும்?

சி: அது மிகவும் கெட்ட நாற்றமுள்ளதாய் நாம் மூக்கைப் பிடிக்கவேண்டி வருகிறது.

கு: ஏன்? இதுவா நெருப்பின் குணம்? மிகவும் தீய நாற்றமுள்ளதாயும், அசுத்தமாயு மிருக்கின்ற பொருளை நெருப்பில்போட்டால், அதனுடைய தீயநாற்றத்தைத் தீர்த்து யாதொரு விதமான நாற்றமுமில்லாமல் சுத்தமாகக் காணப்படுகிறது. நாம் மிகவும், மணமும், தூய்மையும் உள்ள பொருளை நம் வயிற்றிலிருக்கிற நெருப்பில் போட்டால், அது வெளியில் வரும்போது மிகவும் தீய நாற்றமுள்ளதாயும், அசுத்தமாயும் காணப்படுகிறது. ஆதலால் நம் வயற்றில் நெருப்பு இல்லவே இல்லை. அதல்லாமல் நாம் மலம் கழிக்கும்போது அந்த மலத்தில் நம் வயிற்றிலிருந்து கிருமி, நாகப்பூச்சி முதலிய ஜீவிகள் வெளியில் வருவதைக் காண்கிறோமல்லவா?

சி: ஆம், அவ்வாறே காண்கிறோம்.

கு: ஆனால், வயிற்றில் நெருப்பிருந்தால் அவ்விதம் கிருமி முதலான ஜீவிகளுண்டாவதற்கிடமுண்டா? அக்கினியிலிருந்து ஏதாவது ஜீவிகளுண்டாகுமா?

சி: உண்டாகாது.

கு: இது தவிர உலகத்தில் இருக்கிற சர்வ சராசரங்களும் ஆகாரமில்லாமல் ஜீவித்திருக்க முடியாது. அதாவது சஸ்யாதிகள்; அதாவது தாவர வர்க்கங்களில் நாம் உண்டாக்கி வருகிற மரம், செடி, கொடி முதலிய தாவரவர்க்கங்களுக்கு நாம் எரு சேகரிக்கிறோம் அல்லவா? அது எப்படியென்றால் நாம் ஒரு குழிதோண்டி அதில் பர்ப்பல பொருள்களை சேகரித்து அக்குழியில் போடுகிறோம். அவைகள் குழியில் போட்டபடியே இருக்குமேயானால் அது எருவாகித்தீருமா?

சி: தீராது.

கு: ஆனால் அவைகள் எருவாவது எப்படியென்றால் மேற்சொன்ன எருக்குழியை மூடிவைத்து சில நாட்கள் செல்லும்போது அதில் போட்ட பொருள்கள், குமுறி, அழுகி, ஜீர்ணித்து, கெட்டு எருவாகிறது. அந்த எருவையெடுத்து சஸ்யாதிகளுக்கு ஆகாரமாக கொடுக்கிறோம். அந்தப்படியே ஜீவித்திருக்கிறதற்கு நமக்கும் எருவாகிற ஆகாரம் வேண்டும். அந்த எரு சேகரிக்கிறது எப்படியென்றால், மேல் சொன்ன சஸ்யாதிகளுக்கு வேண்டி எந்த விதத்தில் எரு உண்டாக்குகிறதோ அந்த விதத்தில் எரு உண்டாக்குகிறதற்குள்ள ஒரு எருக்குழியாகும் இக் காணுகின்ற நம் வயறு. எருக் குழியான

இந்த வயற்றில் பலவித பொருள்களும் போட்டு வைக்கிறோம். அவைகளெல்லாம் குமுறி, அழுகி, ஜீர்ணித்துக் கெடுகின்றன. அந்தப் பிரகாரம் ஜீர்ணிக்காவிட்டால் அதற்கே அஜீர்ணம் என்று சொல்லுவது. அஜீர்ணம் என்றால் ஜீர்ணமில்லாமை. ஜீர்ணமென்றால் அழுகிக் கெடுகிறதேயாகும். அப்படி அழுகிக் கெடாவிட்டால் பல ரோகங்களும் உண்டாகின்றன. ஆகையினால், மேல் சொன்ன பிரகாரம் நம் வயறு ஒரு எருக் குழியாகும். தவிர நாம் தாவரங்களுக்கு வேண்டி சேகரித்து உண்டாக்கிய எருவை எடுக்கும்போது அதில் பற்பல பூச்சி, புழுக்களைக் காண்கின்றோம். அவை எவ்விதம் உண்டாயின? நாம் அதில் ஏதேனும் ஜீவிகளைப் போட்டதுண்டா?

சி: போட்டதில்லை.

கு: ஆனால் அந்த எருக்குழியில் போட்டுள்ள சாமான்கள் மிகவும் நிறைந்து நெருக்கமானபோது குமுறி அதாவது புழுங்கி அக் குமுறுதலினின்றும் சூடுண்டாகி, அச் சூட்டிலிருந்து ஆவி உண்டாகிறது. அந்த ஆவிக்கே சுவேதம் என்று சொல்வது. சுவேதம் என்றால் வியர்வையாகும். அவ் வியர்வை சுக்கிலம். அச்சுக்கிலம் அக்கினியிலிருந்துண்டானது. அதாவது எருக் குழியில் போட்டதான சாமான்கள் நிறைந்து, நெருங்கி, குமுறியபோதுண்டாகிய சூடு அக்கினியினாலாகும். அந்த அக்கினியிலிருந்து தான் வியர்வையான சுக்கிலம் உண்டானது. இதற்கே அக்கினி சொரூபமான சுக்கிலம் என்று சொல்லக் காரணம். அந்தச் சுக்கிலமே பிரம்மம். அந்தப் பிரம்மத்தினைக் கொண்டாகும் சிருஷ்டி. அந்தப் பிரம்மமில்லாவிட்டால் யாதொரு சிருஷ்டியுமில்லை. அதனால்தான் பிரம்மாண்ட கடாகம் சுவேதஜோத்பவம் என்று சொல்லக் காரணம். அதாவது இக்காணப்படுகிற உலகம் முழுவதும் வியர்வையிலிருந்து உண்டானது. அது எப்படி யென்றால் எருக் குழியில் போட்டுள்ள சாமான்களிலிருந்து மேற் சொன்னபடி உண்டான சுவேதமான் வியர்வையோடே மேல் சொன்ன சாமான்களிலிருந்துண்டான கறையும் சேருகிறது. அந்த கறையைத்தான் இரத்தம் என்று சொல்லுவது. அந்த இரத்தத்திற்கே சுரோணிதம் என்று சொல்லுவது. அவ்விதமுள்ள இரத்தமான சுரோணிதமும் வியர்வையான சுக்கிலமும் ஒன்றாய்ச் சேர்ந்தபோது அதற்குள்ளே வாயு சேர்ந்து ஜீவியாகின்றது. இக்தப்படியேதான் கிருமிகீடாதிகளுடைய பிறப்பு. அவ்விதமே நம்முடைய வயிறு என்று சொல்லுகிற எருக் குழியில் நாம் போட்ட சாமான்கள் நிறைந்து நெருக்கமானபோது மேல் சொன்னபடியே சுவேதமாய் ஆவிரூபமாய் இருக்கின்ற சுக்கிலம் உண்டாகவும், அதோடு மேல் சொன்ன

சாமான்களுடைய கறையான இரத்தமாயிருக்கின்ற சுரோணி தமும் சேர்ந்தபோது வாயு அதற்குள்ளே சேர்ந்து அப்போது அது ஜீவிகளாகின்றன. இவ்விதமே நம் வயிறுகிய எருவுக் குழியிலிருந்துண்டாகின்ற கிருமிகீடாதிகளுடைய உத்பத்தி. ஆகையினுல் மேல்சொன்ன விதத்தில் ஆலோசிக்கும்போதும் வயிற்றில் அக்கினியில்லை என்பது தெளிவாகின்றது. தவிர உலகத்தில் உள்ள தாவரங்கள் காய்ந்து அதாவது உலர்ந்து போகிறதில்லையா?

சி: காய்ந்து போகிறதுண்டு.

கு: அதன் காரணமென்ன?

சி: அதன் காரணம் வெய்யிலே.

கு: அவ்வெய்யில் எங்கிருந்துண்டாகின்றது?

சி: சூரியனிலிருந்து.

கு: சூரியன் எங்கே யிருக்கிறது?

சி: ஆகாசத்திலிருக்கிறது.

கு: அந்த ஆகாசம் எவ்விடமிருக்கிறது?

சி: மேலே இருக்கிறது.

கு: அப்படியிருக்கிற சூரியன் உலகத்துக்கு எந்தப் பக்க மிருக்கிறது?

சி: மிகவும் உயரத்திலும், வெகு தூரத்திலுமிருக்கிறது.

கு: அப்பொழுது பூமியிலிருந்து எவ்வளவோ மேலே யிருக்கின்ற சூரியனுடைய கிரணம், எவ்வளவோ கீழேயிருக் கின்ற உலகத்தில், எல்லா பாகங்களிலும் ஓரே விதத்தில் பரவியிருக்கிறது. அதுவுமல்லாமல் எவ்வளவோ மேலே யிருக்கின்ற சூரியனுடைய கிரணத்தால் எவ்வளவோ கீழே யிருக்கின்ற பூமியிலுள்ள சஸ்யாதிகளான தாவரங்களில் சத்தாய் ஜலரூபமாயிருக்கின்ற ஜீவனை மேல்சொன்ன பிரகார மிருக்கிற சூரியனுடைய கிரணத்தால் ஆகர்ஷித்து அதாவது சத்தையிழுத்து, அசத்தாயிருக்கின்ற அதாவது சத்தில்லாம லிருக்கின்ற தாவரங்கள் காய்ந்து விழுந்து போகிறதல்லவா? அவ்விதமே நம்மிலும் சூரியன் இருக்கிறது. அந்தச் சூரிய னுக்கே பிராணன் என்று பெயர். அந்தப் பிராணனுய், அக்கினி சுரூபமாயிருக்கின்ற சூரியன், நம்முடைய மேல்பாகத்தின் புருவமத்தியத்திலிருக்கின்றது. அந்தப் பிராணனுகிய அக்கினி சுரூபமான சூரியனின் கிரணங்கள்; முன்சொன்ன சூரிய கிரணங்கள், உலகத்தில் எந்தப் பிரகாரத்தில் வியாபித்திருக் கின்றதோ, அதேபோல் நம்முடைய சடலத்தில் நகமுள்ள வரையும் வியாபித்திருக்கிறது. அதுவல்லாமல் மிகவும் மேலே யிருக்கின்ற சூரிய கிரணத்தால், எவ்வளவோ கீழே உலகத்தில் இருக்கிற சஸ்யாதிகளிலிருந்து, சத்தாய் ஜலரூபமாயிருக்கின்ற

ஜீவனை, சூரியன் எந்தப் பிரகாரத்தில் இழுக்கின்றதோ, அதே பிரகாரத்தில், நம்முடைய எருக் குழியான வயற்றில் உள்ள எருவிலிருக்கின்ற சத்தினை நம்முடைய புருவ மத்தியிலிருக்கின்ற பிராணனாயிருக்கிற சூரியன், ஆகர்ஷித்து அதாவது இழுத்தெடுத்து அசத்தான மலத்தை வெளியே தள்ளுகிறது. அதனால் சூரியனாய் அக்கினி சரூபமான பிராணனிருக்கின்ற இடம் நமக்கு மேல் பாகமாகிய புருவமத்தியத்திலாகும். அந்த இடத்திற்கே இருதயம் என்று பெயர். அதுமாத்திரமல்லாது இருதயம் ஆகாசத்திலிருக்கின்றது. அந்த ஆகாசம் எது வென்று நீர்கருதி யிருக்கின்றீர்?

சி: ஆகாசமென்பது நம்முடைய சிரசின்மேல் பாகத்திற்கு மேலே காணப்படுகின்றது.

கு: அது ஒருக்காலும் ஆகாசமல்ல. ஏனென்றால் ஆகாசம் அதுவாக இருந்தால், அங்கேதான் இருதயமுமிருக்கவேண்டும். இருதயம் அங்கேயிருக்கின்றதானால், நமக்குப் பிரகாசிப்பதற்கு வழி உண்டோ?

சி: இல்லை.

கு: அதுவுமல்லாமல், இருதயம் நீர் சொன்ன இடத்திலிருக்கின்றதானால், ஒரு பிணத்திற்கும் பிரகாசிக்கவேண்டியதல்லவா? நீர் சொல்லிய ஆகாசமும், இருதயமும் போனதில்லை அல்லவா? அதுகொண்டு பிணத்திற்குப் பிரகாசிக்காமலிருப்பதற்கு காரணமென்ன?

சி: செத்துப் போனதினால்.

கு: செத்துப் போனபோது அதில் என்ன இல்லை.

சி: ஜீவன்.

கு: ஜீவனில்லாவிடில் பிரகாசம் உண்டோ?

சி: இல்லை.

கு: அப்பொழுது பிரகாச மாகின்ற வஸ்து எது?

சி: ஜீவன்.

கு: ஜீவனையும், பிரகாசமாயும், தன்னிலிருக்கின்ற வஸ்து, தன்னிலிருந்து நசித்தபோது, பிரகாசமில்லாமல் ஆயிற்று. அதனால் எவ்விடமிருந்து பிரகாசித்திருந்ததென்று வெளிப்படுகிறது?

சி: அது தன்னிலிருந்தாகும்.

கு: தன்னில் எவ்விடமிருந்து பிரகாசித்திருந்தது?

சி: மேல்பாகத்திலிருந்து.

கு: அப்போது தன்னில் தானே மேலேயிருக்கின்ற இடத்திற்கே ஆகாசமென்று சொல்லுகிறது. ஆனால் ஆகாசமென்பது அதிகம் பிரகாசிக்கின்றதும், மேலே யிருக்கின்றதும்,

காணமுடியாததுமாகும். அப்பொழுது நமக்குப் பிரகாசிப்பது எவ்விடமிருந்து?

சி: இதோ காணுகின்ற ஆகாசத்திலிருக்கிற சூரியனிலிருந்து.

கு: அதற்கு ஒருக்காலுமிடமில்லை. ஏனென்றால் செத்தபோதும் இக்காணுகின்ற ஆகாசமும், சூரியனுமிருந்ததல்லவா? அந்தப் பிணத்திற்குப் பிரகாசிக்கவில்லை என்று நீர் தானே சொன்னீர். தவிர இப்போது சூரியன் உதித்து "மத்தியானம்" என்றும் சொல்லுகின்றீரல்லவா? இதோ! இந்தச் சமயத்தில் ஒருவர் படுத்துத் தூங்குகிறார். இப்போது இவருக்கு ஏதேனும் பிரகாச முண்டோ?

சி: இல்லை.

கு: என்ன காரணம்? நீர் சொன்ன ஆகாசமும், சூரியனுமில்லையா? இவருக்கு ஏன் பிரகாசிக்கவில்லை?

சி: இவர் தூங்குவதனால்.

கு: ஆனால் தூங்குபவருக்கு எப்பொழுது பிரகாசிப்பது?

சி: தூக்கம் விழித்தபொழுது.

கு: அப்போது எவ்விடமிருந்து பிரகாசிக்கிறது?

சி: அவனவனிலிருந்தேயாகும்.

கு: அவனவனில் எவ்விடமிருந்து பிரகாசிக்கின்றது?

சி: அவனவனிலுள்ள ஆகாசத்திலிருந்தே.

கு: அந்த ஆகாசம் எது?

சி: அவனவனுடைய மேல்பாகத்தில்.

கு: அது எது?

சி: அது சிரசு.

கு: நமக்கு அதிகம் பிரகாசிப்பது எவ்விடமிருந்து?

சி: சிரசிலிருந்தேயாகும்.

கு: ஆனால் நமக்கு மேல்பாகம் எது?

சி: சிரசு ஆகும்.

கு: அதுவல்லாமல் ஆகாசம் காணமுடியாததென்று சொல்லப்படுகிறது. ஆனால் நீர்சொன்ன ஆகாசம் இதாயிருந்தானால், இதோ பாருங்கள் காணப்படுகிறதில்லையா?

சி: காணப்படுகிறதுண்டு.

கு: அப்போது ஆகாசத்தைக் காண்பதற்கு முடியாது என்று சொல்லுவதற் கிடமுண்டா?

சி: இடமில்லை.

கு: ஆனால் நமக்குக் காண்பதற்குச் சாத்தியப்படாத வஸ்து அவனவன் சிரசாகும். எப்படி என்றால் ஒரு கண்ணாடி எடுத்துப் பார்க்கும்பொழுது, முகம்மாத்திரம் காணலாம். பல கண்ணாடிகள் எடுத்து, எல்லாப் பக்கங்களிலும் வைத்துப்

பார்த்தாலும், நிலத்தில் வைத்துத் தலை கீழாகப் பார்த்தாலும் சிரசு முழுவதும் ஒரே சமயத்தில் காண்பதற்கு முடிவதில்லை. இதனாலாகும் ஆகாசம் காணமுடியாததென்று சொல்லக் காரணம். அது அவனவனுடைய சிரசாகும். தவிர ஆகாசத்தி லிருந்தே சப்தம் உண்டாகின்றதும், ஆகாசத்தில்தான் சப்தம் கேட்கிறதுமாகும். அந்தச்சப்தம் உண்டாவது நீர் சொல்லிய ஆகாசத்திலிருந்தென்றால் நாம் நம் வாயை மூடிப் பேசாம லிருந்தால் நம்முடைய சப்தம் இக்காணுகின்ற ஆகாசத்தி லிருந்துண்டாகுமா?

சி: உண்டாவதில்லை.

கு: அப்பொழுது எவ்விடமிருந்து சப்தம் உண்டா கின்றது?

சி: அவனவனுடைய சிரசிலிருந்தாகும்.

கு: சிரசு இல்லை என்றால் சப்தமுண்டாகுமா?

சி: உண்டாவதில்லை.

கு: இதனால்தான் சப்தம் ஆகாசத்திலிருந்து உண்டா கின்றதென்று சொல்லக்காரணம். அந்த ஆகாசம் சிரசாகும். சிரசிலிருந்தாகும் சப்தம் உண்டாகிறது. தவிர சப்தத்தைக் கேட்பதற்கு என்ன உண்டாயிருக்கவேண்டும்?

சி: சிரசு உண்டாயிருக்கவேண்டும்.

கு: இதனால்தான் ஆகாசத்திலிருந்து சப்தமுண்டாகிற தென்றும், ஆகாசத்தால் சப்தம் கேட்கப் படுகிறதென்றும் சொல்லக்காரணம். அப்பொழுது ஆகாசமாயிருக்கின்ற 'சிரசு' இல்லையானால் சப்தம் உண்டாகிறதற்கோ, சப்தம் கேட்பதற்கோ முடிகிறதில்லை. தவிர நமக்கு கால், கை, கண், மூக்கு இவைகள் இல்லை என்று வைத்துக் கொள்வோம். சிரசும், ஜீவனும், நாவு மிருக்கிறது. அப்பொழுது நமக்கு எந்தப் பிரகாரத்திலும் சப்தம் உண்டாக்கலாம். சிரசு இல்லை யென்றால் சப்தம் உண்டாக்க முடியுமா?

சி: முடியாது.

கு: இதோபாருங்கள்! நாம் இரண்டு கைகளை தம்மில் தட்டுகின்றோம். அப்பொழுது என்ன உண்டாகிறது?

சி: சப்தம் உண்டாகிறது.

கு: அது எதனால் உண்டாகிறது?

சி: இரண்டு கைகளும் தம்மில் தட்டி உண்டாக்கியதாகும்.

கு: அது ஒருபொழுதும் கைகளைக் கொண்டு முடிகிற தில்லை. ஏனென்றால் நம்முடைய தலையை எடுத்து விட்டால் பின்பு உடலில் கைகளை எடுக்கவும், தட்டவும் முடியுமா?

சி: முடியாது.

கு: அப்பொழுது எல்லா சக்தியுமிருக்கிறது எவ்விடத்திலாகும்?

சி: சிரசிலாகும்.

கு: சிரசில்லையானால் ஆகாசமென்றோ, ஆதியென்றோ அந்தமென்றோ, யாதேனு முண்டா?

சி: இல்லை.

கு: எல்லா நிலைமைகளும் எவ்விடமிருந் துண்டாகிறது?

சி: அவனவனது சிரசிலிருந்தாகும்.

கு: நமக்குப் பிரகாசிப்பது சிரசிலிருந்து என்பதற்கு மற்றொரு உதாரணம்:—இதோ இரண்டடுக்குள்ள ஒரு மெத்தை வீடு. இந்த அடுக்குகளில் கீழ் அடுக்கின் அறை உள்ளே இரவில் மிகப்பிரகாசமாகிய ஓர் விளக்கை ஏற்றி வைத்து அந்த அறையின் கதவுகளையும், ஜன்னல்களையும் மூடி விட்டு, மேல் அடுக்கிற்குள் சென்று அங்குள்ள ஜன்னலின் வழியாக வெளியில் பார்த்தால் கீழ் அடுக்கில் ஏத்திவைக்கப் பட்டிருக்கும் விளக்கின் வெளிச்சத்தால் வெளியிலுள்ள எவைகளையேனும் காணுவதற்கு முடியுமா?

சி: முடியாது.

கு: அது என்ன காரணம்?

சி: அந்த வீட்டினது கீழ் அடுக்கில்தான் பிரகாசமிருக்கிறது. அதன் கதவுகளும், ஜன்னல்களும் மூடப்பட்டதினால் தான், வெளியிலிருக்கும் பொருள்களைக் காண முடியாமல் வந்தது.

கு: இதே பிரகாரம் நமது இந்த ஜடத்தை இரண்டடுக்குள்ள ஒரு மெத்தை வீட்டுக்கு ஒப்பிடலாம். அதாவது கழுத்திற்குக் கீழே கீழ் அடுக்கு. மேலே மேல் அடுக்கு. இதில் கழுத்தின் கீழ் உள்ள கீழ் அடுக்கினுள்ளில் பிரகாச வஸ்து இருக்கிறதென்றால், கழுத்திற்கு மேலுள்ள மேல் அடுக்கிலிருந்து, வெளியே பார்க்கும்பொழுது பிரகாசத்தைக் காண முடியுமா?

சி: காணமுடியாது.

கு: அது ஏதனால்?

சி: பிரகாசமானது கழுத்திற்குக் கீழ் உள்ள கீழ் அடுக்கினுள் இருந்ததினால்.

கு: அப்போது நமக்கு எவ்விடமிருந்து பிரகாசிக்கிறது என்று வெளிப்படுகிறது?

சி: கழுத்திற்கு மேலேயுள்ள மேல் அடுக்கிலிருந்து.

கு: தவிர இதோ! இந்த வீட்டிற்குள் வாசலுக்கு நேரே ஒரு விளக்கு ஏற்றிவைத்துக் கதவை மூடினால் வெளியில் எப்படியிருக்கும்?

சி: இருட்டாயிருக்கும்.

கு: கதவைத்திறந்தாலோ?

சி: வெளிச்சமாகும்.

கு: அப்பொழுது எவ்விடமிருந்து வெளிச்சம் உண்டாகிறது?

சி: உள்ளிலிருக்கும் விளக்கிலிருந்து.

கு: அது வெளியில் எப்படி பிரகாசிக்கின்றது?

சி: அந்த வாசலுக்கு நேரே விளக்கிலிருந்து எரிந்து கொண்டிருக்கின்ற அக்கினியினுடைய சக்திக்கு அனுசரித்து வெளியில் பிரகாசிக்கின்றது.

கு: அந்த விளக்கில் எண்ணெயும், திரியும், அக்கினியுமில்லையானல் பிரகாசிக்குமா?

சி: பிரகாசிக்காது.

கு: ஆனல் இந்த விளக்கின் கீழ் தட்டிலிருந்தோ அல்லது மேல் தட்டிலிருந்தோ பிரகாசிக்கின்றது?

சி: மேல் தட்டிலிருந்து.

கு: அதே பிரகாரம்தான் நாம் இந்த ஜடத்தை ஒரு விளக்கிற்கு ஒப்பிடலாம். இந்த ஜடமாயிருக்கின்ற விளக்கில் கர்மமாய் வாயுவாயிருக்கின்ற தைலத்தை நிறைத்து, அதில் மனதாயிருக்கின்ற திரியைப்போட்டு, ஆத்மாவாகின்ற தீபத்தினல் எரிந்துகொண்டிருக்கின்றதாகும் இக்காணுகின்ற உலகம். அது எந்தப் பிரகாரமென்றால், விளக்கினுடைய மேல்தட்டிலிருக்கின்ற திரி எரிந்து எப்படி ஜொலிப்புடன் பிரகாசிக்கின்றதோ, அதே பிரகாரத்தில் தான், இந்த ஜடமாயிருக்கின்ற விளக்கினுடைய மேல் தட்டிலிருந்து, மனதாயிருக்கின்ற திரி எரிந்து ஜொலித்துக்கொண்டிருக்கின்றதாகுமிக் காணப்படுவது. மேல் தட்டில் எவ்விடமிருந்து பிரகாசிக்கின்றதென்றால், அது புருவ மத்தியத்திலிருந்தாகும். காரணம் சிவனை விருபாக்ஷனென்றும், திரிலோசனனென்றும் சொல்லுகின்றார்கள். ஆனல் சிவனுடைய ரூபமாகுமென்று சங்கற்பித்துப் படத்தை வரைந்து காணுகிறதுண்டு. அந்தப் படத்தைப் பார்க்கும்போது அதற்கு மூன்று கண்களிருக்கின்றன. அவைகளில் ஒன்று நெருப்புக் கண் என்றும் சொல்லுகிறோம். ஆனல் அந்த சிவன் யாரென்றால் ஜீவனாகும். அந்த ஜீவனாயிருக்கின்ற சிவனுக்கு மூன்று கண்களிருக்கின்றன. அதாவது இடகலை, பிங்கலை, சுழிமுனை. அதில் இடகலை, பிங்கலை சந்திர சூரியர்களாகும். சுழிமுனை என்பது அக்கினியாகின்றது. இதனல்தான் சிவனுக்கு மூன்று கண்களுண்டென்றும். அவைகளில் ஒன்று அக்கினி நேத்திரமென்றும், அது புருவ மத்தியத்திலாகுமென்றும், சொல்லக் காரணம். அதை அனுசரித்துத்தான் மூன்

சொன்ன படத்திலும் புருவ மத்தியத்தில் அக்கினி நேத்திரம் எழுதியிருக்கக் காரணம். அப்பொழுது புருவமத்தியம் என்று சொல்லுகிறதே சுழிமுனை என்று சொல்லுகிற அக்கினி நேத்திர மாகும். ஆனால் அந்தப் புருவ மத்தியத்தில் அக்கினியில்லாவிட் டால் நமக்குப் பிரகாசிப்பதற்கு வழியுண்டோ?

சி: வழியில்லை.

கு: ஆனால் நம்மில் எவ்விடமிருந்து பிரகாசிக்கிறது?

சி: புருவமத்தியத்திலிருக்கின்ற சுழி முனையான அக்கினி நேத்திரத்திலிருந்து.

கு: அதற்கேயாகும் இருதயம் என்று சொல்லுவது இவ்விதத்தில் தன்னில், ஆகாச மத்தியத்தில் புருவமத்தியமாய், இருதயமாய், சுழி முனையாயிருக்கின்ற அக்கினி நேத்திரத்தி லிருந்தே நமக்குப் பிரகாசிக்கின்றது.

அத்தியாயம் 3.

சி: தாங்கள் இதுவரை கூறியதிலிருந்து "தான்தானே" ஈஸ்வரன் என்றும் அப்படியிருக்கின்ற தன்னுடைய சக்தி வெளியில் வியாபித்தபோது அதிலிருந்து உலகம் உண்டான தென்றும் தெரியவந்தது. ஆனால் உலகத்தில் சாதாரணமாக புண்ணிய பாபங்களைக் கொண்டாகும் ஜனன மரணமென்று பொதுவில் சொல்லிவருகிறது. அதனுடைய உண்மை என்ன?

கு: புண்ணியம் என்பதும், பாபம் என்பதும், என்ன வென்று தாங்களறிந்திருக்கின்றீர்?

சி: புண்ணியம் என்பது நல்ல தொழில்களைச் செய்வது. அதாவது யாதொன்றையும் ஹிம்சியாமல் தயையுடனிருப் பதும், அன்னதானம், கோதானம் முதலியவைகளைச் செய் கின்றதும், யாகம், ஹோமம், பூஜை முதலியவைகள் செய் கிறதும், செய்விக்கின்றதும், மற்றுமாகும். பாபம் என்பது கெட்ட தொழில்களைச் செய்வது. அதாவது தானம் தருமம் செய்யாதிருப்பதும், ஜீவஹிம்சாதிகள் செய்வதும் மற்றுமாகும். இந்தப்படியேயாகும் நானும் கருதியிருக்கின்றேன்.

கு: அப்படி கருதியிருப்பது மிகவும் தப்பிதமாகும். புண்ணியமென்பது நல்ல செய்கையென்றோ, பாபமென்பது கெட்ட செய்கையென்றோ சொல்லுவதற்கியலாது. அது ஏனென்றால் புண்ணிய பாபங்களைக் கொண்டாகும் ஜனன மரணமென்று நீர்தானே சொல்லுகிறீர். அப்பொழுது யானை முதல் எறும்பு வரையிலுமுள்ள எல்லா ஜீவிகளுக்கும் புண்ணிய பாபங்கள் பாத்தியப் படுகின்றதல்லவா? இவைகளில் எவை யெல்லாம் புண்ணியங்கொண்டு ஜனித்தன? எவையெல்லாம் பாபம்கொண்டு ஜனித்தன?

சி: மனிதர்களாகிய நாமெல்லாம் புண்ணியத்தாலும் பாக்கியுள்ள ஜீவிகளெல்லாம் பாபத்தாலும் ஜனித்தன.

கு: மனிதரென்று சொல்லிவருகின்ற நாம் மனிதராய் ஜனிப்பதற்கு வேண்டி எப்பொழுது புண்ணியம் செய்தோம்? யானை முதல் எறும்புவரை என்று சொல்லி வருகின்ற யாவும் அந்த மாதிரி ஜனிப்பதற்கு வேண்டி, எப்பொழுது பாபம் செய்தன?

சி: அது முன் ஜென்மத்திலாகும்.

கு: ஆனால் முன் ஜென்மத்தில் நாம் யாராகவிருந்தோம். இந்த ஜென்மத்தில் மனிதர்களாக ஜனிக்கவேண்டி நாம் என்ன புண்ணியம் செய்தோம்? எறும்பு முதலான ஜீவிகள் முன்

ஜென்மத்தில் யாராகவிருந்தன? இந்த ஜென்மத்தில் முன் சொன்ன பிரகாரமுள்ள ஜீவிகளாக ஜனிக்கிறதற்குச் செய்த பாபம் என்ன? சொல்ல முடியுமா?

சி: சொல்லுவதற்கு முடியாது.

கு: ஆனால், அவனவனுக்கு அனுபவமில்லாத சங்கதிகளை நம்புவதில் பிரயோசனமில்லை. அவனவனுடைய அனுபவத்திற்கும், யுக்திக்கும், சுருதிக்கும் அனுசரித்தது எதுவோ, அதைத்தான் நம்பவேண்டும். ஏனென்றால், எறும்பு முதல் நாம் உட்பட எவ்வளவோ சிருஷ்டிகள் உலகில் கேட்கப்படுகின்றனவோ, காணப்படுகின்றனவோ, அறியப்படுகின்றனவோ, அவைகளெல்லாம் ஓரே ஜீவனாகும். இந்தப்படி வித்தியாசமாய்க் காணப்படுவது உருவ வித்தியாசமேயாகும். தவிர அவனவனுடைய ஜீவன் வெளியில் வியாபித்தபோது சக்தியாகி, அந்தச் சக்தியில் தன்னுடைய ஜீவனை மற்றுள்ளவைளாகிப் பிரதி பிம்பித்ததாகும் இக்காணப்படுமுலகம். இதைப் பின்னால் விஸ்தரித்துச் சொல்லுவோம். புண்ணிய பாபங்களைக் கொண்டாகும் ஜனன மரண மென்றால், இராஜாக்களென்று அபிமானித்து வருகின்றவர்களுக்கும் அது பாத்தியப்படுகிறதாகும். அதுவுமல்லாமல், புண்ணிய பாபாதிகளைச் செய்தால், அதனுடைய குணதோஷங்களை எவ்வெப்போதாகும் அனுபவிக்கிறது?

சி: முன் ஜென்மத்தில் செய்தது இந்த ஜென்மத்திலும், இந்த ஜென்மத்தில் செய்கிறது அடுத்த ஜென்மத்திலும் அனுபவிக்கின்றதாகும்.

கு: அது எப்படி, எவ்விதம் அனுபவிக்கின்றது?

சி: புண்ணியம் செய்தவர்கள், பிராமணர்களாயும், இராஜாக்களாயும், தனவந்தர்களாயும், பாபம் செய்தவர்கள், தரித்திரர்களாயும், ரோகிகளாயும் ஜனித்து அனுபவிக்கிறார்கள்.

கு: ஆனால் பிராமணர்களுக்கும், இராஜாக்களுக்கும், தனவான்களுக்கும் ரோகம் உண்டாகின்றதா? இல்லையா?

சி: உண்டாகிறதுண்டு.

கு: அதன் காரணமென்ன? அவர் எக்காலத்தில் செய்த பாபமாகும்?

சி: முன் ஜென்மத்தில் செய்ததாகும்.

கு: அப்படியானால் அவர் எப்படி பிராமணர்களாகின்றதும், இராஜாக்களாகின்றதும், தனவந்தர்களாகிறதும், அப்படியானால் நாமும் மேல்சொன்ன பிரகாரம் உள்ளவர்களாய் ஜனிக்கவேண்டுமல்லவா? எப்படியென்றால் பாபம் முழுமையும் இல்லாமலாகும்போதுதான் பிராமணர்களாகின்றதும், இராஜாக்களாகின்றதும். தவிர, ராஜாக்கள் புண்ணி

யோத் க்ருஷ்ட சரீரிகளாகும் என்று சொல்லி வருகிறது. அதாவது புண்ணியம் உயர்ந்த பதவியை அடைகின்றது. அப்போது பாபம் என்பது கொஞ்சமும் கிடையாது. ஏனென்றால் புண்ணியம் உயர்ந்த பதவியாகும்பொழுது ஈஸ்வரனாகும். ஏனென்றால் உயர்ந்த வஸ்து ஈஸ்வரனாகும். அப்பொழுது புண்ணியம் ஈஸ்வரனிடத்தில் சேர்ந்து ஈஸ்வரனாய்த் தீர்ந்தது. அப்பொழுதாகும் இராஜாவாகின்றது. ஈஸ்வராம்ஸமாகும் இராஜா. அதை அனுசரித்தே "ராஜாப்ரத்யக்ஷ தேவதா" என்று சொல்லக் காரணம். ஒவ்வொரு பள்ளிக்கூடத்தின் சுவர்களிலும் மற்றும் "ராஜாப்ரத்யக்ஷதேவதா" என்று எழுதப்பட்டிருப்பதை நாம் பார்த்து வருகிறோம். அப்பொழுது ப்ரத்யக்ஷமான ஈஸ்வராகும் இராஜா. அந்த இராஜாவிற்கு யாதொரு வியாதியும் உண்டாக இடமில்லை. அதுவுமல்லாமல் இராஜாக்கன்மார்களுக்கு உண்டாகின்ற விதத்தில் நமக்கு வியாதிகள் உண்டாகின்றதில்லை. அவர்களுக்கு இராஜயக்ஷ்மா அதாவது க்ஷயம், இராஜப்பிளவை, பவுத்திரம், மூலம், பிரமேகம், பக்ஷவாதம் முதலிய பெரிய வியாதிகளாகும் உண்டாகின்றன. அதனால் அவர்கள் பெரிய குற்றங்கள் செய்தவர்களாகும். அப்படிப் பெரிய பாபமான குற்றங்கள் செய்தவர்கள் இராஜாக்களாக ஜனிப்பதற்கு இடமுண்டோ?

சி: இடமில்லை.

கு: ஆனால் புண்ணிய பாபங்கள் உண்டாவது எவ்விடமிருந்து?

சி: அது மனதிலிருந்து ஆகும்.

கு: அப்பொழுது நமக்கு மனதில்லாவிட்டால் புண்ணியமோ, பாபமோ உண்டாகுமா?

சி: உண்டாகாது.

கு: மனதிலிருந்து உண்டாகின்ற பாபங்கள் அறவே உண்டாகாதிருந்தால் என்னவாயிருக்கும்?

சி: புண்ணியமாயிருக்கும்.

கு: புண்ணியமென்பது என்னவாகும்?

சி: ஈசுவரனிடம் சேருவதற்குள்ள ஒரு நிலை.

கு: ஆனால் ஈஸ்வரன் நம்மில் எவ்விடமிருக்கிறது?

சி: நம்மில் உயர்ந்த இடத்திலிருக்கிறது.

கு: ஈஸ்வரன் நமக்குமேலேயாகும். ஆனால் நமக்கு மேலேயிருக்கிறது சிரசாகும். அந்த சிரசிலாகும் ஈஸ்வரனிருக்கிறது. அப்படி மேலே சிரசிலிருக்கின்ற ஈஸ்வரனிடத்தில் சேர்ந்து, ஒரே நிலையாக இருக்க வேண்டுமென்றால், ஈஸ்வரனிடம் ஓரே கதியாக இருக்கவேண்டும். அந்த அவஸ்தைக்குத்தான் "புண்ணியோத்க்ருஷ்டம்" என்று சொல்லுவது. புண்ணியம்

உத்கிருஷ்டமாகிய சரீரிகளாகும் ஈஸ்வரர். அதாவது புண்ணியம் உயர்ந்த பதவியாய் வந்த சரீரிகள் யாரோ அவராகும் ஈஸ்வரர். அது கொண்டாகும் ஈஸ்வராம்ஸமாகும் ராஜா என்ற சொல்லக் காரணம். அதனால் தன்னிலிருந்து உண்டாகின்ற பாபங்கள் உண்டாகாமல் தன்னில் மேலே சிரசிலிருக்கின்ற ஈஸ்வரனிடம் ஏக கதியாக வரும்பொழுது புண்ணியம் உத்கிருஷ்டமாகி இராஜாவாகின்றது. தவிர நீர் சண்டாளனென்று சொல்லப்படுகின்ற ஒரு பறையனுக்கு மேற் சொன்ன பிரகாரம் உண்டாயிற்று என்றால் அவன் யாராகிறான்.

சி: அவன் இராஜாவாகிறான்.

கு: அப்பொழுது இராஜா என்றொரு சிருஷ்டியுண்டோ?

சி: இல்லை.

கு: எப்படியாகும் இராஜாவாகின்றது?

சி: அவனவனுடைய தொழிலைக் கொண்டாகும்.

கு: அது எப்படியென்றால், தன்னுடைய சக்தி வெளியில் வியாபித்து, பல விஷயங்களிலும் சென்று பதிந்து, மோஹமாய் பிரமித்து அதாவது மயங்கிக் கிடக்கின்றதை வெளியில் வந்து வியாபித்து யாதொரு விஷயங்களிலும் போகாமல், உத்பவஸ்தானமாகிய தன்னில் தானே சேருவதற்குள்ள ஏக கதியாகி வரும் பொழுது ஆகும் இராஜாவென்று சொல்லப்படுகிற நிலைமை. அதல்லாமல் இப்போது நாம் இராஜாவென்று அபிமானித்து வருகிறவர்களுடைய நிலைமை, உலகம் முழுவதும் வியாபித்து இருக்கின்ற ஜீவிகளுக்குச் சமமாக அனுபவிக்க வேண்டியதா யிருக்கின்ற சொத்தை "கை வலுத்தவன் காரியக்காரன்" என்கிற நிலையில் அக்கிரமமாய்ப் பிடித்தடக்கி, பதவி அபிமானாதிகள் ஏற்படுத்தியதாகும். ஒருவர் அதிக பலமுள்ளவனும், பராக்கிரமமும் ஜனக்கட்டுள்ளவருமானால், பாக்கியுள்ள ஜனங்களைப் பிடித்துக் கட்டி, அடித்து, வெட்டி நீங்கள் எல்லோரும் எனக்குக் கீழ்ப்படிய வேண்டும், நான் இராஜாவாகும், என்னுடைய சொற்படி அனுசரித்து நடக்க வேண்டும் என்றெல்லாம், பலாத்காரமாய் நிர்ப்பந்தித்துத் தன்னுடைய அடிமைகளாக்கி கீழடக்கி ஆண்டு வருவதாகும். இந்தப் பிரகாரத்திலாகும் இப்பொழுதுள்ள ராஜாக்கள் என்றும், பிரபுக்களென்றும், தனிகர்களென்றும் சொல்லி வருகின்றவர்கள். அதற்கு உதாரணம்—1921ல் அதாவது கொல்ல வருஷம் 1096ல் மலையாள ராஜ்யத்தில் நடந்த மாப்பிள்ளைக் கலகத்தில் தலைவனாயிருந்தது குஞ்ஞி அஹம்மது ஹாஜியாயிருந்ததல்லவா? அவரை ஒன்றிரண்டு தடவைகள் கவர்ன்மெண்டு சிறை தண்டனை அடைந்த கேடி

என்று கேள்விப்பட்டிருக்கிறோமல்லவா? அவருக்கு மிக ஜனக் கட்டுண்டாகி சக்தி அதிகப்பட்டதினால் இந்தியா கவர்ன் மெண்டினோடு எதிர்த்துக்கலகத்திற்குப் புறப்பட்டு ஜனங்களைக் கொடூரமாக உபத்திரவம் செய்து பிடித்துக்கட்டி, வெட்டித் துண்டு செய்ய ஆரம்பித்தபோது, அந்த ராஜ்ய வாசிகள் எல்லோரும் பயந்து அடங்கி அவருக்குக் கீழாய் அடிமையாய் வந்தால் அவரை அப்பொழுது யாரென்று சொல்லலாம்?

சி: இராஜாவென்று சொல்லலாம்.

கு: அப்பொழுது இராஜாவென்பது பிரத்தியேகமான ஒரு சிருஷ்டியோ, அல்லது அவனவனுடைய துஷ்ட செய்கை யால் உண்டாகிறதோ?

சி: அவனவனுடைய துஷ்டசெய்கையினாலே யாகும்.

கு: ஆனால் சுகிர்தம் துஷ்கிருதம் என்பது, இன்ன தென்றறியாமலிருக்கின்றதினால் தவறாக கிரஹிக்க இடமுண் டாயிற்று. பாபமென்பது நசிக்கின்றது. அதாவது புண்ணிய மில்லாமலாகின்றது. ஆனால் ஒருவன் ரோகம் பிடித்து அசக்தனாய்க் கிடக்கின்றான். அப்பொழுது அவனைப் புண்ணிய வானென்றோ, பாபவானென்றோ சொல்லவேண்டியது?

சி: பாபி என்று.

கு: அப்படிச் சொல்வதற்கிடமில்லை. காரணம் புண்ணியம் நசித்தால் செத்துப் போகின்றான். புண்ணியம் தீர்ந்தால் செத்துப்போகிறது என்று சொல்லுவது. ரோகம் பிடித்து படுத்திருக்கும்பொழுது அவனுக்கு ஜீவனிருக்கின்ற தல்லவா? அவன் சாகவில்லை யல்லவா? பாபம் என்றால் ஈசுவர சைதன்யம் இல்லாததாகும். ரோகம்பிடித்துப் படுத்திருக்கும் சமயத்தில் அவனுக்கு ஈஸ்வர சைதன்யம் இல்லையோ? ஈஸ்வர சைதன்யம் இல்லையானால் அவன் ஒரு மரப் பொம்மைக்குச் சமானமாகும். அப்பொழுதாகும் பாபம் என்று சொல்லுவது. பாபம் என்கிறது ஈஸ்வர சைதன்னிய மில்லாமல், ஜீவன் அதிலிருந்து நசித்ததாகும். ஜீவனேயாகும் ஈஸ்வரன். அதாகும் புண்ணியம். அந்தப் புண்ணியமாயிருக் கின்ற வஸ்து நசித்து, சந்திர மண்டலத்தில் பனிபோல் சென்று பதிகின்றது என்று சொல்லுகின்றார்கள். ஆனால் அது உண்மையாகும். அதென்னவென்றால் சந்திரன் என்பது மனமாகும். சந்திர மண்டலமென்று சொல்லப்படுகின்றது மனோ மண்டலமாகும். பனியென்பது நீராயிருக்கின்ற ஆவியாகும். அதாவது விசாரமாயிருக்கின்ற புகையாகும். அதென்னவென்றால், சந்திர மண்டலமாயிருக்கின்ற மனோ மண்டலத்தில் ஜீவனாயிருக்கின்ற புண்ணியம், அது, இது

என்றுள்ள விசாராதிகளாகி நசித்துப்போகின்றது. அப்பொழுதாகும் சத்து போகிறது. இதாகும் புண்ணியம் ஒடுங்கி, சந்திர மண்டலத்தில் பனிக்குச் சமமாய் சென்று பதிகிறது என்று சொல்லக் காரணம். அப்படிப் போகிறது என்னவாகும்?

சி: ஜீவனுயிருக்கின்ற புண்ணியம் என்று வெளிப்படுகிறது.

கு: ஆனால், அந்தப் புண்ணியம் தன்னிலிருந்து நசித்துப் போகும் பொழுதாகும் செத்துப் போகின்றது. அதனால் புண்ணியமாயிருக்கின்ற ஒரு வஸ்து நம்மிடம் உண்டென்று வருகிறது. அதாவது புண்ணியமாயிருக்கின்ற 'தனம்.' அதாகும் 'புருஷார்த்தம்.' அதுபுறத்திலிருக்கின்ற சுழிமுனையிலுள்ள அர்த்தமாகும். புறமென்பது வீடு. அதாவது இந்த ஜடம். சுழி முனையென்பது இருதயம். அர்த்தமென்பது தனம். அதாவது பொருள். அதாவது புறத்திலுள்ள சுழிமுனையாகிய இருதயத்தில் இருக்கிற தனம். அந்த தனம் நசித்துப்போகும் பொழுதாகும் நாம் செத்துப் போகின்றது. அதெப்படியென்றால் இதோ பாருங்கள்! ஒரு பெட்டி. இந்தப் பெட்டி நிறைய தனம் இருந்தது. அந்தத் தனத்தை செலவு செய்து செய்து கொண்டு இருந்தால் கடைசியில் என்னவாய் முடியும்?

சி: தனம் தீர்ந்து போகும்.

கு: அப்பொழுது என்ன மிச்சமுண்டு?

சி: பெட்டிமாத்திரம் மிச்சமுண்டு.

கு: இதே பிரகாரம் இக்காணுகின்ற ஜடத்தை ஓர் பெட்டியென்று நினைத்துக் கொள்ளுவோம். இந்த ஜடமாயிருக்கின்ற பெட்டிக்குள்ளாகும் புண்ணியம் என்கிற தனம் இருக்கின்றது. அந்தத் தனம் செலவாகித் தீர்ந்து விட்டால் கடைசியில் என்னவாகத் தீருகிறது?

சி: செத்துப் போகிறது.

கு: அப்பொழுதானால் புண்ணியம் என்கிற தனம் நசித்ததும் பின் அவ்விடம் என்ன மிச்சமுண்டு?

சி: ஜடமாகிய பெட்டி மாத்திரம் மிச்சம் உண்டு.

கு: இந்த ஜடமாயிருக்கிற பெட்டியி லுண்டாயிருந்த புண்ணியம் என்கிற தனம் நசித்தபொழுது ஜடமாயிருக்கிற பெட்டிமாத்திரம் மிச்சமாய் அதைக் குழிதோண்டிப் புதைக்கின்றதோ அல்லது சுட்டு சாம்பராக்குகிறதோ செய்கிறோம்: இது நமக்குப் பிரத்தியக்ஷ அனுபவமல்லவா? அதனால் இந்த ஜடத்தில் ஒரு தனம் உண்டாயிருந்ததென்றும் அந்த தனம் புண்ணிய மாயிருந்தது என்றும் வருகிறது. புண்ணியம்

என்பது விசேஷம். விசேஷம் என்பது அறிவு. அறிவினால் செய்யப் படுகிறது புண்ணியமும், அறிவில்லாமல் செய்வது பாபம் என்றும் உலகத்தில் சொல்லிவருகிறார்கள். அது உண்மையேயாகும். அது என்னவென்றால் அறிவு என்பது என்ன வென்று முன்பு சொல்லப்பட்டிருக்கிறது?

சி: ஜீவசக்தியாகிய வாயுவென்றாகும்.

கு: அது எப்படியிருக்கின்ற வாயுவாகும் என்று சொல்லப்பட்டது?

சி: பிரம்மரந்திரத்தில் தாக்கிக்கொண் டிருக்கின்ற சமீரணன்.

கு: அப்பொழுது அறிவாயிருக்கின்ற வாயுவினால் செய்யப் படுகின்றது புண்ணியமும், அது உள்ளில் கூடியல்லாமல் வெளியில் போய் முடிகிறது பாபம் என்றும் பெயர். இதனாலே யாகும், புண்ணியம் நசித்தால்பாபம் என்றும் சொல்லக் காரணம். அப்பொழுது பாபம் என்று சொல்லுவது என்னவாகும்?

சி: ஜீவனை நசிப்பிக்கிறதாகும்.

கு: உமது ஜீவனை நீர் சிநேகித்திருக்கிறீரா?

சி: ஓ! நான் சிநேகித்திருக்கிறேன்.

கு: ஆனால் நீர் செத்துப் போவீரா?

சி: நான் செத்துப்போவேன்.

கு: உங்களுண்டைய ஜீவனை நீர் சிநேகித்ததானால் செத்துப் போவதற்கு இடமுண்டோ?

சி: அது எப்படி யென்பது எனக்குத் தெரியவில்லை.

கு: சொல்லுகிறேன். அதாவது உமது ஜீவனை நீர் சினேகித்திருந்ததானால் அந்த ஜீவனை வெளியில் விடுமோ? அந்த ஜீவனை வெளியில் விடாமல் உங்களுள்ளிலேயே ஒடுக்க வல்லவா செய்யவேண்டியது?

சி: ஆம். ஒடுக்கத்தான் செய்யவேண்டியது.

கு: அப்பொழுது நீர் செத்துப்போவதற்கிடமுண்டோ?

சி: இடமில்லை.

கு: அது மாத்திரமல்ல. உங்கள் ஜீவனை நீங்கள் சிநேகித்திருந்ததானால் மற்றொன்றினை இம்சிப்பதற் கிடையில்லை. எப்பொழுது, தன்னைத்தான் சிநேகிக்கிறதோ அப்பொழுது மற்றொன்றினை இம்சிக்கிறதில்லை. தன்னைத்தான் சிநேகித்தால் தன்னைவிட்டு வெளியே போகிறதில்லை. தன்னை விட்டு வெளியே போகிறதில்லையானால் மற்றொன்றையும் இம்சிக்க முடியாது. அதெப்படியென்றால் இதோ பாருங்கள்! ஒரு அறையோடு கூடின இரண்டடுக்கு வீடு. அதன் மேலடுக்கிலுள்ள அறைக்கு மிகவும் ஜன்னல்கள் உண்டு. அதன் கீழ் அடுக்கிற்

குள் சென்று கதவை மூடி, அதிலிருந்து மேலடுக்கிற்கு ஏறிப் போய், அதிலுள்ள ஜன்னலின் வழியாய்ப் பார்த்தால் வெளியிலுள்ள எல்லா நிலைகளையும் நீர் பார்த்துக்கொண்டிருக்கலாம். ஆனால் வெளியிலிருக்கிற யாதொரு ஜீவிகளையும், கீழேயிறங்கி வெளியில் வராமல் இம்சிக்க முடியுமா?

சி: இல்லை. இம்சிக்க முடியாது.

கு: ஆனால் மேல் சொன்ன வீட்டிற்குள்ளில் நீங்கள் இருக்கும்போது வெளியிலிருக்கிறதெல்லாம் பார்ப்பதாயிருந்தீர். இந்தப் பிரகாரமே தன்னிலிருக்கிற ஜீவன், கீழே இறங்கி வெளியில் வந்து வியாபிக்கிறது கொண்டாகும், பல இம்சைகளையும் செய்வதற்கு இடமாகிறது. அந்த ஜீவனை வெளியில் விடாமல், தன்னிலேயே உபரியாய் அதாவது மேல் பாகத்தில் ஒடுக்கினால், யாதொன்றினையும் இம்சை செய்யாமல், எல்லாவற்றையும் தெரிந்துகொண்டிருக்கலாம். அப்பொழுது மாத்திரமே ஜீவனை சிநேகித்திருக்கிறதென்று சொல்வதற்கு முடியும். அந்தப்படி ஜீவனை சிநேகிக்காமல் நம்முடைய ஜீவன் பல விஷயங்களிலும் சென்று விழுகிறது கொண்டு, அதாவது மூக்கின் வழியாயும், வாயின் வழியாயும், மற்றும் வெளியே போய் நசித்துக்கொண்டிருக்கின்றதற்கே யாகும் பாபம் என்று சொல்லுவது. அதாவது தன்னுடைய புண்ணியமாய், உள்ளிலுள்ள ஜீவசக்தியாயிருக்கிற வாயு, பாபமாக வெளியில் அநுலோம பிரதிலோமமாகிச் சென்று சென்று தீருகின்றது. அது எப்படியென்றால், மூக்கின் வழியாயும், மற்றும் வெளியே விடுகிறது அநுலோமமும், அவ்வழியாகத்தானே உள்ளே இழுப்பது பிரதிலோமமும் ஆகிறது. இதே பிரகாரம் கழிக்கவும், அநுகமிக்கவும் செய்து, கடைசியில் தன்னிலிருந்து ஜீவன் நசித்து செத்துப் போகிறது. அதெப்படியென்றால், நம்முள்ளிலுள்ள சத்தாயிருக்கின்ற ஜீவன் தன்னைத் தான் அறியாமல் அது, இதுவென்றுள்ள விசாராதிகளால் பாபமாகி வெளியேபோய் நசித்துப் போகின்றது. இந்த நிலைமைக்காகும் பாபம். அப்பொழுது இதுவரையும் நீர் உமது ஜீவனை சிநேகித்திருக்கிறீரா?

சி: இல்லை.

கு: உமது ஜீவனை நீர் சிநேகித்ததாயிருந்தால் நீர் செத்துப் போகுமா?

சி: செத்துப்போகாது.

கு: ஆனால் நாம் எதற்காக வேண்டி புண்ணியம்செய்ய வேண்டும்?

சி: செத்துப்போகாமலிருப்பதற்காக.

கு: செத்தபோது அந்தப் பிணத்திற்கு யாதேனும் ஞாபகமோ, போதமோ, மற்றோ உண்டா?

சி: யாதொன்றுமில்லை.

கு: என்ன காரணம்?

சி: செத்துப் போனதினால்.

கு: செத்தபோது அதில் என்ன இல்லை?

சி: ஜீவசக்தியாகிய வாயு இல்லை.

கு: அப்பொழுது நம்மை ரக்ஷிப்பது யாராகும்?

சி: ஜீவசக்தியாகிய வாயுவாகும்.

கு: அதற்கேயாகும் ஈஸ்வரன் என்று பெயர்.

அத்தியாயம் 4

சி: சுவாமி; முன் அத்தியாயத்தில் ஜீவசக்தியான வாயுவே ஈஸ்வரன் என்று சொன்னீர்களல்லவா? அது எப்படி என்று விவரமாய் சொல்லித் தரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

கு: ஆனால் ஈஸ்வரன் என்பதன் பொருள் "பரண சிரேஷ்டன்" என்றாகும். அதாவது ஈஸ்+வரன். ஈஸ்=பரணம் அதாவது காப்பாற்றல். வரன்=சிரேஷ்டன். அப்பொழுது ஈஸ்வரன் என்பதின் பொருள் பரணசிரேஷ்டன் அதாவது ஆளுவதற்குரியவன் என்றாகிறது. அந்தப்படி நம்மை ஆண்டு கொண்டிருப்பது அதாவது காப்பாற்றுவது யாராகும்?

சி: ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவாகும்.

கு: அந்த வாயு இல்லாதிருந்தால் நாம் ஜலபானம் முதலான பக்ஷணாதிகள் சாப்பிடவோ, பேசவோ அசையவோ மற்றும் செய்ய முடியுமா?

சி: முடியாது.

கு: அது மாத்திரமல்ல. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாராதிகள் செய்வது ஈஸ்வரன் என்று சொல்லுகின்றோம். அது உண்மை தான். அப்படிச் செய்கிறது ஜீவசக்தியாகிய வாயுவாகும். உதாரணம்:—இவ்விடம் ஒரு நெருப்புக் கனலைக்கொண்டுவந்து வைத்து, அதன்மேல் ஓலைச் சருகுகளைப்போட்டால் அது தானாகவே எரியுமா?

சி: எரியாது.

கு: அது எரியவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

சி: ஊதவேண்டும்.

கு: அதை எப்படி ஊதுவது?

சி: ஜீவசக்தியாகிய வாயுவைக் கொண்டாகும்.

கு: அந்த வாயுவினால் என்ன உண்டாயிற்று?

சி: அக்கினியினுடைய பிரகாசம் உண்டாயிற்று.

கு: அந்தப் பிரகாசத்தை நீங்கள் காண்பதுண்டோ?

சி: காண்பதுண்டு.

கு: காணப்படுவதற்கு என்ன உண்டாயிருக்கவேண்டும்?

சி: ரூபம் உண்டாயிருக்கவேண்டும்.

கு: வாயுவிற்கு ரூபம் உண்டோ?

சி: இல்லை.

கு: ரூபம் யாருக்கு உண்டாயிற்று?

சி: அக்கினிக்கு.

கு: அக்கினியினுடைய ரூபம் என்ன?

சி: பிரகாசம்.

கு: அப்பொழுது பிரகாசமாயிருக்கின்ற ரூபத்தைச் சிருஷ்டித்தது யார்?

சி: வாயுவாகும்.

கு: அப்பொழுது சிருஷ்டிகர்த்தா யார்?

சி: ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு.

கு: அப்பிரகாரம் வாயுவால் சிருஷ்டிக்கப்பட்ட பிரகாசமாகிய ரூபத்தை, ஒரு விளக்கில் எண்ணெய்விட்டு திரிவைத்து, அந்தத் திரியை ஏற்றி, அதாவது கொளுத்தி, அந்த விளக்கை பெட்டிக்குள் வைத்துப்பூட்டினுல் எரியுமா?

சி: எரியாது.

கு: காரணம் என்ன?

சி: அதனுள்ளில் வாயு இல்லாததினுல்.

கு: அப்பொழுது அது எரிந்து கொண்டிருக்கவேண்டுமானுல் என்னவேண்டும்?

சி: வாயுவேண்டும்.

கு: அப்பொழுது ஸ்திதி செய்கிறது யார்?

சி: வாயுவாகும்.

கு: எரிந்து கொண்டிருக்கிற பிரகாசமான ரூபத்தை அணைக்கவேண்டுமானுல் என்னவேண்டும்?

சி: வாயுவேண்டும்.

கு: வாயுவினுல் எப்படி அணைப்பது?

சி: ஊதி அணைப்பது.

கு: அப்பொழுது சம்ஹாரம் செய்வது யார்?

சி: வாயுவாகும்.

கு: அப்பொழுது அவ்விதம் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாராதிகள் செய்கிறது யார்?

சி: ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுதான் என்று வெளிப்படுகிறது.

கு: ஆனுல் அந்த வாயுவேயாகும் சக்தி. அந்தச் சக்தியிலிருந்தே சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாராதிகள் உண்டாகின்றன.

இதற்கு சிவ: சக்தி என்று சொல்லுகிறது. இதனாலாகும் "சக்தி யொழிந்தால் சிவனும் சவரூபமாம்" என்று சொல்லக் காரணம். தவிர சர்வ அர்த்தங்களும், அனர்த்தங்களும், அதாவது இன்பதுன்பங்கள் உண்டாக்குகின்றதும், உலகிற்கு ஏககாரணமாயிருக்கின்றதும், விசேஷமாயிருக்கின்றதும் சீரமாகும்.

சி: ஓ சுவாமி! இதுவரையிலும் சொல்லியதெல்லாம் ஜீவ சக்தியாயிருக்கின்ற வாயுவாகுமென்றும், இப்பொழுது சீரம் என்றும் சொல்லுகின்றீர்கள். இதன் காரணம் என்ன?

கு: சீரம் என்பது என்னவென்று உமக்குத் தெரியுமா?

சி: ஓ! தெரியும்.

கு: அது எது?

சி: அது இந்த உடல்.

கு: நீர் இப்பொழுது தொட்டுக் காட்டியதற்கு சீரம் என்று பெயரில்லை. அதன் பெயர் மார்பு. சீரத்தைத் தொட்டுக் காண்பிப்பதற்கு முடியுமா?

சி: எல்லா அவயவங்களோடு கூடிய ஒரு ரூபத்திற்கே சீரம் என்று பெயர்.

கு: ஆனால் எல்லா அவயவங்களுமில்லாதிருந்தால் அதைச் சீரம் என்று சொல்லக் கூடாதா?

சி: சொல்லக் கூடாது.

கு: ஒரு மனிதனுக்குக் காலில்லை. ஒரு மனிதனுக்குக் கையில்லை. மற்றொருவனுக்குக் கண்ணில்லை. வேறொருவனுக்கு மூக்கு இல்லை. ஒருவனுக்கு மேற்கூறிய அவயவங்களாகிய கால், கை, கண், மூக்கு, இவைகளில்லையானால் அவருக்கு சீரமில்லையென்று சொல்லமுடியுமா?

சி: சொல்லமுடியாது.

கு: அதல்லாமல் தேகத்திலுள்ள எல்லா அவயவங்களுக்கும் தனித்தனியாய் ஒவ்வொரு பெயருண்டு. அதனால் அவையொன்றும் சீரமாகாது. அதுமாத்திரமல்ல. தோல், நரம்பு, எலும்பு முதலானவை சீரத்தோடு சேர்ந்துள்ளவை யென்றும் சொல்லுகிறது. அப்படியிருக்குமானால் தோலையும், நரம்பையும், எலும்பையும் எடுத்துவிட்டால் சீரத்தைக் காண முடியுமோ?

சி: காணமுடியாது.

கு: அது என்ன காரணம்? உம்மை இரண்டு மூன்று பேர் தொட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சமயத்தில் அவர்கள் உம்மைத் தொட்டு, சேர்ந்திருக்கிறார்களல்லவா?

சி: ஆம்.

கு: அவர்கள் உம்மைத் தொடாதிருக்கும் பொழுது உம்மோடு சேர்ந்திருக்கிறார்களா?

சி: இல்லை.

கு: அப்பொழுது உங்களை வேறிட்டுக்காண்கிறதில்லையா?

சி: காண்கிறதுண்டு.

கு: அந்தப் பிரகாரம் சரீரத்தைச் சேர்ந்திருக்கின்ற தோல், நரம்பு,எலும்பு முதலியவைகளை வெவ்வேறாக எடுத்தால் சரீரத்தைத் தனியாகக் காணவேண்டியதல்லவா?

சி: ஆம், காணவேண்டும்.

கு: ஆனால் அப்படிக் காண்கிறதுண்டோ?

சி: காணுகிறதில்லை.

கு: அதனால் இக்காணப்படுகிறதற்குச் சரீரம் என்று சொல்வதற்கிடமில்லை. சரீரம் என்பது என்னவென்றால் திரவித்துக் கொண்டிருக்கிறது. அதாவது திராவகமாதல். அதெப்படி யென்றால், நீர் ஊற்றுப்போல் பாய்ந்துகொண்டிருப்பது; அல்லது க்ஷயித்துக் கொண்டிருக்கிறது. அதாவது குறைந்து குறைந்துபோய்க் கொண்டிருக்கிறது; அல்லது, க்ஷீணித்துக்கொண்டிருக்கிறது; அதாவது அழிந்துகொண்டிருக்கிறது. அப்படியிருக்க நீர் தொட்டுக் காண்பித்தது சரீரம் என்று சொன்னால் இது அழிகிறதுண்டோ?

சி: ஓ! நசிக்கிறது அதாவது அழிகிறது உண்டு.

கு: எப்பொழுது?

சி: செத்தபொழுது.

கு: செத்தபோது இது நசித்ததா?

சி: ஓ! நசித்தது.

கு: அது தவறாகும். ஒருபொழுதும் அழிகிறதில்லை. நீர் இதாகும் சரீரம் என்று தொட்டுக் காண்பித்துச் சொல்லுகிறீர். அப்படியிருக்க செத்துப்போன போதும் இதைக் காண்பதுண்டு. இது நசிக்கவில்லை. பின்பு இதை ஒரு குழியில் புதைத்தாலோ; அல்லது, அக்கினியினால் எரித்தாலோ அது பூராவும் நசிக்கிறதில்லை.

சி: ஓ! அது நசிக்கிறதுண்டு.

கு: அது எப்படி?

சி: சில நாள் வைத்துக்கொண்டிருந்தால்.

கு: அவ்விதம் வைத்துக்கொண்டிருந்தால் அது எப்படி நசிக்கும்?

சி: அது ஜீர்ணித்துக்கெட்டு, கிருமி, கீடாதிகள் தின்று நசிக்கிறது.

கு: ஆகையால் அது பூராவும் நசிக்கிறதில்லை. அது எப்படியென்றால் அதை மற்றொன்றினால் உபத்திரவம் நேரிடாத

படி பத்திரப் படுத்தினல் கொஞ்சம்கூட நசிக்கிறதில்லை. அதற்கு உதாரணம்;—ஈஜிப்டு அதாவது எகிப்து முதலிய பல தேசங்களிலே அரண்மனைகளில் அநேக ஆயிரமாண்டுகள் சென்றுள்ள பிணங்கள் இப்பொழுதும், இருப்பதாகக் கேள்விப் படுகிறோம். ஆனல், அதை நாம் பார்த்ததில்லை. பார்த்ததைச் சொல்லலாம். பல மியூஸியங்களில், அதாவது பல காக்ஷி சாலைகளில் பல சவங்களையும், ஒருவித திராவகத்திலிட்டு பத்திரப்படுத்தி வைத்திருக்கிறார்கள். அவைகள் ஒன்றும் நசித்துப்போகிறதில்லை. ஆனல் அவைகளை எல்லோரும் பார்த்திருப்பார்க ளென்றும் நினைப்பதற்கில்லை. உலகில் யாவரும் பார்த்துக் கொண்டிருக்கும் உதாரணத்தைச் சொல்ல லாம். அது ஏதென்றால் சமுத்திரத்திலிருக்கின்ற ஏட்டை, சுரு, திரண்டி, திமிங்கலம் முதலான பலவிதத்திலுள்ள மீன் களையும் பிடித்து உப்பிட்டுக் காயவைத்து பத்து, ஆயிரம் வருடகாலம் கடந்தவைகள் இப்பொழுது மிருக்கிறதுண்டு. இதை அநேகரும் பார்த்து வருகிறார்கள். அந்தப் பிரகாரமே இதையும் பத்திரப்படுத்தினல் நசிக்குமோ?

சி: நசிக்காது.

கு: ஆனல் அது நசிக்கிறது எப்படியென்றால் மேற் சொல்லிய மீன்களாகிய பிணத்தை மனிதரென்ற பிமானித்து வருகிற புழுக்கள் தின்று தீர்ப்பதுபோல், அந்தப் பிணத்தி னுடைய தோல், சதைகள் முதலானதுகளை கிருமி, கீடாதிகள் அதாவது புழு பூச்சிகள் தின்கிறதல்லாமல் பூராவும் தின்ப தற்கு முடிகிறதில்லை. இவ்விதமல்லாமல் அது பூராவும் நசிக்கிறதில்லை. அது எப்படி யென்றால் ஒருவன் செத்தால் பிணமாகிறது. அந்தப் பிணத்தை ஒரு குழியில் புதைத் திட்டால் அதை பத்து, நூறு வருஷம் சென்றதின் பிறகு அவ்விடம் தோண்டிப் பார்த்தால் என்ன உண்டாகிறது?

சி: எலும்பு, தலையோடு முதலானது காணப்படுகிறது.

கு: அது எப்படி? நசித்துப்போனல் காண்பதற்கு முடியுமா?

சி: முடிகிறதில்லை.

கு: அதற்கு ஒரு உதாரணம்:—நிரம்பவும் வயிரமுள்ள தான ஒரு மரத்தினுடைய துண்டை ஒரு குழிதோண்டி புதைத்து பத்துநூறு வருஷம் சென்றதின் பிறகு அதை ஒரு ஆள் தோண்டிப் பார்த்தால் அங்கே என்ன உண்டாயிருக்கும்?

சி: அந்த மரத்தினுடைய சேவு அதாவது வைரம் மட்டிலும் காணலாம்.

கு: அது எப்படியென்றால் மரத்தினுடைய பட்டை, சதைகள் எல்லாம் சிதல், கருவாம் பூச்சிகள் தின்று வைரம்

மாத்திரம் காணப்படுகிறது. இந்தப் பிரகாரம் ஒரு பிணத்தினை மேல் சொன்ன மரத்துண்டினைப்போல் ஒரு குழியில் புதைத்தால் கிருமி, கீடாதி அதாவது, புழு, பூச்சி முதலான ஜீவிகள் அந்த பிணத்தினுடைய தோல், சதை, முதலானதுகளைத் தின்று அதனுடைய அஸ்திவாரமாயிருக்கின்ற எலும்பு தலையோடு முதலானதுகள் காணுகிறது. தோல், சதைகளைக் கொண்டு சிருஷ்டியில்லை. அதன் அஸ்திவாரமாகிய தலையோடு எலும்புகள் நசிக்கின்றதில்லை. அதல்லாமல் நெருப்பில்போட்டு எரித்தாலும் பூராவும் நசிக்கின்றதில்லை. அது ஏனென்றால், தீ இடுக்கினிலோ, மற்றீறு, அந்த நெருப்பிலிருந்து அதன் எலும்பைப் பொருக்கி எடுக்கின்றோம். அதுகளைக் கெங்கையில் போட வேண்டுமென்றும், சேதுவில் போடவேண்டு மென்றும், அல்லாது, அஸ்திதரைகட்டி அதாவது, அந்த எலும்புகளைச் சேர்த்து ஒரு கட்டிடத்தில் கட்டிவைத்தும் செய்து வருகிறார்கள். இவ்விதம் பார்க்கும்போதும், யோசனை செய்யும்போதும், ஜடம் நசிக்கின்றதோ, அல்லது, பூராவும் நசிப்பிக்கவோ முடிகிறதில்லை. ஆனால் இந்த ஜடம் நசித்துப் போகிறது என்று சொல்லுகிறதல்லாமல் உண்மையில் என்னதாகும் இதிலிருந்து நசிக்கின்றது என்று ஆலோசிக்கிறதில்லை. ஆனால் செத்தபோது இதிலிருந்து நசித்தது என்ன?

சி: ஜீவசக்தியாகிய வாயு.

கு: இதிலிருந்த ஜீவசக்தி நசித்துச் செத்துப் போனால் இதற்கு என்னவென்று பெயர்?

சி; பிணம் என்று பெயர்.

கு: அதுவரையிலும் இதற்கு என்னவென்று பெயர்?

சி: சரீரம் என்றும் பெயர்.

கு: அப்படியாயிருந்தால் எப்பொழுது சரீரம் என்றும், எப்பொழுது பிணம் என்றும் சொல்லுகிறது?

சி: ஜீவ சக்தியாகிய வாயு இருக்கிறவரை சரீரமென்றும், அது இல்லாமற் போனதிற்குப்பின் பிணம் என்றும் சொல்லுகிறது.

கு: ஆனதினால் ஜீவசக்தியாகிய வாயுவிற்காகும் சரீரமென்று சொல்லவேண்டும். அந்தச் சரீரமாகின்ற வாயு, இந்த ஜடத்தில் ஸ்திதி செய்கிற காலம் வரைக்கும் சரீரமென்றும், எப்பொழுது இந்த ஜடத்திலிருந்து அந்த வாயு நாசமாகித் தீர்ந்துபோகிறதோ அப்பொழுது பிணம் என்றும் சொல்லப் படுகிறது. அது எப்படி யென்றால் ஒரு வாழைப் பழத்தை இவ்விடம் கொண்டுவந்து வைத்தால் அதற்கு என்ன பெயர் சொல்லுகிறது?

சி: வாழைப் பழமென்று.

கு: அந்த வாழைப்பழத்தின் உள்ளில் உள்ள கனியை எடுத்தால் பின் என்ன மிச்சமுண்டு?

சி: தோல்.

கு: அப்பொழுது அதற்கு என்னவென்று சொல்லுவது?

சி: பழத்தோல் என்று.

கு: அவ்விதம் சொல்வதற்கு காரணம் என்ன?

சி: அதனுள்ளில் கனி இல்லாததினுல்.

கு: அதனுள்ளில் கனி இருக்கும்பொழுது என்னவென்று சொல்லுவது?

சி: பழம் என்று.

கு: ஆனல் கனி இருக்கும்பொழுது அதற்கு பழம் என்றும், கனி இல்லாதபோது, அதற்குத்தோல் என்றும் சொல்லுகிறது. அந்தப் பிரகாரமே, ஜீவன் இதனுள்ளில் இருக்கும்வரை சரீரம் என்றும், ஜீவன் இதிலிருந்து நசித்துப் போன பின், அதற்குப் பிணம் என்றும் சொல்லுகிறது. அந்தப் பிரகாரமே, சரீரமாயிருக்கின்ற வாயு, உடம்பிலிருந்து வேறுபடும்பொழுது பிணமாகிறது. அதுகொண்டு வாயுவேயாகும் சரீரம். தவிர சரீரம் இருக்கும்பொழுது மாத்திரமே, ஆகாரங்களை உட்கொள்ளுகிறதும், சேஷ்டைகள் செய்கிறதும், கேட்கிறதும், காணுகிறதும், அறிகிறதும் ஆகிய தொழில்களும் உண்டாகின்றன. சரீரம் இல்லாதிருந்தால் புசிப்பதற்கும், சேஷ்டைகள் செய்வதற்கும், கேட்பதற்கும், காண்பதற்கும், அறிவதற்கும், செய்வதற்கும் முடிகிறதில்லை. இந்த ஜடமாகும் சரீரமென்றால் செத்துப் போனபோதும் இந்த ஜடத்தைக் காண்கிறோமல்லவா?

சி: காண்கிறதுண்டு.

கு: அப்பொழுது முன்சொன்ன யாதொரு சேஷ்டைகள் முதலானவை அதற்கு உண்டாயிருந்ததா?

சி: இல்லை.

கு: அது சரீரமாயிருந்ததென்றால் முன் சொல்லப்பட்ட சேஷ்டைகள் உண்டாகவேண்டியதல்லவா?

சி: ஆம். உண்டாகவேண்டும்.

கு: அப்பொழுது அதற்குச் சரீரமென்று சொல்வதற்கிடமுண்டா?

சி: இடமில்லை.

கு: ஆனல் சரீரமென்பது எது?

சி: ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுதான் என்று வெளிப்படுகின்றது.

கு: ஆனல் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவாகும் இந்த ஜடத்திலிருந்து குறைந்து குறைந்து நசித்துப் போகிறது.

அது எப்படி என்றால், நீர் ஊற்று ஓடிக்கொண்டிருக்கிறது போல், பஞ்சேந்திரியமென்று சொல்லி வருகிற ஐந்து துவாரங்களின் வழியாய்க் கரைந்து கரைந்து வெளியில்போய் க்ஷயித்து அதாவது குறைந்து, குறைந்து, க்ஷீணித்து அதாவது மெலிந்து மெலிந்து நசித்து இல்லாமல் போகின்றது. அந்தப் பிரகாரம் நசித்துப் போகின்ற வஸ்து எது?

சி: ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு.

கு: அதற்குத்தான சரீரமென்றும், தேகமென்றும் சொல்லுவது. தவிர ஒருவனது முழங்கால் முட்டியில் ரத்த வாதத்தால் வீக்கம் உண்டானல் அந்தக் காலை அவருக்கு அசைப்பதற்கு முடியுமா?

சி: முடியாது.

கு: காரணம்?

சி: அந்த முழங்காலின் மேல் ரத்தம் கட்டியதனால், ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவினுடைய கதாகதம், அதாவது போக்குவரவிற்கு தடை நேரிட்டிருந்ததனாலாகும்.

கு: அதுவல்லாமல், பச்சை வாதம்பிடித்து கைகால் முடங்கியுள்ளவருடைய அந்தக் கைக்கும், காலுக்கும், ஏதாவது சக்தியோ, கிள்ளினால் வலியோ உண்டாகுமா? அல்லது அந்தக் கையையும், காலையும் தானாகவே அசைக்கமுடியுமா?

சி: முடியாது.

கு: அது என்ன காரணம்?

சி: ஜீவசக்தியாகிய வாயுவிற்கு போக்குவரவு அதாவது கதாகதம் இல்லாமையினால்.

கு: அப்பொழுது க்ஷீணிப்பது எது?

சி: ஜீவசக்தியாகிய வாயுவாகும்.

கு: அந்தஜீவசக்தியாகிய வாயுதான் தேகம். தேகமென்றால் தகிக்கப்படுகிறது என்று பொருள், அப்படி தகிக்கப்படுகிறது ஜீவசக்தியாகிய வாயுவாகும். அது எவ்விதமென்றால் ஒரு கல்லறையுண்டாக்கி அதில் கொட்டாங்கச்சியையும் காய்ந்த விறகையும் போட்டு மண் எண்ணெய்விட்டு அதனுள்ளில் ஒரு தேகத்தை வைத்துத் தீயிட்டு அதற்குள்ளில் வாயு புகாமல் அடைத்துப் பத்திரம் செய்தால் அது எரியுமா?

சி: எரியாது.

கு: என்ன காரணம்?

சி: வாயு அதனுள்ளில் பிரவேசிக்காததினால்.

கு: ஆனால் அக்கினி எதிலிருக்கின்றது?

சி: வாயுவிலாகும்.

கு: இதோ தெரிகின்ற விறகில் அக்கினிபற்றி எரிந்து கொண்டிருக்கும்பொழுது அதோடு சம்மந்தப்படாத மற்ற விறகு எரியுமோ?

சி: எரியாது.

கு: எப்பொருளில் அக்கினியிருக்கின்றதோ அப்பொருள் தான் தகிக்கின்றது; அதாவது எரிகிறது. ஆகையினால் வாயு வில் அக்கினி இருக்கிறது. அந்த வாயுதான் எரிகிறது. அது எப்படி எனில், சப்தம் அக்கினி சொரூபமாகும். அந்தச் சப்த மூல்யமாய் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு தகித்து அதாவது எரிந்து அழிந்துபோகிறது. அதனால்தான் அதற்கு தேகம் என்று சொல்லுகிறது. இதனாலேதான் இதற்காகத் தமிழில் "கத்தாதே, கத்தாதே" என்று சொல்லுவதன் காரணம். கத்து தலும், காளுதலும் அக்கினியாகும். ஆகையால் அக்கினி சொரூபமாயிருக்கின்ற சப்தவாயிலாய் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு நசித்துப் போகிறபடியால் வாயுவிற்குத் தேகம் என்று சொல்லுகிறது. அதுகொண்டு ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு வாகும் ஈஸ்வரன். அந்த ஈஸ்வரன்தான் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் முதலியவைகளைச் செய்வது. தவிர நம்மையும் சிருஷ்டிக்கிறது. ஜீவசக்தியாகிய வாயுவாகும். அதற்கு ஒரு உதாரணம்:—பிணம் சம்போகம் செய்யுமா?

சி: செய்யாது.

கு: என்ன காரணம்?

சி: பிணத்திற்கு ஜீவசக்தியாகிய வாயு இல்லாததினால்.

கு: அப்பொழுது ஜடத்தில் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு கதாகதம் செய்யும்பொழுது மாத்திரமே சிருஷ்டிக்கிறதற்கு முடிகிறது. அச்சமயம் மாத்திரம்தான் சம்போகத்திற்கு விருப்பமும், சம்போகம் செய்யவும் முடிகிறது. சம்போக மில்லையானால் சந்தானமுண்டாகுமா?

சி: உண்டாகாது

கு: என்ன காரணம்?

சி: சம்போகம் இல்லாததனால்.

கு: அப்பொழுது சம்போகம் செய்ய என்னவேண்டும்?

சி: ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு உண்டாயிருக்க வேண்டும்.

கு: அப்பொழுது யாராகும் சிருஷ்டிக்கிறது?

சி: ஜீவசக்தியாகிய வாயுவாகும்.

கு: ஆனால் அந்த வாயு ஒன்றினாலேயே சிருஷ்டி உண் டாகுமா?

சி: உண்டாகாது.

கு: ஆனால் அந்த வாயு எதைக்கொண்டு சிருஷ்டிக்கிறது?

சி: பஞ்ச பூதங்களைக் கொண்டு.

கு: பஞ்ச பூதங்களென்று சொல்லுவது எவை யெல்லாமாகும்?

சி: பிருதிவி அதாவது மண்ணும், அப்பு அதாவது நீரும், அக்கினி அதாவது நெருப்பும், வாயு அதாவது காற்றும், ஆகாயம் அதாவது வெளியும் ஆகிய இவைகளாகும்.

கு: இவைகளெல்லாவற்றையும் ரூபமில்லாமலிருக்கின்ற ஈஸ்வரன் ஒரு ஸ்திரீயினுடைய வயிற்றிற்குள் கொண்டுபோய் எந்தப் பிரகாரம் சிருஷ்டிக்கின்றது? அப்படி சிருஷ்டிப்பதற்கு முடியுமா?

சி: முடியாது.

கு: ஆனால் எதைக்கொண்டு சிருஷ்டிப்பதென்று நாம் ஆலோசிக்கவேண்டியது. அதற்கு உதாரணம் நாலைந்து வய துள்ள ஒரு குழந்தை சம்போகம் செய்தால் அந்தச் சம்போகத் தினால் சந்தானம் உண்டாகுமா?

சி: உண்டாகாது.

கு: அதன் காரணமென்ன?

சி: அந்தக் குழந்தைக்கு இந்திரியம் இளகாததனால்.

கு: இந்திரியம் என்றால் என்ன?

சி: சுக்கிலம்.

கு: சுக்கிலமாயிருக்கின்ற பீஜம் ஸ்திரீயிடம் சென்று விழாமலிருந்தால் கர்ப்பம் உண்டாகுமா?

சி: உண்டாகாது.

கு: அப்பொழுது எதைக்கொண்டு சிருஷ்டிக்கிறது?

சி: சுக்கிலத்தைக்கொண்டு.

கு: அந்த சுக்கிலம் ஜீவனுக்குக் கீழாகவோ, மேலாகவோ இருக்கிறது?

சி: ஜீவனுக்குக் கீழாகவேதான் இருக்கிறது.

கு: அந்த ஜீவன் இருப்பது எவ்விடம்?

சி: ஆகாசத்தில்.

கு: ஆகாசமென்பது என்னவென்று முன் சொல்லப்பட் டிருக்கிறது?

சி: சிரசு என்றாகும்.

கு: ஆனால் அந்த ஆகாசம் புருவமத்தியத்தின்மீது தலைக் குள்ளில் உச்சிவரையாகும். அந்த ஆகாசத்திலாகும் ஜீவ னிருக்கிறது. அந்த ஜீவனுடைய சலனத்திற்காகும் ஜீவ சக்தியாகிய வாயு என்று சொல்லுவது. அந்த வாயு உத்ப வித்ததான புருவமத்தியத்தில்தான் சுக்கிலமிருக்கிறது. சுக்கிலம் புருவமத்தியத்திலாகும் என்பதற்கு உதாரணம்:—வியாதியினால் ஜடம் களைத்தோ அல்லது நாடிகளுக்குப் பலக்குறைவினாலோ

அதிக தூரம் நடந்து தாதுக்களுக்குச் சோர்வு உண்டான தினுலோ, முன்னரே ஏதேனும் ஸ்திரீயைக் கண்டு மோஹித்தோ, மற்றோ, இருப்பிடமாகிய காமகலையிலிருந்து இளகியிருந்த சுக்கிலம் சம்போக சமயத்தில் இன்ன இடத்தி லிருந்து வருகிறது என்று அறிய முடிகிறதில்லை. முன்கூறிய ஏதொரு காரணத்தாலும் காமகலையாகிய தனக்குரிய இருப் பிடத்திலிருந்து முன்னமேயே இளகாமல், புணர்ச்சி சமயத் துள்ள சிரமத்தினுல் மட்டும் சுக்கிலம் இளகுமேயாஞல் ஜடத் துக்கு, நடுக்கமும் கண்கள் மூடி, மூடிப்போவதும், தலைக்கும் நடுக்கமும் உண்டாகிறது. அதற்குக் காரணம், எல்லா நாடி களும் வந்து சேருமிடம் புருவ மத்தியம். அதாகும் சுழிமுனை என்று சொல்லப்படுகிற நெருப்புக்கண். நாடிகளிலிருந்துண் டாகிற வீரியம்தான் சுக்கிலம். அது அக்கினி நேத்திரமாகிய புருவமத்தியத்திலிருக்கிறது. அதற்காகும் அக்கினி சொரூப மாய் இருக்கின்ற சுக்கிலம் என்று சொல்லுவது. ஜீவனிலிருந்து உத்பவிக்கும் சக்தியாயிருக்கின்ற வாயு, ஜடத்தில் கீழும் மேலும் கதாகதம் செய்வதும், அந்தப் பிரகாரமுள்ள சக்தி, மேல் பிரகாரமுள்ள சலனம் நிமித்தம், பஞ்சேந்திரியங்களின் வழியாய், வெளியே போய் நசிக்கவும் செய்கிறது. இந்தப் பிரகாரத்தில் நசித்துக்கொண்டிருக்கிற சக்தியாகும் மாயை. சிருஷ்டி உண்டாகிறது சம்போகத்தினுலாகும். ஆனுல் சம் போக சமயத்தில் மேல் பிரகாரம் பஞ்சேந்திரியங்களின் வழியாய் வெளியில் போகின்ற சக்தி வெளியில் போகாமல் தன்னுள்ளில் கூடி ஒரே கதியாய் கெதப்பாய் அதாவது இளைப்பு ரீதியாய் மேல் பாகத்தில் தனது உத்பவஸ்தானமாகிய புருவமத்தியத்திற்குச் சென்று அவ்விடம் ஸ்திதி செய்து கொண்டிருக்கிற ஜீவனேடு சேருகிறது. அதாவது உள்ளின் வழிகூடி கதாகதம் செய்துகொண்டிருக்கிற சக்தி ஸ்திரீயும், புருவமத்தியத்தில் ஸ்திதி செய்துகொண்டிருக்கிற ஜீவன் புருஷனுமாகும். இந்தப் பிரகாரமுள்ள ஸ்திரீ புருஷ சம் போகத்தினுல் அக்கினி சொரூபமாயிருக்கின்ற சுக்கிலத்தை இளக்கி அந்தச் சுக்கிலத்தை மேற்சொன்ன ஜீவன் சக்தியோடு சேர்ந்து கீழே கொண்டுவந்து சக்தியின் வழியாய் அச்சுக் கிலத்தைக் கொண்டு அந்த ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு சிருஷ்டிக்கிறது. இந்தப் பிரகாரத்திலாகும் சிருஷ்டி உண்டாகிறது.

சி: குருவே நான்கு விதத்திலாகும் சிருஷ்டியென்றும் அதாவது சுவேதஜம், அண்டஜம், உத்பீஜம், ஜராயுஜம் என்பதாகச்சொல்லுகிறுர்கள். ஆகையினுல் அதனுடைய

நிலைமையைப் பற்றியும் விபரமாகச் சொல்லவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கு: நீர் சுவேதஜம், அண்டஜம், உத்பீஜம், ஜராயுஜம் என நான்கு விதமாகும் சிருஷ்டியென்று சொன்னீரல்லவா? அவைகள் எவைகள் என்று தெரிந்துக்கொண்டிருக்கிறீர்?

சி: சுவேதஜம் என்றால் வியர்வையிலிருந்துண்டாகிற பேன், மூட்டைப்பூச்சு முதலியவைகளும், அண்டஜம் என்றால் முட்டையிலிருந்துண்டாகிற பக்ஷி, பாம்பு, மீன் முதலியவைகளும், உத்பீஜம் என்றால் பூமியிலிருந்து முளைத்து உண்டாகின்ற புல், பூண்டு முதலிய விருக்ஷாதிகள் வரையிலும் என்றும், ஜராயுஜம் என்றால் பிரசவித்து உண்டாகின்ற மனிதர், பசு முதலியவைகளாகுமென்றும் தெரிந்திருக்கின்றேன்.

கு: ஆனால் இவ்விதத்தில் ஒருக்காலும் உண்டாக இடமில்லை. ஏனென்றால் நீர் நினைத்த பிரகாரம் வியர்வையிலிருந்தும், மூட்டையிலிருந்தும், பூமியிலிருந்தும், பிரசவித்தும் உண்டாகின்ற அனைத்தும் வெவ்வேறு விதத்தில் அல்ல. இவையெல்லாம் ஓரே விதத்திலேயே உண்டாகின்றன. அதெப்படியென்றால் மூட்டைப்பூச்சியும், பேனும், முட்டையிலிருந்துதான் உண்டாகிறது. மூட்டைப் பூச்சிகள் வசிக்கும் துவாரத்திலோ மற்றோ பார்த்தால், அநேக முட்டைகளைக் காணலாம். அந்த முட்டைகள் உடைந்துதான் மூட்டைப் பூச்சிகள் உண்டாகின்றன. அதே விதத்தில்தான் பேனுக்கும் முட்டையுண்டு. பேனுடைய முட்டையாகும் ஈர். அந்த ஈர் உடைந்துதான் பேன் உண்டாகிறது. இது நமக்குப் பிரத்தியக்ஷ அநுபவமல்லவா? ஆனால் இந்த இரண்டுவர்க்கங்களும், மனிதரென்று அபிமானிக்கப்பட்டவர்களுடைய ரத்தத்தைப் பானம் செய்து ஜீவித்து வருகின்றன. அதுகொண்டாகும் மூட்டைப் பூச்சிகள் ஜனங்கள் அதிகமாய் வாசம் செய்யும் இடங்களிலும், பேன் ஜனங்களுடைய தலைகளிலும் காணப்படுகின்றன. இதல்லாமல் வியர்வையில்தான் உண்டாகிறதென்றால் எல்லோருக்கும் வியர்வையுண்டு. ஆனால் எல்லோரிடமும் பேன் காணப்படுவதில்லை. தவிர ஜனங்கள் வாசம் செய்து வருகிற எல்லாவிடங்களிலும் மூட்டைப்பூச்சிகள் காணப்படுவதுமில்லை. ஆனால் பிரம்மாண்ட கடாகமே சுவேதஜோத்பவம். அதாவது உலகம் முழுவதும் சுவேதத்திலிருந்து உத்பவித்துள்ளதாகும். சுவேதம் சுயமாக உண்டான வியர்வை. அவ்வியர்வை உண்டாகக் காரணம் என்ன?

சி: உஷ்ணம் அதிகரித்ததினால்.

கு: உஷ்ணம் உண்டாகக் காரணமென்ன?

சி: சூடு அதிகரித்ததினால்.

கு: சூடு எவ்விடத்திலிருந்து உண்டாகிறது?

சி: அக்கினியிலிருந்து.

கு: அக்கினி எவ்விடமிருந்துண்டாகிறது?

சி: வாயுவிலிருந்து.

கு: வாயுவென்றால் என்ன?

சி: ஜீவசக்தியாயிருக்கின்ற தேகம்.

கு: ஆனால் வாயுவாயிருக்கின்ற தேகத்தில் அக்கினி அதிகரித்தபோது, அதிலிருந்து ஆவியாக உத்பவித்த வியர்வைதான் சுக்கிலம். இவ்வித சுக்கிலத்தினால்தான் சர்வ சிருஷ்டிகளும் உண்டாகின்றன. அப்பொழுது எல்லா உத்பவங்களும், சுவேதத்திலிருந்து உண்டாகின்றதல்லாமல், நம்முடைய ஜடத்திலிருந்துண்டாகின்ற வியர்வையினால் யாதொரு சிருஷ்டியும் உண்டாகிறதில்லை. தேகத்தின் வியர்வை கொண்டாகும் சிருஷ்டி. தேகம் இன்னதென்று அறியாததினால் உலகத்தில் தப்பபிப்பிராயத்துக்கு இடமுண்டாயிற்று. தேகம் என்பது முன் சொல்லப்பட்ட வாயுவாகும். அந்த உண்மையை எப்போது உலகம் அறிகிறதோ அப்பொழுதே அந்தத் தவறுதலான உணர்வு விட்டுப்போகிறதாகும். தவிர ஒரு குழந்தை ஜனித்தபோது, அக்குழந்தைக்குச் சுக்கிலம் விருத்தியாயிருந்ததில்லை. அதில் அக்கினி அதிகரித்தபோது நாளடைவில் சுக்கிலம் விருத்தியாகி காமாதிகள் உண்டாய்வருகிறது. இந்த விதத்தில் எல்லாம் சுவேதத்திலிருந்து உற்பத்தி.

சி: குருவே! சுக்கிலத்தைக்கொண்டு எவ்விதத்தில் சிருஷ்டிக்கிறதென்று விபரமாக சொல்லித்தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கு: இந்தச் சுவேதமாயிருக்கின்ற சுக்கிலம் முதலில் முட்டையாகின்றது. அந்த முட்டையிலிருந்துதான் உத்பவம். அதெப்படியென்றால் காட்டாமணக்கின் பாலை, ஒரு இலையில் பிடித்து ஈர்க்கின் நுனியை வட்டமாகக் கட்டி, அந்தப் பாலில் தொட்டு எடுத்து அதனை ஊதினால் அது எவ்விதமாகப் போகிறது?

சி: அது முட்டை வடிவமாகப் போகிறது.

கு: அதன் காரணமென்ன?

சி. அதை ஊதியபோது வாயு அதனுள் அடங்கியதினால்.

கு: ஆனால் அந்தப் பால் ஒருவிதப் பசையுள்ளது. அவ்விதம் பசையுள்ளப் பாலில் ஈர்க்கை வட்டமாகக் கட்டித் தோய்த்தபோது, அதற்குள்ளில் பசையாயிருக்கிற பால் வட்ட வடிவமாகப் பற்றியிருக்கும். அதில் ஊதியபோது, அந்த பசையாயிருக்கின்ற பால், ஈர்க்கிலிருந்து, விடாது நீண்டு,

அதனுள்ளில் வாயு நிறைந்து ஒரு முட்டை வடிவமாக சுக்கிலிருந்து வேறுபட்டுப் போகின்றது. சிலவற்றில் ஒன்றிரண்டாயும், சிலவற்றில் ஐந்து பத்தாயும் சிலவற்றில் சிறிது சிறிதாய் அநேகமாயும், சிலவற்றில் ஒன்றுமில்லாமலும் போய்விடுகிறது. அதானது ஊதியதின் கிரமப்பிரகாரத்தைப் போல் சம்பவிக்கின்றது. இதைப்போலவே சுக்கிலமென்பது ஒரு பசையாகும். அந்தப் பசையாயிருக்கின்ற சுக்கிலத்தை, சம்போக சமயத்தில் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு இளக்கி அந்த சக்தியாயிருக்கின்ற வாயு, மூத்திரத்துவாரத்தின் வழியாகத்தள்ளிக்கொண்டு வருகிறது. மூத்திரத்துவாரத்தின் நுனி வரையிலும் வந்தபோது, ஒரே விதத்திலுள்ள சக்தியோடு கூடியதாய் அந்தவாயுவினுடைய கதி வந்தால், அந்தச் சுக்கிலம் மூத்திரத் துவார நுனியிலிருந்து கொஞ்சம் நீண்டு, அதில் அந்த ஜீவசக்தியான வாயு நிறைந்து, அது முட்டை வடிவமாகி மூத்திரத் துவாரத்தினின்றும் வேறுபட்டு, கற்பப்பையில் சென்று விழுகின்றது. அது பின்னேயும் ஒரு துளியிலும் கூடி, மேல் சொன்ன பிரகாரம் உள்ள சக்தியோடு கூடி வாயு நிறைந்தால், அதுவும் மேல்சொன்ன பிரகாரம் முட்டை வடிவாய், கற்பப்பையில் சென்று விழுகிறது. இந்தப் பிரகாரம் எத்தனை துளிகள், மேல் சொன்ன பிரகாரமுள்ள சக்தியோடு கூடி வாயு நிறைந்து முட்டை வடிவங்களாய் கற்பப்பையில் விழுகின்றதோ, அத்தனை குழந்தைகள் உண்டாகின்றன. தவிர சிலர் பாம்பு, முட்டை பிரசவித்ததென்றும் சொல்லுகிறார்கள் என்றால் அது பாம்பு சம்போகம் செய்ததனாலல்ல. தாது சக்தி அதிகமானதால் சம்போக சமயத்தில் இளைப்பு அதிகமாகி, ஜீவசக்தியாகிய வாயு, சுக்கிலத்தை இளக்கிக் கொண்டு வரும்பொழுது, பன்னீர்செம்பு கொண்டு பன்னீர் வீசும்பொழுது எந்தப்பிரகாரம் பன்னீர், செம்பிலிருந்து வேறிட்டு அணு அணுவாய் தொடர்ந்து தொடர்ந்து விழுவது போல் மூத்திரத்துவார நுனியிலிருந்து வாயுவினுடைய சக்தி கொண்டு சுக்கிலம் சிறு சிறு துளிகளாக சிதறி அதனுள்ளி லெல்லாம் ஜீவசக்தியாகிய வாயு நிறைந்து வேறிடாதே தென்னம் பூக்குலைபோல் கற்பப்பையில் சென்று விழுகிறது. இந்தப் பிரகாரம் உண்டாகி பிரசவித்ததிற்குத்தான் பாம்பையும் முட்டையையும் பிரசவிக்கப் பட்டதென்றும், உலகத்தில் சொல்லுகிறார்கள். இந்த விதத்திலாகும் சிருஷ்டியினுடைய ஸ்திதி. இவ்விதமல்லாமல் வேறு விதமாய் சிருஷ்டி உண்டாவதற்கு இடமுண்டோ?

சி: இப்படிச் சொல்லியதை ஆலோசித்துப் பார்க்கும் பொழுது இந்தப்பிரகாரத்திலல்லாமல் மற்றெந்த விதத்திலும்

சிருஷ்டி உண்டாவதற்கு வழியில்லையென்று நிச்சயப்படுகிறது.

கு: அப்பொழுது நம்மை சிருஷ்டித்தது யார்?

சி: ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு.

கு: அப்பொழுது சிருஷ்டிகர்த்தா யார்?

சி: ஜீவசக்தியாகிய வாயு.

கு: நாம் ஜீவித்திருக்கவேண்டுமானல் என்ன வேண்டும்?

சி: வாயுவேண்டும்.

கு: அப்பொழுது நம்மை ஸ்திதி செய்கிறது அதாவது காப்பாற்றுவது யார்?

சி: வாயுவாகும்.

கு: ஒருவன் செத்துப் போனல் அதில் என்ன இல்லாமலாகின்றது?

சி: ஜீவசக்தியாகிய வாயு இல்லாமல் போகின்றது.

கு: அப்பொழுது சம்ஹாரம் செய்வது யார்?

சி: வாயுவாகும்.

கு: அப்பொழுது சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் அதாவது ஆக்கல், காத்தல், அழித்தல் செய்கின்றது யாராய் வருகிறது?

சி: ஜீவசக்தியாகிய வாயு ஆகும் என்றே நிச்சயமாகின்றது.

கு: அந்த வாயுவிற்குத்தான் ஈஸ்வரன் என்று சொல்லுவது. அதனலாகும் ஈஸ்வரனுக்கு நாம ரூபமில்லை என்றும், உள், வெளி, அடி, முடி இல்லாத சர்வ வியாபி என்றும், உள்ளிலும் வெளியிலும் நிறைந்திருக்கின்ற வஸ்துவென்றும் சொல்லக் காரணம். ஏனெனில் வாயுவிற்கு நாமமோ, ரூபமோ உண்டோ?

சி: இல்லை.

கு: அதனல்தான் ஈஸ்வரனுக்கு நாமரூபமில்லையென்று சொல்லக் காரணம். வாயுவிற்கு உள்ளும் வெளியும் உண்டோ?

சி: இல்லை.

கு: அதனல்தான் ஈஸ்வரனுக்கு அடிமுடியில்லை என்று சொல்வது. ஆனல் வாயு எப்படியிருக்கிறது?

சி: சர்வ வியாபியாயிருக்கிறது.

கு: அதனல்தான் ஈஸ்வரன் சர்வ வியாபி என்று சொல்லக் காரணம். கூடாதே ஈஸ்வரன் உள்ளிலும், வெளியிலும், நிறைந்த வஸ்துவென்று சொல்லப்பட்டது. உள்ளும் வெளியுமில்லாத வஸ்துவிற்கு உள்ளிலும் வெளியிலும் நிறைய இயலுமோ?

சி: இயலாது.

கு: ஆனல் நாமில்லையானல் நமக்கு உள்ளும், வெளியுமுண்டாகுமோ?

சி: உண்டாகாது.

கு: எப்பொழுது உள்ளும் வெளியும் உண்டானது?

சி: நாம் உண்டானதின் பின்பு.

கு: தவிர நாம் தூங்கும்போது நமக்கு உள்ளும், வெளியும் உண்டோ?

சி: இல்லை.

கு: எப்பொழுது உள்ளும், வெளியும் உண்டாகிறது?

சி: தூக்கம் விழித்த பொழுது.

கு: அது எவ்விட மிருந்துண்டாகிறது?

சி: நம்மிலிருந்தே யாகும்.

கு: அப்பொழுது நித்திய மாயிருக்கின்ற "தான்" ஆகாச மாய்த்தோன்றி உள்ளும் வெளியும் உண்டாயின. அது தன்னிலிருந்து உண்டானது. அப்பொழுது தன்னிலிருந்து உண்டாகி உள்ளிலும் வெளியிலும் நிறைந்திருக்கின்ற வஸ்து எது?

சி: வாயுவாகும்.

கு: அதனாலே தான் ஈஸ்வரன் உள்ளிலும், வெளியிலும் நிறைந்திருக்கிற தென்று சொல்லக் காரணம். அப்பொழுது ஈஸ்வரனாயிருக்கின்ற வஸ்து எது?

சி: நம்முள்ளிலுள்ள ஜீவனாயிருக்கின்ற வாயு.

கு: அறிவாயிருக்கின்ற வஸ்துவோ?

சி: வாயுவேயாகும்.

கு: காப்பாற்றுகிற வஸ்துவோ?

சி: அதுவும் வாயுவே.

கு: அப்பொழுது ஈஸ்வரனாய், அறிவாய், காப்பாற்று வதாயிருக்கிற வஸ்து, வாயுதானென்று வெளிப்படுகிறது. அதை நாம் அறியாமல், கல், மரம் முதலியனவற்றால் உண்டாக்கிய பிரதிமைகளை அதாவது பொம்மைகளை ஈஸ்வரன் என்று சங்கற்பித்து நம் உள்ளில் நிலைத்திருக்கின்ற ஜீவ சக்தியாகிய வாயுவைக் கீழாய் வெளியில் விட்டு தீரும்பொழுதாகும் நாம் செத்துப்போகிறது. அதனால் அதை வெளியில் விடாமல் தனது உள்ளில் கூடி நடத்தி, ஈஸ்வரனிடத்தில் சேருகின்றதாகும் மோக்ஷம். இதற்கே ஈஸ்வர சேவையென்று சொல்லுவது. ஆனால் இப்பொழுது உலகத்தில் ஈஸ்வர சேவையென்று சொல்லிச் செய்து வருகிறது எவ்விதம்?

சி: குளித்துக் கோவிலுக்குச் சென்று விளக்கேற்றி, பிம்பத்தை இளநீர், பால் முதலியவற்றால் அபிஷேகம் செய்து வஸ்திர புஷ்பாதிகளால் அலங்கரித்து, பழம் தேங்காய் முதலியவைகளை வைத்துப் பூஜை, நைவேத்தியம், ஹோமம் முதலியவைகள் செய்கையும் செய்விக்கின்றதும் ஆகின்றது.

கு: இதற்கு ஈஸ்வர சேவையென்று சொல்லக் கூடுமோ?

சி: சொல்லக்கூடாது.

கு: ஈஸ்வர சேவை யென்று சொன்னால் என்ன?

சி: ஈஸ்வரனைச் சேவிப்பது என்றாகும்.

கு: ஈஸ்வரனைச் சேவிப்பது என்று சொல்வது என்ன?

சி: ஈஸ்வரனைப் பஜிப்பது என்றாகும்.

கு: ஆனால் உலகத்தில் ஈஸ்வரனைச் சேவிப்பது எவ்வித மென்று ஒரு உதாரணம் சொல்லுவோம். அதானது உங்களுக்கொரு வியாதிக்கு, ஒரு வைத்தியர், ஒரு கஷாயத்திற்கு எழுதிக் கொடுத்தது. அதாவது ஆறு கழஞ்சி சீந்தில்கொடி, நாலுகழஞ்சி கடுக்காய்த்தோல், இரண்டு கழஞ்சி சுக்கு, இவைகளை அரைப்படி ஜலத்தில் கஷாயம் வைத்து, வீசம் படியாகச் சுண்டக்காய்ச்சி, இறக்கி, வடிகட்டி, அதில் ஒரு அச்சுவெல்லம் தட்டிப்போட்டு, என்ன செய்யவேண்டுமென்று எழுதிக் கொடுக்கிறார்?

சி: அதை சேவிக்கவேண்டுமென்று ஆகும்.

கு: அப்பொழுது சேவிப்பது என்பது என்ன?

சி: குடிக்கிறது என்றாகும்.

கு: நாம் ஈஸ்வர மயமாகி ஈஸ்வரனோடு ஐக்கியமாக வல்லவா வேண்டும்?

சி: ஆம்.

கு: அப்பொழுது ஈஸ்வரமயமாவதற்கு வேண்டி ஈஸ்வரனை உட்கொள்ளாமல் வெளியில் விட்டால் ஈஸ்வரமயமாகுமோ?

சி: இல்லை.

கு: அப்பொழுது ஈஸ்வரமயமாவதற்கு வேண்டி ஈஸ்வரனை அறிந்து சேவிக்கவேண்டும். ஈஸ்வரனை அறியாவிட்டால் ஈஸ்வரனைச் சேவிப்பதற்கு முடியுமா?

சி: முடியாது.

கு: நாம் இதுவரையிலும் ஈஸ்வரன் யாராகுமென்று கருதியிருந்தோம் என்றால், சிவன், ராமன், கிருஷ்ணன், குட்டிச்சாத்தான், பத்திரகாளி, பகவதி, கணபதி, சுப்பிரமணியன் என்றும் மற்றும் பல விதத்திலாயிருந்தது. இப்பொழுது ஈஸ்வரன் யாராகுமென்று வெளிப்பட்டது?

சி: ஜீவசக்தியாகிய வாயுவென்றாகும்.

கு: அந்த வாயுவைச் சேவிக்கிறதற்குத்தான் ஈஸ்வர சேவையென்று சொல்வது. அதுமாத்திரமல்லாமல் ஜீவன் பிரம்மரந்திரத்தில் சேராமல் மோக்ஷம் கிடைக்குமோ?

சி: கிடைக்காது.

கு: பிரம்மரந்திரம் என்பது எவ்விடமிருக்கிறது?

சி: அது நம்மில் மேல் பாகத்திலிருக்கிறது.

கு: ஆனால் ஜீவன் நமக்கு உள்ளிலோ வெளியிலோ இருக்கின்றது?

சி: உள்ளில்தானிருக்கின்றது.

கு: உள்ளில் உள்ள ஜீவன் நமக்கு மேலாக, நம்மில்தானேயிருக்கிற பிரம்மரந்திரத்தில் சேர்ந்து, மோக்ஷம் கிடைப்பதற்கு வேண்டி நமக்கு மார்க்கம் உள்ளிலோ, வெளியிலோ உண்டாயிருக்கிறது?

சி: உள்ளிலாகும் உண்டாயிருக்கிறது.

கு: என்றால் உள்ளிலுள்ள ஜீவனை நம்மில் மேலாக உள்ள பிரம்மரந்திரத்தில் சேர்த்து, மோக்ஷமடைவதற்காக வெளி வழியாகக் கொண்டு போனால் சேருமா? அல்லது சேர்ப்பதற்கு முடியுமா?

சி: இல்லை, முடியாது.

கு: உள்ளே யிருக்கின்ற ஜீவன் வெளியில்போய் தீர்ந்து விட்டால் என்னவாகின்றது?

சி: செத்துப்போகின்றது.

கு: செத்தபின் பெயரென்ன?

சி: பிணம்.

கு: பிணத்திற்கு மோக்ஷமுண்டா?

சி: இல்லை.

கு: என்ன காரணம்?

சி: ஜீவன் இல்லாததினால்.

கு: அப்பொழுது யாருக்கு மோக்ஷம்?

சி: ஜீவனுக்குத்தான்.

கு: ஜீவனுக்கு என்ன மோக்ஷம்? ஜீவனை யாராகிலும் கட்டியிருக்கிறதா? ஜீவன் நிர்ப்பந்தன் அதாவது கட்டுடனில்லாதவன், நிர்முக்தன், அதாவது மோக்ஷமில்லாதவன், நிர் அகங்காரன் அதாவது அகங்காரமில்லாதவன், நிர்மோஹி அதாவது ஆசையில்லாதவன், நிர்சங்கன் அதாவது சங்கமில்லாதவன், எனப்படுகிறது. அப்படியிருக்கின்ற ஜீவனுக்கு எதற்காக மோக்ஷம்? மோக்ஷமென்றால் என்ன?

சி: மோக்ஷமென்பது விமோசனம்.

கு: விமோசனம் என்று சொன்னால் என்ன?

சி: விடுதலை.

கு: விடுதலை என்று சொன்னாலோ?

சி: பந்தத்திலிருந்து விடுபடுதல்.

கு: ஜீவனை யாரேனும் கட்டியிருக்கிறார்களா?

சி: இல்லை.

கு: ஆனால் தன்னிலிருக்கின்ற ஜீவன் வெளியில் வியாபித்து விஷயங்களைப் பற்றிப் பிடித்து புலம்பிக் கொண்டிருப்பதுவே

பர்தம். அது எவ்விதமென்றால், இதோ! பாருங்கள். இந்தப் பலகையை நாம் இப்பொழுது என்ன செய்திருக்கிறோம்?

சி: இந்தப் பலகையை மார்புடன் சேர்த்து இரண்டு கைகளினாலும் இறுக்கிக் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

கு: நாம் இதை இரண்டு கைகளினாலும் கட்டிப் பிடித்துக் கொண்டு "ஐயையோ! நம்மை விட்டு விடு நாம் போக வேண்டும்" என்றிவ்விதம் அழுதுக்கொண்டிருந்தால் நம்மை இந்தப் பலகைவிடுமா?

சி: விடாது.

கு: என்ன காரணம்?

சி: பலகையைத் தாங்கள் மார்போடு சேர்த்துக் கட்டிப் பிடித்திருப்பதனால்.

கு: பலகை நம்மைச் சேர்த்துக் கட்டிப் பிடிக்கிறதுண்டா?

சி: இல்லை.

கு: அப்படியானால் நாம் என்ன செய்யவேண்டுமென்றால், யார் பிடித்திருக்கிறதென்று பார்க்க வேண்டும். அதாவது நாம் பலகையை பிடித்திருக்கிறோமா? அல்லது பலகை நம்மைப் பிடித்துக் கொண்டிருக்கிறதோ என்று பார்க்கும்பொழுது பலகை நம்மைப் பிடிக்கவில்லை. நாம்தான் அப்பலகையைப் பிடித்ததாகும். ஆனால் இதோ பாருங்கள் இப்பலகையை நாம் விடுகிறோம். இப்பொழுது என்னவாகிறது?

சி: பலகை வேறுபட்டுப் போகிறது.

கு: இப்படியேதான், தானாகிய சிவன் சக்தியாய் வெளியில் வியாபித்தபோது சிவ சக்தியாயிற்று. அந்தச் சக்தியிலிருந்தே சிருஷ்டிகள் உண்டாயின. அவைகளைத்தான் தாயார், தகப்பனார், மனைவி, மணாளன், புத்திரன், புத்திரி, வீடு, தனம், ஸ்தானம், மானம், ஜாதி, சுத்தம், அசுத்தம் என்று கட்டிப்பிடித்துப் புலம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இவைகளொன்றும் நம்மைக் கட்டிப்பிடிக்கவில்லை. நாமே அவைகளைக் கட்டிப் பிடித்திருப்பதாகும். அதெப்படியென்றால் நாம் தூங்கும்பொழுது தாயார் என்றோ தகப்பனார் என்றோ மற்ற எதுவுமேயில்லை. அன்றியும் நமக்கு மிகவும் பிரியமான புத்திரனோ, சகோதரனோ நமதருகில் படுத்துத் தூங்குவதாயிருந்தது. நாமும் தூங்குகிறோம். அந்தச் சமயத்தில் நம்முடைய கையோ, காலோ, அந்தப் பிரியப்பட்ட புத்திரனுடையவோ, சகோதரனுடையவோ, மேல் விழுகிறது. அப்பொழுது யாதொன்றும் அறிகிறதில்லை. தவிர இரு காலிகளாகிய நம்மில், பரயனென்று ஒரு இனத்தாரை, நம்முடைய துரபிமானத்தால், மிகவும் கீழான ஜாதி ஒரு

என்று ஸ்தாபித்து, வேறாக்கி வைத்திருக்கிறோம். அப்பிரகாரமுள்ள ஒரு பரயன், நாம் தூங்குகிற சமயத்தில் நமதருகில் வந்து நம்மைத் தொட்டால் நாம் அறிகிறதுண்டோ?

சி: அறிகிறதில்லை.

கு: தூக்கம் விழித்த பின் "நாம் தூங்கும்போது நம்மை ஒரு பரயன் தொட்டிருந்தால், நாம் குளிக்க வேண்டும்" என்று நினைப்பதுண்டோ?

சி: இல்லை.

கு: அதுவுமல்லாமல், மேற்சொன்ன பரயன் மிகவும் அருவருப்புக் கிடமான ஒரு உணவை உண்ணுகிற துண்டு. அதாவது செத்த மாட்டை ஒரு குழியில் போட்டு, அது புழுத்த பின், அப்புழுக்களை எடுத்து கஞ்சியாகக் காய்ச்சிச் சாப்பிடுகிறான். ஆனால், நாம் தூங்குகிற சமயத்தில் மேல் சொன்ன புழுக்கஞ்சியை அந்தப் பரயன் ஒரு கரண்டியிலெடுத்து நமது வாயைத் திறந்து வாயில் ஊற்றினானென்றால் என்னவாகும்?

சி: தூக்க மானதால் அது உள்ளே இறங்கிவிடும்.

கு: அப்பொழுது நமக்குத் தெரியுமா?

சி: தெரியாது.

கு: அது என்ன காரணம்?

சி: நாம் தூங்குகிறதினால்.

கு: நாம் தூங்கும் பொழுது நம்முடைய சக்தி உள்ளிலா? வெளியிலா?

சி: உள்ளிலடங்கி யிருந்தது.

கு: தன்னுடைய சக்தி தன்னிலிருந்து வெளியே வியாபிக்க, அந்தச் சக்தியிலிருந்து சிருஷ்டிகள் உண்டாயின. தன்னால் சிருஷ்டிக்கப்படுகிற பொருள்களை, தானே கட்டிப் பிடித்து புலம்புகிறதாகும். அதெப்படியென்றால் நாம் இப்பொழுது ஒரு பலகையைக் கட்டிப் பிடித்து புலம்பிக் கொண்டிருந்தோமல்லவா? அதுபோலவே மேல் சொன்ன விஷயங்களையும் கட்டிப் பிடித்து அழுது கொண்டிருக்கிறோம். அவ்வித பிடிப்பை அதிலிருந்து வேறு படுத்தி, அந்தச் சக்தியைத் தன்னுள்ளில் நடத்தி பிரம்மரந்திரத்தில் லயிக்கச் செய்வதே மோக்ஷம். அதற்காகவே உபதேசமாகும். உபதேசம் எதற்காக வேண்டி?

சி: மோக்ஷம் சித்திப்பதற்காக.

கு: மோக்ஷம் சித்திக்க ஜீவனுக்கு மேல்கதியோ கீழ்கதியோ வேண்டியது?

சி: ஜீவனுக்கு மேல்கதியே வேண்டியதாகும்.

கு: ஆனல் ஜீவனுக்கு மேல்கதி கிடைக்கத்தக்கதான உபதேசம் ஏதாவது உலகத்தில் இப்பொழுது நடப்பதாக நீர் கேள்விப்பட்டதோ, அறிந்ததோ உண்டோ?

சி: உண்டு. சிவா, ராமா முதலிய நாமங்களும், பஞ்சாக்ஷரம் முதலிய பல மந்திரங்களும், மஹா வாக்கியங்களாகிய பிரம்மோபதேசங்களும் இப்பொழுது உலகில் நடப்பிலுள்ளதாய் நான் கேள்விப்பட்டும், அறிந்துமிருக்கிறேன்.

கு: ஆனல், இவைகளிலிருந்ததெல்லாம் ஜீவனுக்கு மேல் கதி கிடைக்கிறதில்லை. ஏனென்றால் சிவா, ராமா, நாராயணு என்னும் மற்றுமுள்ள நாமங்களும், அதல்லாமல் நமசிவாய, ஓம்ஐயும்-கிலியும், சவ்வும், வதவதவாக்வாதினி, பாலபரமேஸ்வரிஸ்வாஹா என்றும், ஓம் ஹ்ரீம், நமசிவாய என்றும், ஓம் நமோநாராயணயாவென்றும், தவிர அஷ்டாக்ஷரி, திரியாக்ஷரி, ஏகாக்ஷரி, திரிபுரசுந்தரி, சுயம்வரம் என்றதாகிய மந்திரங்களும் அதல்லாமல் பிரமோபதேசமென்று சொல்லுகிற "ப்ரக்ஞானம் பிரம்மம்" "அஹம்பிரம்மாஸ்மி", "தத்வமஸி", "அயம் ஆத்மா பிரம்மம்" என்ற இப்பேர்ப்பட்ட வாக்கியங்களையும் காயத்ரி என்று சொல்லப்படுகின்ற "ஓம் பூ: ஓம்புவ: ஓம் பூர்ப்பவஸ்ஸுவ: ஓம் தத்ஸவிதுர்வரேண்யம், பர்கோதேவஸ்யதீமஹி, தியோயோந: பிரசோதயாத்" என்பவைகளையுமே உபதேசமென்று சொல்லி உலகத்தில் இப்போது நடந்துவருகிறது. இவ்விதமாக நாம் உச்சாடனம் செய்கிறதினலோ, தியானிக்கிறதினலோ, நம்முடைய ஜீவனுக்கு மேல் கதி கிடைக்குமென்று நினைக்க இடமுண்டா?

சி: இடமில்லை.

கு: இவ்விதமாக உச்சாடனம் செய்துகொண்டிருக்கிறதால் நமது ஜீவன் மேல்கதியாகவோ அல்லது கீழ்கதியாகவோ போகிறது?

சி: கீழ்கதியாகத்தான் போகிறது.

கு: கீழ்கதியாகின்றது எப்படியென்றால், அக்கினி சொரூபமாயிருக்கின்ற சப்தமூல்யமாக ஜீவனய், தேகமாயிருக்கின்ற வாயு தன்னிலிருந்து தஹித்து கீழ்கதியாய்ப் போகின்றது. அப்போதுதான் நாம் செத்துப்போகின்றோம். அவ்விதம் கீழ்கதியாகாமல் மேல்கதி கிடைப்பதற்குத்தான் உபதேசம். உபதேசம் என்பது உப+தேசம். உப என்பது என்ன?

சி: சமீபம்.

கு: தேசம் என்றாலோ?

சி: ஸ்தானம். அதாவது இடம்.

கு: அப்போது உபதேசம் என்பது என்ன?

சி: சமீபஸ்தானம்.

கு: இந்த சமீபஸ்தானம் யாருக்கு?

சி: நமக்கு.

கு: நமக்கு ஜீவனில்லாவிட்டால் ஸ்தானம் உண்டோ?

சி: இல்லை.

கு: ஏன்?

சி: ஜீவன் இல்லாதிருந்ததினால்.

கு: அப்பொழுது ஸ்தானம் யாருக்கு?

சி: ஜீவனுக்கு.

கு: நாம் ஏதேனும் ஒரு வழியில் நடக்கிற சமயத்தில், நமக்கு அறியாமல், ஏதேனும் ஒரு சப்தம் திடீரென்று உண்டாகக் கேட்டு பயப்படுகிற சமயத்திலோ, அதல்லாமல் குழியிலோ, கால் தவறி விழுகிற சமயத்திலோ நமது ஜீவன் எவ்விதமாகப் போகிறது?

சி: அப்பொழுது பயப்பட்டு ஜீவன் ஒரே கதியாக மேல் பக்கமாகப் போகிறது.

கு: அது நமக்கு எங்கிருந்து மேல்பாகமாகப் போகிறது? உள்ளிலிருந்தோ? வெளியிலிருந்தோ?

சி: அது நம்முடைய உள்ளிலிருந்து.

கு: அப்பொழுது ஜீவனுடைய ஸ்தானம் எது?

சி: மேல்பாகம்.

கு: ஆனால் நம்முடைய ஜீவன் நமதுள்ளில் வியாபித்து மூத்திரத் துவாரத்தின் நுனிவரை இருக்கின்றது. அந்த ஜீவனில்லாவிட்டால் சுக்கிலமில்லை. அந்த ஜீவன்தான் சுக்கிலம். அந்த ஜீவன் மூத்திரத் துவாரத்தின் பாதிவரையில்தான் வருகிறதென்றால் சுக்கிலமோ மூத்திரமோ வருகிறதில்லை. அது மூத்திர துவாரத்தின் கடைசிவரை வந்து சுக்கிலத்தையும், மூத்திரத்தையும் வெளியில் தள்ளுகிறது. இதனால் மூத்திரத் துவாரத்தின் கடைசிவரை இருக்கின்ற ஜீவன் நாம் பயப்படும் பொழுது மேல் பாகத்திற்கு அதிவேகமாய்ஏறுகிறது. அந்தச் சமயம் ஜீவன் எவ்விடமிருந்து ஏறுகிறது?

சி: மூத்திரத் துவாரத்தின் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து.

கு: ஜீவன் உள்ளிலிருக்கிறது. அவ்விதம் உள்ளிலிருக்கிற ஜீவனுடைய மார்க்கத்தைத்தான் நன்றாக்கவேண்டியது. இதற்குத்தான் ஜீவனுடைய மார்க்கத்தை நன்றாக்கவேண்டுமென்றும், ஜீவனுக்கு மேல்கதி கிடைக்கவேண்டுமென்றும் சொல்லுகிறது. அதெவ்விதமென்றால், தனதுள்ளில் வியாபித்திருக்கின்ற ஜீவனை, உள்ளிலுள்ள மார்க்கத்தை நன்றாக்கி, அதன் வழியே ஒரே கதியாக ஸதா நடத்தவேண்டும். அப்போதுதான் ஜீவனுக்கு கதி வருகிறது. மற்றெந்த விதத்திலும் ஜீவனுக்கு கதி

வருகிறதில்லை. தவிர யாராவது செத்துப்போகும் சமயத்தில் நீர் பார்த்திருக்கின்றீரா?

சி: ஆம். பார்த்திருக்கிறேன்.

கு: அந்தச் சமயத்தில் சுவாசத்தின் கதி அதாவது மூச்சின் வழி எந்தப் பக்கம் அதாவது எந்த இடத்திற்கு?

சி: மேல் பக்கத்தில்.

கு: அத்தருணத்தில் வேண்டிய கதிதான் இப்போது நாம் சொல்லிய கதி. அது எப்படியென்றால் இதோ பாருங்கள் "............" இவ்விதமாகும். இதுதான் வேண்டியது. இந்தக் கதி அப்பொழுது கிடைக்கிறதுண்டா?

சி: கிடைக்கிறதில்லை.

கு: அது ஏனென்றால் பிறப்புண்டானால் இறப்புண் டென்று நாம் எண்ணியிருக்கிறோம். அது தவறு. இறக்காம லிருப்பதற்கு ஏதேனும் வழியுண்டோ இல்லையோ என யோசிக்காத காரணத்தால் அப்படித் தீர்மானித்திருக்கிறோம். ஆனால் நாம் மரிக்கப் படிக்கவேண்டும். அப்படி மரிக்கப் படிக்காததினால்தான் நாம் நரகம் அனுபவிப்பதற்கும், செத் துப்போகிறதற்கும் இடமுண்டாயிற்று. மரிக்கப் படித்தால் நாம் நரகம் அனுபவிக்கின்றதற்கும், செத்துப்போகின்றதற்கும் இடமில்லை. மரிக்க என்றால் மறக்க என்று பொருள்படும். எதை மறக்கவேண்டியதென்றால் நான் என்று சொல்லப்பட்ட நிலைமையையும், உலகத்தையும் ஆகும். அப்பிரகாரம் மறந்து தன்னுடைய ஜீவனை உள்ளில் அடக்கவேண்டும். அந்த மார்க்கத்தைப் படித்து ஜீவனை அடக்கம் செய்தால் நாம் செத்துப்போக இடமுண்டா?

சி: இடமில்லை.

கு: மறப்பதற்கு வேண்டிய கதிதான் முன்பே நாம் காண்பித்துக் கொடுத்தது. அதை முன்னமேயே படிக்காத தினால்தான், செத்துப் போகும் சமயத்தில் அந்தக் கதி கிடைக்காமல் நாலு, ஐந்து, பத்து, இருபது, முப்பது தினங் களும், ஏறக்குறைய ஒரு வருடமும் கூட படுத்துச் சுவாசம் மேலே இழுத்து, அதாவது மேல் மூச்சு வாங்கிச் சுவாசம் முட்டி ஜடம் புண்ணாகி, பழுத்து, புழுத்து, அப்புழுக்கள் குத்தித் துளைக்க உணர்வில்லாமல் கிடந்து, மிகவும் கஷ்டப் பட்டுச் செத்துப் போகின்றதை நாம் கண்ட தில்லையோ?

சி: கண்டிருக்கிறோம்.

கு: அப்பொழுது அவர்கள் அனுபவிக்கின்ற நரக கஷ்டங்கள் இன்ன விதத்திலென்று அவர்களுக்குச் சொல்ல முடியுமா?

சி: சொல்ல முடியாது.

கு: அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறவர்களாகிய நமக்கு எவ்வளவு கஷ்டம் தோன்றுகிறது. அப்பொழுது அவருடைய கஷ்டத்தை இன்ன விதமென்று சொல்ல நமக்கு முடியுமா?

சி: முடியாது.

கு: ஆனால் இப்பொழுது காண்பித்த கதியை நாம் அப்பியசித்திருந்தால், அந்தச் சமயத்தில் இப்பிரகாரமுள்ள கஷ்டத்தை அனுபவிக்க வேண்டி வருமா?

சி: வராது.

கு: ஆனால் நமக்கு இப்பொழுது பிரம்மரந்திரம் மூடியிருக்கின்றதோ, திறந்திருக்கின்றதோ?

சி: மூடியிருக்கின்றது.

கு: மூடியிருக்கிற பிரம்மரந்திரம் திறக்காமல், ஜீவன் பிரம்மரந்திரத்தில் போய்ச் சேர முடியுமா?

சி: சேர முடியாது.

கு: அது எப்படியென்றால், தன்னிலிருக்கின்ற ஜீவசக்தி பிரம்மரந்திரத்தைத் திறக்காமல், அத்துடன் சென்று முட்டி, அதோகதியாக வெளியில் போய் நசித்துப் போகின்றதினால் தான் செத்துப் போகின்றது. அதனால் தன்னுடைய ஜீவ சக்தியை வெளியில்விடாமல் தன்னுள்ளிலேயே மேல் கதியாக நடத்தி, அந்த ஜீவனால் பிரம்மரந்திரத்தைத் தட்டித் திறக்க வேண்டும். அவ்விதம் செய்து ஜீவன் பிரம்மரந்திரத்தில் லயித்து தானாகி, தன் மயமாய்த் தீருகின்றதே "மோக்ஷம்". இவ்விதத்தி லல்லாமல் மற்றெந்த விதத்திலும் மோக்ஷம் சித்திக்கிறதில்லை. ஆனால் இது வரையிலும் நம்முடைய ஜீவனுக்குக் கீழ் கதியா, மேல் கதியா?

சி: கீழ் கதியாகும்.

கு: இந்த ஜீவன் கீழ் கதியாகப் போய் தன்னிலில்லா மலாகித் தீர்ந்தால் என்னவாகிறது?

சி: பிணமாகிறது.

கு: இப்பொழுது உம்முடைய ஜீவனுக்குக் கதி என்ன வாகிறது.

சி: மேல் கதியாகிறது.

கு: கீழ் கதியாயிருந்த ஜீவனுக்கு இப்பொழுது மேல் கதி வந்தது! ஆனால், உம்மில் உமக்கு மேலான வஸ்து எது?

சி: ஈஸ்வரன்.

கு: அப்பொழுது ஜீவன் ஈஸ்வரனோடு ஐக்கியமாயிற்று. இதற்கே "ஜீவஈஸ்வரரோணைக்கியம்" என்று சொல்லப்படுகிறது. ஜீவன் ஈஸ்வரனோடு ஐக்கியமானால் என்னவாகும்?

சி: மோக்ஷமாகும்.

கு: இதற்கேதான் பிராணனையும், அபானனையும் ஐக்கியப் படுத்துவதென்று சொல்லுவது. பிராணன் நம்முடைய உள்ளில் இருக்கிறது. அபானன் வெளியில் போகிறது. அப்படி வெளியில் போகின்ற அபானனை, வெளியில் போகவிடாமல் பிராணனுடன் சேர்த்து உள்ளிலேயே ஓரே கதியாய் நடத்து வதற்குத்தான் "பிராணுயாமம்" என்று சொல்லுவது. பிராண யாமம் என்றால் பிராணனை ஆயாமம் செய்கிறது. ஆயாமம் செய்கிறதென்றால் தடுத்து நிறுத்துகின்றது, அல்லது நேரே கொண்டு போகின்றது, அல்லது நீட்டுகின்றது. அதாவது உள்ளிலிருக்கின்ற பிராணனை அபானனாய் வெளியில் போகாமல் உள்ளிலேயே தடுத்து நிறுத்துகிறது. அப்பொழுது பிராணனுக்கு நேர் கதியாகின்றது. இப்பொழுதோ பிராணன் நேரே போகாமல் வளைந்து ஐந்து துவாரங்களின் வழியாக வெளியில் போய் நசித்துக் கொண்டிருக்கிறது. அப்பிரகாரம் வெளியில் போகாமல் தன்னுள்ளிலடங்கி மேல் கீழ் ஓரே கதியாய் வரும்பொழுது நேரே ஆகின்றது. அதற்காகவே பிராணனை நேரே கொண்டு போக வேண்டுமென்று சொல்லு வது. "நீட்டுக" என்றால் நீளமாக்குக என்றுகின்றது. எதை நீளமாக்க வேண்டியதென்றால் நம்முள்ளிலிருக்கின்ற பிராணன் நீளமாயில்லாமல் வளைந்து அபானனாய் வெளியில் போய் நசித்துக் கொண்டிருக்கின்ற அதனையாகும். அந்த அபானனை வெளியில் விடாமல் பிராணனுடன் சேர்த்து நேரே கொண்டு போகும்பொழுது நீளமாகின்றது. இதற்காகத்தான் "நீட்ட மாக்குக" என்று சொல்லுவது. அப்பொழுது நாம் தூங்குகிற சமயத்தில் நம்முடைய கதி எவ்விதமோ அவ்விதமே தூங்கா திருக்கின்ற சமயத்திலும் ஆகித்தீரும். ஆனால் தூங்கும் சமயத்தில் உள்ளகதி உள்ளிலோ, வெளியிலோ?

சி: உள்ளில்தான்.

கு: தூங்குகிற சமயத்தில் நமக்குப் பலவிதத்தில் சுவாச கதிகளுண்டு. அது எப்படியென்றால் சிலருக்குக் குறட்டை உண்டாகிறது. அதாவது சிலர் தூங்கும்போது உள்ளில் நடக்கும் கதியிலிருந்து "க்ருங்க" என்றும் சிலர் "க்ர்றும்" என்றும் சிலர் எருது முக்குவது போல "ங்க்ரோ" என்றும் பலவித சப்தங்களும் உண்டாக்குகிறார்கள். அவைகள் ஒரு பொழுதும் சரியான கதியல்ல. சரியானகதி ஜீவசக்தியான வாயுவுக்கு, நேர்மையாய் அதாவது இலகுவாய் யாதொரு சேஷ்டையும் சப்தமுமில்லாமல், சுவாசம் உண்டோவென்று அறிவதற்குங் கூட முடியாமல், இரண்டு மார்புகளின் குழியிலிருந்தோ, அல்லது அடித்தொண்டையின் குழியி லிருந்தோ, ஒரு துடிப்பு மாத்திரம் காணலாம். அதுதான்

சரியான கதி. அந்தக் கதியே நமக்குத் தூங்காத சமயத்திலும் கிடைக்க வேண்டியது. அதுதான் நமக்கு மோக்ஷத்திற்குள்ள மார்க்கம். அந்தக் கதி வரும்போது நம்மிலேயே பிரகாசிக்கிறது. அது எப்படியென்றால், இந்த இடத்தில் நெருப்பை வைத்து விட்டு, நெருப்பில்லாத மற்றொரு இடத்தில் ஊதினால் பிரகாசிக்குமா?

சி: பிரகாசிக்காது.

கு: அந்த நெருப்பனல் பிரகாசிக்கவேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்?

சி: அந்தக் கனலின் மேல் ஊதவேண்டும்.

கு: அதே பிரகாரததில்தான் அவனவனுடைய அக்கினி நேத்திரமாகிய சுழி முனையில் ஊதாமல், வெளியில் ஊது வதினால்தான் நம்மில் பிரகாசிக்கிறதில்லை. ஆனதினால் ஜீவ சக்தியாயிருக்கின்ற வாயுவினால் நம்முடைய புருவ மத்தியமாகிய சுழிமுனையா யிருக்கின்ற அக்கினி நேத்திரத்தில் ஊதி, ராகத்துவேஷாதிகளாகிய துர்விசாரங்கள் அதாவது துர்க் குணங்களை எப்பொழுது அங்கே எரிக்கின்றோமோ அப்பொழுதுதான் நம்முள்ளில் பிரகாசித்து ஞானம் உண்டா கின்றது. அவ்விதத்திலல்லாமல் வேறு யாதொரு விதத்திலும் ஞானம் உண்டாகிறதில்லை. மேற் செல்லிய விதத்தில் செய் வதற்குத்தான் "பிராணயாமம்" என்று சொல்லப்படுவது. இதை உலகத்தில் அறியாமலும், அவ்வாக்கியத்தின் பொருள் தவறாக எண்ணியும், பல விதத்திலும் செய்கிறார்கள். சிலர் மூக்கினுடைய ஒரு துவாரத்தை அடைத்து மற்றொரு துவாரத்தின் வழியாய் வாயுவை மேலிழுத்து ஏற்றி அடக்கிப் பிடித்து நிறுத்தி, தலையிலுள்ள மூளையை இளக்கிப் பைத்தியம், க்ஷயம், நாடிப்பிழை முதலான வியாதிகளை உண்டாக்கிக் கொண்டு செத்துப்போகவும் செய்கிறார்கள். அதன் நிமித்தம் உலகத்தில் பிராணயாமத்தை அநேகமாய் நிந்தித்து வரு கிறார்கள். ஆனால் "சதா பிராணயாமிக்கு வியாதியே இல்லை" என்பதாக ரிஷீஸ்வரர்களால் சொல்லப்பட்டு மிருக்கிறது. பிராணன் நமது உள்ளிலாகும். அப்படி உள்ளிலிருக்கின்ற பிராணனை மூக்கினுடைய ஒரு துவாரத்தை அடைத்து மற்ற துவாரத்தின் வழியாய் வெளியிலிருந்து பிராணன் என்று நினைத்துப் பிடித்திழுத்தால் கிடைக்குமா?

சி: கிடைக்காது.

கு: அதற்கொரு உதாரணம்:—ஒரு சாக்கு நிறைய நெல் வைத்திருக்கிறது. அதற்கு வெளியிலும் அதிகம் நெல் உண்டு. அந்த நெல்லையும் இந்தச் சாக்கிலேயே நிரப்ப வேண்டுமென்று நினைத்தால் முடியுமா?

சி: முடியாது.

கு: அதைக் கவனியாமல் மற்றும் நெல்லை அதில் வாரிப் போட்டு மிதித்து அமுக்கினால் அந்தச் சாக்கு என்னவாகும்?

சி: அந்தச் சாக்கு கிழிந்துபோகும்.

கு: அவ்விதமேதான் நம் முள்ளிலிருக்கும் ஜீவசக்தியா யிருக்கின்ற வாயுவினோடு, வெளியிலிருக்கின்ற வாயுவையும் இழுத்துச் சேர்க்கக் கருதி, வெளியிலிருக்கின்ற வாயுவை இழுத்து ஏற்றினால், அபாயம் நேரிட்டு ஆபத்துகள் உண்டாகிச் செத்துப்போவதற்கிடமாகின்றது. ஆகையினால் பிராணயாம மென்று சொல்லுவது நமது உள்ளிலிருக்கின்ற பிராணனை வெளியில் விடாமல், நம்முள்ளிலேயே நடத்துவதாகும். அப்படிச் செய்கின்றவருக்கு யாதொரு வியாதியும் உண்டாகிற தில்லை. அதனால்தான் "சதா பிராணயாமிக்கு வியாதியில்லை" என்று சொல்லக் காரணமாகும்.

அத்தியாயம் 5

சி: சுவாமி முன் அத்தியாயத்தில் சொன்ன பிரகாரந்தான் சிருஷ்டியென்பது எனக்கு உறுதிப்பட்டது. ஆனால் பஞ்ச பூதங்களினால்தான் சிருஷ்டி என்பதாகச் சொல்லிவருகின்றார்கள். அதன் காரணம் என்ன என்பதை விவரமாய் அருள் புரிய பிரார்த்திக்கிறேன்.

கு: பஞ்சபூதங்கள் என்பது எவையெல்லாம்?

சி: பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் இவைகளாகும்.

கு: பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் இவைகளைத் தான் பஞ்சபூதங்களென்று சொல்லுகிறார்கள். ஆனால் முன் அத்தியாயத்தில் விவரித்த வாயுவும், பஞ்சபூதங்களில் அடங்கிய ஒன்று என்றல்லவா புலனாகிறது. எப்படியானாலும் பஞ்சபூதங்களினால்தான் சிருஷ்டி. பஞ்சபூதங்கள் இன்னின்னவைதான் என்று உலகத்தாருக்குத் தெரிகிறதில்லை. ஆனால் பஞ்சபூதங்களின் உற்பத்தியைச் சொல்லுகிறோம். அதாவது அக்ஷரத்திலிருந்து ஆகாயமும், ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்கினியும், அக்கினியிலிருந்து அப்புவும், அப்புவிலிருந்து பிரிதிவியும் உண்டாகிறதென்று சொல்லப் படுகிறது. பிரிதிவி என்று சொல்லிவருவது பூமியும், அப்பு என்று சொல்லிவருவது ஜலமுமாகும். அந்த ஜலத்திலிருந்தே பூமி உண்டானதென்று சொல்லிவருகிறார்கள். இதை நாம் ஒருக்காலும் நம்புவதற்கிடமில்லை. ஏனென்றால் பூமி என்கிற ஒரு அவஸ்தை அதாவது நிலைமை இல்லாவிட்டால் ஜலம் முதலான யாதொரு வஸ்துவும் உண்டாகாது. பூமியில்தான் ஜலம் இருப்பது. ஜலத்தில் பூமி நிற்பதற்கில்லை. காரணம் சமுத்திரம் என்று சொல்லப்படுவது பூமியில் ஜலம் நிறையப் பட்ட ஒரு பெரிய பாகமாகும். அந்த ஜலம் நிற்பதற்கு அடிஸ்தானமாக பூமியில்லாவிட்டால் ஜலம் நிற்காது. தவிர அதில் அநேக தீவுகள் இருக்கின்றன. அடியில் பூமியில்லாவிடில் அப்படிப்பட்ட தீவுகள் உண்டாக இடமில்லை. அதல்லாமல் நாம் ஒரு கிணற்றைத் தோண்டும்போது, கீழே போகப் போகத் தான் ஜலத்தைப் பார்க்கிறோம். அந்த ஜலம் நிற்பதும் பூமியில் தான். ஆகையால் ஜலத்திலிருந்து பூமி உண்டானதென்று நம்புவதற்கிடமில்லை. அது எப்படியோ இருக்கட்டும். நாம் இப்பொழுது நினைக்கிறபடி பஞ்சபூதங்களால் சிருஷ்டி உண்டாகிறதென்று, ஒருக்காலும் நம்புவதற்கிடமில்லை. ஏனென்றால் பஞ்சபூதங்களில் பிரிதிவி என்று சொல்லுகிறது

பூமியும் அதாவது மண்ணும், அப்பு என்று சொல்லுகிறது ஜலமும் அதாவது தண்ணியும், தேயு அதாவது அக்கினி என்பது தேஜசும் அதாவது பிரகாசமும், வாயு என்பது சலித்துக்கொண்டிருக்கிறதும் அதாவது காற்றும், ஆகாயம் என்பது காணமுடியாததும், மிகவும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறதும், வெளி அதாவது காலியும் ஆகும். இந்தப் பிரகாரமுள்ள ஐந்து வஸ்துக்களையும் ஒன்றாகச் சேர்த்து சிருஷ்டி செய்ய முடியாது. அது ஏனென்றால், இதோ காணுகிற காலி அதாவது வெளி ஆகாசமாகும். இதைப் பிடித்துப் பாக்கியுள்ள நான்கு பூதங்களோடு சேர்க்கமுடியுமா?

சி: முடியாது.

கு: வாயு என்று சொல்லுவது சலித்துக்கொண்டிருக்கின்ற இந்தக் காற்று. இதைப் பிடித்துப் பாக்கியுள்ள பூதங்களோடு சேர்க்கமுடியுமோ?

சி: முடியாது.

கு: அக்கினி என்று சொல்லுகிறது தேஜஸாயிருக்கின்ற பிரகாசம். இதையும் பிடித்துப் பாக்கியுள்ள பூதங்களோடு சேர்க்கமுடியுமா?

சி: முடியாது.

கு: ஆனால் பஞ்சபூதங்களும் தன்னில்தானே இருக்கின்றதாகும். அது எவ்விதமிருக்கிறதென்றால் இதோ! ஒரு மேஜை விளக்கு. இதைப் பொருத்தி அதாவது ஏற்றி அதன்மேல் ஒரு கண்ணாடிக் குழாய் வைத்தால் நன்றாய்ப் பிரகாசம் உண்டாகிறது. அந்தக் கண்ணாடிக் குழாய் காலியில்லாமல் கெட்டியாக இருந்தானால் அதை விளக்கின் மேல் வைத்தால் என்ன சம்பவிக்கும்?

சி: அப்பொழுது அது எரியாமல் அணைந்துபோகும்.

கு: ஆனால் அந்த விளக்கிலிருந்து எரிந்துகொண்டிருக்கின்ற அக்கினிக்குக் கண்ணாடிக் குழாய் வைக்காமல்விட்டாலோ?

சி: சரியான பிரகாசம் கிடைக்காது?

கு: அப்பொழுது பரவிக்கிடக்கின்ற பிரகாசமாயிருக்கிற சக்திக்குக் கண்ணாடிக் குழாய் வைத்தபோது அந்தப் பிரகாசம் பரவிப்போகாமல் பிரகாச சக்தி ஒன்றாகின்றது. அப்படி ஒன்றானபோது அக்குழாயிலிருக்கின்ற கண்ணாடியின் மூலமாய்ப் பிரதிபிம்பித்து நமக்கு அதிகப் பிரகாசமுண்டாகிறது. ஆனால் கண்ணாடியினால் செய்த அந்தக் குழாயிக்குக் காலியான உள் உண்டு. அந்தக் காலியே ஆகாசம். அந்தக் காலியான ஆகாச வழியாய்த்தான் வாயு கதாகதம் அதாவது நடனம் செய்கின்றது. அவ்விதம் அதில் வாயு நடனம் செய்யாதிருந்தால் அது எரியுமோ?

சி: எரியாது.

கு: ஆனால் கண்ணாடிக் குழாயிக்கும், அக்கினிக்கும் தம்முள் யாதொரு பாத்தியதை அதாவது சம்பந்தமில்லை. கண்ணாடிக் குழலுக்குக் காலியான ஆகாசமிருந்தது. அந்தக் காலியான ஆகாயத்தில் வாயு நடனம் செய்கிறதினிமித்தமே அக்கினி அதில் எரிந்துகொண்டிருக்கிறது. கண்ணாடிக்குழாய் வைக்காவிட்டால் அந்தப் பிரகாசம் பரவி இருக்கும். அதற்கு அக்கண்ணாடிக் குழாயினால் தடங்கல் வந்தபோது பரவாமல் அந்தப் பிரகாசம் ஒன்றாகி ஒரே சக்தியாகின்றது. குழாயாயிருக்கின்ற கண்ணாடிமூல்யமாய் அந்த ஒன்றான சக்தி பிரதிபிம்பித்து மிகவும் வெளிச்சமாக நாம் காண்கிறோம். குழாயை எடுத்த போதும் அக்கினி அங்கேதானுண்டாயிருந்தது. ஆகாயமும், வாயுவும் இருந்தது. ஆயினும் முன்போல் பிரகாசம் கிடைக்கிறதில்லை. ஏனென்றால் அந்தப் பிரகாச சக்தி பரவிவிட்டது. அப்போது முன்போலப் பிரகாசம் கிடைக்கிறதுண்டோ?

சி: கிடைக்கிறதில்லை.

கு: ஏன்? அது எதனால்?

சி: அந்தப் பிரகாசமாகிய சக்திக்குக் கண்ணாடிக் குழாயினால் தடை நேரிட்டுப் பிரதிபிம்பிக்கிறதற்கு வழி இல்லாததனாலேயாகும்.

கு: இப்பிரகாரந்தான் நம்முடைய நிலைமையும். நம்மிலும் ஆகாயமும், வாயுவும், அக்கினியும் உண்டு. நமக்கு நான் என்கிற அவஸ்தையான ஒரு கண்ணாடிக் குழாயும் உண்டு. எப்பொழுது நான் என்கிற அவஸ்தையான குழாய் வைக்கின்றோமோ, அப்பொழுதுதான் அதன்மூலமாகப் பிரதிபிம்பித்துக் காண்கிறதாகும் இந்த உலகு. எப்பொழுது நான் என்கிற கண்ணாடிக் குழாயை எடுக்கின்றோமோ அப்பொழுது உலகத்தைக் காண்கிறதில்லை. இதல்லாமல் பஞ்சபூதங்களினால்தான் சிருஷ்டிக்கப்படுகிறதென்று சொல்லுவதற்கு யாதொரு யுக்தியுமில்லை. காரணம் பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் இவைகளை ஒன்றாகச் சேர்த்துச் சிருஷ்டித்ததாயிருந்ததென்றால் நாம் ஒருக்காலும் செத்துப்போக இடமில்லை. தவிர நாம் ஒருவருடைய மூக்கையும், வாயையும் அடைத்துக் கெட்டியாகப் பிடித்திருந்தால் அப்பொழுது அவர் செத்துப்போகிறார். அந்தப்படி ஏன் அவர் செத்துப் போக வேண்டும். ஆகாசம் என்ற பூதத்தையும் சேர்த்து சிருஷ்டித்ததல்லவா? நாம் மூக்கு, வாய், இந்த இரண்டின் காலியான வழியை மாத்திரமே அடைத்துப் பிடித்திருந்தோம். வாயு என்கிற பூதமும் அதில் இருந்ததாகும். அந்த வாயுவுக்கு வாய், மூக்கு என்கிற இரண்டு காலியான வழிபோக மீதியுள்ள

காலியான வாயிலால் சஞ்சரிக்கலாமல்லவா? அக்கினி என்கிற பிரகாசமும் அதிலுண்டாயிருந்தது. முன் அடக்கிப் பிடித்துள்ள இரண்டு காலி வழியால் மட்டும் பிரகாசிக்கிறதற்கு முடிகிறதில்லையல்லாமல் பாக்கியுள்ள காலி வழியின் மூலம் பிரகாசிக்கலா மல்லவா? இது எல்லாம் ஒன்றாகச் சேர்ந்தல்லவா சிருஷ்டி என்று சொல்லுகிறது. அப்படியாயிருந்ததானல் முன் சொன்ன இரண்டு காலிவழி, அதாவது, வாயையும், மூக்கையும் மாத்திரம் அடைத்துப் பிடித்தபோது செத்துப்போகக் காரணமென்ன? ஆனல் முன் சொன்ன மேஜை விளக்கிலிருந்து எரிந்து கொண்டிருக்கும்பொழுது அதற்கு வைத்திருந்த கண்ணாடிக் குழாயின்மேல் அதனுடைய காலிவழியை அடைத்து ஏதேனுமொரு பொருளை வைத்தால் அந்த விளக்கில் எரிந்து கொண்டிருக்கின்ற அக்கினி என்ன வாகும்?

சி: அணைந்து போகும்.

கு: அதன் காரணம் என்ன வென்றால், அதிலிருந்து எரிந்து ஜொலித்துக் கொண்டிருக்கும்பொழுது மேல்பக்கமாய் வருகிற ஆவியாகிய புகை வெளியில் போகிறதற்குத் தடையாயிருந்ததினால், அதிலேயே அடங்கி நிறைந்து தடித்து அக்கினி எரிகிறதற்கு முடியாமல் அணைந்து போகிறது. இந்த மாதிரியாகத்தான் நமக்கும் விளக்காயிருக்கின்ற ஜடத்திலிருந்து அக்கினி எரிந்து ஜொலித்து, நான் என்கின்ற அவஸ்தையான கண்ணாடி குழையின் வழியாய் விசாராதிகளாகிய புகையாயிருக்கின்ற ஆவி, வெளியில் போகிறதற்குத் தடைநேரிட்டு அந்த ஆவி சேர வேண்டிய ஸ்தானத்தில் போய்ச் சேராமல், ஜடத்திலேயே தங்கி நிறைந்து வீங்கியதினால் எரியாமல் அணைந்து போகிறது. அப்போதுதான் செத்துப் போகிறது. தவிர அக்கினி உண்டாயிருக்கிற தென்பதற்கு உதாரணம்:—இப்பொழுது இந்த ஜடத்தைத் தொட்டுப் பார்த்தாலோ, தேய்த்துப் பார்த்தாலோ சூடு இருக்கிறது. ஆனல் ஒரு பிணத்திற்கு அந்தச் சூடு இருக்கிறதில்லை. காரணம் முன் விவரித்த மேஜை விளக்கிலிருந்து எரிந்து கொண்டிருக்கும் போது, அதற்கு வைத்திருக்கிற கண்ணாடிக் குழாயினுடைய அடியிலிருந்து, அந்த கண்ணாடிக் குழாயிக்கு யாதொரு சம்மந்தமில்லாமலாய் அக்கினி எரிந்து கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் அந்தக் குழாயினுடைய ஏதேனுமோர் பாகத்தை, கைகொண்டு தொட முடியுமோ?

சி: முடியாது.

கு: காரணம்?

சி: அதன் எல்லாவிடங்களிலும் சூடு இருப்பதால்தான்.

கு: ஆனால் அதன் காரணம் கண்ணாடிக் குழாயிக்குக் காலிவழியுள்ளதாலும், அதனுள் வாயு கதாகதம் செய்வதாலும் அந்த வாயுவோடு அக்கினி சேர்ந்து, அந்தக் கண்ணாடிக் குழாய் காலிவழியிடம் வரையிலும் வியாபிப்பதாலும், அந்தக் குழாயிக்குச் சூடு உண்டாயிற்று. அதனால்தான் அந்தக் கண்ணாடிக் குழாயைத் தொடுவதற்கு முடியாமலிருந்தது. இவ்வாறேதான் இந்த ஜடத்திற்கும் காலிவழியுண்டு. அந்தக் காலிவழியின் வழியாய் ஜீவசக்தி சஞ்சரிக்கிறது. இதனுடைய ஒரு பாகத்தில் அக்கினியும் உண்டு. அந்த அக்கினி ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவோடு சேர்ந்து, இந்த ஜடத்தில் காலி வழியாயுள்ள எல்லா இடங்களிலும் வியாபிக்கின்றது. அப்பொழுது இந்த ஜடத்தைத் தொட்டால் சூடு உண்டாகிறது. அந்த அக்கினி அணைந்துபோனால் சூடு உண்டாகிறதில்லை. அது எப்படியென்றால் மூன் சொல்லப்பட்ட மேஜை விளக்கிலிருந்து அக்கினி எரிந்து கொண்டிருக்கும் பொழுது, அதற்கு வைத்திருந்த கண்ணாடிக் குழாயிக்குச் சூடு உண்டாகிறது. அது அணைந்தபின் அந்தக் குழாயைத்தொட்டுப் பார்த்தால் சூடில்லாமல் குளிர்ந்திருக்கும். இவ்விதமாகத்தான் இந்த ஜடத்தில் ஜீவசக்தியாகிய வாயுவோடு அக்கினிசேர்ந்து நடனம் செய்கிறவரையிலும் சூடு உண்டாயிருக்கிறது. எப்பொழுது ஜீவசக்தியாகிய வாயுவினுடைய கதாகதமும் அக்கினியும் அதிலிருந்து நசித்துப்போகிறதோ, அப்போதுதான் செத்துப் போகின்றது. செத்தபின் இந்த ஜடத்தைத் தொட்டுப் பார்த்தாலோ தேய்த்துப் பார்த்தாலோ சூடு இருக்கிறதில்லை. ஆனால் நீர் சொன்னபிரகாரமுள்ள பஞ்ச பூதங்களைக்கொண்டு தான் சிருஷ்டி என்று வந்தால் செத்துப் போவதற்கிடமில்லை. ஏனென்றால் ஆகாயம், வாயு, அக்கினி, ஜலம், பூமி இவைகள் தனித் தனியாக நசிக்கிறதற்கிடமில்லை. எப்பொழுது நசிக்கின்றதோ அப்பொழுதெல்லாம் ஒன்றாக நசிக்கவேண்டும். அதற்கு உதாரணம்:—பஞ்சலோகமாகிய பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் இவைகளை ஒன்றாகக் கலந்து ஒரு உருவம் உண்டாக்குங்கள். அது அழியும்பொழுது ஒவ்வொன்றும் வெவ்வேறாக அழிவதில்லை. எல்லாம் ஒன்றாகவே அழிகின்றது. இதைப்போலவேதான் பஞ்ச பூதங்களைக் கொண்டு இந்த ஜடம் உண்டாக்கப்பட்டதென்றால் பஞ்ச லோகங்களினால் உண்டாக்கப்பட்ட உருவம் வெவ்வேறாக நசிக்காமல், ஒன்றாகவே நசிப்பதுபோல, இந்த ஜடமும் நசிக்கவேண்டியது. அதனால் இந்த ஜடத்தை ஒருபோதும் பஞ்சபூதங்களினால் உண்டாக்கியதென்று சொல்ல நியாயமில்லை. ஆனால் பஞ்சபூதங்கள் இன்னின்னவையென்றும் அவைகளினால்

உண்டாகிற சிருஷ்டி இன்னவிதத்திலென்றும் தெளிவாகச் சொல்லுகிறேன் கேள்:

பஞ்சபூதங்களென்பது ஆகாயம், வாயு, அக்கினி, அப்பு, பிரிதிவி இவைகளாகும். இவைகளில் ஆகாயம் என்பது சதாசிவனான ஜோதி. அது புருவமத்தியத்திற்கு மேற்பாகத்தி லாகுமிருக்கிறது. அந்த ஜோதியிலிருந்து கீழ்ப்பாகமாய் புருவமத்தியம் வரையிலும் சிவனாக ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவும், சிவனாயிருக்கின்ற வாயுவிலிருந்து, புருவமத்தியத்தின் கீழ்பாகம் நாசிவரை ருத்திரனாயிருக்கின்ற வாயு பிரகாசித்துக் கொண்டிருக்கிற தேஜஸான அக்கினியும், அந்த தேஜஸாகிய அக்கினியிலிருந்து நாசியின் நுனி வரைக் கீழ்ப்பாகமாய் ஜலாம்சமான விஷ்ணுவாயிருக்கின்ற மனமும், விஷ்ணுவாகிய மனதிலிருந்து கீழ் முகமாய் அதாவது அடிப்பாகத்தில் பிரிதி வியாயிருக்கின்ற பிரம்மா அந்தகாரமாயும், கெட்டியாயு மிருக்கின்ற அகங்காரமுமாகும். அதானது எவ்விதமென்றால், ஆகாச ரூபியாய் சதாசிவனாயிருக்கின்ற ஜோதியிலிருந்து சர்வ வியாபியாய் ஜீவனாய் சிவனாயிருக்கின்ற வாயுவும், அதிலிருந்து திரவித்து அதாவது திராவக ரூபமாய் நசித்துக்கொண்டு ருத் திரனாக, அக்கினி சொரூபமான தேஜசும், அந்தத் தேஜஸி லிருந்து வியர்வையாய் ஜலமாகி வியாபக சீலனாய் விஷ்ணு வான மனமும், அதிலிருந்து கெட்டியாய் அந்தகாரமாய் பிரிதிவியாய் பிரம்மாவான அகங்காரமுமாயின. இவைதாம் பஞ்சபூதங்கள். இவைகளைக் கொண்டுதான் சிருஷ்டி. இதனால் தான் பஞ்சபூதங்களினால் சிருஷ்டிக்கிறதென்று சொல்லக் காரணம். இவ்விதமல்லாமல் மண், நீர், தீ, வாயு, ஆகாயம் இவைகள் ஒன்று சேர்ந்து ஒரு சிருஷ்டி உண்டாகிறதில்லை. அது எதனாலென்றால் தானாகி, சதாசிவனாயிருக்கின்ற ஜோதி சலித்து வியாபித்து, ஜீவசக்தியாகிய வாயுவாகி, தேயுவாகிய அக்கினியாகி, ஜலமாகிய மனமாய், பிரிதிவியாகிய அகங்கார மாய் வந்ததாகும். அப்பொழுதுதான் உலகம் உண்டானது. இவ்விதமாகும் உலகத்தின் நிலைமை. அதற்கு உதாரணம்:— தூங்குகிறோம் என்று சொல்லும் சமயத்தில் தன்னிலிருந்து ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு பிரகாசித்து வெளியில் பரவாம லிருந்ததினால் உலகத்தைக் காணுவதோ, அறிவதோ இல்லை. எப்பொழுது தூக்கம் விழித்து அந்த ஜீவசக்தியாகிய வாயு பிரகாசமாய் வெளியில் வியாபிக்கின்றதோ, அப்பொழுது மனமும் அகங்காரமும் உண்டாயின. அந்தச் சமயத்தில் உலக மும் உண்டாயிற்று. தவிர பிணத்திற்கு உலகமில்லை. காரணம் தன்னிலிருந்து கதாகதம் செய்கிற ஜீவசக்தியாகிய வாயுவின் கதாகதம் இல்லாததினாலாகும். ஆனால் தனது சக்தி எப்

பொழுது வெளியில் வியாபிக்கின்றதோ அப்பொழுது உலகம் உண்டாவதும் எப்பொழுது தனது சக்தி தன்னில் லயிக்கின்றதோ, அப்பொழுது தன்னிலிருந்து உத்பவித்த உலகம், தன்னில் சேர்ந்து தானாய் தன்மயமாகின்றதுமாகும். இவ்விதந்தான் சிருஷ்டியினுடையதும் உலகத்தினுடையதுமான நிலைமை. இந்த விதத்திலுள்ள சக்திகளுக்குத்தான் பஞ்சப்பிரம்மமென்றும், பஞ்சபூதங்களென்றும, பஞ்சேந்திரியங்களென்றும் சொல்லப்படுகிறது. ஆகையால் பஞ்சபூதங்களில் ஆகாயமென்பது சதாசிவனாயிருக்கின்ற ஜோதியும், வாயுவென்பது சிவனாயிருக்கின்ற ஜீவனும், அக்கினியென்பது ருத்திரனாயிருக்கின்ற தேயுவும், அப்புவென்பது விஷ்ணுவாயிருக்கின்ற மனமும், பிரிதிவி என்பது பிரம்மாவாகின்ற அகங்காரமுமாகும். ஆனால் பஞ்சபூதங்களெல்லாம் அக்ஷரத்திலிருந்தாகும் உத்பவித்தது. அந்த அக்ஷரம் தானாயிருக்கின்ற பிரம்மம். இதைப்பற்றி முன்னால் சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? அவ்விதமுள்ள "தான் தானே" "காலியாயிருக்கின்ற ஆகாயமுமாயிற்று. அப்பொழுது அத்துடன் ஐந்து குணங்களும் உண்டாயின. அந்தக் குணங்கள்தாம், முன்கூறின நிலைமைகள். இந்த ஐந்து குணங்களாயிருக்கின்ற பஞ்சபூதங்களிருந்தால் மாத்திரமே சிருஷ்டிக்க முடியும். சிருஷ்டி உண்டாவது சம்போகத்தினாலாகும். இவ்வைந்தில் ஒன்றேனும் இல்லாவிடின் சம்போகம் உண்டாகாது. அதற்கு உதாரணம் என்னவென்றால் தூங்கும்போது அகங்காரமும், மனதும், பிரகாசமும், இருக்கிறதில்லை. அச்சமயத்திலும் ஜீவனும் ஆகாயமும் தன்னிலேயே இருந்தன. எப்பொழுது தூக்கம் விழிக்கிறதோ, அப்பொழுது பிரகாசமாயிருக்கின்ற ருத்திரனும், மனமாகின்ற விஷ்ணுவும் அகங்காரமாயிருக்கின்ற பிரம்மாவும் உண்டாயின. அப்பொழுது ஐந்து பூதங்களும் பூர்த்தியாகின்றன. அந்தத் தருணத்தில் ஐந்து பூதங்களும் சேர்ந்து ஏககதியாகி வியாபகமில்லாமல் ஒன்றாய்ச் சேர்ந்து சம்போக காரணத்தால் சிருஷ்டி உண்டாகின்றது. இதனால் தான் பஞ்சபூதங்களால் சிருஷ்டி உண்டாகிறதென்று சொல்லக் காரணம். இவ்விதமான யாதொரு தத்துவங்களையும் உலகத்தில் கிரஹிக்காமலும், அனுபவஸ்தர்களால் எழுதிவைத்திருக்கிற சாஸ்திரங்களினுடைய அர்த்தத்தைத் தவறாகக் கருதி, யாதொரு உண்மை விபரமுமில்லாமல் உலகத்தில் ஜனங்கள் தம்மில் தம்மில் தர்க்கித்து, வாதப்ரதிவாதம் செய்து, சண்டையிட்டுக்கொள்கிறார்கள். அது எப்படியென்றால் ஒருவன் ஒரு வாழைக் கன்றை நட்டு, அதற்கு எருவிட்டுத் தண்ணீர் வார்த்து வளர்த்து வருகிறான். அது குலைதள்ளி முதிரவே, அதில்

உண்டான காய்களில் ஒரு காயைக்கொண்டு பொரியலும், ஒரு காயைக்கொண்டு மோர்க்குழம்பும், ஒரு காயைக்கொண்டு சாம்பாரும், ஒரு காயைக்கொண்டு கூட்டுக்கறியும்; ஒரு காயைக்கொண்டு அவியலும், அதில் மீதி காய்களைப் பழுக்க வைத்து அதில் மூன்றை நாலோ பழங்கள் எடுத்து தோல் போக்கி துண்டுசெய்து பாத்திரத்திலிட்டு வேகவைத்து மத்திட்டுக் கடைந்து சர்க்கரையும் சேர்த்துச் சுண்டவைத்து தேங்காய்ப்பாலும் சேர்த்துப் பாயஸம் உண்டாக்கி இவைகளையும், ஒரு பழத்தைத் தனியாகவும், ஒருவர் சாப்பிட்டு அனுபவித்தார். ஆனால் இவைகளெல்லாம் யாருடைய அனுபவம் ஆகும்?

சி: அந்த வாழைக்கன்றை வைத்து மேற்பிரகாரம்செய்து சாப்பிட்டவருடைய அனுபவமாகும்.

கு: ஆனால் நாம் வாழைக் கன்றையோ, அதன் காய்கனிகளையோ, அதுகளைக்கொண்டு செய்யப்பட்ட பதார்த்தங்களைக் கேட்டதும், கண்டதும், அறிந்ததும் இல்லையென்று நினைத்துக் கொள்ளுங்கள். ஆனால் மேல் சொன்னவற்றையெல்லாம் கண்டதும், அறிந்ததும் யார்?

சி: அவைகளை உண்டாக்கியவர்.

கு: அந்த அனுபவம் யாருடையதாகும்?

சி: அவைகளை உண்டாக்கி அனுபவித்தவருடையதாகும்.

கு: அவைகளை உண்டாக்காதவருக்கோ, மேற்சொன்ன பதார்த்தங்களைக் கேட்காமலோ, காணாமலோ, அனுபவிக்காமலோ யிருப்பவர்களுக்கு அவைகளைப்பற்றி யாதொரு அனுபவமாவது உண்டாகுமா?

சி: உண்டாகாது.

கு: அப்பொழுது அவைகளின் ருசியை அறிந்தவர் யார்?

சி: அவைகளைச் சாப்பிட்டவரே.

கு: ஆனால் மேற்சொன்னபடி வாழைக்கன்று நட்டு அதிலிருந்து உண்டாகிய பலனையெடுத்து, பலவித பதார்த்தங்களைச் செய்து, அனுபவித்தவர், தன்னுடைய அனுபவ விவரங்களை ஓலையிலோ, காயிதத்திலோ எழுதி வைத்தது நம்மிடம் கிடைத்து, அதை வாசித்து தெரிந்து கொண்டதினால் முன் சொன்ன வாழைக்கன்றையோ, அதிலிருந்துண்டான பலனையோ, அந்தப் பலனால் செய்த பதார்த்தங்களையோ, காணவோ, அனுபவிக்கவோ, அவைகளின் ருசியை அறியவோ உண்டாயிருக்கிறதா?

சி: உண்டாக இடமில்லை.

கு: ஆனால் அந்த அனுபவஸ்தர்கள் எழுதி வைத்திருந்ததைமட்டும் வாசித்து, அதில் சொல்லப்பட்ட சாதனங்களின் ருசியை அறியாமல், இந்த உலகத்திலுள்ளவர்கள் தம்மில்

போராடுகிறார்கள். அது எவ்விதமென்றால் ஒருவன் பாய ஸத்தில் காரம் அதிகரித்ததென்றும், மற்றொருவன் மோர்க் குழம்பில் தித்திப்பு அதிகமென்றும், இன்னொருவன் பொரிய லில் புளி அதிகமென்றும் சொல்லி தம்மில் சண்டைபோடுகிற தாகும். ஆனால் இவர்களில் யாரும் மேல்சொன்ன பதார்த் தங்களை, உண்மையில் காணவோ, சாப்பிடவோ செய் தவர்களல்லர். சாப்பிட்டவர்கள் தங்களுடைய அனுபவங்களை எழுதிவைத்திருக்கின்றதாகும். அந்த அனுபவங்களின் ருசி அறியாதிருக்கின்றவர்கள் தம்மில் தம்மில் போராடுகிறார்கள். அது எவ்விதமென்றால் மோர்க்குழம்பு, பொரியல், பாயஸம், முதலான பதார்த்தங்களை ஒரு இலையிலிட்டு ஒருவர் சாப்பிட்டு, அந்த இலையிலுள்ள ரசத்தை முழுவதும், வழித்து சாப்பிட்டு விட்டுக் கடைசியில் அந்த இலையை வெளியே போட்டார். அந்த இலையை ஒரு நாய் வந்து நக்குகின்றது. அந்த நாய்க்கு அந்த இலையில் இன்னின்ன பதார்த்தங்கள் பரிமாறியிருந்தன வென்றும், அப்படி பரிமாறிய பதார்த்தங்கள் ஒவ்வொன்றி னுடைய ருசி இன்னின்னது யென்றும் அந்த இலையை நக்கியதினால் தெரியுமா?

சி: தெரியாது.

கு: அச்சமயம் மற்றொரு நாயும் வந்து அந்த இலையை நக்கத்தொடங்கினால் என்ன வாகும்?

சி: அவைகளிரண்டும் தம்மில் போராடி கண், மூக்கு, உதடு முதலானவைகளைக் கடித்துக் கிழித்துக்கொண்டு இரத்தம் ஒழுகிக்கொண்டு போகிறது.

கு: ஆனால் அந்த நாய்கள் போராடிக்கொண்டது, மேல் சொன்ன பதார்த்தங்களின் யாதொரு ருசியையேனும் அறிந்த துண்டோ?

சி: அவைகளை அறிந்ததில்லை.

கு: ஆனால் அவைகளின் ருசியை அறிந்தது யாராக இருந்தது?

சி: அவைகளைச் சாப்பிட்டவர்.

கு: இப்பிரகாரமேதான் அனுபவஸ்தன்மார்களால் உண் டாக்கப்பட்டதாகும் நூல்கள். அந்த நூல்களுக்காகும் சுருதிகள் என்று சொல்வது. சுருதி என்பது அறிவு. அந்த அறிவு யாருடையதென்றால் அனுபவஸ்தர்களுடையதாகும். அந்த அனுபவஸ்தர்களுடைய அறிவைத்தான் கிரந்தங்களில் எழுதிவைத்துள்ளது. அந்த கிரந்தாதிகளை வாசித்து உலகத்தில் அவனவன் அனுபவஸ்தன் என்று நடித்து, அந்த அனுபவஸ்தர்கள் எழுதிவைத்த அறிவு இன்னதென்றறியாமல் அர்த்தம் தவறாகக் கருதி, முன் விவரித்த நாய்களைப்போல

ஜனங்கள் தம்மில் போராடுகிறுர்கள். அதன் காரணம் உலகத்தில் தமக்கு அனுபவம் உண்டாகவேண்டு மென்றோ, அந்த அனுபவத்தை அறியவேண்டு மென்றோ, ஆவல் இல்லாமல் எனக்குப் பெருமையுண்டாயிருக்கவேண்டும், பதவி வேண்டும், மானம் வேண்டும், அந்தஸ்து வேண்டும், கீர்த்திவேண்டும், வித்துவா னென்றும் நாட்டுக்காரர்களால் புகழ்பெறவேண்டும் என்றுள்ள வெறும் தூரபிமானத்தால் அதாவது யாதொரு அறிவுமில்லாத துரபிமானத்தால் மூழ்கிக்கிடந்து, யாதொரு விவரமுமில்லாமலும், அக்ஷராப்பியாசம் செய்யாமலும் மகா கர்விகளாய், அஞ்ஞாகதியாய்ப் போகிறுர்கள். அதனுல்தான் உலகில் தத்துவஞானமோ, அறிவோ இல்லாமலாய்ப் போயிற்று.

சி: ஓ! பிரியகுருவே! அப்படியாயின் உலகில் யாவரும் அக்ஷராப்பியாசம் செய்ததில்லை யென்றோ சொல்லுகிறீர்கள். பின் எப்படி உலகத்தார் நூல் முதலியவற்றைப் படித்தார்கள்?

கு: அக்ஷரம் என்பது யாதென்று நீர் கருதியிருக்கின்றீர்?

சி: 'அ' முதல் 51 அக்ஷரமாகும். ஆனுல் தமிழில் உயிரெழுத்து பனிரெண்டும், மெய்யெழுத்து பதினெட்டும் ஆயுத எழுத்து ஒன்றும், ஆக முப்பத்தொன்றுகிறது.

கு: ஓ! அக்ஷரம் அவ்வளவு இல்லை. அகரம் அக்ஷரமல்ல, அக்ஷரமென்கிற வார்த்தைக்குப் பொருளென்ன?

சி: நாசம் இல்லாதது என்றுகும்.

கு: நாசமில்லாமலிருக்கின்ற வஸ்து எதுவாகும்?

சி: அது பிரம்மமாகும்.

கு: அந்தப் பிரம்மம் என்பது எது?

சி: அதுவே "தான்" என்பது.

கு: தவிர "அ" என்ற சொல்லுக்குச் சப்தம் எத்தனை?

சி: ஒரே சப்தம்.

கு: சப்தத்திற்கு வடிவம் உண்டோ?

சி: உண்டு.

கு: வடிவம் இருக்கிறதென்றுல் பார்க்கலாமல்லவா?

சி: ஆம்.

கு: இதோ 'அ' என்று சொல்லி விட்டேன். அதன் ரூபத்தை பார்த்தீரா?

சி: இல்லை.

கு: என்ன காரணம்? ரூபம் உண்டாளுல் காணவேண்டு மல்லவா?

சி: ஆம். ஆனுல் சப்தத்திற்கு ரூபம் காணுகிறதில்லை.

கு: ஆனுல் ரூபம் எதற்கு?

சி: சப்தம் இன்னதென்று தெரிய ஏற்படுத்தியுள்ள கோடுகளுக்காகும்.

கு: அகாரத்திற்கு எத்தனை ரூபம் உண்டு?

சி: உலகில் எத்தனை பாஷைகள் இருக்கின்றனவோ அத்தனைக்கோடுகளான ரூபங்கள் இருக்கின்றன.

கு: அப்பொழுது அந்த அகாரமெனப்பட்ட எழுத்துக் களுக்கெல்லாம் ஒரே சப்தமில்லாமல் வெவ்வேறு சப்தம் சொல்லுகிறதுண்டோ?

சி: இல்லை. அகரக் கோடுகளுக்கெல்லாம் ஒரே சப்த மில்லாமல் வெவ்வேறில்லை. ஆனால் எழுத்துக்களெல்லாம் பல விதத்திலிருக்கின்றன.

கு: நீர் முன் "51 அக்ஷரம்" இருப்பதாகச் சொல்லி யிருக்கிறீரல்லவா? தவிர எத்தனை பாஷைகளுண்டோ அவை களுக்கெல்லாம் தனித் தனியான எழுத்துக்களிருக்கின்ற தாகவும் சொல்லுகிறீரல்லவா? அப்படி ஆலோசிக்கும்பொழுது இந்த உலகில் 51க்கு அதிகமான பாஷைகளிருக்கின்றன. அந்தப் பாஷைகளுக்கெல்லாம் ஒவ்வொருவித எழுத்துக்க ளிருக்கின்றன, அப்பொழுது அகாரம் மாத்திரம் 51க்கும் அதிகமான அகார எழுத்துக்கள் உண்டு. ஆகையினால் அக்ஷர மென்று சொல்லுகிறது நீர் மேல் சொன்னதில் எவ்வளவோ அதிகமான எண்ணிக்கை உண்டாகிறதல்லவா? அதுவும் தவிர "அ" என்கிற எழுத்திற்குச் சப்தம் இருக்கிறதாக நீரே சொன்னீரல்லவா? இதோ பாருங்கள், நம்முடைய இரண்டு கைகளையும் என்ன செய்திருக்கிறோம்?

சி: இரண்டு கைகளையும் ஒன்றாய்ச் சேர்த்து கும்பிடுவது போல் கூப்பியிருக்கிறீர்கள்.

கு: இப்பொழுது நாம் நம்முடைய கைகளை என்ன செய்திருக்கிறோம்?

சி: கைகளைத் திறந்து ஒன்றுக் கொன்று வேறுபடாமல் விரித்துப் பிடித்திருக்கின்றீர்கள்.

கு: இது எந்தப் பிரகாரத்திலிருக்கின்றது?

சி: அது திறந்து அகார ரீதியிலிருக்கிறது.

கு: இதற்குச் சப்தம் உண்டாயிற்றோ?

சி: இல்லை.

கு: ஆனால் இதோ பாரும். இப்பொழுது நம்முடைய வாய் எப்படியிருக்கின்றது?

சி: மூடியிருக்கின்றது.

கு: இதற்கு அகாரமென்று சொல்லக்கூடுமோ?

சி: சொல்லக்கூடாது.

கு: இப்பொழுது நாம் என்ன செய்திருக்கிறோம்?

சி: இப்பொழுது வாய் திறந்திருப்பதால் அகார ரீதியி லிருக்கிறது.

கு: அதற்கென்ன சொல்லவேண்டியது?
சி: அகாரமென்று சொல்லவேண்டும்.
கு: அப்பொழுது அகாரத்திற்குச் சப்தம் உண்டோ?
சி: இல்லை.
கு: அதனால் சப்தம் என்பது உண்டாக்குகிறதோ அல்லது, தானே உண்டாகிறதோ?
சி: உண்டாக்குகிறது.
கு: அப்பொழுது உண்டாக்குகிறது நாச முள்ளதோ, நாச மில்லாததோ?
சி: நாசமுள்ளது.
கு: "அ" என்கிற சப்தத்தை உண்டாக்கும்பொழுது நமதுள்ளிலிருக்கின்ற ஜீவன் உள்ளிலடங்குகின்றதோ அல்லது வெளியில் போகின்றதோ?
சி: வெளியில் போகின்றது.
கு: அவ்விதமே நாம் ஒவ்வொரு சப்தமும் உண்டாக்கி நமதுள்ளிலிருக்கும் ஜீவனெல்லாம் வெளியில் போய் நாளடைவில் தீர்ந்துவிடுகிறது. அச்சமயம் என்ன சம்பவிக்கிறது?
சி: செத்துப் போகிறோம்.
கு: அப்பொழுது நாச முள்ளதையோ, நாசமில்லாததையோ எதையாகும் அப்பியசிக்கின்றது?
சி: நாச முள்ளதைத்தான்.
கு: அதனால் தன்னைத்தான் அப்பியசிக்கின்றதுவே அக்ஷராப்பியாசம். அதுதானாகும் வித்தியாப்பியாசம். முன் அத்தியாயத்தில் வித்தை என்பது அக்ஷரமாகு மென்றும், அக்ஷரமென்பது "தானே" என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனதினால் வித்தையாய் தானாயிருக்கின்ற வஸ்துவை அப்பியசிக்கவேண்டும். அப்பொழுது நாசரகிதராகின்றோம். அவ்விதம் நசிக்காமலிருப்பதற்கு வேண்டியாகும் அக்ஷராப்பியாசம் செய்யவேண்டியது. நீங்கள் இப்பொழுது சொன்ன அகாரம் முதலியவைகளெல்லாம் நசிக்கின்றதாகும். அப்பொழுது அதற்கு அக்ஷரமென்று சொல்லுவதற்கிடமுண்டா?
சி: இல்லை.
கு: சப்தம் உண்டாக்கி நசிக்கின்றதற்கு என்ன சொல்ல வேண்டியது? அக்ஷரமென்று சொல்வதற்கிடமுண்டா?
சி: இல்லை.
கு: ஆனால் நீங்கள் அக்ஷரத்தை அப்பியசிப்பதுண்டோ?
சி: அப்பியசிப்பதில்லை.
கு: அக்ஷரத்தை அப்பியசிக்காவிடில் பொருள் கிடைக்குமோ?

சி: கிடைக்காது.

கு: பொருள் கிடைக்காதபோது பொருள் தெரியுமோ?

சி: தெரியாது.

கு: தவிர உங்களுடைய லௌகிகப் பொருள்களாகிய தனங்களைப் பத்திரப்படுத்துவது உள்ளிலோ, வெளியிலோ?

சி: உள்ளில்தான்.

கு: இவ்வண்ணமேதான் பொருள் உள்ளிலிருக்கிறது. உள்ளில் எந்த இடத்திலென்றால் தாதுவிலாகும். தாதுவிலிருக்கின்ற பொருளைத் தெரியவேணுமானால் அக்ஷராப்பியாசம் செய்யவேண்டும். அக்ஷரம் அப்பியசிக்காவிடில் தாது உணர்வதற்கு முடியுமா?

சி: முடியாது.

கு: தாது என்று சொல்லுகிறது ஓலையிலோ, காகிதத்திலோ அல்லது அவனவனிலோ உள்ளது?

சி: அவனவனிலாகும்.

கு: அவனவனிலிருக்கின்ற தாதுவிற்கு உணர்வில்லாதிருந்தால் பொருள் கிடைக்குமோ?

சி: கிடைக்கிறதில்லை.

கு: ஆனதினால் அக்ஷரமாய் நாசரகிதமாயிருக்கின்ற வஸ்துவை அப்பியசித்தால் மாத்திரமே, தாதுவிற்கு உணர்வுண்டாகிப்பொருள் கிடைக்கிறது. அகாரம் முதலிய கோடுகளையே அக்ஷரமென்று சொல்லி அப்பியசித்தால் அனர்த்தமாகி, அதாவது பொருளில்லாமலாகி, தாது நசித்து உணர்வில்லாமலாய்த் தீருகிறது. அதனால் பொருளும் கிடைக்கிறதில்லை. உலகத்தில் ஏதொரு அர்த்தம் அதாவது பொருள் நாம் எண்ணியிருக்கின்றோமோ, அவை முழுவதும் தவறுதலாகும். சரியாயிருக்கின்ற பொருளை நமக்கு அறியவேண்டுமானால், மேற்சொன்ன கோடுகளுக்குள்ள சப்தங்கள் எங்கிருந்து உத்பவிக்கின்றதோ, அங்கேதான் பார்த்துப் படிக்க வேண்டும். அப்பொழுதுதான் நமக்குச்சரியாயிருக்கின்ற தத்துவத்தைக் கிரஹிக்கவாகும். அது எவ்விதமென்றால் இது ஒரு காயிதம். இதற்கு அகம், புறம், அதாவது உள், வெளி இருக்கிறதென்றாலும், இதன் மேல் பாகத்திற்கு அகம், புறம்உண்டோ?

சி: இல்லை.

கு: ஆனால் இப்பொழுது நாம் இந்தக் காயிதத்தில் "⌒" என்ன செய்திருக்கிறோம்?

சி: அரைவட்டம் அதாவது அர்த்த சந்திரனைப்போல் ஓர் வட்டம் வரைந்திருக்கிறீர்கள்.

கு: இந்த வட்டம் வரைந்ததில் என்ன உண்டாயிற்று?

சி: உள்ளும், வெளியும் உண்டாயின?

கு: அதற்குக் காரணமென்ன?

சி: மேல்பிரகாரம் உள்ள அரைவட்டம் வரைந்ததினால்.

கு: அப்படி வரையாவிடின் உள்ளும், வெளியும் உண்டாகுமோ?

சி: உண்டாகிறதில்லை.

கு: அப்பொழுது முதலில் உள்ளோ, வெளியோ உண்டானது?

சி: உள் தான் முதலில் உண்டானது.

கு: உள் இல்லை என்றால் வெளி இருக்குமோ?

சி: இருக்காது.

கு: ஆனால் உள்ளோ, வெளியோ பெரியது?

சி: வெளியாகும் பெரியது.

கு: ஆனால் உள் ரொம்பவும் சிறியதும், வெளி மிகவும் பெரியதுமாகின்றது. அப்பொழுது சிறியதிலிருந்துதான் மிகவும் பெரியது உண்டாகின்றது. அதெப்படியெனில் ஒரு வித்தோ, மரமோ பெரியது?

சி: மரந்தான் பெரியது.

கு: வித்து இல்லையென்றால் மரம் உண்டாகுமோ?

சி: உண்டாகாது.

கு: அப்பொழுது மிகப் பெரியதாயுள்ள மரத்தினுடைய அஸ்திவாரம் எது?

சி: வித்து.

கு: இதே பிரகாரத்தில்தான் மிகப் பெரியதாய், வெளியாயிருக்கின்ற உலகம், எவ்வளவோ சிறியதாகிய தன்னுள்ளிலிருந்தாகும் உண்டானது. ஆகையினால் உள்தான் முதலில் உண்டானது. அதற்கு உதாரணம்:—குயவன் மண்ணைச் சுத்தம் செய்து அந்த மண்ணை ஒரு உருண்டையாக்கி உருட்டிவைக்கின்றான். அப்பொழுது அந்த மண் உருண்டைக்கு உள் என்றோ, வெளி என்றோ இருக்குமா?

சி: இல்லை.

கு: என்ன காரணம்?

சி: அந்த மண்ணைக் குழைத்துச் சேர்த்து உருண்டை வடிவமாய் உருட்டி வைத்ததினால்.

கு: பிறகு அந்த மண் உருண்டையை அவன் ஒரு சக்கரத்தின் மேல் வைத்து என்ன செய்கிறான்?

சி: அவன் அச்சக்கரத்தைச் சுற்றிவிட்டு அந்த மண் உருண்டையைக்கொண்டு ஒரு பாத்திரத்தை உண்டாக்குகிறான்.

கு: அதை எவ்விதத்தில் உண்டாக்குகிறான்?

சி: அந்தச் சக்கரம் சுற்றிக்கொண்டிருக்கும் பொழுது அந்த மண்ணுருண்டையின்மேல் தன்னுடைய இரண்டு கை

களின் பெருவிரல்களையும் வைத்துக் குழியாக்கி "உள்" உண்டாக்குகிறான்.

கு: அப்பொழுது முதலில் உண்டாகின்றது எது?

சி: உள்.

கு: அதல்லாமல் உமக்கு "உள்ளு" தேவை, நமக்கு "வெளி" தேவை. அப்பொழுது உள்ளு தேவையுள்ள நீர் எதை உண்டாக்கவேண்டும்?

சி: உள்ளு தேவையானதினால் நான் உள்ளு உண்டாக்க வேண்டும்.

கு: வெளி தேவையுள்ள நாம் எதை உண்டாக்கவேண்டும்?

சி: வெளியைத்தான் உண்டாக்கவேண்டும்.

கு: அது ஒருக்காலும் முடிகின்றதில்லை. ஏனென்றால் உள் இல்லை என்றால் வெளி இல்லை. உள் உண்டாகும்பொழுது வெளியும் உண்டாகின்றது. ஆகையினால் வெளி தேவையுள்ள நாமும், உள்தான் உண்டாக்கவேண்டும். அப்பொழுது உள் தேவையுள்ள நீரும், வெளி தேவையுள்ள நாமும் இருவரும் உண்டாக்குகிறது ஒன்றேதான். அதாவது உள் தேவையுள்ள நீர் உள்ளுண்டாக்கி உள்ளிலிருக்கிறது. வெளி தேவையுள்ள நாமும் உள்ளே உண்டாக்கி அதனுடைய வெளியிலிருக்கின்றது. தவிர இதோ! ஒரு வீடு. இந்த வீடு இல்லை என்றால் உள் என்றோ, வெளி என்றோ சொல்ல முடியுமோ?

சி: முடியாது.

கு: ஆனால் இந்த வீட்டின் திண்ணையில் இருந்து வெளியில் பார்த்துக்கொண்டிருந்தால், வீட்டின் உள்ளிலுள்ள ஏதேனும் கேட்பதற்கோ, பார்ப்பதற்கோ, அறிவதற்கோ முடியுமா?

சி: முடியாது.

கு: திரும்பி உள்ளில் பார்க்கும்பொழுது வெளியில் உள்ளது யாதேனும் கேட்பதற்கோ, காண்பதற்கோ அறிவதற்கோ முடியுமா?

சி: முடியாது.

கு: ஆனால் உள்ளிலுள்ளது வெளியில் உண்டோ?

சி: இல்லை.

கு: தவிர வெளியிலுள்ளது உள்ளில் உண்டோ?

சி: இல்லை.

கு: ஆகையினால் உள்ளுக்கு நேர் விபரீதமாய், எதிராய் வெளியும், வெளிக்கு நேர் விபரீதமாய், எதிராய் உள்ளுமாகும். உள்ளென்று சொல்லப்பட்டது அந்தரங்கமோ, பஹிரங்கமோ?

சி: அந்தரங்கம்.

கு: வெளியென்பதோ?

சி: பஹிரங்கம்.

கு: அந்தரங்கமென்பது தத்துவமோ? அதத்துவமோ?

சி: தத்துவம்.

கு: பஹிரங்கமோ?

சி: அதத்துவம்.

கு: தத்துவம் என்பது உள்ளதோ? இல்லாததோ?

சி: உள்ளது.

கு: அதத்துவமென்பதோ?

சி: இல்லாதது.

கு: உள்ளது சத்தியமோ? அசத்தியமோ?

சி: சத்தியம்.

கு: இல்லாததோ?

சி: அசத்தியம்.

கு: அப்பொழுது அந்தரங்கமாய், தத்துவமாய், உள்ளதாய், சத்தியமாயிருக்கின்றது உள்ளாகும். அதற்கு எதிராய், பஹிரங்கமாய், அதத்துவமாய், இல்லாததாய், அசத்தியமாயிருக்கின்றது வெளியாகும். ஆனல் நம்முடையவும் அது மாத்திரமல்லாமல் உலகத்தில் காணப்படுகின்ற எல்லா தாவர, ஜங்கமங்களினுடையவும் உற்பத்திகள் எங்கிருந்து? உள்ளிலிருந்தோ? வெளியிலிருந்தோ?

சி: உள்ளிலிருந்துதான்.

கு: அப்பொழுது உற்பத்தி ஸ்தானம் எது? உள்ளோ? வெளியோ?

சி: உள்.

கு: அப்பொழுது அதல்லவா நம்முடைய மூலஸ்தானம்?

சி: ஆம்.

கு: அந்த மூலஸ்தானமல்லவா உத்பத்தி ஸ்தானம்?

சி: ஆம்.

கு: அந்த உத்பத்தி ஸ்தானமல்லவா குடும்ப ஸ்தானம்?

சி: ஆம்.

கு: அந்தக் குடும்ப ஸ்தானத்திற்கல்லவா நாம் போக வேண்டியது?

சி: ஆம்.

கு: அப்பொழுது அங்கே போவதற்கல்லவா நாம் படிக்க வேண்டியது?

சி: ஆம்.

கு: அப்பொழுது நாம் எங்கே போவதற்காகும் படிக்க வேண்டியது?

சி: உள்ளில் போவதற்குப் படிக்கவேண்டும்.

கு: இப்பொழுது நாம் படிக்கின்றதெல்லாம் எங்கே?

சி: புத்தகத்தில்.

கு: புத்தகப் படிப்பு உள்ளிலா அன்றி வெளியிலா?

சி: வெளியில்.

கு: அப்பொழுது நாம் படிக்கின்றதெல்லாம் எங்கே?

சி: வெளியில்.

கு: வெளியென்பது சத்தியமோ, அசத்தியமோ?

சி: அசத்தியம் அதாவது பொய்.

கு: ஆகையினால் நாம் படித்ததும், படிக்கின்றதும், படிப்பிக்கின்றதும், செய்கிறதும் முதலியவைகளெல்லாம் பொய்யாகின்றன. சத்தியத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்றால் உள்ளில் படிக்கவேண்டும். அப்பொழுதுதான் சத்தியத்தைத் தெரிந்துகொள்ள முடியும். அது எப்படியெனில் ஒரு பிணத்திற்கு உலகமுண்டோ?

சி: இல்லை.

கு: அது என்ன காரணம்?

சி: ஜீவன் இல்லாததினால்.

கு: ஜீவனில்லையென்றால் உலகம் இருக்கின்றதோ?

சி: இல்லை.

கு: அப்பொழுது உலகு எங்கேயிருந்து உண்டாகின்றது?

சி: ஜீவனிலிருந்து.

கு: ஆனால் ஜீவனிருக்கின்ற எல்லா சமயத்திலும் உலகம் இருக்கின்றதோ?

சி: இல்லை.

கு: அது எப்பொழுது?

சி: தூங்கும்பொழுது.

கு: தூங்கும்பொழுது ஜீவன் எங்கேயிருக்கின்றது?

சி: நம்முடைய உள்ளில் அடங்கியிருக்கின்றது.

கு: அப்பொழுது நமக்கு அடி, முடி, இடம், பொருள் முதலிய ஏதேனும் அவஸ்தைகளுண்டோ?

சி: இல்லை.

கு: எப்பொழுதாகும் இவைகளெல்லாம் உண்டாயின?

சி: தூக்கம் விழித்து நம்முடைய உள்ளிலிருக்கிற ஜீவன் வெளியில் வந்த பொழுதாகும்.

கு: அப்பொழுது எங்கேயிருந்து ஜீவன் வெளியில் வந்தது?

சி: உள்ளிலிருந்து.

கு: ஆகையினால் நம்முடைய உள்ளிலிருந்து வெளியில் வந்த ஜீவனைத் திருப்பி உள்ளில் கொண்டுபோய் பார்க்கும் பொழுதுதான், சத்தியத்தைத் தெரிந்துகொள்ள முடியும். அப்பொழுதுதான் ஞானம் உண்டாகின்றது. அதற்கே

"மஸ்தகஞானம்" என்று சொல்லுவது. இப்பொழுது உலகத்தில் அவ்விதம் செய்யாதே வெறும் புஸ்தகத்தை மாத்திரம் படித்துப் புஸ்தக ஞானமாத்திரமே இருக்கின்றது. அது பொய்யாகும். அதனுல் நாம் படித்ததெல்லாம் பொய்யாகிப் போயிருக்கிறது. ஆனுல் வேத சாஸ்திர இதிகாசாதிகளொன்றும் பொய்யல்ல. அதுகளெல்லாம் சத்தியமேயாகும். அதெப்படியெனில், மேலே சொல்லிய பிரகாரத்தில் அவனவனுடைய "ஜீவனே" உத்பவஸ்தானமாகிய மஸ்தகத்திற்கே கொண்டுபோய் சத்தியத்தை அறிந்தவர்கள் எழுதிவைத்திருக்கின்றவைகளாகும் வேத சாஸ்திர இதிகாசாதிகள். உலகவாசிகள் மேல் சொல்லப்பட்ட விதத்தில் செய்யாதேயும், உண்மைத்தத்துவத்தை அறியாதேயும், பஹிரங்கமாய் அதாவது வெளிப்படையாய், தத்துவமில்லாததாய் அசத்தியமாயிருக்கின்ற அவஸ்தையைப் பார்த்தாலும் துரபிமான மானவாதப் பிரதிவாதம்செய்து கொண்டிருக்கிறார்கள். அவைகள் தவறாகும். அப்பொழுது தன்னுடைய உண்மைத் தத்துவத்தை அறியவேண்டுமென்றால் தன்னிலுள்ள அந்தரங்கமாகிய தத்துவத்தைப் பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் உண்மையை அறியவும், பாகியாவஸ்தைகள் அதாவது பஹிரங்க நிலைமைகள் தப்பிதமென்று தோன்றவுங்கூடும். அதல்லாமல் பாஹியவிர்த்தி அதாவது வெளித்தொழிலிலிருந்து கொண்டு கிரந்தாதிகளை வாசித்து, கர்வமடைந்து நான் மகாபண்டிதன் என்றபிமானித்தால் யாதொரு ஞானமும் உண்டாகிறதில்லை. ஞானம் உண்டாகவேண்டுமானுல் தன்னில் ஆந்தரீகமாய் அதாவது அந்தரங்கமாயிருக்கின்ற தத்துவத்தைப் பார்த்து அக்ஷராப்பியாசம் செய்யவேண்டும். அப்போது மாத்திரமே தாதுவிற்கு உணர்வு உண்டாகின்றது. அந்தச் சமயத்தில்தான் சர்வக்ஞனுய்த் தீருகிறது.

அத்தியாயம் 6

சி: சுவாமி முன் அத்தியாயத்தில் விவரித்தபிரகாரமே சிருஷ்டி என்பது எனக்குப் பூரண நம்பிக்கையாயிற்று. ஆயினும் இயற்கையின் வித்தியாசமாய் நானுவிதமாகக் காணப்படுகிறது. அது இரஹ வித்தியாசமென்றும், அதைப் பின் விவரிக்கிறேன் என்றும் மூன்றும் அத்தியாயத்தில் அருளியிருக்கிறீர்கள். அதைத் தெளிவாக எடுத்துரைக்கவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

கு: பலவிதமான சிருஷ்டிகள் என்னென்னவாகும்?

சி: அவைகள் மனிதர், மிருகங்கள், பக்ஷிகள், ஊரும் ஜந்துக்கள், நீர் வாழும் ஜந்துக்கள், எரும்பு, புழு, பூச்சிகள் முதலியவைகளாகும்.

கு: மனிதர் என்று சொல்லப்படுவது யாரை?

சி: நம் எல்லோரையும்.

கு: நம்மை மனிதர் என்று சொல்லக் காரணமென்னவாகும்?

சி: விசேஷ புத்தி இருப்பதனுல்.

கு: மற்ற ஜந்துக்களுக்கோ?

சி: விசேஷ புத்தியில்லை.

கு: ஆனுல் அந்த நம்பிக்கை தவறு. விசேஷ புத்தி இல்லாதது நமக்காகும். பாக்கி எத்தனை விதமான ஜந்துக்கள் இருக்கின்றன என்று நாம் அபிமானித்துக்கொண்டு இருக்கின்ளேமோ அவைகளுக்கெல்லாம் விசேஷ புத்தி உண்டு. அது ஏனென்றுல் ஆஹாரம், நித்திரை, மைதுனம் அதாவது உணவு, தூக்கம், சம்போகம் இவைகள் சகல ஜீவிகளுக்கும் உண்டு. அறிவு இல்லாதவைகளும் விசேஷ புத்தி இல்லாதவைகளும்; ஊர்வன, மிருகம், பக்ஷி, புழு, பூச்சி முதலானவைகளென்றும், அறிவும், விசேஷ புத்தியும் மனிதர்களுக்குத்தான் என்றும், அவை நாம் தாம் என்றும், நாமே அபிமானித்து வருகின்ளேம். இந்தப் பிரகாரத்தில்தான் எல்லா ஜீவிகளும் தாம் தாம் மனிதரென்று கருதுகின்றன. உண்மையில் மனிதரென்று ஒரு சிருஷ்டி இல்லாததாகும். சிருஷ்டியில் இப்பொழுது காணப்படுவது மிருகங்களேயாகும். அதாவது இருகால் மிருகம், நாலுகால் மிருகம், முதலியவையாகும். நாமே மனிதரென்றும், நமக்கே விசேஷபுத்தியுண்டென்றும் கருதியிருப்பதை எதைக்கொண்டும் ஸ்தாபிக்க முடியாது. காரணம், நாம் ஒரு கிளிப்பிள்ளையைப் பிடித்து வளர்த்துச் சிலநாள் அத்துடன் பழகி "அக்கா, அக்கா, ரங்கா, ரங்கா" என்றும் பல

விதமாக சொல்லிக் கொடுத்து அதனை சொல்லும்படி கற்றுக் கொடுக்கிறோம். அதுகளையெல்லாம் அந்தக் கிளியும் ஊக்கத்துடன் கிரஹித்து நாம் சொல்லுகிறதுபோலவே அதுவும் சொல்லுகிறது. அதுவுமன்றி எந்த விதமான மொழியில் அந்தக் கிளி முன்பாக நாம் பேசுகிறோமோ, அந்தவார்த்தைகளை எல்லாம் நாளடைவில் அந்தக் கிளியும் பேசுகிறது. அதற்கு விசேஷ புத்தியில்லாவிட்டால் நம்முடைய வார்த்தைகளை கிரஹிப்பதற்கும், அதன்படி பேசுகிறதற்கும் முடியாமலிருந்திருக்கும். ஆனால் நாம் எவ்வளவு காலம் அதனோடு பழகச் செய்தாலும், விசேஷ புத்தியுள்ளவர்களென்று அபிமானித்து வருகிற நமக்கு அக்கிளியினுடைய தாய் பாஷையாகிய சப்தங்களை கிரஹிப்பதற்கு முடிகிறதில்லை. அது நம்முடைய மனதில் பதிகிறதுமில்லை.

சி: சுவாமி கிளிகட்கும், மிருகங்கட்கும் பாஷைகளான ஒரு பேச்சும் இல்லையல்லவா?

கு: அந்தப்படி ஒருபோதும் சொல்லக்கூடாது. உலகில் எத்தனை வகையான ஜீவிகளிருக்கின்றனவோ அத்தனை பாஷைகளுமிருக்கின்றன. ஆனால் நாம் அவைகளை அறிகிறதில்லை. அதெப்படியெனில் உமக்குத் தமிழ் ஒரு பாஷை மாத்திரம் தெரியும். அப்படியிருக்கின்ற உங்களுடைய முன்னிலையில் ஒரு இந்துஸ்தானிக்காரன் இந்துஸ்தானியும், ஒரு ஆங்கிலேயன் ஆங்கிலமும், ஒரு கர்னாடகக்காரன் கன்னடமும் பேசுகிறதானால் உமக்குத் தெரிகிறதுண்டோ?

சி: இல்லை.

கு: காரணம் என்ன?

சி: அந்தப் பாஷைகளை படிக்காததினால்.

கு: இந்தப் பிரகாரத்திலேயே தான் பக்ஷி, மிருகாதிகளென்று நாம் எண்ணி வருகின்றவைகளுக்கும் பாஷைகளுண்டு. அதுகளை நீங்கள் படிக்காததினால் தெரியாததாகும். தவிர மிருகங்களென்று நாம் கருதி வருகின்றவைகளுடைய கூட்டத்திலிருந்து ஒன்று பிரிந்துபோனால் அதனை மற்றவைகள் கூப்பிடுகின்றதெனத் தெரிந்து பதில் தொனி கொடுத்து ஓடி அந்தக் கூட்டத்தில் வந்து சேருகின்றது. இப்பிரகாரம் தானே நாம் பக்ஷிகளென்று கருதிவருவதிலும், ஊர்வனவென்று கருதி வருவதிலும், காணப்படுவதில்லையா?

சி: காணப்படுகிறதுண்டு.

கு: அப்பொழுது அவைகளுக்கும், பாஷைகள் உண்டு. அவைகள் தங்கள் தங்கள் பாஷைகளில் பேசச்செய்கிறதும், ஒன்றுக்கொன்று தெரிவித்தலும், அனுசரித்தலும் செய்வதுண்டு. அது நமக்கு அறியாமலிருப்பதற்குக் காரணம்

நாம் அது படிக்காததினலாகும். அது எப்படி என்றால் மனிதனாகுமென்று அபிமானித்து வருகிறதாகிய நமக்கு முன் சொன்ன பிரகாரம் ஓரோர் பாஷை வித்தியாசமாய்ப் பேசியது தெரியாமலிருந்தது; அது நாம் படிக்காதது கொண்டென்றும் சொல்லியதல்லவா? இந்தப் பிரகாரம்தான் பக்ஷிமிருகாதிகளென்று நீங்கள் சொல்லி வருபவைகளுடைய பாஷைகளும் படிக்காததினால் நமக்குத் தெரியாதிருக் கின்றதாகும். ஆனால் அவைகளோடு நாம் எந்தப் பாஷையில் பேசினாலும் அவைகள் அறிந்து, அனுசரித்து நடக்கின்றன. அது எவ்விதமென்றால், அன்னிய பாஷை பேசும் தேசத்திலிருந்து நாம் காளை மாடுகளென்று சொல்லுகிற இரண்டு ஜீவிகளைத் தமிழ்த்தேசத்திற்கு கொண்டுவந்து ஏர் உழுவதற்காக அவைகள் கழுத்தில் நுகம்வைத்துக் கலப்பைகட்டி வயலில் உழுகிற சமயத்தில் வலதுபுறம், இடதுபுறம், நேராக, நடவென்றும் இன்னும் பலவிதம் செய்யென்றும் சொல்வதை அவைகள் கேட்டனுசரித்து, அம்மாதிரி நடக்கிறதல்லவா? அதல்லாமல் காட்டுமிருகங்களென்று நாம் சொல்லுகின்றதான சிங்கம், யானை, கரடி, புலி, சிறுத்தை இவைகளைப் பிடித்து அநேக விதமான தேகாப்பியாசங்களைக் கற்றுக்கொடுத்துச் ஸர்க்கஸ்களில் கொண்டு வந்து பல விதத்திலும், அவைகளை ஆட்டி வைக்கவும், ஆடவும் செய்கிறோம். இவைகள் நமக்கு அனுபவ திருஷ்டாந்தமல்லவா? இந்தப்படி படித்துச் செய்யவேண்டுமென்றால் அவைகளுக்கு விசேஷ புத்தி உண்டென்றோ, இல்லையென்றோ, நாம் நம்பவேண்டியது?

சி: அவைகளுக்கு நிச்சயமாய் விசேஷ புத்தி உண்டு. விசேஷ புத்தியில்லாவிடில் மேல்சொன்ன பிரகாரம் அனுசரிப்பதற்கோ, படிப்பதற்கோ, செய்வதற்கோ முடிகிறதில்லை.

கு: தவிர நமக்கு விசேஷ புத்தியில்லையென்றும், விசேஷ புத்தியும், அறிவு முள்ளது நாம் இப்பொழுது மிருகம் முதலானவைகளென்று கருதி வருகின்றவைகளுக்குத்தான் இருக்கிறதென்பதற்கும் உதாரணம்:—நமக்கு நம்முடைய தாய்ப் பாஷையைத் தவிர மற்றொரு பாஷை படிக்கவேண்டுமென்றால் அந்தப் பாஷையினுடைய பொருள், நம்முடைய தாய்ப் பாஷையில் சொல்லித் தாராமல் அந்தப் பாஷை மாத்திரம் சொல்லித் தந்தால் அதனுடைய பொருள் தெரிந்து கொள்ளவோ, அந்தப் பாஷையில் படிக்கவோ முடியுமோ?

சி: முடியாது.

கு: ஆனால் மேற்சொல்லிய பக்ஷிகள் நாற்காலிகள் முதலிய ஜீவிகளைப் பிடித்து, நாம் படிப்பிக்கும் போதும், வேலைகளைச் செய்விக்கும்போதும் யாருடைய பாஷையில் நாம் சொல்லிக்

கொடுக்கின்றோம் நம்முடைய பாஷையிலோ அவைகளுடைய பாஷையிலோ?

சி: நம்முடைய தாய்ப் பாஷையில்தான்.

கு: ஆனால் நம்முடைய தாய்ப் பாஷையில் சொல்லிக் கொடுத்ததை அவைகள் கேட்டுப் படித்தும், அனுசரிக்கும் பொழுது விசேஷ புத்தி யாருக்கிருக்கின்றது?

சி: பக்ஷிகள், நாற்காலிகள் முதலிய ஜீவிகளுக்குத்தா னென்று ஏற்படுகிறது?

கு: ஆனால் விசேஷ புத்தியும் அறிவும் நமக்காகும். நாமாகும் மனிதர், என்றும் அபிமானித்து வருகிற நமக்கு வேறொரு பாஷை படிக்கவேண்டுமென்றால் அவனவனுடைய தாய் பாஷையில் சொல்லிக்கொடுத்தால் மாத்திரமே படிக்க முடிகிறது. பக்ஷி நாற்காலி முதலிய ஜீவிகளோடு நம்முடைய தாய் பாஷையில் சொன்னால் அது அவைகளை அறிந்து அந்தப் பிரகாரம் அனுசரித்துச் செய்து வருகின்றன. ஆனால் நாம் அவைகளுக்குடைய தாய்பாஷையில் சொல்லிக்கொடுக்கவில்லை. அதுவுமல்லாமல் எவ்வளவு காலம் அவைகளுடன் பழகினாலும் வேலைகளைச் செய்வித்தாலும், அவைகளுடன் சேர்ந்து வேலை களைச் செய்தாலும், பேசினாலும், எப்பொழுதும் சேர்ந் திருந்தும் அவைகளுடைய தாய் பாஷையில் அவைகள் பேசுவது நமக்குத் தெரிகிறதில்லை. ஆகையினால் விசேஷ புத்தியும், அறிவும் மேல் சொன்னவைகளுக்கே உள்ளது.

தவிர உங்களுடைய தொழுவத்தில் அதாவது மாட்டுக் கொட்டகையில் பிறந்துள்ளதோ அல்லாவிடில் நான்கைந்து வருடங்களாய் உங்களுடைய போஷணையி லிருக்கின்றதான, பசுமாடோ, காளைமாடோ, எருமையோ, எருமைக்கடா வினையோ இவைகளில் ஏதேனு மொன்றை அமாவாசை இரவில் மிகவும் கடினமான மழை பெய்யும்பொழுது அது முன்பு போகாததும் அறியாததுமான ஒரு காட்டிற்கிடையே ஒரு ஆற்றைக் கடத்தி பத்தோ, இருபதோ நாழிகை தூரம் சிறுத்தை புலி முதலானதுகளால் அதற்கு யாதொரு இம்சையு நேரிடாததாயுள்ள ஒரு இடத்தில் அதைக் கட்டாமல் விட்டுத் திரும்பிவந்தால் அதை யாரும் பிடித்துக் கட்டாமலிருந்தால் அது எப்படியும் திரும்ப உங்களுடைய வீட்டிற்கே வந்து சேருகிறதில்லையா?

சி: ஆம் வந்து சேருகிறது.

கு: ஆனால் நம்மில் மனிதரென்று அபிமானித்து வருகிற இருகாலி ஜீவியான ஒருவரை பகல் நேரத்தில் சாதாரணமாய் ஜனங்கள் அதிகமாய் நடமாடிக்கொண்டிருக்கிற ஒரு பாதை வழியாய் பத்துப் பதினைந்து மைல் தூரத்தில் முன்பு போகாத

ஒரு பட்டினத்தில் நீங்கள் அழைத்துக்கொண்டு போய் அந்தப் பட்டினத்தின் நடுவில் அவரை விட்டு நீங்கள் திரும்பி வந்தால் அவருக்கு வேறொருவர் உதவியில்லாமலோ, வழியைக் கேட்காமலோ, முதலில் புறப்பட்டுப்போன இடத்திற்குத் திரும்ப வந்து சேரமுடியுமா?

சி: வேறொருவருடைய உதவியில்லாமலோ, அல்லது வழி கேட்காமலோ திரும்பி வர முடியாது.

கு: அதென்ன காரணம்? விசேஷ புத்தியும் அறிவும் உள்ளது மனிதர்களுக்கு மாத்திரமாகுமென்றும், அம்மனிதர் நாமாகுமென்றும் நீர் சொன்னீரல்லவா? அப்படியிருக்க என்ன காரணம் திரும்பி வரமுடியவில்லை? விசேஷ புத்தியும் அறிவுமில்லாமலிருக்கிறது, நீங்கள் மிருகாதிகளென்று அபி மானித்து வருகிறவைகளுக்காகும் என்று நீரே சொன்னீ ரல்லவா? அந்தப்பிரகாரமுள்ள நாற்காலி ஜீவிகளில் ஒன்றை இரவு மிகவும் கடினமான இருட்டில ஒரு ஆற்றைக் கடத்தி காட்டின் வழியாகப் பத்து, இருபது நாழிகை தூரம்கொண்டு போய்விட்டால் அதுகொஞ்ச நாட்களில் முதலில் கொண்டு போன இடத்திற்கே திரும்பி வருகிறது. அப்பொழுது அதற்குத் திரும்பி வர யாருடைய சகாயமாகிலு முண்டா யிருந்ததா? அல்லது யாராகிலும் வழிசொல்லிக் கொடுத்தார் களோ?

சி: இல்லை; அது தானாகவே வந்தது.

கு: ஆனால் விசேஷ புத்தி யாருக்காகு மிருக்கிறது?

சி: அது மிருகங்களென்று அபிமானித்து ஸ்தாபித்து வந்தவர்களுக்காகும்.

கு: ஆனால் விசேஷ புத்தியுள்ளவர் யாராகும்?

சி: மனிதராகும்.

கு: அப்போது மனிதர் யார்?

சி: இதுவரை மிருக, பக்ஷி முதலானவைகளென்று நாம் எண்ணி ஸ்தாபித்து வந்தவர்களாகும்.

கு: அப்போது மிருகங்கள் யார்?

சி: இதுவரை மனிதரென்று அபிமானித்து ஸ்தாபித்து வந்தவர்களாகும் மிருகங்கள்.

கு: ஆனால் முன் சொல்லப்பட்ட நாற்காலி முதலான ஜீவிகளாகும் மனிதரென்று இப்பொழுது தீர்மானிக்கப் பட்டதற்குக் காரணம், அவைகளுக்கு விசேஷ புத்தி உண்டா யிருந்ததினாலாகும். ஆனால் அறிவாயிருக்கின்ற வஸ்து, வாயுவென்று முன் அத்தியாயத்தில் சொல்லியதல்லவா? அந்த வாயு அவைகளுக்குச் சுவாதீனமாகும், அதெப்படி யென்றால் நாம் தூங்கும்பொழுது நம்முடைய சுவாச கதி

எவ்விதமோ, அவ்விதமே முன் சொல்லப்பட்ட நாற்காலி முதலான ஜீவிகளுக்குச் சுவாசகதி சதாகாலமுமிருக்கின்றது. அந்த அறிவாய் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு ஏக கதியாக வரும்பொழுது எல்லா நிலைமைகளும் சுவாதீனமாய் வருகிறது. அதனால் அந்த வாயுவினுடைய சுவாதீனத்தினால் இன்ன இடத்திலிருந்து புறப்பட்டோமென்றும் இன்னவழியாய் வந்தோமென்றும் மோப்ப சக்தியினால் உணர்ந்து புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வந்து சேருகிறது. அதன் காரணம், அவைகளுக்கு அந்த அறிவாயிருக்கின்ற வாயு ஏககதியானது கொண்டு. நமக்கு அந்த வாயுவினுடைய ஏககதியில்லாமல் பின்னகதியாகி வரும்பொழுது உண்டாகின்ற முந்தின ராகத் துவேஷாதிகளோடு கூடி இவன் என்மகன், என் ஆஸ்திகளையெல்லாம் இவனுக்குக் கொடுக்கவேண்டும், இவனைக் காப்பாற்ற வேண்டும், மற்றவன் அன்னியன், அவனுடைய சொத்தெல்லாம் நாம் கைப்பற்றவேண்டும், அதனால் அவன் பேரில் வழக்கு நடத்தவேண்டும், எவ்விதத்திலும் அவனைக் கெடுக்கவேண்டும், அடிக்கவேண்டும், கொல்லவேண்டும் என்றும் மற்றுமுள்ள கெட்ட எண்ணங்களோடு கூடிச் சுத்த மிருகங்களாகி நடக்கின்றதினாலாகும், மோப்ப சக்தியில்லாமல் முன்சொன்னதான புறப்பட்ட இடத்திற்குத் திரும்பி வாமுடியாமலாய் வந்தது. எப்பொழுது நமக்குப் பின்ன கதியில்லாமல் ஏககதியாக வருகிறதோ, அப்பொழுது அறிவாகி ஜீவசக்தியாகி, வாயுவாயிருக்கின்ற வஸ்து நம்மில் அடங்குகையும், அப்பொழுது நமக்கு அறிவுண்டாகவும் செய்கிறது. அப்பொழுது மாத்திரமே நாம் மனிதராய்த் தீருகிறோம். மனிதரென்ற ஒரு தனி சிருஷ்டி இல்லை. நம்முடைய தொழிலைக் கொண்டே வேண்டும் மனிதராவதற்கு. மனிதர்களுக்கே மோக்ஷம் கிடைக்கிறது. தவிர, இல்லாத வஸ்து நமக்கு உண்டென்று தோன்றுகிறது. அந்தத் தோற்றம் நசிக்கும்பொழுது மாத்திரமே மனிதராகிறோம். அது எவ்விதமென்றால் நடுப்பகல் சமயத்தில் மிகவும் கோரமான சூரிய கிரணமிருக்கும்பொழுது ஒரு பாலைவனத்தில் கூடி நாம் சஞ்சரிக்கும்பொழுது அந்த இடத்தில் நாலுபக்கத்திலும் பார்த்தால் நமக்கு என்னவாகத் தோன்றுகிறது?

சி: ஜலம் இருப்பதுபோல் தோன்றுகிறது.

கு: ஆனால் அந்த ஜலமிருப்பதுபோல் தோன்றிய இடத்தில் போய்ப் பார்த்தாலோ?

சி: ஜலம் காண்பதில்லை.

கு: அப்பொழுது அந்தத் தோற்றம் சரியாயிருக்கின்றதோ?

சி: சரியானதில்லை.

கு: ஜலம் இருப்பதாகத் தோன்றுவதற்குக் காரணம் என்னவென்றால், ஒரு பாலைவனத்தில் யாதொரு மரத்தின் நிழலுமில்லாது பரந்து காலியாய்க் கிடக்கின்ற இடமும், அந்த இடத்தில் மிகவும் கடூரமான சூரிய கிரணங்கள் தாக்கியபோது அதிலிருந்துண்டாகின்ற ஒளியால் ஜொலித்துக்கொண்டிருக்கின்ற அந்த ஒளியான ஜ்வாலையைத் தண்ணீராகுமென்றும் நாம் தவறு எண்ணியதாகும். ஆனால் அது உண்மையில் ஜலம் அல்லவென்று நாம் போய்ப் பார்த்தபோது நமக்குத் தெரியவும் செய்ததல்லவா? இதே பிரகாரம்தான் தன்னுடைய ஜீவசக்தி வெளியில் வியாபித்து ஜொலித்துக்கொண்டிருக்கிற அந்த ஜ்வாலையில் தன்னிலிருந்து பிரதி பிம்பித்துக் கண்டபோது இவ்விதத்தில் ஒரு வஸ்து இருக்கின்றதாகத் தோற்றமுண்டாகிறது. இதாகும் மிருக புத்தி. இந்தப்படியாயுள்ள தோற்றமிருக்கின்றவைகள் மிருகங்களாகும். இந்தத் தோற்றம் எவ்விடமிருந்து உண்டானதென்றும், இவ்விதம் உண்டானது தன்னுடைய சக்தியிலிருந்துதானென்றும், அந்தச் சக்தி வெளியில் வியாபித்தபோது பிரதிபிம்பித்ததாகுமென்றும் தெரியவந்தது. அதனால் அந்தச் சக்தி வெளியில் வியாபிக்காமல் அதனுடைய உத்பத்தி ஸ்தானமாகிய தன்னில் சேர்த்து, தன்னில்தானே லயித்து, தோற்றம் நசிக்கும்போது மாத்திரமே மனிதராகக் கூடும். தவிர மனிதன் என்றால் மனனம் செய்கின்றவனாகும். மனனம் செய்வதென்பது "நித்தியா நித்திய வஸ்து விவேகம்" செய்கிறது என்றாகும். அதாவது நித்தியம் இன்னது அநித்தியம் இன்னது என்றறிவது. நித்தியம் இன்னதென்பதை அறிந்தால் அவனுக்குச் சப்தமில்லை. அதென்ன காரணமென்றால் சப்தம் நித்தியமல்ல, அநித்தியமாகும். அப்போது, சப்தத்தைத் தன்னில்தானே லயிப்பித்துத் தானாகயிருக்கும். தவிர நமக்கு ஒரு ஆலோசனை சமயத்தில் சப்தம் உண்டாக்க முடியுமா?

சி: முடியாது.

கு: சப்தம் உண்டாக்கும் பொழுது ஆலோசனை கிடைக்குமா?

சி: கிடைக்காது.

கு: அது தவிர நாம் ஆலோசனையிலிருக்கும்பொழுது நமது பக்கத்திலிருக்கும் வேறொருவன் சப்தமுண்டாக்கினால் நாம் என்ன சொல்லுவோம்?

சி "ஏய்! சப்தம் உண்டாக்காதிருங்கள், நான் ஒரு காரியத்தைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லுவோம்.

கு: அப்பொழுது ஆலோசனை சமயத்தில் யாதொரு விதத்திலும் சப்தம் உண்டாக்க நமக்கு முடியாது. யாரேனும்

சப்தம் செய்தால் அது நமக்கு வெறுப்பாகத் தோன்றும். இதே மாதிரியாகத்தான் மனன சமயத்திலும் யாதொரு சப்தமும் உண்டாக்க முடியாது. அப்பொழுது சப்தம் தன்னில் அடங்குகிறது. எப்பொழுது சப்தம் தன்னில் அடங்குகிறதோ அப்பொழுது மனிதராகின்றோம். அப்பொழுது நம்முடைய மனது தன்னில் லயிக்கிறது. மனது தன்னில் லயித்தபோது தானாகித் தன்மயமாய்த் திருகிறது. அப்பொழுது மோக்ஷம் ஆகிறது. இதனால்தான் மனிதருக்கே மோக்ஷம் கிடைக்கிறது என்று சொல்லக்காரணம். இதல்லாமல் சப்த ரூபமாய் ராகத்வேஷ மதமாச்சார்யாதிகளான தொழில்களோடுகூடி மிருகங்களாகிய நாம் மனிதரென்று அபிமானிக்கிறதல்லாமல் உண்மையில் மனிதர்களல்ல. மனிதராகவேண்டுமென்றால் ராகத்வேஷாதி தொழில்களைவிட்டு முன் சொன்ன நிலைமையில் சேரவேண்டும். அதற்கு முன் ஒருக்காலும் மனிதரல்ல; மிருகங்களேயாகும்.

சி: சுவாமி! இதுவரை சொன்னதெல்லாம் உண்மைதான். ஆனால் உலகத்தில் அநேக இயற்கை அதாவது உருவவித்யாசங்கள் காணப்படுகின்றன. அதாவது மனிதரென்று அபிமானித்து வருகிற இருகாலிகளும், அவர் மிருகங்களென்று எண்ணி வருகின்ற யானை, குதிரை, மாடு, ஆடு, சிங்கம், புலி முதலிய நாற்காலிகளும், பருந்து, கிளி, காகம், கோழி, மயில் முதலிய பறவை இனங்களும், பாம்பு, பல்லி முதலாகிய ஊர்வனவும், தவளை, மீன் முதலிய நீர்வாழ்வனவும், எறும்பு கிருமி கீடாதிகள் முதலிய பிறவிகள் எல்லாம் பலவிதத்திலும் காணப்படுகிறது. இவைகளெல்லாம் சிருஷ்டி ஒரேவிதமென்று சொன்னீரல்லவா? நானாவிதத்தில் காணப்படுகின்ற இவைகளெல்லாம் எவ்விதமாகும் சிருஷ்டி. ஒரேவிதமென்று சொல்லுகிறது? அதை விரிவாகச் சொல்ல வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கு: நீர் சொன்ன விதத்தில் பிரகிருதி அதாவது இயற்கை ரூபங்கள் வித்யாசமாய்த் துண்டுதுண்டாய்க் காணுகிறது எவ்விதமென்றால், எட்டடுக்கு மாளிகை, நான்கடுக்குமாளிகை மூன்றடுக்கு மாளிகை, இரண்டடுக்கு மாளிகை, ஓரடுக்கு மாளிகை, மாளிகையில்லாத மச்சுவீடு, மச்சில்லாதவீடு, இது போன்ற மாளிகையோடு கூடியதும், மச்சுள்ளதும், மச்சு இல்லாததும், கல்லுகொண்டும், செங்கல்லுகொண்டும், பெட்டிக்கட்டை அதாவது சிமிட்டியினாலுண்டாக்கும் கல்போல் மண்ணில் உண்டாக்கியதும், உருளங்கட்டை அதாவது மண் உருளைகளினாலுமுண்டாக்கிய வீடுகளும், மேல் சொன்னபடி உண்டாக்க முடியாதவர், மூங்கிலாலும் ஓலைகளினாலும்,

உண்டாக்கிய குச்சுகளும், அதினாலும் உண்டாக்கமுடியாதவர் கள், ஈச்சஞ்சோலை, தேக்குஇலை முதலிய பல விதமான இலைகளைக் கொண்டும் குடிசைகள் உண்டாக்கி அதற்குள் வசிக்கிறார்கள். இப்படி வசித்து வருகிறவர்கள் யாராகுமென்று சொல்ல வேண்டியது?

சி: மனிதரென்றாகும்.

கு: இவ்விதமே எட்டடுக்கு, நாலடுக்கு முதலான மாளிகைகள் முதல், இலைகளினாலும் மற்றும் மறைத்துக்கட்டி யுள்ளதான குடிசைகள்வரை உள்ளது, நாம் பல ஜீவிகளென்று அபிமானித்து வருகின்ற நாம் முதல் சர்வ ஜீவிகளுக்கும் இருப்பதற்குள்ள வீடுகளாகும்,இந்த இயற்கை வித்தியாசமாய்க் காணப்படுகின்ற சரீரமென்று அபிமானித்து வருகின்ற ஜடங் கள். இந்தப் பிரகாரம் பிரகிருதி அதாவது இயற்கை வித்தியாச மாகிய கூடுகளிலிருக்கின்றது என்னவாகும்?

சி: ஜீவனாகும்.

கு: ஜீவன் எத்தனை உண்டு?

சி: ஜீவன் ஒன்று மாத்திரம்.

கு: அப்பொழுது இவைகளை ரூபவித்தியாசத்தால் வேறு படுத்தி உயர்ந்தது என்றும், தாழ்ந்தது என்றும் சொல்ல இடமிருக்கின்றதா?

சி: இடமில்லை.

கு: ஆனால் எட்டடுக்கு மாளிகையிலிருப்பவரைக் காட்டிலும் இலைகளினால் மறைவுகட்டி அதில் வசிக்கின்றவர் களுக்குப் புத்தி சக்தியிருக்கக்கூடாதா?

சி: இருக்கக்கூடும்.

கு: ஆனால் அதன் காரணம் ஏதேனும் சொல்லுவதற்கு உண்டோ?

சி: பல காரணங்கள் சொல்லுவதற்குண்டு. அது என்ன வென்றால் பல இராஜாக்களிடமும் பிரபுக்களிடமும், அவர்கள் நீசர்கள் என்று நினைக்கப்பட்டுவருபவர்களாகிய பள்ளர், பறை யர் இவர்களிடத்திலும் நான் பழகியிருக்கின்றேன். அவரில் இராஜாக்களைக்காட்டிலும், பிரபுக்களைக்காட்டிலும் யோக்கியர் களாயும், காரியத் திறமையுள்ளவர்களாயும், திட நிச்சயமும் அறிவும் இருக்கிற பள்ளர் பறையர்களைப் பார்த்திருக் கிறேன். தவிர திருவள்ளுவர், பாக்கனார், நந்தனார் முதலியவர் கள் மகாயோக்கியர்களான ஞானிகளாக உண்டாயிருந்தார் களென்றும், அவர்களை இப்பொழுதும் புகழ்த்துவதும் அவர் களுடைய ஸ்தாபனங்களையும், சாஸ்திர பிரமாணங்களையும் சரியானவையென்று அனுசரித்து நடந்து வருகிறதாய் அறியவும், காணவும் செய்கிறதுண்டு. அவர்களுடைய

யோக்கியதை முன்சொன்ன இராஜாக்களென்றும், பிரபுக்களென்றும் அபிமானித்து வருபவர்களுடையதைவிட மேலானது என்பதாகும் என்னுடைய நம்பிக்கை.

கு: அப்பொழுது இன்னவருக்குத்தான் புத்தி சக்தி உண்டாயிருக்கக்கூடும் என்று உண்டோ?

சி: இல்லை.

கு: ஆனால் நீர் சொன்ன பள்ளர்கள், பறையர்கள் முதலானவரும் மகாஞானிகளாகிய திருவள்ளுவர், பாக்கனர், நந்தனர் முதலானவர்களும் எங்கேயாகும் வசித்திருந்தார்கள்?

சி: நான் பழகியதான பள்ளர்கள், பறையர்கள் முதலானவர்கள் ஓலைகொண்டும் மற்றும் மறைத்துக்கட்டியதான குடிசைகள் என்று சொல்லிவருபவைகளிலும் வாசம்செய்து வருவதைக்கண்டும் திருவள்ளுவர், பாக்கனர், நந்தனர் முதலியவர்கள் காடுகளில் இலை முதலானவைகளினால் கட்டிய குடிசைகளிலாகும் வசித்திருந்தார்கள் என்று கேட்டுத் தெரிந்திருக்கிறேன்.

கு: ஆனால் இப்பொழுது இன்ன வீட்டில் வசிப்பவருக்கே விசேஷ புத்தியும் அறிவுமுண்டாகும் என்பதற்குண்டோ?

சி: அப்படியில்லை.

கு: இவ்விதமே மனிதரென்று அபிமானித்துவருகிறவர்களுக்கு வாசம் செய்வதற்குள்ள வீடாகிற இந்த ஜடம், அதாவது உடம்பு எட்டடிக்கும், மிருகங்களென்று நாம் சொல்லிவருகிற நாற்காலிகளுக்கு, வாசம் செய்வதற்குள்ள வீடாகிற ஜடம் நான்கடிக்கும், இதேபோல் எறும்பு முதலானவைகள் வாசம் செய்வதற்குள்ள வீடாகிற ஜடங்களாகும் குடிசை முதலானவைகள். ஆனால் எறும்பு என்று சொல்லி வருகிற குடிசையாய் வீடாகின்ற ஜடத்திலுள்ள ஜீவனுக்கும் மனிதரென்று சொல்லிவருகிற எட்டடிக்கு மாளிகையாயிருக்கின்ற வீடான ஜடத்திலுள்ள ஜீவனுக்கும் ஏதேனும் வித்தியாசமுண்டோ?

சி: யாதொரு வித்தியாசமுமில்லை.

கு: ஆனால் எதற்கு வித்தியாசமுண்டு?

சி: வீடாகிய உடம்பிற்கு.

கு: கிரஹவித்தியாசம்; அதாவது வீடு வித்தியாசப்பட்டதினால் புத்தி சக்தியும், அறிவும் இல்லாமற்போகுமா?

சி: போகாது.

கு: ஆனால் குச்சு, குடிசை, பர்ணசாலை முதலானவைகளில் வாசம் செய்கின்றவருக்குச் சமமாக உள்ள எறும்பு, ஈ, முதலானவைகளுடைய ஜடத்தில் வாசம் செய்கிற ஜீவனுக்குள்ள சக்தியும் புத்தியும் மனிதன் என்று அபிமானித்து

வருகின்ற கிரஹங்களிலிருக்கின்ற ஜீவிகளுக்கு இல்லை யென்றே தெளிவாக்கலாம். அது எவ்வாறெனில் எறும்பு தன்னைக் காட்டிலும், பெரிதாயுள்ளதனையும், கனமாயுள்ளதனையும், தனியே தூக்கி எடுத்துக்கொண்டு போவதைப் பார்க்கவில்லையா? அது போல மனிதரென்றபிமானித்து வருகிற ஜீவிகளுக்குத் தன்னைக்காட்டிலும் கனமுள்ளதும், பெரியதனைத் தனியே எடுத்துத் தூக்கமுடியுமா?

சி: தூக்க முடியாது.

கு: தவிர, எறும்பு மிகவும் புத்தி சக்தியுள்ளதாகும். அது தனக்கு வேண்டுகிற தொழிலுக்குத் தடையுள்ளதனைத் தடை தீர்க்கிறதும், முன்கூட்டி தன்னுடைய உப ஜீவனத்திற்குள்ளதை அதிஜாக்கிரதையிலும், சோம்பலின்றியும் சேகரிக்கின்றதை நாம் கண்டிருக்கிறோமல்லவா?

சி: ஆம் கண்டதுண்டு.

கு: அதுமாத்திரமல்ல. அதனுடைய விரைவு அதாவது சுறுசுறுப்பு நிலைமை எப்படி யென்றால் எறும்புக் கூட்டங்கள் ஒரு இடை வழியாக நடமாடும்போது, மனிதரென்று அபிமானித்து வருகின்ற ஒருவர் அதிவேகமாய் அந்த இடை வழியாகப் போகின்றார். அப்பொழுது அந்த எறும்பு கூட்டங்கள் அவரை என்ன செய்கின்றன?

சி. அவருடைய பாதம் முதல் சிரசுவரை ஏறுகின்றன.

கு: அப்பொழுது யாருக்கு விரைவு அதாவது சுறுசுறுப்பு அதிகம்?

சி: எறும்பிற்கேயாகும்.

கு: அது மாத்திரமல்ல. அநேக ஜீவிகளும் பலவிதமுள்ள யுக்தியோடு கூடியும், வெகுசாமர்த்தியத்திலும் ஒவ்வொரு வேலையையும் செய்து வருகின்றன. அதேபிரகாரம் நாமும் ஒரு ஜீவி. பல யுக்திகளும் தொழில்களும் நாமும் செய்கின்றோம். ஆனால் நம்மால் ஒருக்காலும் செய்ய முடியாத கைத்தொழில்களைத் தூக்கணங்குருவி, குளவி, தேனீ, எட்டுக்கால் பூச்சி, முதலாகிய பல ஜீவிகளும் செய்து வருகின்றன. ஆனால் மேல் சொன்ன ஜீவிகளில் பிரத்தியேகமாய்த் தேனீக்கள் மரத்தின் கொம்பினுடைய கவறு அதாவது பிரிவின் அடிப்பாகத்தில் மிகவும் பெரியதாயுள்ள கூடுகட்டியும் அதில் ஐந்தும், பத்தும், அதற்கதிகமானதான படிகள் தேனைக் கொண்டு வந்து பத்திரப்படுத்தி வாசம் செய்கின்றன. ஆனால் மனிதரென்றபிமானித்து வருகிறவர்கள் தவிர, மற்றெல்லா ஜீவிகள் கூடுகள் கட்டுவது அவைகளினுடைய சுயசக்தியினால் ஏதாவது சாமான்களைக்கொண்டு உண்டாக்குவதல்லாமல் வேறொன்றினுடைய உதவியோடுகூடி அவ்விதம் உண்டாக்குவ

தில்லை. அவ்விதம் கட்டுவதில் மற்ற யாதொரு ஜீவிகளுக்கும், யாதொரு விதத்திலும், யாதொரு உபத்திரவமோ, கஷ்ட நஷ்டமோ அவரால் உண்டாவதில்லை. நாம் ஒரு வீடு கட்ட வேண்டுமென்றால் எவ்வளவோ ஜீவிகளை நசிப்பிக்கவேண்டும், எத்தனை மரங்களை நசிப்பிக்கவேண்டும், எத்தனையோ ரம்பக் காரர் அதாவது வாள்காரர்கள் முதலான வேலையாட்கள் வேண்டும். ஆனால் அவனவனுடைய சுயசக்தியினால் ஒரு வீட்டைக் கட்டவோ, ஏதேனும் செய்யவோ வேறொன்றினுடைய சகாயமில்லாமல் முடிகின்றதில்லை. அதிகம் சொல்லுவானேன்! நாம் பல் தேய்ப்பதற்கு வேண்டி ஆலம் விழுதோ, கருவேலன் குச்சியோ, வேப்பங் குச்சியோ முதலானதுகளை அறுத்து எடுப்பதற்கு வேண்டி ஏதாவது ஒரு ஆயுதத்தினுடைய சகாயமில்லாமல் முடிகின்றதில்லை. ஆனால் மேல்சொன்ன ஜீவிகளுக்கு வேறொன்றினுடைய சகாயமில்லாமல் தங்களுடைய சுய சக்தி கொண்டு அதற்கு தேவையான வஸ்துக்களை தயாரித்து அவைகளுக்கு வாசம் செய்வதற்கு வேண்டிய வீடு உண்டாக்க முடிகிறது. அவ்விதம் உண்டாக்கின தங்கட்கு இருக்க வேண்டியதான கூடாகிய வீடு எவ்விதமான கொடுங் காற்றினாலோ, மிகவும் கடினமான மழையினாலோ வீழ்ந்து நசிக்குகையோ, மற்ற யாதொரு உபத்திரவங்களும் நேரிடுவதோ உண்டாவதில்லை. மனிதரென்று அபிமானித்து வருகிற நாம் நமக்கு வாசம் செய்வதற்கு வேண்டி கோடி ரூபாய் வரையில் செலவு செய்து கருங்கல்லினால் ரொம்பவும் உறப்பாயும், பலமாயும், அஸ்திவாரம் கட்டி அதன் மேல் ஒரு வீடு கட்டினால், அந்த வீடு மிகக் கடினமான மழையும், கொடுங் காற்றும் வந்ததானால் உடைந்து விழுந்து நசித்துப்போகின்றது. ஆனால் மேல் சொன்ன தேனீயின் கூடு அவ்விதம் நசிக்கின்றதில்லை. காரணம் அவைகள் கூடு உண்டாக்குகிற இடத்தை கவனித்து இந்த இடத்தில் கூடு உண்டாக்கினால் எந்தப் பிரகாரத்திலுள்ள காற்றோ, மழையோ வந்தாலும், இவ்விடம் உபத்திரவம் நேரிடாதென்றுள்ள உணர்வினால் உண்டாக்குகின்றதாகும். நமக்கு அவ்விதத்திலுள்ள உணர்வு இல்லாததினாலாகும் நாம் கட்டுகின்றவை நசித்துப் போகக் காரணம். ஆகையினால் மேற்சொன்ன ஜீவிகளுடைய ஞானம் அதாவது அறிவு எவ்வளவோ மேன்மையாயும், ஆச்சரியமாயுமுள்ளதாகுமென்பதை நாம் அறியவேண்டியிருக்கிறது. தவிர ஒரு பக்ஷிக்குக் கர்ப்பமுண்டானால் அந்தப் பெண் பக்ஷியும் அதன் புருஷனான ஆண் பக்ஷியும் சேர்ந்து பல சுள்ளிகளும் மற்றும் கொத்திக் கொண்டு வந்து விசித்திரமாகக் கூடு உண்டாக்கியும், பின் பெண் பக்ஷி அந்தக் கூட்டில் முட்டையிட்டும், அதன்மேல்

ஆணும் பெண்ணும் மாறி மாறி அடைகாத்துக் கொண்டிருக்கிறது. இவ்விதமிருந்து அந்த முட்டைகள் கருக்கூடி அதனுள்ளில் குஞ்சுகள் உண்டாயிற்றென்று அறியும்பொழுது அந்த முட்டையைக் கொத்தி உடைத்து அதிலிருந்ததான குஞ்சுகளை அதிகப் பிரீதியுடன் கூடி வளர்க்கின்றன. அக்குஞ்சுகளுக்கு அச்சமயத்தில் சுய சக்தியில்லாததினால் அவைகளுடைய சுயரக்ஷைக்கு அதுகளுக்குச் சாத்தியமில்லை என்று எண்ணித் தாய் தகப்பன்மாராகிய இரண்டு பக்ஷிகளும், அதுகளுக்கு வேண்டி மிகவும் கஷ்டப்பட்டு அலைந்து, ஆகாரம் முதலியவைகளைக் கொத்திப் பொருக்கிக் கொண்டுவந்து வாயில் ஊட்டிக் காப்பாற்றி வருகின்றன. இறகு முதலானவைகள் உண்டானபொழுது, அக் குஞ்சுகளைக் கொத்திப் பறக்குமாறும் இரை முதலியவைகளை எடுக்குமாறும் பழக்குகின்றன. அவைகளுக்கு தனியே பறந்துபோய் உபஜீவனாதிகள் எடுக்குமான சுயசக்தியுண்டானபோது, தாய், தகப்பன் மாருக்கு அவைகளின் பேரில் அதுவரையிலுண்டாயிருந்த பற்றையும், அவைகளைக் குறித்துள்ள பிரயத்தனங்களையும் விட்டு அவைகளைச் சமமாகக் கருதி கூட்டத்தில் சேர்த்துக் கொள்ளுகின்றன. அதன் பிறகு தாய் தகப்பன் என்றோ, மகன் என்றோ, மகளென்றோ யாதொரு பந்தமும் அவைகட்கு தம்மில் இல்லை. தாயார் என்றால் எல்லாம் தாயார், தகப்பனார் என்றால் எல்லாம் தகப்பனார், புத்திரன் என்றால் எல்லாம் புத்திரன். இப் பிரகாரம் சமபாவனையாய் நடக்கின்றன. ஆகையினால் அவைகளுடைய விசேஷபுத்தி மிகவும் அற்புதமாகத் தோன்றுகிறது. அதென்னவெனறால் சுயசக்தி யில்லாமலும், யாதொரு வகை விபரமில்லாதேயும், யாதொரு உணர்வுமில்லாதேயு மிருக்கிற காலத்தில் அந்தக் குஞ்சுகளுக்கு சுயசக்தியுண்டாக தாங்கள் தாங்களே, பறந்துபோய் ஆஹாரங்களெடுத்து ஜீவித்திருக்கிறதற்குச் சக்தி யுண்டாகிறவரையில் அந்தக் குஞ்சுகளைக் காப்பாற்றுவதற்கு தாங்களே உத்திரவாதிகளென்றுள்ள ஒரு விசேஷ புத்தியானது தாய் தகப்பன் மாராகிய அவைகளுக்குண்டாயிருந்ததினால் முன் சொல்லிய விதத்திலுள்ள கஷ்டங்களை அனுபவித்து அந்தக் குஞ்சுகளை ரக்ஷிக்கவும், அவைகளுக்கு ஜீவிக்கிறதற்குள்ள பூர்ண சக்தி வந்திருக்கிறதென்றுள்ள பூர்ண நம்பிக்கையும், தாய் தகப்பன்மாருக்கு வந்தபோது அவைகளைத் தங்களுடைய கூட்டத்தில் சேர்த்து நடக்கின்றன. அப்பிரகாரத்தில்தான் அக் குஞ்சுகளும் இவர்கள் தங்களுடைய தாய் தகப்பன்மார்களாகும் என்றுள்ள மமதை அதாவது நேசத்தை விட்டு கூட்டத்தில் சேர்ந்து ஒன்றாகிச் சமபாவனையாகி நடக்கின்றன. இவை யனைத்தும் நமக்கு அனுபவ திருஷ்டாந்தமல்லவா?

சி: ஆம்; அனுபவ திருஷ்டாந்தங்களாகும்.

கு: மனிதரென்றும், விசேஷ புத்தியுள்ளவரென்றும் அபிமானித்து வருகின்றவர்களாகிய நமக்கு ஒரு சந்தானம் உண்டானால், அந்தச் சந்தானத்துக்கு முன் சொல்லப்பட்ட பக்ஷிகள் கஷ்டப்பட்டு காப்பாற்றுகிற பிரகாரத்தில் யாதொரு சவரக்ஷணையும் செய்கிறதில்லை. அந்தக் குழந்தையை ஏதாவது ஒரு பாயிலோ மற்றோ படுக்கவைத்துத் தாய்மார்கள் அவரவருடைய வேலைக்காகப் பலவிடங்களுக்கும் போகிறார்கள். அவருடைய வேலைகள் முடிந்த சமயம் எப்போதாகிலும் வந்து குழந்தைக்கு ஆஹாராதிகள் கொடுக்கிறார்கள். அப்பொழுது குழந்தையினுடைய வயறு காய்ந்த சமயமாயிருக்கும். தவிர இந்த ஆகாரமான முலைப்பால் அதிகம் கொதித்து நிறைந்து பல நீர்களும் சேர்ந்து, கெட்டதாகவுமிருக்கும். அதல்லாவிடில் பல வியாதிகளும் உள்ளதான ஸ்திரீகளுடைய முலைப் பாலையும், அல்லது பலவித பழங்களையும் யாதொரு யோசனையோ, புத்தி விவேகமோ, இல்லாமல் தாய்மார்கள் கொடுக்கிறார்கள். அதனால் அக் குழந்தைக்குப் பலவித வியாதிகளுண்டாகி கஷ்டப்படுவதா யிருக்கின்றது. ஆனால் பக்ஷிகளிலொன்று ஆகாரத்திற்கு வேண்டி வெளியே போகும் பொழுது மற்றொன்று குஞ்சுகளுடைய பக்கத்திலிருந்து வேண்டியதான ரக்ஷணை செய்து வருகின்றன. இப் பிரகாரத்தில் நாம் செய்கிறதில்லை. தவிர மனிதர்களாகுமென்றும், விசேஷ புத்தியுள்ளவர்களாகுமென்றும் அபிமானித்து வருகிறவர்களுக்குண்டாகிற சந்தானத்திற்கு நூறு வயதானாலும், அவருடைய தாயாரோ, தகப்பனாரோ உண்டாயிருந்தால், அவர் என்னுடைய மகன், என்னுடைய மகள் என்றும், என் மகனுக்குக் கொடுக்கவேண்டும், என் மகளுக்குக் கொடுக்க வேண்டும், அவன் அன்னியன் அவனுக்குக் கொடுக்கக் கூடாது, அவன் வருகிறான் அதை மறைத்துவைக்க வேண்டுமென்றும் அதைப் போலவே அப் புத்திரன் அப் புத்திரிகளும் என்னுடைய தாய், என்னுடைய தகப்பன், என் தாயிக்கு கொடுக்க வேண்டும், என் தகப்பனுக்கு கொடுக்கவேண்டும், இது தாயினுடையது, தகப்பனுடையது, இவர்கள் நமக்குச் சொந்தம், மற்றுள்ளவர் நமக்கு அன்னியர், அவர்களுக்கு கொடுக்க வேண்டாம், அவருக்கு காண்பிக்கக்கூடாது என்று மற்றுள்ள கெட்ட எண்ணங்களான ராகத் துவேஷாதி கொடூர அதாவது கடினமான அந்தகாரத்தில் அதாவது இருட்டில் யாதொரு விசேஷ புத்தியும், அறிவுமில்லாமல் மிருகங்களாகி உலகத்தில் மனிதரென்று அபிமானித்து வருகிற இரு காலிகளுடைய நிலைமை காணப்படுகிறது. இதுவும் நமக்கு அனுபவ திருஷ்டாந்தமல்லவா?

சி: ஆம்; அனுபவ திருஷ்டாந்தமேயாகும்.

கு: ஆனால் இம்மாதிரி நிலைமைகள் நாம் ஆலோசிக்காதது கொண்டாகும் நமக்கு ஞானம் உண்டாகாதது. என்ன வென்றால் 'நான் மனிதனாகும்' எல்லா ஜீவிகளைக் காட்டிலும் சிரேஷ்டனாகும், நான் செய்கிறது மாத்திரமே புத்திசக்தியோடும், யுக்தியோடும், அறிவோடும் கூடி செய்து வருகிறது என்றும், மற்ற ஜீவிகளுக்குச் சிரேஷ்டமில்லை, நமக்குத் தாழ்ந்தவை என்றும் மற்றும் துரபிமானத்தின் நிமித்தம் ஒரு குருட்டு நம்பிக்கை உலகத்தில் யாவரும் பொதுவாகக் கருதி வந்திருக்கிறார்கள். எதைக் கொண்டாகும் அப்படி வந்ததென்றால் மனிதர்களென்று அபிமானித்து வருகிறவர்களுக்கு யாதொரு விவேகமில்லாதது கொண்டாகும். ஆனால் ஏதொரு வஸ்துவையும் கேட்கவோ, பார்க்கவோ, அறியவோ செய்தால் அதைப்பற்றி நாம் சரியாய் மனதை ஊன்றிக் காரிய காரணங்களைக் கொண்டாலோசித்தால், அதனுடைய உண்மை தெரியலாம். அவ்விதம் ஆலோசிக்காமலே நான் சிரேஷ்டனாகும் மற்றெல்லாம் பிரயோசனமில்லாதது என்றும், நமக்கு தாழ்ந்தது என்றுள்ள மூடநம்பிக்கையின் நிமித்தம் உண்டாகிய துரபிமானத்தால் ஜனங்கள் யாதொன்றும் தெரியாதவராய்ப் போனார்கள்.

அதெப்படியென்றால் ஈஸ்வரன் ஜீவனாகும். அந்த ஜீவனாயிருக்கின்ற ஈஸ்வரன் தன்னுடைய இருதயத்திலிருந்து கொண்டு, மாயையாயிருக்கின்ற யந்திரம் நிமித்தம் சர்வ பூதங்களிலும் சலித்துக் கொண்டிருக்கின்றது. சர்வ பூதங்களிலு மிருக்கின்ற வஸ்து ஈஸ்வரனாகும். அந்த ஈஸ்வர சைதன்னியத்திற்கு ஓரே சக்தியல்லாமல் இரண்டு சக்தியில்லை. நாம் அதனுடைய உண்மையைத்தெரிந்துகொள்ளாததினாலாகும் நம்முடைய சக்தி வேறென்றும், மற்றுள்ளவைகளுக்குச் சக்தி வேறென்றும் எண்ணுகின்றோம். எப்பொழுது உண்மையைத் தெரிந்து கொள்ளுகின்றோமோ அப்பொழுது இரண்டு சக்தியில்லையென்றும் ஓரே சக்தியே யிருக்கிறதென்றும் அது தன்னுடைய சக்திதானென்றும் தெரியும். அப்பொழுது துரபிமானம் விட்டு ராகத் துவேஷாதிகள் நசித்துத்தானாகிறது.

சி: சுவாமி! இப்பிரகாரம் போதிக்கின்ற நிலைமையில் எனக்கு ஒரு சந்தேகம் உண்டாகின்றது. அதாவது உலகத்தில் யாதொரு ஜீவிகளுக்கும் வித்தியாசம் இல்லை யென்றல்லவா இதுவரை போதித்தீர்கள்! ஆனால் உலகத்தில் ஸ்திரீ புருஷ வித்தியாசம் பிரத்தியக்ஷத்தில் கண்டு வருகின்றோமல்லவா! அதை இல்லையென்று சொல்லுவதற் கிடமுண்டோ?

கு: இதுவரை சொன்னவைகளில் உமக்கு என்ன தோன்று கிறது?

சி: எல்லாம் ஒரே சக்திதான் என்று சொன்னதற்குப் பின் மற்றொன்று வேறிட்டு உண்டாகிறதற்கிடமில்லை.

கு: ஆயினும் அதையும் விவரித்துச் சொல்லுகிறேன் கேளுங்கள். ஸ்திரீ புருஷன் என்பதில் யாராகும் ஸ்திரீ? யாராகும் புருஷன் என்று சொல்லுவதற்கு முடியுமா?

சி: ஓ! சொல்வதற்கு முடியும் நாமெல்லோரும் புருஷர் ளும், நம்மைப் பிரசவித்த தாய்மார் ஸ்திரீகளுமாகும்.

கு: ஆனால் ஆதிமுதலிலிருந்து இதுவரைக்கும் உலகத்தில் சால்லி வருகிறதும் நாம் தெரிந்துள்ளதும், நாமெல்லாம் ஸ்திரீகளாகுமென்றும், ஸ்திரீகளெல்லாம் புருஷன்மாராகு மென்றும் சொல்லி வந்திருந்தால் இப்பொழுது நம்மை யெல்லாம் யாரென்றாகும் சொல்லுவது?

சி: அப்படியாயிருந்ததென்றால் நம்மை யெல்லாம் ஸதிரீகளென்றாகும் சொல்லுவோம்.

கு: அப்பொழுது நாம் ஸ்திரீயென்றோ, புருஷனென்றோ நமக்குத் தெரிவதில்லை. உலகத்தில் சொல்லி வருகிறதை மாத்திரம் நாம் கிரஹித்து அதனுடைய உண்மை எவ்விதமாகு மென்று ஆலோசிப்பதில்லை. ஆனால் புருஷன் என்று சொல் வதின் பொருளென்னவாகும்?

சி: புறத்தில் வசிக்கின்றவன் புருஷன்.

கு: அப்பொழுது யானை முதல் எறும்புவரையிலுமுள்ள ஜீவிகள் எங்கே வசிக்கின்றன?

சி: தங்கள் தங்களுடைய வீடுகளில்.

கு: அவரவருடைய வீடு என்பது எதைச் சம்மந்தித்தது?

சி: நமக்கெல்லாம் நாம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் வீடும், மற்றுள்ள ஜீவிகளுக்கு வசிப்பதற்காக எந்தெந்த விதத்தில் இடங்களை ஏற்படுத்தியிருக்கின்றனவோ அந்த டங்களுக்குமாகும்.

கு: ஆனால் ஜீவனில்லாதிருந்தால் நீர் சொன்ன பிர காரத்திலிருக்கின்ற வீட்டினாலோ, இடங்களினாலோ ஏதாவது பிரயோஜனமுண்டா?

சி: யாதொரு பிரயோசனமுமில்லை.

கு: அப்பொழுது புறம் அதாவது வீடு எதற்கு வேண்டி யாகும்?

சி: அவரவர்கள் சுகமாய் வசிப்பதற்கு வேண்டி.

கு: ஜீவனில்லாவிட்டால் சுகமாய் வசிக்கலாமோ?

சி: வசிக்க முடியாது.

கு: அதென்ன காரணம்?

சி: ஜீவனில்லாததினால்.

கு: அப்பொழுது யாருக்குச் சுகமாய் வசிக்க வீடு வேண்டும்?

சி: ஜீவனுக்கு.

கு: ஜீவன் வசிக்கும் வீடு ஏதாகும்?

சி: இக்காணுகின்ற ஜடமாகும்.

கு: அப்பொழுது இந்த ஜடத்திற்கு என்ன பெயர் சொல்லவேண்டும்?

சி: புறம் என்று சொல்லவேண்டும்.

கு: ஆனால் இந்த வீட்டில் ஜீவன் எப்பொழுது அடங்கி வெளியில் சலிக்காமலிருக்கிறதோ அப்பொழுது புருஷனாகிறது. அந்தப் புருஷனாகும் சிவன். அது எவ்விதமென்றால் ஒருவன் இதோ! இந்தக் காணுகின்ற வீட்டிற்குள் நுழைந்து கதவுகளை மூடி இருந்தால், அவனால் வெளியிலுள்ள யாதொரு நிலைமையைக் கேட்கவோ, காணவோ, அறியவோ முடியுமா?

சி: முடியாது.

கு: ஆனால் அவன் அந்த வீட்டிலிருந்து கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து திண்ணையில் வந்திருந்தால் அவனால் வெளியிலுள்ள எல்லா நிலைமைகளையும் கேட்பதற்கும், காண்பதற்கும், அறிவதற்கும் முடியுமல்லவா?

சி: ஓ! முடியும்.

கு: ஆனால் உள்ளே யிருந்தபொழுது வெளியிலிருக்கின்றதுகளைக் கேட்காமலிருப்பதற்கும், காணாதிருப்பதற்கும், அறியாமலிருப்பதற்கும் காரணமென்ன?

சி: அவன் வெளியிலுள்ள தொழில்களையும் விட்டு உள்ளே சென்றுக் கதவை மூடி சொஸ்தமாயிருந்தது கொண்டாகும்.

கு: வெளியில் திண்ணைக்கு வந்த பொழுதோ?

சி: வெளியிலுள்ள எல்லா நிலைமைகளையும் கேட்பதற்கும், காண்பதற்கும், அறிவதற்கும் முடிகிறது.

கு: ஆனால் வெளியிலுள்ள எல்லா நிலைமைகளைக் கேட்பதற்கும், காண்பதற்கும், அறிவதற்கும் முடிகின்றபோது அவன் வீட்டிற்குள்ளிலோ, வெளியிலோ யிருந்தது?

சி: வெளியிலாகும்.

கு: அதெப்படியாகும்? அவன் வீட்டிற்கு வெளியிலிருந்ததென்றால், அந்த வீட்டை விட்டுப் போகவேண்டும். அந்தப் பிரகாரம் வீட்டை விட்டுப் போனானென்றால், அவ்வீட்டினுடைய யாதொரு அவஸ்தை அதாவது நிலைமையையும் கேட்பதற்கோ, காணுவதற்கோ, அறிவதற்கோ முடிகிறதில்லை. அதல்லாமல் அவன் இந்த வீட்டில் திண்ணையிலிருந்து

வெளியே இறங்கவில்லை. வெளியிலிறங்காமல் வீட்டின் வெளியில் இருக்கிறனென்று சொல்லுவதற்கு முடியுமா?

சி: முடியாது.

கு: வீட்டிற்குள்ளிருந்தானென்று சொல்ல முடியுமா?

சி: முடியாது.

கு: அப்பொழுது அவன் வீட்டுக்குள்ளிலும், வெளியிலுமில்லாமல் வீட்டின் திண்ணையிலிருக்கிறன். அச்சமயத்தில் வீட்டினுடைய வெளியிலுள்ள எல்லா நிலைமைகளையும் கேட்பதற்கும், காண்பதற்கும், அறிவதற்கும் இடமாயிற்று. வீட்டை விட்டு வெளியே போயிருந்தாலும், வீட்டிற்குள்ளேயிருந்தாலும், வீட்டின் வெளியிலுள்ள யாதொரு நிலைமைகளையும் அறிகிறதில்லை. இதே பிரகாரம் நாம் படுத்துத் தூங்கும்பொழுது நம்முடைய ஜீவன் எங்கேயாகும்?

சி: அப்பொழுது நம்முடைய ஜீவன் உள்ளில் அடங்கியிருந்தது.

கு: தூக்கம் விழித்து இவைகளைக் கேட்கவும், பார்க்கவும், அறியவும் செய்யும்பொழுது, ஜீவன் எவ்விடமாகும்?

சி: வெளியிலாகும்.

கு: நமது ஜீவன் எப்பொழுது வெளியில் போய் விட்டதோ, அப்பொழுது நமக்கு இவைகளைக் கேட்கவும், காணவும், அறியவும் முடியுமோ?

சி: முடியாது.

கு: அது எதனல்? ஜீவன் வெளியே போய்விட்டால் என்னவாயிருக்கும்?

சி: பிணமாயிருக்கும்

கு: உள்ளேயிருந்ததென்றால் வெளியிலுள்ள யாதொன்றையும் அறிய முடியுமோ?

சி: முடியாது.

கு: எதனல்?

சி: ஜீவன் வெளியே வியாபிக்காமல் உள்ளேயடங்கியிருந்ததினல்.

கு: அது எங்கேயிருக்கின்றது?

சி: ஜீவனுடைய வீடாகிய புறத்திலாகும்.

கு: ஆனல் ஜீவனுடைய வீட்டில் ஜீவனனது யாதொன்றிலும் சலிக்காமல் அடங்கியிருக்கும்பொழுது யாராய்த் தீருகிறது?

சி: புருஷனுய்த் தீருகிறது.

கு: அது எதனல்?

சி: ஜீவசக்தி வெளியில் வியாபிக்காமல் புறத்திலேயே அடங்கியதனல்.

கு: அவ்விதம் வீட்டில் சொஸ்தமாய் அடங்கியவர் யாராகும்?

சி: அவர்களெல்லாம் புருஷராகும்.

கு: அவ்விதம் வீட்டில் அடங்காதவர் யாராயிருக்கும்.

சி: அவர் அவர்களுடைய ஜீவன் உள்ளிலும், வெளியிலு மல்லாத நிலைமையிலுள்ளவராகும்.

கு: எப்பொழுது வெளியிலுள்ள நிலைமையைக் கேட்பதும், காண்பதும், அறிவதும் செய்கின்றது?

சி: தூக்கம் விழித்து ஜீவன் உள்ளிலும், வெளியிலும் அல்லாத தன்மையிலிருக்கும்பொழுது.

கு: ஆனல் எப்பொழுது ஜீவன் வீட்டினுள் அடங்குகிறதோ, அப்பொழுது புருஷனும், எப்பொழுது தூக்கம் விழித்து உள்ளேயிருந்து ஜீவசக்தியாய் வெளியில் வியாபிக்கின்றதோ, அப்பொழுது சிவசக்தியுமாகின்றது: அதாவது புருஷ ப்ரகிருதி ஆகும். புருஷ ப்ரகிருதி என்று சொல்லுவது, புருஷன் வீட்டிலிருந்து வெளியினுள்ளில் சக்தியாய் சலிக்கின்றதற்காகும். புருஷன் என்பது ஜீவனுயிருக்கின்ற சிவனும், சக்தியென்பது ஸ்திரீயாயிருக்கின்ற ப்ரகிருதி அதாவது மாயையுமாகிறது. அந்த ஜீவனுயிருக்கின்ற சிவனுகிய புருஷனுக்கு வெளியில் சலனம் உண்டானபொழுதாகும் புருஷ ப்ரகிருதியென்று சொல்லுவது. அந்த ப்ரகிருதியாகும் சக்தி. அதாகும் தாயார். அதிலிருந்தாகும் ஜனனம் உண்டாகிறது. அப்பொழுது நம்முடைய தாய், யாராகும்?

சி: மாயையாயிருக்கின்ற சக்தி.

கு: ஜீவன் யார்?

சி: சிவன்.

கு: சக்தி நமக்குத் தாயாராகும்பொழுது சிவன் யார்?

சி: தகப்பன்.

கு: அப்பொழுது சிவன் தகப்பனும், அது புருஷனும், சக்தி தாயும், அது ஸ்திரீயும் ஆகின்றது. அப்பொழுது நம்மை புருஷனென்ருே, ஸ்திரீயென்ருே சொல்ல இடமுண்டா?

சி: இடமில்லை.

கு: அப்பொழுது புருஷனும், ஸ்திரீயும், தகப்பனும், தாயுமாகின்றது. அதனல் நாம் புருஷனும் ஸ்திரீயுமில்லாதவராகிருேம். அப்பொழுது நம்மை என்னவென்று சொல்ல வேண்டும்?

சி: ஆணும், பெண்ணும் அல்லாதவர் என்று சொல்ல வேண்டும்.

கு: ஆணும், பெண்ணும் அல்லாதவரை யாரென்று சொல்லவேண்டியது?

சி: "நபும்ஸகம்" அதாவது "அலி" என்று.

கு: ஆனால் நம்மில் புருஷனாக, சிவனாக இருக்கின்ற ஜீவன் வெளியில் வியாபித்துச் சலனம் உண்டானபோது சக்தியாகித் தீருகிறது. அந்தச் சக்தியாகும் மனம். அந்த மனமாகின்ற சக்தியிலிருந்தாகும் நான் என்று அபிமானிக்கின்ற அகங்காரமாகிய நபும்ஸகம் உண்டானது. அதாவது அலி உற்பவித்தது. அதற்கு உதாரணம்:—நமக்கு மிகவும் பழக்கமாயிருக்கின்ற ஒரு அறையில், கதவுகளை மூடித்தாளிட்டுப்படுத்துத் தூங்குகையில், திடீரென்று தூக்கம் கலைந்து எழுந்திருந்தால் யாதொரு பழக்கமுமில்லாத விதம் கதவு தெரியாமல் தட்டுத் தடுமாறி நடந்து, தலை, முகம் முதலானவைகளைச் சுவற்றிலோ, இன்னும் மற்றவைகளிலோ மோதிக் காயப் படுத்திக்கொள்ளுகிறோம். அதன் காரணம் தூக்கம் கலைந்தபோது புருஷனாயிருக்கின்ற சிவன் சக்தியாய் வெளியிலே வந்தது. அந்தச் சக்திதான் மனம். அப்பொழுது மனம் மாத்திரமே உண்டாயிருந்தது. அதனால்தான் கதவினைத் தெரிய முடியாமலிருந்தது. தெரியவேண்டுமென்றால் நான் என்கிற அகங்காரமாகிய நபும்ஸகம் வேண்டும். அந்த நபும்ஸகத்திற்காகும் இன வித்தியாசங்களுள்ளது. நான் என்றுள்ள அகங்காரமாகிய நபும்ஸகத்தில் கூடியாகும் மனதாகின்ற சக்தி பின்னப்பட்டு பிரகாசிக்கின்றது. அந்த அகங்காரமாகிய நானென்றுள்ள நிலைமை இல்லாதிருந்தால் யாதொன்றுமில்லை. வெளிப்படையாய் நாம் ஏதொன்றைக் கேட்பதோ காணுவதோ அறிவதோ செய்கின்றோமோ அவைகளெல்லாம் அகங்காரமாகும். அந்த அகங்காரமாகும் பிரம்மா. அந்தப் பிரகாரமுள்ள பிரம்மா மனதாகவிருக்கின்ற சக்திசொண்டாகும் சிருஷ்டிக்கின்றது. அதனாலாகும் பிரம்ம சிருஷ்டி என்று சொல்லுகிறது. அந்தப் பிரம்மா இல்லையென்றால் யாதொரு சிருஷ்டியுமிராது. அந்தப் பிரம்மா எப்பொழுதும் எக்ஞ்யத்திலிருக்கின்றது. எக்ஞ்யம் என்பது யாகம். அந்த யாககுண்டமானது புருவமத்தியம். அந்தப் புருவமத்தியம் சுழிமுனை என்கிற அக்கினிநேத்திரம். அத் தன்மையுள்ள அக்கினி குண்டத்தினருகே நான் என்கிற அகங்காரமான பிரம்மா இருந்து கொண்டு, விசாராதிகளாகிய வஸ்துக்களை அந்த அக்கினி குண்டத்தில் ஓமம் செய்கின்றது. அந்த ஓமத்திலிருந்து உத்பவித்த தூமம் அதாவது புகையாகும் இக் காணப்படுகிற உலகம். உலகம் என்று சொல்லப்படுவது புகையாகும். அந்தப் புகைக்குள்ளகப் பட்டதுகொண்டாகும் நமக்கு ஸ்திரீ புருஷர்கள் இன்னதென்று

அறிய முடியாமற் போயிற்று. எப்பொழுது உலகமாயிருக்கின்ற அந்தப் புகை நீங்குகிறதோ, அப்பொழுது விளக்கமாக நமக்கு தெரியப்படும். புகை நீங்கவேண்டுமென்றால் ஓமம் செய்த வஸ்துக்கள் எரியவேண்டும். எரிந்தால் பிரகாசிக்கும். பிரகாசிக்கும் பொழுது சர்வமும் தன்னுடைய ஜீவசக்தியாயிருக்கின்ற மனமென்று அறியப்படும். அப்பொழுது அந்த ஜீவ சக்தியாயிருக்கின்ற மனம் தன்னில் தானே அடங்கித் தானுயிருக்கும். இந்த உண்மையை கிரஹிக்கும் பொழுது மாத்திரம் கபும்ஸகம் விட்டு புருஷனுய்த் தீரும்.

சி: ஓ! குருவே! நமக்குத் தாய் மாயை யென்றும் அது சக்தியென்றும் முன் சொன்னீர்களல்லவா? ஆனல் உலகத்தில் ஸ்திரீகளுக்கு கர்ப்பம் உண்டாகிறதும், அவர்கள் குழந்தைகளை பிரசவிக்கவும் செய்கிறார்கள். அப்படி பிரசவிக்கிற வரையாகும் நாம் தாயாரென்று சொல்லுகிறோம். இது எவ்விதமென்று விவரமாய்ச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கு: யார் பிரசவிக்கிறார்கள்?

சி: ஸ்திரீகள்.

கு: ஸ்திரீகள் பிரசவிப்பதன் காரணமென்ன?

சி: கர்ப்பம் உண்டாயிருந்ததினுல்.

கு: கர்ப்பம் எந்தப் பிரகாரத்தில் உண்டாகின்றது?

சி: சம்போகத்தினுல்.

கு: சம்போக மில்லையானுல் கர்ப்பம் உண்டாகுமோ?

சி: உண்டாகாது.

கு: சம்போகம் செய்தால் கர்ப்பம் உண்டாகக் காரணமென்ன?

சி: சுக்கிலம் அதாவது விந்து சென்று விழுகிறதினுலாகும்.

கு: சுக்கிலமில்லை யென்றால் கர்ப்ப முண்டாகுமோ?

சி: உண்டாகாது.

கு: அப்பொழுது கர்ப்பம் உண்டாவதற்கு சுக்கிலம் என்னவாகிறது?

சி: பீஜமாகிறது.

கு: பீஜமென்றால் என்ன?

சி: வித்து அதாவது விதை.

கு: வித்து இல்லாமல் யாதேனும் உண்டாகுமா?

சி: உண்டாகாது.

கு: உங்களுடைய கைவசம் கொஞ்சம் நெல் விதை இருக்கின்றதாக வைத்துக் கொள்ளுவோம். அதைப் பயிர் செய்யவேண்டும். அதை எவ்விதத்தில் பயிர் செய்கிறது?

சி: வயலின் ஒரு பாகத்தை உழுது சேறாக்கி சமப்படுத்தி அதில் விதைக்கிறது.

கு: அந்த வித்தினை விதைக்கவேண்டிய இடத்திலல்லாமல் வேறு இடத்தில் வித்திட்டால் முளைக்குமோ?

சி: முளைக்கும்.

கு: ஒருக் காலமும் முளைக்காது. விதைக்க வேண்டிய இடத்தில் அல்லாமல் வேறு இடத்தில் விதைத்தால் ஒருக் காலமும் முளைக்காது. ஆனல் நீங்கள் அவ்விதையை பத்திரப் படுத்தியிருந்த களஞ்சியத்திலிருந்தோ, அறையிலிருந்தோ முளைக்குமா?

சி: முளைக்காது.

கு: அந்த விதையை ஒரு பாறையின் மேல் அல்லது ஜல முள்ள கிணறு, குளம், நதி, சமுத்திரம் இவைகளில் போட்டாலோ அது முளைக்குமா?

சி: முளைக்காது.

கு: காரணமென்ன?

சி: விதைப்பதற்காக தயார் செய்த இடத்திலல்லாத தினல்.

கு: அப்பொழுது விதைக்க ஏற்படுத்திய இடத்திலல்லாமல் விதைத்தால் முளைக்கிறதில்லை. இந்த விதைக்க வேண்டிய இடத்தில் விதைத்தால் அது முளைத்து, வளர்ந்து, முதிர்ந்து, கதிர் உண்டாகிறது. ஆனல் அந்தக் கதிரை நெற் கதிரென்ருே வயலின் கதிரென்ருே சொல்லுவது?

சி: நெற் கதிரென்றே சொல்லுவது.

கு: அந்தக்கதிர் வயலில் அல்லவா உண்டாயிற்று. எதைக் கொண்டாகும் நெற்கதிரென்று சொல்லுவது?

சி: அந்த வயலில் நெல் விதையை விதைக்கவில்லை யென்ருல் அந்த நெல் கதிர் உண்டாவதில்லை. அப்பொழுது அந்த நெல் விதையிலிருந்துதான் அந்தக் கதிர் உண்டாயிற்று. அதனல்தான் நெற் கதிரென்று சொல்லக் காரணம்.

கு: அந்த வயலைக் கொண்டுள்ள தேவை என்னவா யிருந்தது?

சி: வித்தை விதைத்து பயிர் செய்யவேண்டிய தேவைக் காகும்.

கு: அந்த விதையை வயலில் பயிர் செய்து கதிர் உண்டானபோது வயலிலிருந்து உண்டானதென்று சொல்லக் கூடுமோ?

சி: கூடாது.

கு: ஆனல் அந்த நெற்கதிர் எதிலிருந்து உண்டானது எனச் சொல்லவேண்டும்?

சி: விதையிலிருந்து.

கு: அப்பொழுது அந்தக் கதிரை பிரசவித்தது யாராகும்? வயலோ, வித்தோ?

சி: வித்தாகும் பிரசவித்தது.

கு: ஆனால் அந்த வித்தை விதைக்க வேண்டியதல்லாத யிடத்தில் விதைத்தால் முளைக்கிறதில்லை. அதுமாத்திரமல்லாமல், அந்த வயலை உழுது சமப்படுத்தி அதில் வித்திட்டால், சமமாகித் தளர்ச்சியாயிருக்கும் சேற்றில் அவ் வித்து விழுந்து சேற்றில் பதிந்து தளர்ச்சியினால் பருக்கவும், முளைக்கவும், வேரிறங்கவும் முடிகிறது. அப்பொழுது அதற்கு யாதொரு தடையுமில்லாமல் அது வளர்ந்து வருகிறது. அந்த இடம் தளர்ச்சியில்லா திருந்தால், சேறு இறுகி, விதை நெருங்கி முளைக்கிறதற்கும், வேரிறங்குவதற்கும் முடியாமல் நசித்துப் போகிறது. அப்பொழுது வித்து விதைக்கவேண்டிய இடம் உழுது சமப்படுத்தியும், தளர்ச்சியாயுமிருக்க வேண்டும். இம்மாதிரியேதான் சுக்கிலம் அதாவது விந்து என்னும் வித்தினைப் போட்டு முளைப்பிக்க வேண்டிய இடமாகும்; கற்பம் உண்டானதென்றும், பிரசவித்ததென்றும் சொல்லிவருகிற ஸ்திரீகளுக்குள்ள சம்போகயிடம் என்று நினையுங்கள். அந்த இடம் தவிர மற்ற யாதோரிடத்திலும் சுக்கிலமாகிய வித்தைப் போட்டால் கற்பம் உண்டாகுமா?

சி: உண்டாகாது.

கு: காரணம்?

சி: சுக்கிலமாகிய விதையை விதைக்கவேண்டியதல்லாத மற்ற விடத்தில் போட்டதினாலாகும்.

கு: சுக்கிலமாகிய விதையைப் போடவேண்டிய ஸ்தலமாகிய வயலைத் தளர்ச்சி செய்கின்றதுதான் புணர்ச்சி. அந்த சம்போகம் அதாவது புணர்ச்சியினால் அந்த ஸ்தலம் தளர்ச்சியாகிறது. அப்பொழுது 4-ம் அத்தியாயத்தில் சொன்ன பிரகாரம் முட்டை வடிவாகி சுக்கிலம் சென்று விழுகிறதும் அந்தத் தளர்ச்சியாயிருக்கின்ற ஸ்தலம் அதற்குச் சேர்க்கையாய் நின்று முட்டை வடிவாகிய வித்து முளைத்து வருகிறதற்கு வேண்டி தளர்ச்சியாகிறதும், அப்பொழுது அது பருத்து மூப்படைந்தபோது உடைந்து வெளியில் வருகிறதாகும் சந்தானம். அப்பொழுது அந்த ஸ்திரீ பிரசவித்தாளென்று சொல்லுவதற்கிடமுண்டோ?

சி: இல்லை.

கு: என்ன காரணம்?

சி: அந்தச் சுக்கிலத்திலிருந்தாகும் உண்டானது. சுக்கிலம் இல்லை என்றால் பிரசவிப்பதில்லை.

கு: ஆனால் புருஷன் சுக்கிலத்தைத் தரிக்கின்றது. அதாவது நிலைநிறுத்துகிறதுதான் கற்பம். அதெப்படியென்றால் ஜடமாகிய புறத்தில் சுக்கிலத்தை கற்பிக்கிறது. அதாவது

வெளியில் விடாமல் பத்திரம் செய்து விருத்தியாக்குகின்றது. அப்பொழுதாகும் கற்பம் தரித்ததென்று சொல்லப்படுகிறது. அந்தப்படி செய்யாவிட்டால் சுக்கிலமுண்டாகி சந்தானம் உண்டாவதற்கு முடியுமா?

சி: முடியாது.

கு: அப்பொழுது யாராகும் கற்பம் தரித்திருந்தது?

சி: புருஷன்.

கு: ஆனால் பிரசவிக்கின்றது?

சி: புருஷன்.

கு: இவ்விதம் சொல்லப்படும் புருஷன் தரிக்கின்ற கற்பத்தை ஸ்திரீகளென்று சொல்லப்பட்டவர்களுடைய புணர்ச்சியிடமாகிய வித்தை விதைக்கவேண்டிய யிடத்தில் புணர்ச்சி செய்து தளர்ச்சியாக்கி அந்தத் தளர்ச்சியில் வித்தாகின்ற சுக்கிலத்தை புருஷன் பிரசவித்து, அந்தச் சுக்கிலத்திலிருந்து மனிதரென்றபிமானித்து வருகின்றவராகிய பிரகிருதி, அதாவது இயற்கையாயிருக்கின்ற ரூபத்துடனுள்ளவர் உண்டாகின்றனர். அதில் புருஷரென்று சொல்லுகின்றவரில் அடங்கியிருக்கின்ற சுக்கிலத்திலிருந்து உத்பவித்தால் அதாவது உண்டானல் புருஷரென்று சொல்லி வருகிறவருடைய ரூபமும், ஸ்திரீயென்று சொல்லிவருகின்றவரில் அடங்கியிருக்கின்ற சுக்கிலத்திலிருந்து உண்டானல் ஸ்திரீயென்று சொல்லி வருகிறவருடைய ரூபமும் உண்டாகின்றது.

சி: சுவாமி ஸ்திரீக்கு சுக்கில முண்டோ? அவ்வித முண்டாயினும் அது எப்படி கற்ப பாத்திரத்தில் விழுகிறது?

கு: ஸ்திரீக்கும் சுக்கிலமுண்டு. ஸ்திரீக்கும் சுக்கிலம் உத்பத்தியாகி வருவதாகிய ஒரு வஸ்து அதாவது புருஷனென்றபிமானித்து வருகிறவர்களுக்குள்ள மூத்திர குழாயிக்குச் சமமான ஒரு குழாயுண்டு. அதன் வழியேதான் அவர்களுக்கு மூத்திரமும் சுக்கிலமும் வருகின்றது. நமக்கும் அவ்விதமேதான் மூத்திரக் குழாயில் கூடி மூத்திரமும் சுக்கிலமும் வருகின்றது. ஆனல் ஸ்திரீகளுக்குள்ள குழாயிக்குக் கீழே கெற்ப பாத்திரமாகிற பைபோலிருக்கிற ஒரு தோல் சேர்ந்து மூடப்பட்டிருக்கிறது. அது புணர்ச்சிச் சமயத்தில் வாயுவின் சக்தியினல் திறக்கப்படுகிறது. அது எவ்விதமெனில் ஒரு தோல் பந்துக்குள் பம்பினல் அதாவது குழலால் காற்றை உட்செலுத்துவது போலாகும். அது திறந்த சமயத்தில் அதில் இரத்தம் நீர் முதலியவைகள் சென்று வீழ்ந்து தளர்ச்சியாகின்றது. அதில் புருஷரென்று சொல்லி வருகின்றவருடையதோ, அல்லது ஸ்திரீகளென்று சொல்லிவருகின்றவர்களுடையதோ சுக்கிலம் முட்டை வடிவமாகச் சென்று விழு

வதும், அது அந்தத் தளர்ச்சியிலிருந்து பெரிதாகி முதிர்ந்து உடைந்து வெளியில் வருகின்றது. அதில் ஸ்திரீ என்கிற ரூபமும் புருஷர் என்கிற ரூபமும் உண்டாகின்றன.

சி: ஸ்திரீயின் சுக்கிலம் ஸ்திரீ ரூபமென்றும், புருஷனின் சுக்கிலம் புருஷ ரூபமென்றும் சொன்னீர்கள் அல்லவா? அந்த ஸ்திரீரூபம் சிலது தகப்பனின் நிறமும், புருஷரூபம் சிலது தாயின் ரூபமுமாய்க் காணப்படுகிறதே அதன் காரணம் என்ன?

கு: புணர்ச்சி சமயத்தில் புருஷன் ஸ்திரீயிடத்தில் அதிக மோகத்துடன் ஏக விசாரமாயிருக்கின்ற சமயத்தில் சுக்கிலம் இளகினதானல் அந்த ஸ்திரீயினுடைய ரூபம் அச்சுக்கிலத்தில் பிரதி பிம்பிக்கின்றதாகும். ஸ்திரீக்கும் இதேமாதிரியாகத்தான் புருஷனிடத்தில் அதிக மோகத்துடன் ஏக விசாரமாயிருக்கின்ற சமயத்தில் சுக்கிலம் இளகினதானல் அப்புருஷனுடைய ரூபம் ஸ்திரீயினுடைய சுக்கிலத்தில் பிரதிபிம்பிக்கின்றது. அப்பொழுது அன்னியோன்னியம் பிரதிபிம்பிக்கின்றதே ரூபமாக ஏற்படுகின்றது. காரணம்? விசாரமாகும் ரூபம். விசாரமில்லையானல் ரூபமில்லை. அந்த விசாரம் மனதிலிருந்து உண்டாகின்றது. அந்த மனந்தான் சுக்கிலம். அச் சுக்கிலத்தினல்தான் சிருஷ்டி. அந்தச் சிருஷ்டியே ரூபம். அந்த ரூபமே விசாரம். இதனல்தான் நிற வித்தியாசம் ஏற்படுகின்றது. அதற்குள்ள திருஷ்டாந்தம்:—குதிரையை இணை சேர்க்கின்றது. எப்படியெனில் நல்ல அழகுள்ளதான ஒரு ஆண் குதிரையை பெண் குதிரையின் முன்பு நிறுத்தி அதன் பின் அப்பெண் குதிரையினுடைய கண்களைக் கட்டி கோவேறு கழுதையை அந்தப் பெண் குதிரைக்குத் தெரியாமல், அதனுடன் இணை சேர்க்கின்றது. அந்தச் சமயத்தில் தன் முன்னிலையில் நிறுத்திய ஆண் குதிரைதான் தன்னுடன் இணை சேருகிறதென்று அது நினைக்கின்றது. அப்பொழுது அந்தக் கோவேறு கழுதையினுடைய பீஜமாகிய சுக்கிலம் இளகுகிற சமயம் அந்தச் சுக்கிலத்தில் பெண் குதிரையினுடைய விசாரம் அதாவது நினைப்பு பிரதி பிம்பித்து, கர்ப்ப பாத்திரத்தில் சென்று விழுகிறது. அதன் பிறகு கோவேறுக் கழுதையை அப்புறப்படுத்தி பெண் குதிரையினுடைய கண் கட்டியதை அவிழ்த்துவிடப்படுகிறது. அப்பொழுது மேல் சொன்ன புணர்ச்சை சமயத்தில் உண்டாயிருந்த விசாரத்தை அனுசரித்து தன் முன்பு நிறுத்திய ஆண் குதிரையே தன்னேடு புணர்ச்சி செய்ததென்ற விசாரத்திற்கனுசரித்து தன் முன்பு நின்றிருந்த ஆண் குதிரை ரூபமான குட்டி உண்டானது. ஆனல் உண்மையில் அப் பெண் குதிரையோடு சேர்ந்தது கோவேறு கழுதையாகும். அதை அறியாது

அதன் முன்பு நின்றிருந்த ஆண் குதிரையே இணை சேர்ந்தது என்ற விசாரத்துக்கு அனுசரித்து குட்டி உண்டாயிற்று. அதுகொண்டு ரூபம் என்று சொல்லுவது விசாரமாகும். ஆனால் அந்தச் சுக்கிலம் இளகும்பொழுது எப்படி விசாரமிருந்ததோ அதை அனுசரித்துதான் உத்பத்தி ஏற்படுகின்றதென்பது இதிலிருந்து நமக்கு விளங்குகின்றதல்லவா?

சி: ஆம். மேற் கூறின பிரகாரமென்று வெளிப்படுகிறது. ஆனால் சுவாமி! புருஷ சுக்கிலம் கொண்டு மாத்திரமோ, அல்லது ஸ்திரீ சுக்கிலம் கொண்டு மாத்திரமோ ஒரு சந்தானம் உண்டாவதற் கிடமுண்டோ?

கு: அவ்விதம் உண்டாகிறதல்ல. ஸ்திரீகளுக்கு சாரதம், ரத்தம், சுக்கிலம் இவை மூன்றும் உண்டு. சம்போக சமயத்தில் அவர்களுக்கு முதலில் சாரதம் என்ற நீரும், ரத்தம் என்கிற சுரோணிதமும் உண்டாகும். கர்ப்பப் பை திறந்திருக்குமானால் நீரும் சுரோணிதமும் அதில் விழுகிறது. அப்பொழுது ஸ்திரீயினுடையதோ, புருஷனுடையதோ, அதில் யாருடைய சுக்கிலம் முன்னே இளகுகிறதோ அதானது 4-ம் அத்தியாயத்தில் சொன்ன பிரகாரம் முட்டை வடிவமாகச் சென்று விழுகிறது. புருஷனுடைய சுக்கிலம் கர்ப்பப்பையில் விழுந்ததின் பின் ஸ்திரீயினுடைய சுக்கிலம் முன் சொன்ன முட்டை வடிவாய் விழுந்ததானால், அதுவும் ஒரு சிசுவாய்த்திரும். அது முட்டை வடிவாய் விழாவிட்டால் சுரோணிதத்தில் விழுந்து அதோடு கரைந்துவிடும். அதனால்தான் ஆண்களுக்குத் தோல் மிருதுவாக இல்லாத காரணம். அதே விதமாய் முட்டை வடிவமாய் ஸ்திரீயினுடைய சுக்கிலம் கர்ப்பப் பையில் விழுந்ததன் பின், புருஷனுடைய சுக்கிலம் முட்டை வடிவாய் விழுந்தால் அதுவும் ஒரு சந்தானமாகிறது. அப்படி முட்டை வடிவாகாதே அந்தப் புருஷனுடைய சுக்கிலம் சுரோணிதத்தில் விழுந்தால் அது சுரோணிதத்தோடு கரைந்துவிடும். அந்தப் பிரகாரத்தில் ஜனிக்கிறதாகும் பெண் குழந்தைகள். அதனால்தான் ஸ்திரீகளுடைய ஜடம் மிருதுவாக இருக்கக் காரணம்.

சி: ஸ்திரீ புருஷர்களுடைய சுக்கிலம் இரண்டும் ஒரே மாதிரியல்லவா? அப்படியிருக்க புருஷனுடைய சுக்கிலம் சுரோணிதத்தோடு சேர்ந்தபொழுது உண்டாகிற பெண் குழந்தைகளின் தோல் மிருதுவாயிருக்கவும், ஸ்திரீயினுடைய சுக்கிலம் சுரோணிதத்தோடு சேர்ந்தபொழுது உண்டாகிற ஆண் குழந்தைகள் தோல் மிருதுவில்லாமலிருப்பதற்கு காரணம் என்னவென்று சொல்லித் தரவேண்டும்.

கு: புருஷனுடைய சுக்கிலம் மிருதுவாயும், இளகலாயும், ஸ்திரீயினுடைய சுக்கிலம் கட்டியாயுமிருக்கும். அதனால்தான் அந்த வித்தியாசங்களுண்டாகக் காரணம்.

சி: சுவாமி ஸ்திரீகளுடைய சுக்கிலம் கெட்டியாயும் ஆண்களுடைய சுக்கிலம் மிருதுவாயு மிளகலாயு மிருக்கக் காரணமென்ன?

கு: ஸ்திரீகளுக்கு சம்போக காலத்தில் மூன்றுவிதமான முறையில் முதலில் சுரதம் என்னும் நீரும் இரண்டாவதாக சுரோணிதம் என்னும் இரத்தமும், மூன்றாவதாக வீரியமாயிருக்கின்ற சுக்கிலமும் இளகிவருகிறது. இதுகள் மூன்றும் தனித்தனியா யிளகிவருகிறதினால் சுக்கிலம் கெட்டியாய் அதாவது கட்டியாய் வரக் காரணம். ஆண்களுக்கு மேல் சொன்ன சுரதம், சுரோணிதம், சுக்கிலம் மூன்றும் தனித் தனியில்லாமல் ஒன்றாய்ச் சேர்ந்ததினால், அது நேர்மையாயும் மிருதுவாயும், இளகலாயுமிருக்கக் காரணம். ஆனால் ஸ்திரீ புருஷர்களுடைய சுக்கிலத்தை ஊதிக்கட்டி நிலை நிறுத்தும் பொழுது ஞானம் உண்டானது. அது ஊதிக்கட்டி நிறுத்தும் போது மணியாகும். அதற்காகும் ரசமணியென்று சொல்லுவது. ரசம் சுக்கிலமாகும். அந்த சுக்கிலத்தை ஊதிக்கட்டி நிறுத்துவதற்காகும் ரசவாதம் என்று சொல்லுவது, ரசம்—சுக்கிலம். வாதம்—வாயு. அதனால் நம்முடைய ஜீவசக்தி வாயு ரூபமாய் வெளியில் போய் நசிக்கின்றதினை அம்மாதிரி நசிக்க விடாதே. நம் உள் வழியாய் மேலும், கீழும் ஊதி சுக்கிலத்தைக் கட்டி நிறுத்தவேண்டும். அப்பொழுதாகும் நம்முடைய பிறவி பயனடைவதாகும்.

அத்தியாயம் 7

சி: சுவாமி! விசாரமே ரூபமென்றும், ரூபம் விசாரமாகு மென்றும் கற்பித்தீர்களல்லவா? ஆனால் அம்மாதிரியே காணப் பட்டு வருகின்றதுமாகும். அதனுடைய பொருள் என்ன வென்று எனக்குப் புலப்படவில்லையே?

கு: இப்படி கேட்கப்படுவதும், காணப்படுவதும், அறியப் படுவதும், ஒன்றுமில்லாததாகும். இவையெல்லாம் தன்னி லிருந்துண்டானதென்றும் தன்னிலேயே லயிக்கப்படுகிற தென்றும், இதற்கு முன்பு பல தடவைகளிலும் சொல்லி யிருக்கிறதல்லவா? ஆனால் இவைகளைக் கேட்பதும், காண் பதும், அறிவதுமாகிய இவைகளெல்லாம் சொர்ப்பனமாகும்.

சி: குருவே! இவைகள் எல்லாம் சொர்ப்பனமா? நான் இப்பொழுது தூங்கவில்லையல்லவா? தூங்குகையில் தானே சொர்ப்பனம் காண்பது. இப்பொழுது எப்படி சொர்ப்பன மென்று சொல்லுவது?

கு: ஓஹோ! நீர் இப்பொழுது உணர்வோடுதானிருக்கின் றீரோ! ஒருக்காலுமில்லை. இப்பொழுது தூங்குவதாகும். அத் தூக்கத்தில் கேட்பதும் காண்பதும், அறிவதுமாகுமிவை யெல்லாம்.

சி: சுவாமி; என்ன இவ்விதம் சொல்லுகிறீர்? நான் தூங்கும்பொழுது யாதொன்றுமறிவதில்லை. இப்பொழுது நான் உணர்வுடனிருக்கிறதாகும். அது கொண்டாகும் இவை யெல்லாம் கேட்பதற்கும், காண்பதற்கும், அறிவதற்கும் வழி யானது. இவ்விதமிருக்க, இது தூக்கமென்றும், இக்காணுகிற தெல்லாம் சொர்ப்பனமென்றும் சொல்லுவதை எவ்விதத்தில் நம்புவது?

கு: ஆனால் உங்களுக்கு இப்பொழுது தூக்கம் தெளிந் திருக்கிறதல்லவா? தூக்கம் தெளிந்திருக்கிற நிலைமைக்கு என்ன வென்று சொல்லவேண்டும்?

சி: இந்த நிலைமைக்கு ஜாக்கிரதை யென்றாகும்.

கு: எத்தனை நிலைமைகளுண்டு?

சி: மூன்று நிலைமைகளுண்டு.

கு: அவைகளென்ன வெல்லாமாகும்?

சி: ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி.

கு: இப்பொழுது எந்த நிலைமையாகும்?

சி: ஜாக்கிரதையாகும்.

கு: ஜாக்கிரதையென்று சொல்லப்படுவது என்ன?

சி: உணர்வோடிருக்கிறது.

கு: இப்பொழுது உமக்குணர்வுண்டோ?

சி: உணர்வுண்டு.

கு: உணர்வுண்டானால் உம்மை நீர் அறியவேண்டியதல்லவா?

சி: ஆம். அறியவேண்டியதாகும்.

கு: ஆனால் நீர் உம்மை யாராகுமென்று அறிந்திருக்கிறீரா?

சி: இல்லை. என்னை நான் யாரென்றறிந்ததில்லை.

கு: உம்மை நீர் அறிந்ததில்லையென்று, நீரேதான் சொல்லுகிறீர். ஆனால் உம்மை நீர் அறியவில்லையென்றால் பின்னர் உமக்கு உணர்விருக்கிறதென்று சொல்வதற்கு வழியுண்டா?

சி: சொல்லுவதற்கு வழியில்லை.

கு: உணர்வில்லாத நிலைமைக்கு ஜாக்கிரதையென்று சொல்லலாமா?

சி: சொல்லக் கூடாது.

கு: ஜாக்கிரதை அல்லவென்றால் பின் என்னவாயிருக்கும்?

சி: சுழுத்தியாயிருக்கும்.

கு: சுழுத்தியென்றால் என்ன?

சி: தூக்கம்.

கு: ஆனால் உமக்கு இப்பொழுது நல்ல தூக்கமாகும். அதற்கு உதாரணம்:—நீர் படுத்துத் தூங்குகிற சமயம், நான் இப்பொழுது தூங்கிக்கொண்டிருக்கிறேனென்கிற நினைவு உண்டா?

சி: இல்லை.

கு: இவ்விதமேதான் நீர் இப்பொழுது தூங்குகிறீர். அப்படித் தூங்குவதனால்தான், நான் இப்பொழுது தூங்குகிறேன் என்கிற நினைவு இல்லாமலாயிற்று.

சி: நாம் தூங்குகிற சமயத்தில் இவ்விதமான யாதொரு நிலைமையும் நாம் காணவில்லையல்லவா? இப்பொழுது இவைகள் காணப்படுகின்றன. இப்படிக் காணப்படுவதற்குக் காரணமென்ன?

கு: நீர் தூங்கும்பொழுது சொற்பனம் காண்பதில்லையா?

சி: காண்பதுண்டு.

கு: அந்தச் சமயத்தில் நான் இப்பொழுது தூங்கிக் கொண்டிருக்கிறேனென்றும் இந்தக் காணப்படுவது சொற்பனமென்றுள்ள நினைவு உமக்கு இருக்கின்றதா?

சி: இல்லை.

கு: அந்தச் சொற்பனம் அனுபவித்துக் கொண்டிருக்கும் பொழுது உமது நினைவென்னவாயிருந்தது?

சி: இது ஜாக்கிரதாவஸ்தையென்றும், உண்மையில் நான் அனுபவிக்கிறதென்றுமாயிருந்தது.

கு: தூக்கம் விழித்தபொழுதோ?

சி: நான் இதுவரைக்கும் தூங்கிக் கொண்டிருந்தே னென்றும், அப்பொழுது தோன்றியயாவும் தூக்கத்தில் கண்ட சொற்பனமென்றும் தெளிவாகிறது.

கு: இதைப் போலவே நாம் இப்பொழுது தூங்கிக் கொண்டிருக்கிறோம். அதனால் இக் கேட்கப்பட்டதும், காணப் பட்டதும், அறியப்பட்டதுமாகிய யாவும் சொற்பனமே. அது எவ்விதமென்றால் நீர் தூங்கும்பொழுது சொற்பனம் காணுவதும் அது உண்மையில் நாம் அனுபவிக்கிறதாயு மிருந்தது. ஆனால் அப்போதைய தோற்றம், தூக்கம் விழித்த போதாகும்; நாம் அப்பொழுது கண்டது உண்மையல்ல வென்றும், நாம் தூங்கியது கொண்டு சொற்பனம் கண்ட தென்றும் அறிவானது. இதைப் போலவேதான் இது தூக்க மாகும். இதில் காணுவதெல்லாம் சொற்பனமாகும். இந்தத் தூக்கம் எப்பொழுது தெளிகின்றதோ அப்பொழுது மாத் திரமே, நானிதுவரை தூங்கிக் கொண்டிருந்தேனென்றும், அப்பொழுது பார்த்ததெல்லாம் சொற்பனமா யிருந்ததென்றும் புலப்படுகின்றது.

சி: சுவாமி! இந்த நிலைமை தூக்கமென்றும், இப்பொழுது காண்பதுயாவும் சொற்பன மென்றும் தெளிவாகிறது. ஆனால் நான் சாதாரணமாய்த் தூங்குகிறதும், சொற்பனம் காண்கிறது முண்டல்லவா? அதற்கென்னவென்று சொல்ல வேண்டும்?

கு: உமக்கு இந்த தூக்கமும், சொற்பனமுமல்லாமல் வேறு நீர் தூங்குகிறதோ சொற்பனம் காணுகிறதோ உண்டாகிறதில்லை.

சி: சுவாமி! என்ன இவ்விதம் கற்பிக்கின்றீர்கள். நான் சாதாரணமாய்த் தூங்குகிறதும், சொற்பனம் காண்கிறது முண்டு. இது எனக்கு அனுபவமா யிருக்கையில் தாங்கள் இல்லையென்று சொல்லுவதை எப்படியாகும் நம்பவேண்டியது?

கு: ஆனால் நீர் சாதாரணமாய்த் தூங்குவது உண் டென்றும், சொற்பனம் காணுவது உண்டென்றும் சொல்லு வது எவ்விதமென்றால் உம்முடைய வீட்டிலிருந்து சுமார் ஒரு நாழிகை தூரத்துக்கப்புரத்தில் ஒரு தொழிற்சாலை உண்டா யிருந்தது. அத்தொழிற்சாலையில் நீர் இருக்கும் பொழுது உம்முடைய பார்வை பார்க்கும் தூரம் வரைக்கும், சப்தம் கேட்கும் தூரம் வரைக்கும், என்ன சங்கதிகள் நடக்கின் றனவோ அவைகள் யாவும் கேட்கவும், காணவும் அதை உங்க ளுக்கு அறியவும் முடியும். அந்த இடம்விட்டு சொந்த வீட் டிற்கு வந்தால் தொழிற்சாலையில் நடக்கிற யாதொரு சங்கதி

களும் உங்களுக்குக் கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ முடியுமா?

சி: முடியாது.

கு: அதென்ன காரணம்?

சி: தொழிற்சாலையிலுள்ள எவ்வித சங்கதிகளையும் நான் காணாததினால்.

கு: ஏன் காணுகிறதில்லை?

சி: தொழிற்சாலையை விட்டு சொந்தக் கிரஹத்திற்கு வந்ததினால்.

கு: தொழிற் சாலையை விட்டுச் சொந்த வீட்டிற்கு வந்தபோது தொழிற்சாலையிலுள்ள எவ்வித சங்கதியும் கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ முடிகிறதில்லை. ஆனால் அச்சமயத்தில் நீர் தூங்கினீரென்று சொல்லுவதற்கு இடம் உண்டா?

சி: இடமில்லை.

கு: அதெப்படியென்றால் இக் காணப்பட்ட ஜடம் உலகமாகும். அதனுடைய அடிப் பாகம் தொழிற் சாலையும், மேல் பாகம் சொந்த வீடுமாகின்றது. ஆனால் தொழிற்சாலை இருக்கிற பூமி வேறு என்றும் சொந்த வீடு இருக்கின்ற பூமி வேறு என்றும், இவ்விதம் இரண்டு பூமிகளுண்டோ?

சி: இல்லை, ஒரே பூமியாய்த்தானிருக்கிறது. ஆனால் ஒரு பாகத்தில் சொந்த வீடும், மற்றொரு பாகத்தில் தொழிற் சாலையுமிருக்கின்றது.

கு: இந்த விதமாகத்தான் இக் காணப்பட்ட உலகு நமக்கு ஒரு தொழிற்சாலையாகும். நீர் சாதாரணமாக தூங்குகிறேனென்று சொல்லும் சமயம் இந்தத் தொழிற் சாலையைவிட்டு சொந்த வீட்டிலிருக்கின்ற சமயமாகும். ஆனால் தொழிற் சாலையை விட்டு சொந்த வீட்டிலிருந்தபோது, தொழிற்சாலையிலே யாதொன்றையும் கேட்கவோ, காணவோ, அறியவோ முடியாமலிருக்கின்ற நிலைமை, நீர் சாதாரணமாய்த் தூக்கமென்று சொல்லிவருகிற நிலைமையாகும். அது தூக்கமல்ல. தொழில் விட்ட சமயமாகும்.

சி: ஆனால் அந்தத் தொழிற்சாலையை விட்டு வந்தவர் யாரென்று எனக்குத் தெரியவில்லையே?

கு: கேட்பதும், காணுவதும், அறிவதும் உம்மில் யாராகும்?

சி: என்னுடைய மனமாகும்.

கு: மனமில்லாவிடில் உமக்கு யேதேனும் கேட்பதற்கும், காண்பதற்கும், அறிவதற்கும், தொழில் செய்வதற்கும் முடியுமா?

சி: முடியாது.

கு: அப்பொழுது யாராகும் தொழிற்சாலையி லிருந்த தென்று தெரியவேண்டியது?

சி: மனமாகும்.

கு: ஆனல் தூங்குகிறதென்று சொல்லுகிறது; மனம் சொந்த வீட்டிற்கு வந்திருக்கிறதற்காகும். அதற்குத் தூக்கம் என்று சொல்லுவதற் கிடமுண்டோ?

சி: இடமில்லை.

கு: ஆனல் அதற்கென்னவென்று சொல்லவேண்டும்?

சி: மனதினுடைய வேலை விட்ட சமயமென்றாகும்.

கு: தவிர ஒரு கடையில் கடைக்காரன் அநேக சாமான்களை வைத்துக்கொண்டு, பகல் முழுதும் வியாபாரம் செய்துகொண்டிருக்கிறன். வியாபாரத்தை நிறுத்துகிற சமயம் சாமான்களை எடுத்து உள்ளே வைத்துக் கதவை மூடி, தான் உள்ளிலிருக்கிறன். அந்தச் சமயத்தில் அவனுக்கு யாதேனும் வியாபாரங்களுண்டா யிருந்தனவா?

சி: உண்டாயிருந்ததில்லை.

கு: அந்தச் சமயத்திற்கு அவனுக்கு என்ன சமயம் என்று சொல்லவேண்டும்?

சி: வியாபாரத்தை நிறுத்தின சமயம் என்று சொல்ல வேண்டும்?

கு: இதே விதம்தான் மனம் ஒரு வியாபாரக்காரனுகும், அந்த மனம் விசாராதிகளா யிருக்கின்ற சாமான்களை வைத்துக் கொண்டு வியாபாரம் செய்து கொண்டிருக்கின்றது. அந்த வியாபாரத்தை நிறுத்தி விசாராதிகளா யிருக்கின்ற சாமான்க ளுடன் உள்ளே போய் கதவை மூடியிருக்கிறது. அந்த நிலைமைக்காகும் நாம் தூங்குகிறுேமென்று சொல்வது. அது தூக்கமல்ல. அது மனதினுடைய வியாபாரம் நிறுத்தின சமயமாகும். தூக்கமென்று சொல்ல வேண்டியது இப் பொழுதுள்ள நிலைமைக்கேயாகும்.

சி: குருவே! தூக்கம் இவ்விதமானல் சொற்பனம் எவ்விதமுண்டாகும்?

கு: ஆனல் நீங்கள் தூங்காமலிருந்து சொற்பனம் காண்கிறதில்லையென்று சொன்னது சரியல்ல. தூங்கும்போது ஒரு பொழுதும் சொற்பனம் காண்பதில்லை. அவ்விதம் சொற்பனம் காண்பதானல் அந்தச் சமயத்திற்கு தூக்கம் என்று சொல்வதற்கிடமில்லை. அதெப்படி என்றால் நீங்கள் முன் சொல்லப் பட்ட தொழிற்சாலையை விட்டுச் சொந்த வீட்டிற்கு வந்திருந்த போது தொழிற்சாலையிலிருந்து

கேட்டதும், கண்டதும், அறிந்ததும், செய்ததுமாகிய எல்லா காரியங்களைப் பற்றியும் நீர் ஆலோசிக்கிறதில்லையா?

சி: ஆலோசிக்கிறதுண்டு.

கு: தூங்கும் சமயத்தில் ஆலோசிக்க முடியுமா?

சி: முடியாது.

கு: அவ்விதம் ஆலோசிப்பதற்குச் சொர்ப்பனம் என்று சொல்லக் கூடுமா?

சி: கூடாது.

கு: ஆனால் அந்த நிலைமைக்கு என்னவென்று சொல்ல வேண்டும்?

சி: நான் செய்தவைகளையும், செய்ய வேண்டியவைகளுமாகிய தொழில்களைப்பற்றி யோசிக்கின்ற சமயமென்று சொல்லலாம்.

கு: ஆனால் யோசனை எப்பொழுது? எவ்விடமிருந்து?

சி: தொழிலை விட்டுச் சொந்த வீட்டில் வந்திருக்கிற சமயம்.

கு: ஆனால் நீர் தூக்கமென்று சொல்லுகின்ற சமயம் மனதினுடைய தொழில் விட்டுச் சொந்த வீட்டிலிருக்கின்ற நிலைமையல்லவா? அவ்விதமிருக்கும் பொழுது, மனது தன்னுடைய தொழில்களைப் பற்றி ஆலோசிப்பதைத்தான் சொற்பனம் என்று சொல்லுகிறது. அதெப்படி என்றால் நீர் தொழிலை விட்டுச் சொந்த வீட்டிற்கு வந்திருந்து உமக்கு அறிவுண்டாகியதற்குப் பின் நடந்ததான காரியங்களில் சிலது உமக்கு ஞாபகமிருக்கிறது வரை ஆலோசிக்க முடிகிறதும், ஆலோசிக்கின்றதும் அல்லாமல், மேலும் இன்னது செய்ய வேண்டுமென்றும், செய்விக்க வேண்டியதென்றும் ஆலோசிக்க முடிகிறதும், ஆலோசிக்கின்றதும் சகஜமல்லவா? அதைப் போலவேதான் மனதினுடைய தொழிலை விட்டுச் சொந்த வீட்டிலிருந்து தன்னால் கேட்கப்பட்டதும், காணப்பட்டதும், அறியப்பட்டதும் ஆலோசிக்கின்றதற்குத்தான் நீர் சாதாரணமாய் சொற்பனம் காணுகிறதென்றும் சொல்லுகிறது. அது சொற்பனமல்ல. மனம் தொழிற்சாலையை விட்டு, சொந்த இடத்திலிருந்துகொண்டு முன் சொன்ன சங்கதிகளைப் பற்றி ஆலோசிக்கின்றதாகும். இந்த ஆலோசனைக்குச் சொற்பனம் என்று சொல்லுவதற்கிடமுண்டா?

சி: இடமில்லை.

கு: அதுமட்டும் அல்ல; நீர் ஜனித்த பின் கேட்காதிருந்ததோ காணாதிருந்ததோ, அறியாதிருந்ததோ ஆகிய யாதொரு சங்கதியையாவது சொற்பனம் காணுகிறதுண்டா?

சி; காணுகிறதுண்டு.

கு: நீர் பிறந்ததின் பிறகு கேட்காதவைகளோ, காணாதவைகளோ, அறியாதவைகளோ, ஆகியயாதொன்றைக்குறித்தும் சொற்பனம் காண்பதில்லை. ஆனால் ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்டிரேலியா, பிரான்சு, காசி, ராமேஸ்வரம், கிஷ்கிந்தா, அயோத்தியா, ஹரித்துவாரம், சத்தியலோகம், பாதாளம், நரகம், சொர்க்கம் முதலானவைகளைப் பார்த்ததாகவும், மேலே பறந்து சமுத்திரத்தில் விழுந்து, தீயில் குதித்து யானை முட்டி, சிறுத்தை பிடித்து, புலி கடித்து, பாம்பு கடித்து, மரத்தின்மேலிருந்து விழுந்து, கப்பலேறி, ஓடி, விழுந்து, தாயார் இறந்து, தகப்பனார் இறந்து, குழந்தை கிணற்றில் விழுந்து, வண்டியில் போய், யுத்தம் செய்து வெட்டுக்காயமுண்டாகி, சண்டையாகி, கால் முறிந்து, கை முறிந்து, கண் குருடாகி, தூக்குப்போட்டிறந்து, உத்தியோகம் தரித்து, ஆற்றில் விழுந்து, வியாபாரம் செய்து இன்னும் மற்றுமுள்ள அநேக விதத்திலானதுகள் சொற்பனத்தில் காணுகிறதில்லையா? இவைகளில் ஏதாவது நீர் ஜனித்ததின் பின் கேட்காததோ, அறியாததோ காணாததோ ஆன சங்கதிகளாகுமா?

சி: அல்ல.

கு: அதனால் மனம் தன்னுடைய தொழிலை விட்டு சொந்த வீட்டிலிருந்து தன்னால் கேட்கப்பட்டதும், காணப்பட்டதும், அறியப்பட்டதும், ஆலோசிக்கின்றதாகும் அந்த நிலைமை. அதனால் அது சொற்பனமல்ல. சொற்பனமென்பது இப்பொழுது நாம் அனுபவிக்கின்றதாகும்.

சி: சுவாமி இது சொற்பனமென்று சொன்னீர்களல்லவா? ஆனால் இவ்வளவு அதிகமாகச் சொற்பனம் அனுபவிப்பதில்லையல்லவா?

கு: சாதாரணமாகப் படுத்துத் தூங்குகிறேன் என்று சொல்லுகிற சமயத்தில் நீர் அனுபவித்தேன் என்று சொல்லுகிற சொற்பனமோ, அதல்லாமல் இப்பொழுது நீர் அனுபவிக்கிற சொற்பனமோ அதிகம்?

சி: இப்பொழுது அனுபவிக்கிற சொற்பனமாகும்.

கு: இல்லை; ஆனால் நீர் தூங்குகிறதென்று சொல்லும் சமயத்தில் அனுபவிக்கும் சொற்பனத்தினுடைய ஒரு நிமிஷ நேரமாவது இப்பொழுது அனுபவிக்கிறதில்லை. அதெப்படியென்றால் இப்பொழுதுள்ள அனுபவம் நிமிஷ சொற்பனமும், தூங்கும் சமயத்தில் அனுபவித்ததென்று சொல்லுகிற சொற்பனம் நீண்ட சொற்பனமும் ஆகும். நீர் சாதாரணமாக படுத்துத் தூங்கினேனென்று சொல்லுகிற சமயத்தில்,

அனுபவித்ததென்று சொல்லுகிற சொற்பனம் எவ்வளவு நேரம் உண்டாயிருக்கலாம்?

சி: மிகவும் குறைந்த நேரமாகும். அதாவது ஒன்றோ, இரண்டோ நிமிஷ நேர முண்டாயிருக்கலாம்?

கு: அந்தச் சமயத்திற்குள்ளாக நீர் எவ்வளவோ அநேக காலத்திலுள்ள நிலைமைகளை அனுபவிக்கிறீர். எப்படியென்றால் தாய் இறந்து, தகப்பனிறந்து, காசியிலும், ராமேஸ்வரத்திலும், திருநெல்லையிலும் போய்ப் பிண்டம் வைத்து, இன்ன வருஷம், இன்ன மாதம், இன்ன தேதியிலாகும் நான் பிறந்து, இன்றைக்கு அறுபது வயதாயிற்று, ஷஷ்டிபூர்த்தியாகி நான் வாதரோகம் பிடித்துக் கிடக்கிறது, அதிக கஷ்டப்பட்டுப் போய், வெட்டுண்டு, காயம்பட்டு, கேஸில் தண்டித்துச் சிறைக்குப்போய், இராஜாவாகி, இன்ன யிடத்தில் இறந்து இன்னயிடத்தில் பிறந்து, இன்ன மனிதனை தூக்கத்தில்போய்க் கூப்பிட்டு, நாங்களிருவரும் ஒரே யிடத்தில் படுத்துத் தூங்கி, என்றிவ்விதத்தில், அநேக சதுர்யுக காலங்களில் அனுபவித்த தாக சொற்பனம் கண்டு பயப்பட்டு அழவும் செய்கிறீர். அச்சமயம் நீர் சொல்லும் தூக்கத்திலிருந்து விழித்தால், இப்படியான ஏதேனும் உண்டானதோ, அனுபவித்ததோ உண்டா?

சி: அப்படி உண்டானதோ, அனுபவித்ததோ இல்லை.

கு: ஆனால் மேற்சொல்லிய விதம் அனுபவித்ததாய்த் தோன்றியது, எவ்வளவு நேரத்திலாகும்?

சி: ஒரு நிமிஷ நேரத்திலாகும்.

கு: ஒரு நிமிஷ நேரங்கொண்டு எவ்வளவு காலத்திய விருத்தாந்தங்களாகும் நமக்குத் தோன்றி அனுபவிக்கப் படுகிறது?

சி: அது அநேக சதுர்யுக விருத்தாந்தங்கள், அதாவது சங்கதிகள் அனுபவித்ததாய்த் தோன்றுகிறது.

கு: அப்பொழுது எதாகும் நீண்ட சொற்பனம்?

சி: தூங்குகிறோமென்று எண்ணி வருகிற சமயத்தில் தோன்றுகிற சொற்பனமாகும்.

கு: ஆனால் நாம் இப்பொழுது தூங்குகிறதாகும். இப்படி தூங்குகிறதனால்தான், உலகம் உண்டென்றும் தாய் தகப்பன் மார் இருக்கிறதென்றும், பிறந்தோம் என்றும், ஐந்து வயது முதல் நூறுவயது, நூற்றிருபது வரையிலும் ஜீவித்திருந்தேன் என்றும், பிறந்தவுடன் செத்ததென்றும், மற்றுமுள்ள காணப் பட்ட எல்லா நிலைமைகளும் தோன்றுகின்றன. இது நமக்கு ஒரு நிமிஷ நேரத்துச் சொற்பனமாகும். எந்தச் சமயத்தில் நம்முடைய இத்தூக்கம் தெளிகின்றதோ, அப்பொழுது

மாத்திரமே நாம் இதுவரையிலும் தூங்கிக்கொண்டிருந்தோம் என்றும், கண்டதெல்லாம் சொற்பனமா மென்றும் தோன்றுவதாகும். ஆகையினால் இப்பொழுது நமக்குத் தூக்கமும், இதில் கேட்கிறதும், காணுகிறதும், அனுபவிக்கிறதும் அறிகிறதும் சொற்பனமுமாகும். ஆனால் இது உண்மையல்ல. அதல்லாமல் தூக்கமென்று சொல்லுவது அறியாமைக்காகும். அதாவது அறிய வேண்டுவதை அறிந்து கொள்ளாததற்கேயாகும்.

சி: சுவாமி! நான் சுகமாய்த் தூங்கினேன், யாது ஒன்றையும் அறியவில்லை என்றும், தூக்கம் விழித்த பின் சொல்லுகின்றோம். இந்த வாசகத்தில் ஒன்றுமே தெரிகிற தில்லை. தூங்கிப் போனதென்று அறியப்படுகிற ஒரு அறிவு மிச்சப் படுகிறதல்லவா? அது என்ன?

கு: இந்த வார்த்தையானது ரொம்பவும் தவறாகும். எப்படி என்றால் நீர் தூங்குவதற்காகப் படுத்து தூக்கம் வருமளவும், நான் தூங்குவதற்காகப் படுத்துக்கொண்டு இருக்கிறேனென்றும், தூக்கம் விழித்தால் நான் இது வரையிலும் தூங்கிக் கொண்டிருந்தேன் என்றும், ஒரு நினைவு உண்டாயிருக்கலாம். தூங்குகிற சமயத்தில் நாம் தூங்கு கிறோம் என்கிற நினைவு உண்டாயிருந்ததோ?

சி: இல்லை.

கு: தூக்கம் விழித்தபோது தூங்கிக் கொண்டிருந்தோம் என்று நீர் அனுமானிப்பதல்லாமல் தூங்கியபோது இன்ன நிலைமையிலிருந்தோமென்றும் உங்களுக்குச் சொல்லமுடியுமா?

சி: முடியாது.

கு: ஆனால் உலகத்தில் சாதாரணமாகப் படுத்து தூங்கும் பொழுதோ, உணர்வில்லாமல் கிடக்கும்பொழுதோ, அபஸ் மாரம் அதாவது காக்கை வலிப்பால் மயங்கிக் கிடக்கும் பொழுதோ, ஜன்னி கண்டு உச்சி வரை ஏறி மறந்து கிடக்கும் பொழுதோ, அதல்லாமல் ஆஸ்பத்திரியிலிருந்து குளோரோ பாரம் அதாவது உணர்வு கெடுப்பதற்காயுள்ள மயக்க மருந்தை மூக்கின் நேரில் பிடித்து மயங்கிக் கிடக்கும் பொழுதோ, உலகத்தைப் பற்றியோ, மற்ற யாதொரு அறிவோ, உணர்வோ, உண்டா?

சி: இல்லை.

கு: ஆனால் அவைகளெல்லாம் எவ்விதம் கருதவேண்டும்?

சி: தூக்கமாகவேதான் கருத வேண்டும்.

கு: அதனால் தூக்கமென்று சொல்லுகிறது அறிவை அறியாமலிருக்கின்றதற்காகும். ஆனால் அறிவாயிருக்கின்ற வஸ்து எதுவாகும்?

சி: அது தானுயிருக்கின்ற ஜீவன்.

கு: அறியாமையாய் ஆகிறதற்கு என்னவென்று சொல்ல வேண்டும்?

சி: 'மாயை' என்றாகும்.

கு: அப்பொழுது நாம் எந்த நிலைமையிலிருக்கிறோம்?

சி: மாயையிலாகும்.

கு: அப்பொழுது மாயை என்னவாகின்றது?

சி: தூக்கமாகின்றது.

கு: ஆகையினால் மாயையா யிருக்கின்ற தூக்கத்தில் கண்டு அனுபவிக்கின்ற சொற்பனமாகு மிக்காணுகின்ற நிலைமை. எப்பொழுது மாயையாயிருக்கின்ற தூக்கம் தெளிகின்றதோ அப்பொழுது உணர்வு உண்டாகும். அந்த உணர்வாகும் ஜாக்கிரதை. ஜாக்கிரதை என்று சொல்லுவது அநித்தியமாகி என்னுடையதென்றும், உன்னுடையதென்றும் மற்றுமுள்ள ராகத் துவேஷாதிகளான எண்ணங்களை விட்டு, நித்தியமாயுள்ள தன்னைத்தான் அறிகின்ற நிலைமையாகும். அப்பொழுது மாத்திரமே ஜாக்கிரதை என்று சொல்லுவதற் கிடையுண்டு. இப்பொழுது 'ஜாக்கிரதை' இல்லை.

அத்தியாயம் 8

சி: குருவே! உலகம் தன்னிலிருந்து உற்பத்தியான தென்றும், அது ஒரு புகையென்றும், சொற்பனமென்றும் கற்பித்தீர்களல்லவா? ஆனால் உலகம் கர்மபந்தமென்றும், அவ்விதம் கர்மத்தினால் பந்திக்கப் பட்டதுகொ டு, கர்மம் செய்தால் மாத்திரமே விமோசனம் கிடைக்குமென்றும், எல்லாம் கர்மமாகுமென்றும், கர்மமில்லையென்றால் ஒன்று மில்லை யென்றும் சொல்லுகிறார்களே! இதனுடைய பொருள் என்னவென்று தெரியவில்லை?

கு: உலகம் உம்மிலிருந்து உண்டான ஒரு புகை யாமென்றும், அது சொற்பனமாகும் என்றும் நீர் பூரணமாக நம்பியிருந்தீரானால் உமக்கு ஏது கர்மம், என்னது கர்மபந்தம்? அதெல்லாமல் கர்மமென்பது என்ன?

சி: கர்மம் என்பது தொழில்.

கு: ஒருக்காலும் கர்மத்திற்குத் தொழில் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் நமக்கு மூன்று நிலைமைகளில்லாமல் யாதொன்றும் செய்வதற்கு முடியாது. அதாவது எழுவாய், செயப்படுபொருள், பயநிலை என்பனவாம். இவ்விதமுள்ள மூன்று நிலைமைகளில்லாதிருந்தால் உலகமில்லை. இதுகளில் இல்லாமல் ஒரு தொழில் என்கிற சொல் உண்டாகுமா?

சி: உண்டாவதில்லை.

கு: ஆனால் இம் மூன்றினுடைய பொருளென்னவாகும்?

சி: கர்த்தாவென்பது தொழிலைச் செய்கின்றவன். கர்ம மென்பது முன் சொன்ன தொழில். கிரியாவென்பது யாதொன்றைச் செய்கின்றோமோ அது.

கு: செய்கிறது என்பதின் பொருளென்ன?

சி: தொழில் என்றாகும்.

கு: அப்பொழுது செய்கை என்பது என்னவாகிறது?

சி: தொழிலாகிறது.

கு: அப்பொழுது கிரியைக்கும் தொழில் என்று அர்த்த மாகிறது. கர்த்தா, கர்மம், கிரியை, இவ்விதம் மூன்று நிலைமை களில் கர்த்தாவென்பது செய்கின்ற ஆளென்றும், கர்மத் துக்கும், கிரியைக்கும் தொழில் என்று வருகிறது. அப்படி வருவதற்கிடமில்லை. ஏனென்றால் "கண்ணன் முயலைக் கொன்றான்" என்கிற வாசகத்தில் கர்த்தா, கருமம், கிரியை இருக்கின்றதா? இருக்கின்றதானால் அவைகள் எவையெவை?

சி: உண்டு. கண்ணன் என்பது கர்த்தா, அதாவது எழு வாயும், முயலை என்பது கர்மம் அதாவது செயப்படு பொரு ளும், கொன்றான் என்பது கிரியை அதாவது பயநிலையுமாகும்.

கு: அப்பொழுது கர்மத்திற்கு அதாவது செயப்படு பொருளுக்கு, தொழில் என்கிற அர்த்தம் போய்விட்டது அல்லவா? 'கண்ணன் முயலைக் கொன்றான்' என்கிற வாசகத்தில் நீர் சொல்லிய விதமல்லாமல் வேறு விதமான பொருள் இருக்குமா?

சி: இருக்காது.

கு: அப்பொழுது கர்மமென்பதற்குத் தொழிலென்ற பொருளுண்டா?

சி: இல்லை.

கு: ஆனால் கர்மம் என்பது என்னவாகும்?

சி: பெயரோடு கூடியிருக்கின்ற ஒரு வஸ்துவாக வந்தது. அதாகும் செயப்படுபொருள்.

கு: ஆனால் உலகத்தில் கர்மமென்பது இன்னதாகும் என்று தெரியாமலே, அதைத் தொழிலென்று கருதியிருக்கின்றார்கள். அது அவ்விதமல்ல. ஒரு வஸ்து இல்லை என்றால், தொழில் செய்வதற்கு முடியாது. அவ்வித மல்லாமல் உலகத்தில் எப்படி பார்த்தாலும் கர்மமென்பது வஸ்து வென்றல்லாமல் தொழில் என்று காண்பதில்லை. ஏனென்றால் கர்த்தா, கர்மம், கிரியை இவைகள் மூன்றும் அடங்கியிருக்கின்ற வாசகமும், கர்த்தாவும், கிரியையுமடங்கிய வாசகமும், கர்மமும், கிரியையும் அடங்கியிருக்கிற வாசகமும் நாம் பேசுகிறோம். அவைகளைப் பற்றியும் நாம் ஆலோசித்துப் பார்ப்போம். ஆனாலும் கர்மம் என்பது ஒரு வஸ்து என்றே வெளிப்படும். அதாவது 'கிருஷ்ணன் புசித்தான்'. இந்த வாசகத்தில் என்ன என்ன இருக்கின்றன?

சி: கர்த்தாவும், கிரியையுமாத்திரமாகும்.

கு: எது கர்த்தா? எது கிரியை?

சி: கிருஷ்ணன் என்பது கர்த்தா அதாவது எழுவாயும், புசித்தானென்பது கிரியை அதாவது பயனிலையுமாகும்:

கு: புசித்தானென்பதை, கிரியை அதாவது பயனிலை என்று சொல்வதின் காரணமென்ன?

சி: புசித்தல் தொழிலாகும். அந்தத் தொழிலுக்காகும் கிரியை. அதாவது பயனிலை என்று சொல்லுவது.

கு: நீரல்லவா முன்னால் கர்மமென்பது தொழிலென்று சொன்னது. இப்பொழுது கிரியையாகுமென்று சொல்லுகிறீர். ஆனால் 'கிருஷ்ணன் புசித்தான்' என்கிற வாசகத்தில் கர்மம் வெளிப்பட்டிருக்கின்றதா?

சி: இல்லை.

கு: ஆனால் கர்மத்தை வெளிப் படுத்தலாம். 'கிருஷ்ணன் எதைப் புசித்தான்' என்கிற கேள்வியில் பழத்தைப் புசித்தான்

என்று பதில் கிடைக்கிறது. அந்த வாசகத்தில் கர்மம் அதாவது செயப்படு பொருள் என்னவாகும்?

சி: அதில் கர்மம் அதாவது செயப்படு பொருள் என்பது பழமாகும்.

கு: அப்பொழுது பழம் என்று சொல்லுவது தொழிலோ அல்லது வஸ்துவோ?

சி: வஸ்துவேயாகும்.

கு: அப்பொழுது கர்மம் என்பது ஒரு வஸ்துவென்று இதிலும் வெளிப் படுகின்றது. தவிர உம்முடைய வீட்டில் ஒரு மாம்பழத்தைப் பத்திரப் படுத்தக் கொடுத்தீர். பின்பு ஒரு சமயத்தில் அந்த மாம்பழத்தைத் தேவைப் பட்டீர். அப்பொழுது அதற்கு பதிலாக 'அந்த மாம்பழத்தைத் தின்று விட்டேன்' என்று சொல்லுகிறீர். இந்த வாசகத்தில் என்னென்ன இருக்கின்றன?

சி: கர்மமும் அதாவது செயப்படு பொருளும், கிரியையும், அதாவது பயனிலையும் மாத்திரம் உண்டு.

கு: அதில் கர்மம் அதாவது செயப்படுபொருள் எது? கிரியை அதாவது பயனிலை எது?

சி: மாம்பழம் என்பது கர்மமும் அதாவது செயப்படு பொருளும், தின்றுவிட்டேன் என்பது கிரியையும் அதாவது பயனிலையுமாகும்.

கு: இந்த வாசகத்திலும் கர்மம் வஸ்துவென்று தான் வெளிப்படுகிறது. அதனால் இது எந்தவிதம் உலகத்தில் நடக்கின்ற சங்கதிகளைப் பார்த்தாலும் கர்மம் என்பதற்கு வஸ்துவென்றல்லாது தொழில் என்கிற அர்த்தம் இல்லாததே யாகும். அதனாலாகும்; கர்மமில்லையானால் ஒன்றுமில்லை யென்றும், எல்லாம் கர்மமாகுமென்றும் சொல்லக் காரணம். அதுகொண்டு கர்மம் அதாவது செயப்படுபொருள் வஸ்துவாகு மென்று வெளிப்பட்டது. அப்பொழுது அந்த வஸ்து இல்லை யானால் ஒன்றுமில்லையென்றும் எல்லாம் வஸ்துவாகுமென்றும் வருகிறது. அதனால் அந்த வஸ்துவைத்தான் நாமறியவேண்டும். அந்த வஸ்து என்பதெதுவென்று சொல்ல முடியுமா?

சி: சொல்லமுடியும். அது என்னதாகு மென்றால் எவை எவை காணப்படுகின்றனவோ, அவையனைத்தும் வஸ்துவாகும். அதுகொண்டு இக் காணப்படுகின்ற எல்லாம் வஸ்துவாகும்.

கு: இக்காணப்பட்டவை அனைத்தும் ஓரோர் வஸ்து வென்றாலும் நீர் இல்லாவிடில் உமக்கு இந்த வஸ்துக்களைக் காண்பதற்கு முடியுமா?

சி: முடியாது.

கு: அது என்ன காரணம்?

சி: நான் இல்லாததினால்.

கு: நீர் இருக்கிறதென்றால் காண்பதற்கு முடியுமா?

சி: முடியும்.

கு: ஆனால் நீர் தூங்குகிற சமயத்தில் இவைகளைக் காண்பதுண்டா?

சி: காண்பதில்லை.

கு: அது என்ன காரணம்? நீர் இல்லாதிருந்தீரா?

சி: அப்பொழுது நானிருந்ததென்றாலும், என்னிலிருந்து உண்டான சக்தி என்னிலேயே அடங்கியிருந்தது. அதனால் காணவில்லை.

கு: அந்தச் சக்தி என்னவாயிருந்தது? ஒரு பிணத்திற்கு அந்தச் சக்தி உண்டாயிருந்ததோ?

சி: அந்தச் சக்தி என்னுடைய ஜீவசக்தியா யிருந்தது. பிணத்திற்கு ஜீவனில்லாதிருந்ததினால் அந்தச் சக்தி உண்டா யிருந்ததில்லை.

கு: அந்த ஜீவசக்தி என்னவாயிருந்தது?

சி: வாயுவாயிருந்தது.

கு: அந்த ஜீவசக்தி வெளியில் வாயுவாக சலிக்காம லிருந்ததானால் இவ்விதமான யாதொரு நிலைமையும் காணப் படுமா?

சி: காணப்படுகிறதில்லை.

கு: அந்த ஜீவனுடைய சக்தியாகும் இக் காணப்படுகின்ற நிலைமை. அப்பொழுது காணுவதற்குக் காரணமானது ஜீவனுடைய சக்தியாயிருக்கின்ற வாயுவாகும். அந்த வாயுவே வஸ்து. அந்த வாயுவாயிருக்கின்ற வஸ்து இல்லையானால் யாதொன்றுமில்லை. அந்த வாயுவில் பந்திக்கப்பட்டதாகும் உலகம். அந்த வாயுவாகும் கர்மம். இதனால் தான் "கர்ம பந்தமாகும்" உலகு என்று சொல்லுவதற்குக் காரணம். அந்தக் கர்மம் செய்தாலே மோக்ஷம், அதாவது விமோசனம், அதாவது விடுதலை கிடைப்பதாகும். அந்தக் கர்மமாயிருக்கின்ற வாயுவிற்கு நானாவிதமான எண்ணங்கள் தட்டுகின்றதினால் பந்தமாகிறது. ஆனால் கர்மமாயிருக்கின்ற வாயு மேற்சொன்ன எண்ணங்களை விட்டுத் தன்னில்தானே லயித்தால் மோக்ஷ மாகின்றது. இதனால்தான் கர்மம் செய்தால் மாத்திரமே மோக்ஷம் கிடைக்குமென்று சொல்லக் காரணம். கர்மம்-வாயு, செய்கை—தொழில். அதனால் கர்மமாயிருக்கின்ற வாயுவினைக் கொண்டு செய்யவேண்டும். அப்பொழுதே மோசனமாகின்றது. ஆனால் கர்மமாயிருக்கின்ற வாயுவினைக் கொண்டு எவ்விதமாகும் உலகத்தைப் பந்தித்திருக்கிற தென்பதைச் சொல்லுகிறேன் கேளும். எட்டுகால் பூச்சி என்று சொல்லப்படுகிற ஜீவியானது

ஒரு வலை கட்டுகின்றது. அந்த வலையானது, அது இருக்கிற தற்கும், அதனுடைய ஆகாராதிகளைச் சம்பாதிப்பதற்கும் மற்றுமுள்ளதற்காகும். அந்த வலை கட்டினது, எதனாலென்றால் நூலைக் கொண்டாகுமென்று நமக்குத் தெரிகிறதல்லவா? ஆனால் அந்த நூல் எவ்விடமிருந்தாகும் கிடைக்கிறது?

சி: அதனுடைய உள்ளிலிருந்தாகும்.

கு: அது அதினுடைய உள்ளிலிருக்கின்ற ஒருசக்தியாகும். அந்தச் சக்தி ஒரு பசையாகும். அந்தச் சக்தியாயிருக்கின்ற பசை கொண்டு நூலாக்கி, அந்த நூலைக்கொண்டு முன்சொன்ன வலையாயிருக்கின்ற உலகத்தைச் சிருஷ்டித்து, அதினுடைய ஒரு பாகத்தில் அந்த ஜீவி யிருக்கின்றது. அதில் ஏதேனும் ஜீவிகளகப்பட்டால் அவைகளைப் பிடித்துத் தின்னவும் செய்கிறது. ஆனால் மேற்சொன்ன பிரகாரம் நூலைக் கொண்டு கட்டப்பட்ட உலகத்தை, அது தானாகவே அழித்துத் தன் னுள்ளிலே கொண்டு போய்ச் சொஸ்தமா யிருக்கின்றது. திரும்பவும் மேற்சொன்ன பிரகாரமே நூல் வெளியில் கொண்டுவந்து உலகத்தைகட்டுகிறது. இவ்விதம் கட்டுவதும், அழிப்பதும் செய்து, கடைசியில் அதனுடைய புச்சம் அதாவது உத்பத்திஸ்தானம் அதாவது உண்டாகிக்கொண்டு இருக்கின்ற இடத்திலிருந்து அந்த நூல் அற்றுப் போகின்றது. அப்பொழுது, தான் கட்டியிருக்கிற உலகத்தில் தான் தானே விழுந்து சாகிறது. ஆனால் அந்த நூல் வெளியில் வந்ததில் சிறிது தூரத்திலிருந்து அறுந்து போனால், அந்த அறுந்த துண்டோடு பசையாயிருக்கின்ற நூலை இணைத்துச் சேர்த்துக் கட்டுவதும் அழிப்பதும் செய்வதாயிருக்கிறது. ஆனால் அது நூலாகக் கட்டிய பசை, அதனுடைய உத்பத்தி ஸ்தானமாகிய நூல் உண்டாகிக்கொண்டிருக்கின்ற இடத்திலிருந்து தானே அற்றுப் போனதினாலாகும் செத்துப்போனது. ஆனால் தன்னுடைய சக்தியாயிருக்கின்ற பசையான நூலை, வெளியில் விடாமல் உள்ளிலேயே வைத்துக் கொண்டிருந்தால் ஒருக் காலும் நசிக்கிறதில்லை. அதை தன்னுள்ளே நிறுத்தாமல் வெளியில் விட்டதினாலாகும் அதற்கு நாசம் வந்தது. அதைப் போலவேதான் நமக்குக் கர்மமென்று சொல்லுகிறது வாயுவாய் இருக்கின்ற நூலாகும். அது எவ்விதமென்றால் நம்முடைய ஜீவ சக்தியான வாயுவாயிருக்கின்ற நூலை, நாம் வெளியில் விட்டு உலகத்தைக் கட்டி, அந்த உலகத்தில் மோகாந்தகாரர்கள் ஆகி, தன்னைத்தான் அறியாமல், நான் மிகவும் சமர்த்தன் நான் நிலைமையுடையவனாகும், நான் மானியாகும், செல்வவான் ஆகும், உயர்ந்தவனாகும், பண்டிதனாகுமென்றும் மற்றுள்ள அனைவரும் தாழ்ந்தவர்களென்றும் தீர்மானித்து, நாகத்

துவேஷாதிகளாகிய துரபிமானத்துடன் கூடியிருக்கிறோம். ஆனால் மேல்சொன்ன பிரகாரம், முன் சொன்ன எட்டுக் காலியைப்போல நாம் கட்டிய உலகத்தை நாமே அழித்து நமதுள்ளில் லயிப்பித்து சொஸ்தமாயிருக்கவும் செய்கிறோம். அந்தச் சந்தர்ப்பமே நீர் தூங்குகிறதென்று சொல்லுகிற நிலைமை. அந்த நிலைமையில் நமக்கு உலகமிருக்கின்றதோ?

சி: உலகமில்லை.

கு: அதென்ன காரணம்?

சி: தன்னுடைய சக்தி தன்னில் அடங்கிச் சொஸ்தமாய் இருக்கிறது கொண்டு.

கு: பின் எப்பொழுதாகும் உலகத்தைக் காணுகிறது?

சி: தனது சக்தி தன்னிலிருந்து வெளியே வந்து வியாபித்தபோது.

கு: அது எவ்விதமென்றால் முன் சொல்லிய எட்டுக்கால் பூச்சி எவ்விதம் தன்னுள்ளிலிருக்கின்ற சக்தியான பசையை வெளியில் விட்டு நூலாக்கி வலையாகிய உலகத்தைக் கட்டுவதும், அழிப்பதும் செய்கிறதோ, அதேபிரகாரம்தான் நாமும் நம்மில் உள்ள ஜீவசக்தியாய், வாயுவாய், கர்மமாயிருக்கின்ற நூலை வெளியில் விட்டு உலகத்தைக் கட்டவும், அழிக்கவும் செய்கிறோம். கடைசியில் எப்படி அந்த எட்டுக்கால் பூச்சியினுடைய சக்தியாயிருக்கின்ற நூலினுடைய உற்பத்தி ஸ்தானமான இடத்திலிருந்து அந்த நூலறுந்து அது செத்துப் போகிறதோ, அதைப் போலவேதான் நம்முடைய ஜீவ சக்தியாய், கர்மமாய், வாயுவாயிருக்கின்ற நூல் அதனுடைய உற்பத்திஸ்தானமாகிய புருவ மத்தியத்திற்குக் கீழே மூக்கிற்கு மேலாக உள்ள இடத்திலிருந்து அற்று நாம் செத்துப் போகின்றோம். இதனால்தான் ஒருவன் செத்தபொழுது அவனுடைய கர்மம் அற்றுப் போயிற்றென்று சொல்லக் காரணம். அந்தக் கர்மமாய், வாயுவாயிருக்கின்ற நூலைக் கொண்டாகும் உலகத்தைக் கட்டியிருப்பது. அதனால்தான் கர்மபந்தமென்றும் சொல்லக்காரணம். தவிர ஒருவன் செத்துப் போனால் அவருடைய கர்மம் என்னவாய்ப் போயிற்றென்று சொல்லுகிறது?

சி: அவருடைய கர்மம் முடிந்து போயிற்றென்று ஆகும்.

கு: ஒருவன் படுத்துத் தூங்குகிறானென்று சொல்லும் சமயத்தில், அவனுடைய கர்மம் முடிந்து போயிற்றென்று சொல்லுகிறதுண்டோ?

சி: இல்லை.

கு: செத்தபொழுது கர்மம் முடிந்து போயிற்றென்று சொல்லுவதற்கும், தூங்குகிறதென்று சொல்லும்

சமயத்தில் கர்மம் முடியவில்லை யென்றும் சொல்லக் காரண மென்ன?

சி: செத்தபொழுது வாயு அதனுள் கதா கதம் அதாவது நடனம் செய்கிறதில்லை. படுத்துத் தூங்குகிறதென்று சொல்லும் சமயத்தில் அவனுடைய உள்ளில் கூடி வாயு கதா கதம் செய்கிறது. அதனால்தான் அவ்விதம் சொல்லக் காரணம்.

கு: அதுமாத்திர மல்லாமல் ஒரு நிமிஷ நேரமாவது கர்ம மில்லாமல் யாதொன்றுக்கும் ஜீவித்திருக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். ஆனால் கர்மம் என்கிறது தொழில் என்று உலகில் சொல்லுகிறது. கர்மமென்பது தொழிலென்றால் தூக்கமென்று சொல்லுகிற சமயத்தில் யாதேனும் தொழி லுண்டோ?

சி: உண்டு.

கு: என்னவாகும்?

சி: தூங்குவது.

கு: அது எப்படி? தூக்கமென்று சொல்லும் சமயத்தில் நான் இப்பொழுது தூங்குகிறேனென்றுள்ள நினைவு உமக்கு உண்டோ?

சி: இல்லை.

கு: என்ன காரணம்?

சி: மனதாகிய சக்தி ஜீவனில் சேர்ந்தடங்கியதினால்.

கு: எப்பொழுது நினைவும் தொழிலும் உண்டாகிறது?

சி: தூக்கம் விழித்தபொழுது.

கு: எங்கிருந்து?

சி: மனதிலிருந்து.

கு: மனதில்லையென்றால் யாதொன்றும் கேட்பதற்கோ, செய்வதற்கோ, அறிவதற்கோ, முடியுமா?

சி: முடியாது.

கு: ஆனால் நீர் தூங்குகிறதென்று சொல்லும் சமயம் தொழில் உண்டோ?

சி: இல்லை.

கு: அப்பொழுது கர்மம் இல்லையா? தொழில் என்பது கர்மம் என்றால் அறியவேண்டியதல்லவா?

சி: கர்மம் உண்டு. கர்மமென்பது தொழில் அல்ல, அதனால் தெரியவில்லை.

கு: கர்மம் இல்லையானால் ஒரு நிமிஷ நேரங்கூட மிருக்க முடியாதென்று சொல்லுகிறது. தூக்கமென்று சொல்லுகிற சமயத்திலும், கர்மம் இருக்கிறதென்று வருகிறது. ஆதலி னாலும் கர்மம் தொழில் அல்லவென்றும், வாயுவாகுமென்றும் வந்தது. அந்தக் கர்மமானது ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு

வாகும். அந்த வாயு வெளியில் வியாபித்து உலகத்தைச் சிருஷ்டித்து உலகமாய்ப் பந்தித்துக் கொண்டிருக்கிறது. அப்பொழுது உலகம் கர்மபந்தமாகின்றது. எப்பொழுது செத்துப் போகின்றதோ அப்பொழுது வாயுவாயிருக்கின்ற கர்மம் முடிவாய்ப் போகிறது. அது கொண்டாகும் கர்மம் தீர்ந்து போனதென்று உலகம் சொல்லு கிறது. அதனால் உலகமென்கிற விஷயத்தைப் பந்தித்திருக் கின்ற கர்மமாய், வாயுவாயிருக்கின்ற சக்தியை, அந்தப் பந்தத்திலிருந்து வேறுபடுத்தி தனதுள்ளிலேயே நடத்தி அதனுடைய உற்பத்தி ஸ்தானமாகிய ஆகாசத்தில் அதாவது பிரம்மரந்திரத்தில் சேர்த்து ஒன்றுபடுத்துவதற்காகும் மோக்ஷமென்று சொல்லுகிறது. இதாகும் "கர்மயோகம்". கர்மமென்பது வாயு. யோகமென்பது சேர்த்தல். கர்மயோகம் என்பது வாயுவின் சேர்த்தல். அதாவது வாயுவினுடைய உற்பத்திஸ்தானமாய் ஆகாசமாயிருக்கின்ற பிரம்மரந்திரத்தில் அது சேருகிறதாகும். அவ்விதம் செய்யாமல் நானுவிதமாக ஈஸ்வரனென்று சங்கற்பித்துப் பூஜிப்பதும், பஜிப்பதும், தொழுவதும், மந்திரங்கள் என்று கருதி, பெயர்களை ஜபிப்பதும், தானம் கொடுப்பதும், விரதமனுஷ்டிப்பதும் முதலானவைகள் செய்து ஜனங்கள் பட்டினி கிடந்து கஷ்டப் பட்டு யாதொரு விபரமுமில்லாமல் அதோகதியாகி நசித்துப் போகிறதல்லாமல், யாதொரு ஞானமும் உண்டாவதில்லை. ஞானமுண்டாக வேண்டுமேயானால் முன் சொன்ன பிரகாரம் செய்ய வேண்டும். அப்பொழுதே ஞானமுண்டாகும். அதுவே கர்மயோகம்!

அத்தியாயம் 9

சி: குருவே! உலகத்திலிதுவரை கருதியதற்கு நேர் விரோதமாக இப்போது கற்பிக்கின்றீர்கள். பஞ்ச பூதங்களைப் பற்றி சொன்னபோது அகங்காரம், மனம், ஜீவன் இவைகள் ஆகும் பிரம்மா, விஷ்ணு, சிவனென்று சொல்லி யிருக்கின்றீர்கள் அல்லவா? ஆனால் உலகில் பாரம்பரையாய்ச் சொல்லி வருவது மும்மூர்த்திகளாகும், சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம் செய்வதென்றும், அதில் பிரம்மா ரஜோகுணம் என்றும், விஷ்ணு சாத்வீக குணமென்றும், சிவன் தமோ குணமுமென்றாகும். அதனால் இவ் விஷயத்தைப் பற்றித் தெளிவு படுத்திச் சொல்லித்தர வேண்டுமாய்க் கோருறேன்.

கு: உலகம் என்பது உண்மைத் தத்துவத்திற்கு விபரீதமாய் உள்ளதாகையால் விபரீதமாய்த் தோன்று கிறதாகும். அதைப்பற்றியும், பிரம்மா, விஷ்ணு, சிவன் இவர்கள் யாராகும் என்று வைத்தால், அவரைப் பற்றியும் சொல்லுகிறோம். பிரம்மாவானது அகங்காரமும், விஷ்ணுவானது, மனமும், சிவனானது ஜீவனுமாகும் என்பதனைப் பற்றியும், ஐந்தாமத்தியாயத்தில் விவரிக்கப் பட்டிருக்கிறதல்லவா? அதல்லாமல் மேல்சொல்லிய மும் மூர்த்திகள் மூன்று குணங்களாகுமென்றும், அந்தக் குணங்கள் தாமசம், இராஜசம், சாத்வீகம் இவைகளாகுமென்றும் சொல்லியிருக்கிறதல்லவா? ஆனால் சிவன் தாமசகுணமாகும் என்றும், விஷ்ணு சாத்வீக குணமாகுமென்றும், பிரம்மா ராஜச குணமாகுமென்றும் நீங்கள் இப்பொழுது சொல்லுகிறீர். அந்தப்படி ஒருக்காலும் வருவதற்கிடமில்லை. அதேனென்றால் பிரம்மா சிருஷ்டி கர்த்தாவல்ல. பிரம்மா என்பது அகங்காரமாகும். அந்த அகங்காரமாகிய பிரம்மா மனதிலிருந்தாகும் உண்டானது. அந்த மனதாகும் விஷ்ணு. அதெப்படி என்றால் விஷ்ணுவினுடைய நாபியிலிருந்தாகும் பிரம்மா உண்டானதென்று சொல்லுகிறது. அப்பொழுது விஷ்ணு இல்லையென்றால் பிரம்மனில்லை, சிருஷ்டியுமில்லை. நீர் பிரம்மாவாகும் சிருஷ்டித்ததென்று சொல்லுகிறீர்; சிருஷ்டி கர்த்தாவா யிருக்கின்ற பிரம்மா விஷ்ணுவிலிருந்து உண்டானதென்றும், அந்தப் பிரம்மாவாகும் சிருஷ்டித்தது என்றும் வந்தால், அந்தப் பிரம்மனைச் சிருஷ்டித்தது விஷ்ணுவா கும். அதனால் விஷ்ணு இல்லை என்றால் பிரம்மாவும் சிருஷ்டியும் இல்லை. அதல்லாமல் பிரம்மாவுக்கு அண்டஜனென்கிற பெயருமுண்டு. அண்டஜனென்றால் முட்டையிலிருந்து

ஜனித்தவரென்று பொருள்படும். அந்த முட்டை எது வென்றால் இக்காணப்பட்ட உலகமாகும். இந்த உலகமென்று சொல்லுகிறது, நம்மிலிருந்து ஒரு முட்டையினுடைய வடிவமாய்ப் பிரதிபிம்பத்திருக்கின்றதாகும் அதற்கு உதாரணம்:—பூமியில் எங்கிருந்து பார்த்தாலும் நாம் காணு கின்ற ஆகாசம் நாலாபக்கத்திலும் பூமியோடு தொட்டிருப்பது போலவும், உருண்டையாய், முட்டையினுடைய வடிவத்திலும் காணப்படுகிறது. அதனுடைய உத்பத்தி தன்னுடைய மனதி லிருந்தாகும். அதெவ்விதமென்றால் மனதாகும் சக்தி. அதாகும் விஷ்ணு. அப்பொழுது சக்தியாய் மனதாயிருக் கின்ற விஷ்ணு சுக்கிலமாகும். அந்தச் சுக்கிலம் நம்முடைய சிரசாயிருக்கின்ற ஆகாயத்தில் தரித்திருக்கிறதாகும். அந்த ஆகாசத்தில் தரிக்கப்பட்டிருக்கிற சுக்கிலமாகும் விஷ்ணு. அந்த விஷ்ணுவாயிருக்கின்ற சுக்கிலம் நம்மிலிருந்து வேறு படாமல் நம்மிலேயே ஒரு முட்டையினுடைய வடிவத்தில் நீர்க்குமிழியைப்போல் வெளியில் தள்ளியிருக்கிறது. அதையும் தாங்கிக் கொண்டாகும் நாமிருக்கிறோம். அதெப்படியென்றால் நான்காமத்தியாயத்தில் சொன்ன காட்டாமணக்கின் பாலில் ஒரு ஈர்க்கெடுத்து வட்டமாகக் கட்டித்தோய்த்து ஊதிப்பிடித் தால் அது அதிலிருந்து விட்டுப் போகாமல், போரையாய் முட்டை வடிவமாய் வெளியில் தள்ளி நிற்கிறது. கொஞ்ச நேரம் கொண்டு உடைந்துபோகவும் செய்யும், இதே பிரகாரம் தான் ஜீவன் மனதாகிய சுக்கிலத்தைத் தள்ளிக்கொண்டு தன்னி லிருந்து வெளியில் வருகின்றது. அந்த மனதாகிய சுக்கிலம் தன்னிலிருந்து விட்டுப் போகாமல் முட்டையின் வடிவத்தில் போரையாய் வெளியில் தள்ளி உப்பி நிற்கின்றது. இதற் காகும் பிரம்மாண்டமென்று உலகத்தில் சொல்லுகிறது. ஆனால் அது சரியல்ல. நம்மிலிருந்து வெளிக்குத் தள்ளிக் காணு கின்ற இந்த உலகம் பிண்டாண்டமாகும். பிரம்மாண்டமல்ல. பிரம்மாண்டமென்று சொல்லுவது பிரம்ம சொரூபமாகிய சுக்கிலமிருக்கின்ற சிரசிற்கேயாகும். அச்சிரசிலிருந்து மேல் சொன்ன உலகத்தை, ஜீவ சக்தியாய், பரமாத்மாவாயிருக்கின்ற வாயு, பிரகிருதியாய் அதாவது இயற்கையாயிருக்கின்ற மாயா சுரூபமாய் வெளியில் தள்ளிக்கொண்டு வந்ததாகு மிக்காணு கின்ற உலகம். அதனால் இப்பொழுது உலகமென்று சொல்லி வருகின்ற இக்காணுகின்ற உலகு பிண்டாண்டமாகும். இப் பிண்டாண்டமாயிருக்கின்ற உலகம், பிரம்மாண்டத்திலிருந்து முட்டை வடிவமாய் உத்பத்தியானபொழுது நான் என்கிற அகங்காரமுண்டாயிற்று. இதனால்தான் பிரம்மாவிற்கு அண்டஜனென்கிற பெயருண்டானது. அந்த அகங்காரத்திற்

காகும் பிரம்மாவென்று பெயர். இந்தப் பிரகாரமாகும் பிரம்மாவினுடைய உத்பத்தி.

சி: சுவாமி! பிரம்மாவினுடைய உற்பத்தி மேற்சொல்லிய பிரகாரமாகுமென்று பூர்ண நம்பிக்கையானது. ஆனால் தாங்கள் சொல்லுவதைக் கேட்கும்பொழுது, அவனவன்தானேயாகும் பிரம்மாவென்று வெளியாகிறது. ஆனால் வேத சாஸ்திராதிகளில் பிரம்மாவிற்கு நான்குமுகமுண்டென்றும், அப்பிரகாரத்தில் நான்கு முகங்களோடு கூடிய பிரம்மாவே சிருஷ்டிக்கின்றதென்றும் காணப்படுகிறது. இவ்விதமாகும் உலகத்தில் கருதி சொல்லி வருகிறது. இதனுடைய பொருளென்னவென்று விவரமாகச் சொல்லித் தரவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கு: அது சரி. ஆனால் முகமென்பதென்னவென்று கருதியிருக்கின்றீர்?

சி: முகமென்பது இக்காணுகின்ற சிரசில் காது, கண், மூக்கு, வாய் இதுகளடங்கியிருக்கின்ற பாகத்திற்காகும்.

கு: இந்த முகமில்லாவிட்டால் யாதொருவித அறிவுமுண்டாகுமா?

சி: இல்லை.

கு: ஆனால் முகமென்பது என்னவென்றாகும் நாமறிய வேண்டியது?

சி: அறிவாகுமென்று.

கு: ஆனால் நீர் சொல்லுகிற பாகம் முகம் என்றால் ஒரு பிணத்திற்கு இந்த முகமில்லையா?

சி: உண்டு.

கு: அதற்கேதாகிலும் அறிவுண்டோ?

சி: இல்லை.

கு: அதென்ன காரணம்?

சி: அதில் ஜீவனில்லாதது கொண்டு.

கு: அப்பொழுது ஜீவனில்லையென்றால் அறிவிருக்குமா?

சி: இருக்காது.

கு: அப்பொழுது அறிவென்பது என்னவாகும்?

சி: ஜீவனாகும்.

கு: அப்பொழுது அறிவாகி முகமாயிருக்கின்ற வஸ்து ஜீவனாகின்றது. அந்த முகமாயிருக்கின்ற ஜீவனிலிருந்தாகும் உலகமுண்டானது. அதெப்படியென்றால் ஒரு வித்தினுடைய எந்தப் பாகத்திலிருந்தாகும் முளை உண்டாகின்றது?

சி: அதனுடைய முகத்திலிருந்து.

கு: அப்பொழுது அதனுடைய உற்பத்தி எங்கிருந்து?

சி: முகத்திலிருந்து.

கு: ஒரு வஸ்து இல்லையென்றால் முகமிருக்குமா?

சி: இருக்காது.

கு: அந்த வஸ்துவாயிருக்கின்ற வித்திற்கு முதலில் உண்டாகிறது எந்த பாகம்?

சி: அதனுடைய முகம்.

கு: ஆனால் முதலிலுண்டாகின்றது முகம். அந்த முகத்திலிருந்தாகும் எல்லா முண்டாகின்றது. அதல்லாமல் அந்த முகம் வித்தினுடைய மேல் பாகமோ? அல்லது கீழ் பாகமோ?

சி: மேல் பாகம்.

கு: ஆனால் முகமென்று சொல்லுகிறது அறிவாகியும், மேல் பாகமாயும், முதலிலுண்டாகின்றதாயும், உற்பத்தி ஸ்தானமாயு மிருக்கின்றதாகும். அப் பிரகாசமுள்ள வஸ்து நமக்கு உலகமாகின்றது. உலகமில்லை யென்றால் நமக்கு இப் பிரகாரம் ஏதேனு முண்டாகுமா?

சி: இல்லை.

கு: ஒரு பிணத்திற்கு உலகமுண்டோ?

சி: இல்லை.

கு: காரணமென்ன?

சி: ஜீவனில்லாததினால்.

கு: ஜீவனில்லை யென்றால் உலகமுண்டோ?

சி: இல்லை.

கு: அப்பொழுது உலகம் எங்கிருந்துண்டாகின்றது?

சி: ஜீவனிலிருந்து.

கு: அப்பொழுது ஜீவன் உலகத்திற்கு என்னவாயிற்று?

சி: உலகத்திற்கு முகமாகின்றது.

கு: அது கொண்டு முகமென்பது ஜீவனாகிறது. அதாகும் அறிவு. அப்பொழுது ஜீவனாய், அறிவாயிருக்கின்ற முகம் நான்கு அறிவுகளாயிருக்கின்ற முகங்களாகின்றன. அவைகள் எவையென்றால் மனம், சித்தம், புத்தி, அகங்காரம் இந் நான்கு முகங்களுமில்லாவிட்டால் சிருஷ்டி உண்டாகிறதில்லை. இந் நான்கு முகங்களோடு கூடியாகும் அகங்காரமாயிருக்கின்ற பிரம்மா சிருஷ்டித்து வருகிறது. அதனால் நான் என்கிற நிலைமையில்லாவிட்டால் நமக்கேதாகிலும் உண்டாக்குவதற்கு முடியுமோ?

சி: முடியாது.

கு: ஆனால் உண்டாக்குவது யார்?

சி: நான்தான்.

கு: நீர் ஏதாகிலுமுண்டாக்கினால் யாருண்டாக்கியதென்று சொல்லுகிறது?

சி: நான் உண்டாக்கியதென்று சொல்லுகிறது.

கு: அதல்லாமல் உமக்கு ஒரு மகனிருக்கிறன். அவனை வேறொருவன் பிடித்தடித்தால் அப்பொழுது உமக்குக் கோபம் உண்டாகி நீர் அவரோடு யாருண்டாக்கிய மகனை அடித்தீர் என்று கேட்பீர்?

சி: "நானுண்டாக்கிய மகனை நீங்கள் தானே அடிக்கிற தற்கு" என்று கேட்பேன்.

கு: அந்தச் சமயத்தில் அவரோடு "பிரம்மா உண்டாக்கிய மகனையா நீர் அடித்தது" என்று கேட்பீரா?

சி: இல்லை.

கு: அப்பொழுது யாராகும் உண்டாக்கியது?

சி: "நானே".

கு: அதுகொண்டு பிரம்மாவிற்கு நான்கு முகம் உண்டென்று சொல்லுகிறது; மேற் சொல்லப்பட்ட மனம், சித்தம், புத்தி, அகங்காராதிகளாகும். இந் நான்கும் கூடாமல் யாதொன்றும் உண்டாக்குவதற்கு முடியாது. அதற்கு உதாரண மென்னவென்றல் குழந்தைகளுக்கு ஏதேனும் உண்டாக்குவதற்கு முடிகிறதில்லை. அவைகளுக்கு மனதும் சித்தமுமுண்டு. கொஞ்சம் முதிர்ந்து அதாவது வளர்ந்ததற்குப் பின் அவைகளுக்குப் புத்தி உண்டாகிறது. அச்சமயம் நாம் சொல்வதை அவைகள் கவனித்து ஆலோசிக்கிறதுண்டு. நானென்கிற நிலைமை அவைகளுக்குப் பூர்த்தியாகாதது கொண்டு யாதொன்றையும் உண்டாக்குகிறதற்கு முடிகிறதில்லை. அவைகளுக்கும் நானென்கிற அகங்காரம் பூர்த்தியாகும்போது அவைகள் ஏதாவது உண்டாக்குகின்றன. அதற்கு வேறொரு உதாரணம் என்னவென்றல், வயதுள்ள ஒருவர் எழுந்திருக்கவும் முடியாமல் ஒருவித வியாதியுடன் படுத்திருக்கும் பொழுது அவருக்கு மனம், சித்தம், புத்தி இவைகளில்லையோ?

சி: உண்டு.

கு: அந்தச் சமயத்தில் அவருக்கு நானென்கிற அகங்கார முண்டா?

சி: அகங்காரமுண்டு. ஆனல் அந்த அகங்காரத்திற்கு யாதொன்றும் செய்கிறதற்குச் சக்தியில்லை.

கு: அப்பொழுது அவருக்கு ஏதாவது உண்டாக்குவதற்கு முடியுமோ?

சி: முடிகின்றதில்லை.

கு: காரணமென்ன?

சி: "நான்" என்கிற அகங்காரத்தினுடைய சக்தி குறைந்து போனதினல்.

கு: ஆனல் ஏதாவதொன்றை உண்டாக்க வேண்டுமானல் எவைகளெல்லாம் வேண்டியிருக்கின்றன?

சி: மனம், சித்தம், புத்தி, அகங்காரம் இவை நான்கும் வேண்டும்.

கு: அதனால் மேல் சொன்ன நிலைமைகள் கூடாமல் ஏதேனு முண்டாக்குவதற்கோ, நிலை நிறுத்துவதற்கோ முடியுமா?

சி: முடியாது.

கு: அதனாலாகும் இந் நான்கு நிலைமைகளுக்கு நான்கு முகங்களென்று சொல்லுவது. அதனால்தான் பிரம்மாவிற்கு "நான்முகன்" என்று சொல்லி வருகிறது. இந் நான்கு முகம் இல்லாவிட்டால் பிரம்மாவுக்கு யாதொரு சிருஷ்டியுமில்லை. இது கொண்டாகும் பிரம்மாவிற்கு 'நான்முகன்' என்றும், அந்த நான்முகனாகும் சிருஷ்டிக்கிறதென்றும் சொல்லக் காரணம்.

சி: சுவாமி; மனம், சித்தம், புத்தி, அகங்காரங்களாகிய நான்கு முகங்களோடு கூடிய நானே பிரம்மாவென்று வெளியாயிற்று. ஆனால் பிரம்மாவிற்குச் சம்சாரம் உண்டென்றும், அவள் தன்னுடைய மகளாகுமென்றும், அவளுக்குச் சரஸ்வதியெனப் பெயரென்றும், சரஸ்வதி பிரம்மாவுக்குத் தாயாராகுமென்றும், சகோதரியாகுமென்றும், வேத சாஸ்திராதிகளிலெல்லாம் சொல்லுகிறது. அப் பிரகாரத்திலுள்ள 'பிர்ம்மா' நான் என்று வெளிப்பட்டிருக்கும்பொழுது இதனுடைய பொருளென்ன?

கு: சரஸ்வதி பிரம்மாவிற்கு மகளானால் முன்னாடி ஒருவளைக் கல்யாணம் செய்து அவளில் ஒரு மகள் உண்டாகி அவளுக்குச் சரஸ்வதியென்று பெயரிட்டு அவளைப் பிரம்மா கலியாணம் செய்ததென்றும், ஏதாகிலும் ஒரு வேத சாஸ்திராதிகளில் சொல்லியிருக்கிறதா?

சி: இல்லை.

கு: அல்லாவிட்டால் பிரம்மா வியபசாரம் செய்யப்போய் அவர்கள் யாரிடத்திலாகிலும் ஒரு மகள் உண்டாகி அந்த மகளுக்குச் சரஸ்வதி என்று பெயரிட்டு அவளைப் பிரம்மா கலியாணம் செய்தார் என்று வேத சாஸ்திராதிகளில் சொல்லியிருக்கிறதா?

சி: இல்லை.

கு: தவிர ஒரு ஸ்திரீ; தாய், சகோதரி, சம்சாரம், மகள் இந்த நான்கு நிலைமையிலும் வருவதெப்படி? எந்த விதத்தில் பார்த்தாலும் அது யுக்தியாய்த் தோன்றுகிறதில்லை. ஏனென்றால் பிரம்மா, தாயைத்தான் கலியாணம் செய்து சம்சாரமாக்கிக் கொண்டதாக நினைக்கலாம். அப்பொழுது சகோதரியாகவும், மகளாகவும் வருவதற்கு ஆதாரம் உண்டா?

சி: இல்லை.

கு: அதல்லாவிட்டால் தான் சகோதரியைக் கலியாணம் செய்து சம்சாரமாக்கிக் கொண்டதாக நினைக்கலாம். அப்பொழுது அவள் தாயாகவும், மகளாகவும் இருப்பதற்கிட முண்டா?

சி: இல்லை.

கு: அதுகொண்டு எந்தப் பிரகாரம் பார்த்தாலும் ஒரு ஸ்திரீ முன் சொல்லிய நான்கு விதமாகின்றாளென்று சொல்லுவதற்கு யாதொரு யுக்தியுமில்லை. அதல்லாமல் அவ்விதமாயுண்டாவதற்கு ஒருக்காலுமிடமில்லை. இவ்விதத்திலானால் வேத சாஸ்திராதி புராணங்களை நம்புவதற்கிட முண்டா?

சி: இடமில்லை.

கு: அவ்விதம் ஒருக்காலும் சொல்லக் கூடாது. வேத சாஸ்திர புராணங்களொன்றும் பொய்யல்ல. ஏனென்றால் வேத சாஸ்திர புராணாதிகள் யாரால் உண்டாக்கியதென்று உமது நம்பிக்கை?

சி: அனுபவஸ்தர்களான மகாத்மாக்களாகிய ரிஷீஸ்வரர்களாலுண்டாக்கினதென்று எனது நம்பிக்கை.

கு: அப்பிரகாரமுள்ள அனுபவஸ்தர்களான ரிஷீஸ்வரர்கள் பொய் எழுதியதென்று சொல்லக் கூடுமா?

சி: ஐயோ! அது ஒருக்காலமும் சொல்லக்கூடாது.

கு: ஆனால் அனுபவஸ்தர்கள் எழுதியிருக்கின்ற அனுபவங்களை உலகோர் அறியாமல் தவறாக எண்ணியிருக்கிறார்கள். அனுபவஸ்தர்கள் பிரம்மாவையும், சரஸ்வதியையும் அறிந்து, இன்னின்ன சங்கதிகளைக்கொண்டு சரஸ்வதி பிரம்மாவிற்கு மகள் என்றும், சம்சாரம் என்றும், தாயென்றும், சகோதரி என்றும் தெரிந்து அனுபவப்பட்டு அந்த அனுபவத்தையே வேத சாஸ்திரங்களில் எழுதிவைத்ததாகும். அதனால் பிரம்மா யாரென்றும், சரஸ்வதி யாரென்றும் ஆலோசிக்கவேண்டும். பிரம்மா வென்பது தேகமல்லாமலிருக்கின்ற இந்த ஜடத்தைத் தேகமென்றபிமானித்துக் கொண்டிருக்கின்ற அகங்காரமாகுமென்று நான்காம் அத்தியாயத்திலேயே சொல்லியிருக்கின்றதல்லவா? அந்தப் பிரகாரம் அபிமானித்துக் கொண்டிருக்கிறது இந்த ஜடத்திற்கேயாகும். அப்பொழுது இந்த ஜடமாகும் பிரம்மா. சரஸ்வதி யாரென்று ஆலோசிப்பதானால் நாவாகும். எப்படியென்றால் சரஸ்வதிக்கும் பல பெயர்கள் உண்டு. ஏதென்றால் பிராம்மீ, பாரதி, பாஷா, கீர், வாக்கு, வாணி, சரஸ்வதி, வ்யாஹாரா, உக்தீர், அபிக்த்ரீ, பாஷிதம், வசனம், வச இவைக்ளெல்லாம் சரஸ்வதியினுடைய பெயர்களாகும். இவைகளெல்லாம் ஒவ்வொரு காரணத்தினால் வந்துள்ள பெயர்களாகும். தவிர பஞ்சேந்திரியங்களிலொன்று

சாஸ்வதியாகிறது. அதாவது வாக்கு என்கிற இந்திரியம். இந்த இந்திரியத்திற்குச் சாஸ்வதியென்று சொல்லுகிறது. சாஸ்வதியென்ற பெயர் நாவிற்காகும். அதுவும் தவிர உலக வாசிகள் ஒருவனுடைய விஷயமாகப் பேசும்பொழுது அவனுடைய "கெட்ட வாக்கு" "கெட்ட சாஸ்வதி", "கெட்ட நாவு" என்று சொல்லுகிறது. இவைகளெல்லாம் நாவைப் பற்றிச் சொல்லுகின்ற வார்த்தைகளாகும். அதனால் இந்த வாக்காகும் சாஸ்வதி. இவள் பிரம்மாவிற்கு மகளென்று சொல்லக்காரணம் என்னவென்றால், இந்த ஜடமாகும் அகங்காரமாயிருக்கின்ற பிரம்மாஎன்று முன்னமேசொல்லியிருக்கின்றதல்லவா? இந்த அகங்காரமாயிருக்கின்ற ஜடமில்லாவிட்டால் நாவு உண்டாகுமா?

சி: இல்லை.

கு: அப்பொழுது நாவு எங்கிருந்து உண்டாகின்றது?

சி: இந்த ஜடத்திலிருந்தே.

கு: இந்த ஜடத்தில் நாவு உண்டானது கொண்டு இந்த ஜடத்திற்கு நாவு என்னவாகிறது?

சி: சந்தானமாகிறது.

கு: அதனால்தான் பிரம்மாவிற்கு மகள் சாஸ்வதியென்று சொல்லக்காரணம். அது ஏனெனில் தேகமல்லாமலிருக்கின்ற ஜடத்தினை தேகமென்று அபிமானித்துக்கொண் டிருக்கின்ற அபிமானமாகும் நானென்று சொல்லுகிற அகங்காரமாகிய பிரம்மா. அப் பிரம்மாவாகும் ஜடம். அந்த ஜடத்திலிருந்து நாவு உண்டானது கொண்டு தனக்கு மகளாயிற்று.

சி: குருவே! மகளென்று சொல்லுவது ஸ்திரீயை அல்லவா? அப்பொழுது இந்த நாவு ஸ்திரீயோ புருஷனோ, எவ்விதத்தில் தீர்மானிக்க வேண்டியது?

கு: ஸ்திரீயென்றால் சக்தியாகின்றது. சக்தியில்லையென்றால் உலகமில்லை. இந்த உலகம் சக்தியிலிருந்து உத்பத்தியானதாகின்றது. அந்தச் சக்திதானாகும் சப்தம்; அதாவது ஓசை. சப்தமில்லாவிட்டால் சக்தியில்லை. சக்தியில்லாவிட்டால் சப்தமுமில்லை; அதாவது ஓசையுமில்லை. அப்பொழுது சப்தமும் அதாவது ஓசையும், சக்தியும் ஒன்றுதானாகும், இரண்டல்ல. சக்தியில்லாவிட்டால் பேச்சும் மூச்சுமில்லை. அப்பொழுதுள்ள நிலைமையே சமீரணனென்றும் சொல்லுகிறது. அது நாம் தூங்குகிற சமயத்திலுள்ள நிலைமை. அதாவது சக்தி வாயுரூபமாய் வெளியில் சலிக்காமல் தன்னுடைய உள் வழியாய் மேலாகவும், கீழாகவும் மாத்திரமாய் கதாகதம் அதாவது நடனம் செய்கின்ற நிலைமை. அதெப்படியென்றால் தன்னுடைய சக்தி வாயு ரூபமாய் வெளியில் சலிக்காமல்

இருந்ததினால் தானுயிருக்கின்ற சிவன் மாத்திரமாகின்றது. அதெப்படியென்றால் தன்னுடைய சக்தியாகிய சப்தம் அதாவது ஓசை தன்னில் தானே அடங்கி தான் மாத்திரமாகி யிருக்கின்றது. அதற்கொரு உதாரணம்:—நீர் சாண்டோ ராம மூர்த்தியைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீரல்லவா? அவர் தன்னுடைய ஒரு கையை நீட்டிப் பிடித்தால் அக் கையை மடக்குவதற்கு ஐந்து அல்லது பத்துப் பேர் பிரயத்தனம் செய்தால் முடியுமா?

சி: முடிகிறதில்லை.

கு: காரணமென்ன?

சி: அவர் சக்திவானுன பலவானுயிருந்ததினால்.

கு: ஆனால் அவர் படுத்துத் தூங்கும் சமயத்தில் நாலு அல்லது ஐந்து வயது பிராயமுள்ள ஒரு குழந்தைக்கு அவருடைய கையைத் தூக்கி மடக்குவதற்கு முடியுமல்லவா?

சி: ஆம்; முடியும்.

கு: அதென்ன காரணம்? அவர் பலவானல்லவா? அவர் தன்னுடைய ஒரு கையை நீட்டிப் பிடித்தபொழுது சுமார் ஐந்து அல்லது பத்து பலமாயுள்ள ஆள்களுக்கு அக் கையை மடக்க முடியாமல் வந்ததற்கும், அவர் தூங்கின சமயத்தில் நாலைந்து வயதுள்ள குழந்தைக்கு அந்தக் கையைப் பிடித்துத் தூக்கி மடக்க முடிகின்றதற்கும் காரணமென்ன?

சி: அவர் தூங்கியதினால் சக்தியில்லாதது கொண்டு.

கு: அப்பொழுது அவருடைய சக்தி என்னவாய்ப் போயிற்று?

சி: தன்னிலேயே லயித்திருந்தது.

கு: ஆனால் சக்தி எவ்விடமிருந்தாகும் உண்டாகின்றது?

சி: தன்னிலிருந்து தானேயாகு முண்டாகின்றது.

கு: ஆனால் தன்னிலிருந்துண்டாகின்ற சக்தி தன்னில் தானே லயித்து தானுகியிருக்கும் பொழுது ஏதேனுமுண்டா?

சி: இல்லை.

கு: அப்பொழுது சப்தம் அதாவது ஓசையுண்டா?

சி: இல்லை.

கு: அதனால் சப்தம் அதாவது ஓசையில்லாவிட்டால் இக் காணுகின்ற யாதொரு நிலைமைகளையும் கேட்பதற்கோ, காண்பதற்கோ, அறிவதற்கோ முடியுமா?

சி: முடிகிறதில்லை.

கு: அப்பொழுது இதற்கெல்லாம் காரணமென்ன?

சி: சப்தம் அதாவது ஓசை.

கு: அப்பொழுது அச் சப்தம் என்னவாகின்றது?

சி: சக்தியாகின்றது.

கு: அந்தச் சப்த சொரூபமாகிய சக்தியிலிருந்தாகும் இக் காணப்படுகிற எல்லா நிலைமைகளும் உண்டாயின. அதனால் சப்த சொரூபமாயிருக்கின்ற சக்தி ஸ்திரீயோ, புருஷனோ?

சி: ஸ்திரீ; அதாவது பெண்.

கு: அப்பொழுது சப்தம் என்னவாகின்றது?

சி: பெண் ஆகின்றது.

கு: அந்தச் சப்தம் உண்டாவதற்கு வேண்டிய ரூபம் எது?

சி: நாவு.

கு: ஸ்திரீயாகிய சப்தத்தை உண்டாக்குவதற்குக் காரணமாயிருக்கின்ற ரூபம் நாவு ஆகின்றதினால் அதற்கு ஸ்திரீ என்று சொல்லக் காரணம். அந்தச் சப்தத்திற்காகும் சரஸ்வதி யென்று பெயர். அது கொண்டாகும் நாவிற்குச் சரஸ்வதி என்று பெயர் வந்தது. இந்த நாவு பிரம்மாவாகிய ஜடத்திலிருந்து உத்பத்தியானது கொண்டு பிரம்மாவுக்கு நாவு மகளாயிற்று. இதனாலாகும் பிரம்மாவிற்கு மகள் சரஸ்வதி என்று சொல்லக் காரணம். பிரம்மாவிற்குச் சம்சாரம் அதாவது மனைவி சரஸ்வதி என்று சொல்லக் காரணம்; தான், தன்னுடைய மகளாகிய சரஸ்வதியைக் கொண்டு வேலைகளைச் செய்விக்கின்றதினால் ஆகும்.

சி: நமக்கெல்லாம் பெண் குழந்தைகளிருக்கின்றதல்லவா? நாமும் அந்தக் குழந்தைகளைக் கொண்டு வேலைகளைச் செய்விக்கிறது உண்டல்லவா? அப்பொழுது அவர் நமக்கு மனைவியாகுமா?

கு: நாம் நம்முடைய குழந்தைகளைக்கொண்டு வேலைகளைச் செய்விக்கின்ற பிரகாரமல்ல, பிரம்மா தன்னுடைய மகளைக் கொண்டு வேலைகளைச் செய்விக்கின்றது. பிரம்மா தன்னுடைய மகளைப் புணர்ச்சி செய்தாகும் வேலைகளைச் செய்விக்கிறது. அதெப்படி யென்றால், நாம் தூங்கும் சமயத்தில் நமக்கு யாதொரு சப்தம் உண்டாக்குவதற்கோ, கேட்பதற்கோ முடிகிறதுண்டா?

சி: முடிகிறதில்லை.

கு: அதென்ன காரணம்?

சி: நானென்கிற நிலைமை இல்லாததுகொண்டு.

கு: தவிர ஒரு கையை மாத்திரம் வீசினால் சப்தம் உண்டாகுமா?

சி: உண்டாகாது.

கு: இப்பொழுது நாம் தூங்குவதானால் நானென்ற நிலைமையுமில்லை. அப்பொழுது யாதொரு சப்தமும் உண்டாக்க முடிகிறதுமில்லை. தூக்கம் விழித்தபொழுது நானென்கிற நிலைமை உண்டாகிறது. அந்த நானென்கிற

நிலைமையாகும் அகங்காரமாயிருக்கின்ற பிரம்மா. அந்த அகங்காரமாயிருக்கின்ற பிரம்மா தன்னிலிருந்து உண்டாகிய தன்னுடைய மகளாயிருக்கின்ற நாவைப் புணர்ச்சி செய்து சப்தமுண்டாக்கிப் பேச்சாயிருக்கின்ற வேலைக்கு உபயோகிக்கிறது. இது கொண்டாகும் பிரம்மாவிற்குச் சரஸ்வதி சம்சாரம் அதாவது மனைவி என்று சொல்லுகிறது. சம்யோகம் அதாவது புணர்ச்சி எப்படியென்றால் நான் என்கிற அகங்காரமில்லாதிருந்தால் நாவிற்கு யாதொரு சப்தத்தையும் உண்டாக்க முடிகின்றதில்லை. நான் என்கிற அகங்காரம் உண்டாகும் பொழுது தன்னுடைய மகளாகிற நாவுடன் சேருகிறது. அந்தச் சேர்க்கையே சம்யோகம், அதாவது புணர்ச்சி. சம்யோகம் என்றால் சம்+யோகம். சம்=அது அல்லது அவள். யோகம்=சேர்க்கை. அவளோடு சேருகிறது. அப்பொழுது அகங்காரமாயிருக்கின்ற நான் நாவுடன் சேர்ந்து அந்த நாவினை மேலும், கீழும் தட்டி சப்தமுண்டாக்கிப் பேச்சாயிருக்கின்ற தொழிலை உண்டாக்குகின்றது. இதனால்தான் பிரம்மாவிற்குச் சரஸ்வதி மனைவி என்று சொல்லுவது. தாய் என்று சொல்லுவதற்குக் காரணம்; ஏனென்றால் சப்தமில்லாவிட்டால் யாதொன்றுமில்லை. சப்தமில்லையென்றால் நானென்கிற நிலைமையுமில்லை. அது எவ்விதமென்றால் நாம் தூங்கும்போது நமக்குச் சப்தம் கேட்பதற்கோ, சப்தம் உண்டாக்குவதற்கோ முடிகிறதில்லை. எப்பொழுது சப்தம் தட்டுகின்றதோ, அப்பொழுது தூக்கம் தெளிகின்றது. அப்பொழுதாகும் நானென்கிற நிலைமை உண்டாகிறது. அந்த நான் என்கிற நிலைமை எவ்விடமிருந்துண்டாயிற்று?

சி: சப்தத்திலிருந்து உண்டானது.

கு: சப்தத்திலிருந்து நான் உண்டான பொழுது எனக்கு சப்தம் யாராகின்றது?

சி: தாயாராகின்றது.

கு: அது கொண்டாகும் சரஸ்வதி பிரம்மாவிற்குத் தாய் என்று சொல்லக் காரணம். பிரம்மாவிற்குச் சரஸ்வதி சகோதரி அதாவது தங்கை என்று சொல்லுவதற்குக் காரணம்; சப்தத்திலிருந்து 'நான்' முதலில் உண்டாகி, அதன் பிறகே சப்தம் உண்டாகியது. அப்பொழுது சப்தம் உண்டாவதற்கு முன்பு நான் உண்டானது. அதன் பிறகு ஸ்திரீயாகிய சப்தமும் தன்னிலிருந்துண்டானது. ஆனதினால் முதலில் நானும் அதற்குப்பின் தன்னிலிருந்து சப்தமாகிய ஸ்திரீயும் உண்டானது கொண்டு அந்த ஸ்திரீ எனக்கு யாராகின்றது?

சி: சகோதரியாகின்றது.

கு: ஆகையினுல் நானென்கிற நிலைமை முதலில் உண்டாயிற்று. அதன் பிறகு சப்தமாகிய ஸ்திரீ உண்டானதினுல், தன் கூடப் பிறந்தவள் சகோதரியென்ருயிற்று. இதனுல்தான் பிரம்மாவிற்குச் சகோதரி சரஸ்வதி யென்று சொல்லிவருகிறது. அது கொண்டு முன் சொல்லிய முறையிலாகும் பிரம்மாவினுடையவும், சரஸ்வதியினுடையவும் நிலைமைகள். இதனுலாகும். வேத சாஸ்திராதிகளில் இம்மாதிரி சொல்லப்பட்டிருக்கின்றது. அவைகளுடைய உண்மைத் தத்துவத்தை அறியாமல், உலகத்தில் ஜனங்கள் இன்னின்னவைகள் தப்பிதமென்று கொள்ளாமலும், நியாய அநியாயங்களை ஆலோசிக்காமலும், யாதொரு கேவலமுமில்லாமல் நான் பண்டிதன், எனக்குப் பண்டிதப் பட்டம் கிடைக்கவேண்டுமென்று அபிமானித்தும், அகங்கரித்தும் ஏதாகிலும் சொல்லி அட்டகாசித்துக் கொண்டிருக்கிருர்கள். அதனுல் மேல் சொல்லிய விதத்திலாகும் பிரம்மாவினுடையவும், சரஸ்வதியினுடையவும் உற்பத்தி. அது மனதிலிருந்து உற்பத்தியானதாகும். அந்த மனதாகும் விஷ்ணு. அந்த விஷ்ணுவிலிருந்தாகும் விஸ்வம்; அதாவது உலகு உண்டானது. அந்த விஷ்ணுவாகின்ற மனமாகும் விஸ்வத்தை அதாவது உலகத்தைப் பரித்து அதாவது தாங்கிக் கொண்டிருக்கிறது. அதனுல் விஷ்ணுவிற்கு 'விஸ்வம்பரன்' என்று பெயர் உண்டாயிற்று. விஸ்வம் என்பது உலகு. இந்த உலகம், மனதாகிய விஷ்ணு இல்லையேல் உண்டாகிறதில்லை. அதெப்படியென்ருல் ஒருவன் தூங்குகிருனென்று சொல்லும் சமயம் அவருக்கு விஸ்வம் அதாவது உலகு இல்லை. எப்பொழுது தூக்கம் விழிக்கின்றதோ, அப்பொழுது மனதாகின்ற விஷ்ணு முட்டை வடிவமாக வெளியில் வருகிறது. அப்பொழுது விஸ்வமாயிருக்கின்ற உலகு உண்டாகிறது. அப்பொழுது முன் விவரித்த பிரகாரம் பிண்டாண்டமாய், முட்டை வடிவமாய் வெளியில் தள்ளி நிற்கின்ற உலகத்தில் தன்னுள்ளிலிருக்கின்ற ஜீவசக்தி, தன்னுள்ளிலிருந்து விட்டுப் போகாமல் வெளியில் தள்ளி நிற்கின்ற பிண்டாண்டமாய் இருக்கின்ற உலகமாகிய வெளியின் உள்ளில் பிரதி பிம்பித்துக் காண்கின்றதாகும் நாம் காண்கின்றதும், கேட்கின்றதும், அறிகின்றதுமாகிய எல்லா நிலைமைகளும். இவைகளுக்கெல்லாம் காரணம் மனமாகும். அந்த மனமாகும் விஸ்வம்பரனுயிருக்கின்ற விஷ்ணு. அந்த விஸ்வம்பரனுயிருக்கிற விஷ்ணுவாகும் ரஜோகுணம். அது எதனுலென்ருல், இராஜ்யம் பரிபாலிக்கின்றவருக்கு இராஜா வென்று சொல்லுகிறது. காரணம் அந்த ராஜ்யத்தினுடைய எல்லாபரிபாலன அதிகாரங்களும் இராஜாவுக்கு இருக்கிறது. அதே பிரகாரம் விஸ்வத்தை

அதாவது உலகத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறதினைக் கொண்டு மனமாயிருக்கின்ற விஷ்ணுவுக்கு விஸ்வம்பரன் என்ற பெயர். அப்பொழுது விஸ்வமாகிய உலகுக்கு இராஜா மனமாயிருக்கின்ற விஷ்ணுவாகும். அதனால் பரிபாலனைத் தன்மை யாருக்கிருக்கின்றதோ அவராகும் இராஜா. தவிர விஷ்ணுவென்றும், சிவனென்றும், சங்கற்பித்து எழுதியதான படங்களில் சித்திரத்தைப் பார்த்தால் விஷ்ணுவென்பது அனந்த சயனனாய், கிரீடாதிபதியாய், முத்துமாலை, கங்கணம் முதலிய ஆபரணங்கள் அதாவது நகைகளும், பட்டு வஸ்திரங் களும் தரித்து சர்வ அலங்கார பூஷணனாகி, மனைவிமார்களான இலக்குமி, பூமி இவரோடும் பரிவாரங்களாகிய தும்புரு நாரதர், வீணா நாரதர், கருடன் முதலியவர்களோடும் மிகவும் ரஜோகுண மூர்த்தியாய் காணப்படுகிறது. அதல்லாமல் கிரீடம் இராஜாக்களுக்காகும். அதனால் ரஜோகுணம் விஷ்ணுவாகும். தவிர நீர் ரஜோகுணம் கொண்டு சிருஷ்டி கர்த்தனைப் பிரம்மா என்றும் சொல்லுகிறீர். அதுவும் சரியாகும். அதெப்படி என்றால் ரஜோகுணமாயிருக்கின்ற மனதாகிய விஷ்ணு சுக்கில மாகும். அந்தச் சுக்கிலத்தைக் கொண்டாகும் அகங்காரமாய் இருக்கின்ற பிரம்மா சிருஷ்டிக்கின்றது. அதெவ்விதம் என்பதற்கு உதாரணம்:—"வாளினால் இராமன் வாழையை வெட்டினான்" என்ற வாசகத்தில் ஒருக்காலும் வாள் இராமன் ஆகிறதில்லை. வாளென்று சொல்லுவது ஒரு வஸ்துவாகும். வாழை என்ற வஸ்துவை வாளென்கிற வஸ்துவைக்கொண்டு இராமன் வெட்டியதாகும். வாளென்றும், வாழையென்றும் உள்ள வஸ்துக்களில்லையென்றால் வெட்டுகின்ற தொழிலில்லை. இப்படியேதான் ரஜோகுணமென்று சொல்லுகிற விஷ்ணு வென்ற சுக்கிலம் ஒரு வஸ்துவாகும். அந்தச் சுக்கிலமாயிருக் கின்ற வஸ்துவைக் கொண்டாகும் சிருஷ்டிகள். அந்த வஸ்து இல்லையென்றால் சிருஷ்டியில்லை. சிருஷ்டிக்கின்றது அகங்காரமா யிருக்கின்ற பிரம்மாவாகும். அந்த அகங்காரமில்லையென்றால் சம்போகமென்கிற புணர்ச்சியில்லை. அந்த அகங்காரமுண்டாய் இருந்தும் மனமில்லையானால் சம்போகமென்கிற புணர்ச்சி உண்டாகிறதில்லை. மனமாகிய சுக்கிலம் நிமித்தம், அகங்காரமாய் இருக்கின்ற பிரம்மா, சம்போகமாகின்ற தொழிலினால் மேற் சொன்ன ரஜோகுணமாயிருக்கின்ற சுக்கிலத்தைக்கொண்டு சிருஷ்டிக்கின்றது. இதனால்தான் ரஜோகுணங்கொண்டு பிரம்மா சிருஷ்டிக்கிறதென்று சொல்லுகிறது. ஆகையினால் பிரம்மா ரஜோகுணமல்ல. தாமஸ குணமாகும். சிவனென்பது தாமஸ, இராஜஸ குணங்களைவிட்டுச் சுத்த சாத்வீகமொன்று மாத்திரமாகி, சடை, மரவுரி, திருநீறு, உருத்திராக்கம்

அதாவது ருத்திராக்ஷம் தரித்து மௌனியாகி எப்பொழுதும் தபோ நிஷ்டையாய், யாதொரு அலங்காரமுமில்லாமல் காணப் படுகிறது. அது சாத்வீக குணமாகும். அதாவது சிவனுயிருக் கின்ற ஜீவனாகும். அந்த ஜீவனாகும் இரக்ஷிக்கின்றது. அது கொண்டாகும் சத்துவகுணம் கொண்டு "ரக்ஷகர்த்தா" அதாவது பரிபாலன கர்த்தா விஷ்ணுவென்று சொல்லுகிறது. அதனால் மனமாகின்ற விஷ்ணு ரக்ஷிக்க வேண்டுமென்றால் ஜீவன் வேண்டும். ஜீவனைக் கொண்டாகும் மனமாகிய விஷ்ணு ரக்ஷிக்கின்றது. ஜீவனில்லையென்றால் யாதொன்றுமில்லை. ரஜோகுணமாயிருக்கின்ற மனதிலிருந்து பூதமாயிருக்கின்ற அகங்காரம் உண்டாகின்றது. அந்தப் பூதமாயிருக்கின்ற அகங்காரத்தைச் சாத்வீகமாயிருக்கின்ற ஜீவன் ரக்ஷிக்கின்றது. அது எந்த விதத்திலென்றால், மனதாகிய ரஜோகுணத்தைக் கொண்டு சம்போக நிமித்தம் அகங்காரமாயிருக்கின்ற இக் காணுகின்ற ஜடத்தைச் சிருஷ்டித்தது. இந்த ஜடத்தை சாத்வீகமாயிருக்கின்ற ஜீவனாகும் இரக்ஷிக்கின்றது அதாவது காப்பாற்றுகிறது. அதெப்படியென்றால் சம்போக நிமித்தம் ரஜோகுணமாயிருக்கின்ற சுக்கிலத்தால், அகங்காரமாய், பூதமாயிருக்கின்ற ரூபத்தைச் சிருஷ்டிக்கிறது. அதாகும் ஜனித்து விழுந்ததாகிய குழந்தை. அந்தக் குழந்தைக்குள்ளில் ஜீவனுயிருக்கின்ற சாத்வீக குணமில்லையென்றால் அது பிணமாகிறது. அதனால் ஜீவனுடைய சக்தியாயிருக்கின்ற வாயு இருக்கும் பொழுது ஜீவனுண்டென்றும் சொல்லுகிறது. அந்த ஜீவனாகி, வாயுவாகி, சாத்வீகமாயிருக்கின்ற சிவனி லிருந்து ரஜோகுணமாயிருக்கின்ற மனம் உத்பவித்தது. அதனால் சாத்வீகத்திலிருந்து ராஜசமுண்டானதென்றும் சொல்லுகிறது. சாத்வீக குணமாயிருக்கின்ற ஜீவனுடைய சலனமாகிய வாயுவென்கிற வஸ்துவைக் கொண்டுக் காப்பாற்றி வருகிறது அந்த ராஜஸமாகும். இதனால்தான் சத்துவகுணம் கொண்டு "ரக்ஷகர்த்தா" என்று விஷ்ணுவைச் சொல்லுகிறது. தமோ குணத்தால் "சம்ஹார ருத்திரனாகும்" என்று சிவனைச் சொல்லுகிறது. அது எவ்விதமென்றால் தமோகுண காரணத்தால் சிவன் சம்ஹார ருத்திரனுய்த் தீருகிறது. அதாவது ஆத்மாவாகி, ஜீவனாகி, வாயுவாகி, தேஜஸாகி யிருக்கின்ற வஸ்துவாகும் சிவன். 'ருத்திரன்' என்பதில் ருகாரம் என்பது தேஜஸ். அது அக்கினியாகும். அந்த அக்கினி திரவித்து நசிக்கின்றது. அதற்காகும் ருத்திரனென்று சொல்லுகிறது. ஆகையினால் முன் சொன்ன சிவனாகி, தேஜஸாகி இருக்கின்ற வஸ்து திரவித்து நசித்துக் கொண்டு இருக்கிறதினால், ருத்திரனென்று சொல்லுகிறது. அதற்குக்

காரணம் தமோ குணமாயிருக்கின்ற அந்தகாரமாகும். அந்த அந்தகாரமாகும் அகங்காரம். அந்த அகங்கார நிமித்தம் தன்னைத்தான் அறியாமல் அது வேண்டும், இது வேண்டும், நான் உயர்ந்தவன், ஸ்தானி, மானி என்று இவ்விதத்திலுள்ள துரபிமானத்தால், மோகாந்தகாரர்களாகி, ஜீவனாகி, தேஜஸாகியிருக்கின்ற வஸ்து நிரசித்து, அதோகதியாகி, ஜனங்கள் நசித்துப் போகின்றார்கள். இதனால்தான் சிவன் ருத்திரனாக ஜனித்து சம்ஹாரம் செய்கிறதென்று சொல்லுகிறது. இவ்விதமல்லாமல் நம்மிலிருந்து வேறிட்டு ஒரு சிவன் ருத்திரனாக ஜனித்து வந்து நம்மைக் கொல்லுகிறதில்லை. நம்மிலிருக்கின்ற ஜீவனாய், வாயுவாகி, பிரகாசமாயிருக்கின்ற வஸ்து, அகங்கார நிமித்தம் தன்னைத் தானறியாமல் முன் சொல்லிய துரபிமானமாகிய விசாரங்களால் நசித்துப் போகின்றதாகும்.

அதுவுமல்லாமல் உலகத்தில் பிரதிஷ்டாதிகள் செய்து பூஜித்து வருகிறார்கள். இவைகளைப் பார்க்கும்பொழுது தமோ குணம் பிரம்மாவும், ரஜோகுணம் விஷ்ணுவும், சத்துவகுணம் சிவனுமாயாகவும் காண்கின்றது. ஏனென்றால் பிரம்மாவை உலகத்தில் எவரும் பூஜிக்கின்றதாய்க் காணுகிறதில்லை. விஷ்ணுவையும் சிவனையும் மாத்திரமே பூஜித்து வருகின்றார்கள். ரஜோ குணம் பிரம்மாவாயிருந்தால் கட்டாயமாய் பிரம்மாவையும் பூஜிக்கவேண்டியதாகும். அவ்விதம் உலகத்தில் தமோகுணத்தை யாரும் பூஜிக்கின்றதில்லை. ரஜோ குணத்திற்கும், சத்துவ குணத்திற்கும் மாத்திரமே பூஜிக்கிறதாகக் காணுகிறது. அது எதைக் கொண்டென்றால், ரஜோகுணம் ராஜாவாயிருக்கின்றதினால் ராஜாவை பூஜிக்கவேண்டும். ஏனென்றால் ராஜாவென்பது ரக்ஷாகர்த்தாவாகின்றது. அதுகொண்டு ரக்ஷிக்கின்ற ராஜாவை சாதாரணமாய்ப் பூஜித்து வருகிறது. அதுவுமல்லாமல் ராஜாவும், பாக்கி பிரஜைகளும் சாத்வீகத்தையும் பூஜித்து வருகிறார்கள். சாத்துவீகம் சந்நியாசியாகின்றது. அதெப்படி என்றால் அவர் ராஜஸ, தாமஸ குணங்கள் விட்டுச் சுத்த சாத்துவீக குணத்தோடு மாத்திரம் நடக்கின்றவராகும். அவ்விதமுள்ளவர் உலக குருக்களாகும். அம்மாதிரியுள்ள உலக குருக்களாகிய சந்நியாசிகளை; ராஜா முதலான எல்லா ஜனங்களும் பூஜித்து வருகிறார்கள். அப்பொழுது உலகத்தில் சாத்துவீக குணத்தையும், ராஜஸ குணத்தையும் மாத்திரமே பூஜித்து வருகிறதாயிருக்கிறது. தமோகுணக் காரர்களாகி ராகத் துவேஷிகளாகி நடக்கின்றவரை எவரும் பூஜிக்கின்றதில்லை. இதற்கு அனுசரித்தாகும் உலகத்தில் பூஜாக்கிரமங்களும் காணுகிறது. அதெப்படியென்றால், விஷ்ணு க்ஷேத்திரங்களில்

விஷ்ணு வென்று சங்கல்பித்ததான பிம்பங்களை எந்தப் பிரகாரத்திலாகும் பூஜிக்கின்றது?

சி: அதை ஸ்நானம் செய்வித்துப் பீதாம்பரம் முதலான அதாவது பட்டு வஸ்திரங்கள் உடுத்திக் கிரீடம் வைத்து, பல ஆபரணங்களையும் அணிவித்துப் பரிமள திரவியம் முதலானது சாத்தி, பல அலங்காரங்கள் செய்து வெகு அழகாக நிறுத்திப் பல விதங்களிலுள்ள புஷ்பங்களை அர்ச்சித்துப் பூஜிக்கின்றனர்.

கு: மேலே சொன்ன நிலைமைகளெல்லாம் என்ன ஆகின்றன?

சி: அலங்காரமாகின்றன.

கு: அலங்கார மென்பது எந்த குணத்திற்கு?

சி: ரஜோ குணத்திற்கு.

கு: அப்பொழுது விஷ்ணுவை எந்தக் குணமாய்ப் பூஜித்து வருகிறது?

சி: சுத்தரஜோ குணமாயாகும் பூஜித்து வருகிறது.

கு: அதனால் ரஜோகுண மென்பது எது?

சி: விஷ்ணு.

கு: சிவக்ஷேத்திரங்களில் சிவலிங்கங்களைப் பூஜிக்கின்றது எவ்விதத்தில்?

சி: சிவலிங்கங்களுக்கு அபிஷேகமாகும் முக்கியமாய் இருக்கின்றது. காசி, கோகர்ணம் முதலான க்ஷேத்திரங்களில் உள்ள சிவலிங்கங்களுக்குச் சதா காலமும் அபிஷேகமாகும் முக்கியமாயுள்ளது. அதல்லாமல் கோகர்ணத்தில் சிவ லிங்கத்திற்கு மேல் பாகத்தில் ஒரு தோணியைக் கட்டித் தொங்கவிட்டு அதில் தண்ணீர் நிரப்பியிருக்கிறது. அந்தத் தண்ணீர் சதாகாலமும் அந்த சிவலிங்கத்தின் பேரில் ஒழுகி விழுந்து கொண்டேயிருக்கிறது. இதல்லாமல் அநேக க்ஷேத்திரங்களில் உள்ள சிவலிங்கங்களுக்கு மேல் பாகத்தில் ஒவ்வோர் தாரா பாத்திரங்களைக் கட்டித் தொங்க விட்டு இருக்கிறது. அந்தப் பாத்திரத்தினுடைய அடி பாகத்தில் சிறு துவாரமுண்டாக்கி அதில் தண்ணீர் நிறைத்திருக்கிறது. அந்தத் தண்ணீர் எப்பொழுதும் சிவலிங்கத்தில் மேல் விழுந்து கொண்டிருக்கின்றது.

கு: அதனால் சிவலிங்கங்களுக்கு முக்கியம் எது?

சி: அபிஷேகம்.

கு: மேல் சொல்லிய பிரகாரத்தில் அதன் பேரில் சதா காலமும் தண்ணீர் விழ்ந்து கொண்டிருந்தால் அதை அலங்கரிப் பதற்கு முடியுமா?

சி: முடியாது.

கு: முன் சொல்லிய பிரகாரம் சதா காலமும் அபிஷேகம் செய்தால் அதன் மேலேதாகிலும் களங்கமோ அழுக்கோ உண்டாகுமா?

சி: உண்டாகிறதில்லை.

கு: களங்கமும், அழுக்குமில்லாமலும், அலங்காரம் இல்லாமலுமிருக்கின்றது எந்த குணமாகின்றது?

சி: சுத்த சாத்விக குணமாகின்றது.

கு: அப்பொழுது சிவனை எந்தக் குணமென்றாகும் சொல்ல வேண்டியது?

சி: சுத்த சாத்வீக குணமென்றாகும்.

கு: அது கொண்டு சாத்வீக குணம் சிவனென்றும், ரஜோ குணம் விஷ்ணு வென்றும் வெளிப்படுகிறது. அந்த ரஜோ குணத்திலிருந்துண்டாகிய அகங்காரமாயிருக்கின்ற தமோ குணமாகும் பிரம்மா. அது கொண்டு உலகில் சத்துவ குணமாயிருக்கின்ற சிவனையும் ரஜோ குணமாயிருக்கின்ற விஷ்ணுவையும் மாத்திரம் பூஜித்து வருகின்றது. தமோ குணமாயிருக்கின்ற பிரம்மாவைப் பூஜிக்கிறதில்லை. உலகத்தில் பூஜிக்கின்ற ஜனங்கள், இன்னின்னவைகள் தான் குணங்கள் என்று தெரியாமலும், அதைப்பற்றி சிந்திக்காமலும், தாம் செய்கின்ற தொழிலின்னதென்று அறியாமலும், சத்துவ குணம் விஷ்ணுவென்றும், தமோ குணம் சிவனென்றும், ரஜோ குணம் பிரம்மாவென்றும் சொல்லி யாதொரு விபரமும் இல்லாமல் புகழ்ந்து நடக்கிறார்கள். இது தவறுதலாகிறது. ஆனால் உண்மை ஏதென்றால் சாத்வீக மென்பது ஜீவனும், அது சிவனும், ராஜசம் என்பது சாத்வீகமாயிருக்கின்ற ஜீவனிலிருந்து உண்டாயிருக்கின்ற மனமும், அது விஷ்ணுவும், தாமஸ மென்பது ராஜஸமாயிருக்கின்ற மனதிலிருந்துண்டாயிருக்கின்ற அகங்காரமும், அது பிரம்மாவுமாகும். இதாகும் திரு மூர்த்திகள் அதாவது மும்மூர்த்திகள். மும்மூர்த்திகளாகி இந்தப்பிரகாரமாயிருக்கிற முக் குணங்களும் ஒன்றாய்ச் சேர்ந்து உத்பத்தி ஸ்தானமான ஆகாசத்தில் எப்பொழுது லயிக்கின்றதோ அப்பொழுது திருகுணரகிதமாய், திருகுணா தீதமாய்த் தீருகிறதாகும். அதாகும் மோக்ஷம்.

அத்தியாயம் 10

சி: குருவே! மனமென்பது விஷ்ணுவாகு மென்றும் சக்தியாகுமென்றும், ஜலமாகுமென்றும், சுக்கில மாகும் என்றும் கற்பித்தீர்களல்லவா? ஒரே வஸ்துவையேதான் இவ் விதமாக மாறி, மாறிச் சொல்வதன் காரணமென்னவாகும்?

கு: அது ஒரே வஸ்துதானாகும். அதற்குச் சந்தேகமில்லை. ஆனால் அதற்கு பல மாற்றங்களுண்டாகின்றதினால் பல பெயர்களு முண்டாகின்றதாகும். அதெப்படி என்றால், அக்ஷரமாய், தானாயிருக்கின்ற வஸ்து, ஆகாசமாகி, வெளியாகி, அந்த வெளியாயிருக்கின்ற ஆகாசத்துக்காகும் சதாசிவன் என்று சொல்லுகிறது. அதாகும் தானாயிருக்கின்ற ஜோதி. அந்த ஜோதியாயிருக்கின்ற தனக்குச் சலனமுண்டானதிற்கு ஜீவனென்று சொல்லுகிறது. அந்த ஜீவனாகும் ஆத்மாவாய், சைதன்யமாயிருக்கின்றது. அதாகும் தேகம். அந்தத் தேகத்தில் இருந்து ஆவியாய், வியர்வையாய், அக்கினி சொரூபமாகிய சுக்கிலம் உண்டாகின்றது. அந்தச் சுக்கிலமாகும் மனம், அது ஜலாம்சம் ஆகும். அதாகும் விஷ்ணு. அதற்காகும் சக்திஎன்று சொல்லுகிறது. அதுகொண்டாகும் சக்தியிலிருந்து சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் உண்டாகிறதென்றும் சொல்லுகிறது. சக்தியில்லாவிடில் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் உண்டாகிற தில்லை. அந்தச் சக்தி சுக்கிலமாகும். சுக்கிலமில்லையென்றால் யாதொரு சிருஷ்டியுமுண்டாகிறதில்லை. அந்தச் சுக்கிலமாய் இருக்கின்ற சுவேதஜமாகும் பிரம்மாண்டம். அது எவ்வித மென்றால், சமுத்திரத்தில் ஜலமில்லை என்றால் சமுத்திரமென்று பெயரில்லை. அப்பொழுது அது மிகவும் ஆழமான தரிசாய் இருக்கின்ற ஒரு இடமாயிருக்கும். அதில் ஜலம் உண்டானதினால் சமுத்திரமென்றும் பெயர்சொல்லி வருகிறது. அப்படியுள்ள சமுத்திரத்தில் சில நீர்க் குமிழிகள் உண்டாகிறது. அது உண்டாகக் காரணம் ஜலம் அசைந்து அலை அடிக்கின்றதி னாலாகும். அந்த ஜலத்திற்குச் சலனமுண்டாகாதிருந்தால் மேற்சொன்ன நீர்க் குமிழிகளுண்டாகிறதில்லை. அலை அடித்த போதுண்டானது நீர்க் குமிழியல்ல, நுரையாகும். அந்த நுரையில்லாவிடின் நீர்க் குமிழிகளுண்டாகாது. அதனால் ஜலத்திலிருந்துண்டாவது நுரையும் அதிலிருந்துண்டானது நீர்க் குமிழிகளுமாகும். அந்த நீர்க் குமிழிகள் ஜலத்தின்மீது எழும்பி, உருண்டு, முட்டை வடிவில் பளிங்கு வர்ணமாய் இருக்கின்றது. ஆனால் ஜலத்தின் மேலாய் நுரை நீர்க் குமிழிகளாய் பொங்கிக்கிடக்கிறது. இப்பிரகாரமேதான் ஆகாசமென்பது சமுத்திரத்தில் ஜலமில்லாத நிலைமை எவ் விதமோ அவ்வித மாகுமென்று கருதவும். ஜலமுண்டான போதாகும் சமுத்திரமென்று சொல்லுவது. அதே பிரகாரம்

ஆகாசத்தில் வாயு உண்டான போது சமுத்திர மென்றும், அந்தச் சமுத்திரம் மாயா சமுத்திரமாகுமென்றும் கருதவும். சமுத்திரத்திலிருந்து அலையடித்த போது, நுரையுண்டானது என்று சொல்லுகிறதற்கு மாயா சமுத்திரத்தில் வாயுவாய் இருக்கின்ற ஜலத்தினுடைய அலையடிக்கின்றதிலிருந்து மனமாகிய நுரை உண்டாகிறது. சமுத்திரத்தில் அலை அடித்ததனால் உண்டான நுரை நீர்க் குமிழிகளாய் உருண்டு, முட்டை வடிவமாய், பளிங்கு வர்ணமாய் ஜலத்தின் மீது கிடப்பதென்று சொன்னது, மாயா சமுத்திரத்தில் சலனமாகிய வாயுவிலிருந்து நுரையாயிருக்கின்ற மனமுண்டாவதும், அந்த மனது குமிழியாயுருண்டு முட்டை வடிவாகி, பளிங்கு வர்ணமாய் மாயா சமுத்திரத்தின் மீது அகங்காரமாய்க் கிடக்கின்றதும் செய்கிறது. ஆனால் சமுத்திரத்திலுண்டாயிருந்த ஜலந்தானே அலைகளாயும், நுரைகளாயும், நீர்க் குமிழிகளாயும் உண்டாகி ஜலத்தின்மீது இருக்கிறதாகும். அதெல்லாம் சமுத்திரத்திலே ஜலம் தானாகவே இருந்தது. ஜலம் உண்டாயிருந்ததில்லையென்றால் இவ்விதம் யாதொன்றும் உண்டாவதில்லை. அதைப் போலவேதான் ஆகாசத்தில் வாயு உண்டானதனால் மாயா சமுத்திரமென்றும், அந்த மாயா சமுத்திரத்திலே, வாயுவினுடைய அலைகளினுடைய சலன நிமித்தம் நுரையாகின்ற மனமும், அகங்காரமாயிருக்கின்ற நீர்க் குமிழியுமுண்டாகிறது. எப்படி ஜலம் நுரையாயும், நீர்க் குமிழிகளாகவும் உண்டாயிற்றோ அதே பிரகாரத்தில்தான் ஜீவ சக்தியாயிருக்கின்ற வாயு, மனதாயும், அகங்காரமாயும், உண்டானதாகும். நீர்க் குமிழிகள் எவ்விதத்தில் ஜலத்திலேதான் ஜலத்திற்கு மீது இருந்ததோ, அதே பிரகாரந்தான் அகங்காரமாயிருக்கின்ற குமிழியும் ஜீவ சக்தியாகிய வாயுவில் தானே வாயுவின் மீது கிடக்கின்றது. அது பளிங்கு நிறம் ஆனதால் அதில் கூடி பிரதிபிம்பித்து, தான் யாரென்று அறியாமல், நான் எல்லாவற்றிற்கும் மேலாகும், சர்வமும் எனக்குக் கீழாகுமென்றிப்படி அபிமானித்து கிடக்கின்றது. ஆனால் முன்சொன்ன நீர்க்குமிழி ஒரு நிமிஷ நேரத்திற்குள் உடைந்து அது உண்டானதாகிய ஜலத்திலேயே லயிக்கின்றது. இதேபோலத்தான் அகங்கார மாயிருக்கின்ற குமிழிகள் தன்னைத் தானறியாமல் அபிமானித்துக் கொஞ்ச நேரத்துக்குள் உடைந்து அது உண்டான ஜீவ சக்தியாகிய வாயுவில் தானே லயிக்கின்றது. அது ஒரே வஸ்துவாகுமிந்தப் பிரகாரமெல்லாம் உண்டாகின்றதாகும். அதற்குப் பல மாற்றங்களும் உண்டானதனால் அந்த மாறுதல்களுக்கனுசரித்துப் பல பெயர்களும் சொல்வதற்குக் காரணமாயிற்று.

அத்தியாயம் 11

சி: சுவாமி முன் அத்தியாயத்திலும், அதற்கு முந்தின அத்தியாயங்களிலும், கற்பித்த பிரகாரம் தேகம் வாயுதான் என்றும், இக் காணுகின்ற ஜடம் தேகமல்லவென்றும் தெரிகிறது. ஆனால் உலகத்தில் ஸ்தூலமென்றும், சூக்ஷ்மம் என்றும் காரணமென்றும் மூன்று தேகங்கள் உண்டென்று சொல்லுகிறார்கள். தேகம் சுவாமிகள் கற்பித்த பிரகாரம் என்றால் மேல் சொல்லிய மூன்று தேகங்களெவை யெவைகள் என்று விவரித்துச் சொல்லவேண்டும்.

கு: ஸ்தூலம், சூக்ஷ்மம், காரணம் இம்மாதிரி மூன்று தேகங்களெவை யெவைகளென்று நீர் எண்ணியிருக்கின்றீர்?

சி: ஸ்தூல மென்பது இதுவரை தேகமென்று சங்கற்பித்து, இக் காணுகின்ற ஜடமாகுமென்றும், காரணம் என்பது அவித்தையாகி அதாவது வித்தையில்லாமல் ஒன்று மறியாமலிருக்கின்ற சுஷுப்தியாகுமென்றும், சூக்ஷ்மமென்பது மன மென்றுமாகும்.

கு: இவைகளெல்லாம் மிகவும் தப்பிதம் தான். ஏன் என்றால் நீர் சொல்லிய பிரகாரம் மூன்று தேகங்களுண்டாவதற் கிடமில்லை. ஆனால் ஸ்தூலம், சூக்ஷ்மம், காரணமென்று சொல்லுகிறவை ஜீவனும், அந்த ஜீவனின் சலனமாயிருக்கின்ற சக்தியாகிய மனமும், அதிலிருந்துண்டாகிய மாயையாகிய அகங்காரமும் ஆகும். இக்காணுகின்ற ஜடத்தை அதாவது உடம்பை ஒருக்காலும் ஸ்தூல தேகமென்று சொல்லுவதற்குக் கூடாது. ஏனென்றால் சூக்ஷ்ம தேகமென்பது மனமென்று நீர் தானே சொல்லுகின்றீர். அந்த மனம் ஸ்தூலமென்று சங்கற்பிக் கின்றதாகிய இந்த ஜடத்திலேயே யென்றும் சொல்லுகிறீர். ஸ்தூலமென்பது தடித்ததும், சூக்ஷ்மமென்பது சிறியதாயிருக் கின்றதுமாகிறது. மிகவும் சிறியதாயிருக்கின்ற வஸ்து மன மாகும். மிகவும் சிறியதாயிருக்கின்ற மனதிலிருந்தாகும் இக் காணுகின்ற உலகம் உண்டானது. அந்த மனதில்தானாகும், உலகமிருக்கின்றதும், அதனால் மனதினுடைய கல்பிதமாகும் உலகமென்று சொல்லுகிறது. அப்பொழுது எவ்வளவோ லகு வாயும், சிறியதாயும், சூக்ஷ்மமாயிருக்கின்ற மனதிலிருந்து உலகம் உண்டாகுகையும், அந்த மனதில் தானே உலகம் அடங் கவும் செய்கிறதென்று வருகிறது. இக்காணுகின்ற ஜடமும், அந்த மனதிலிருந்து தானே உண்டானதாகும்? மனதில்லை யானால்ஜடம் உண்டாகிறதில்லை. அதனால் சூக்ஷ்மமாயிருக்கின்ற மனதினால் உண்டாக்கப்பட்டதாகும் ஜடம். அதல்லாமல் ஒருவன் செத்தபோது பிணமாயிருக்கின்ற ஜடத்தை நாம் காண்கிறோம். அதில் மனம் உண்டாயிருக்கிறதில்லை. அதனால்

அந்தப் பிணத்திற்கு உலகமில்லை. இந்த ஜடமாகும் ஸ்தூல தேக மென்று வைத்தால், செத்தபோது பிணமாகிய ஜடத்தைக் காண்கிறது. அதனுடைய அவயவங்களுக்கு யாதொரு கெடுதியும் காணவில்லை. ஸ்தூலமுள்ள காலம் வரையில் சூக்ஷ்மம் உண்டென்றும், ஸ்தூலமில்லாமலாகும் பொழுதும் சூக்ஷ்மம் நசிக்கவில்லை என்றும் சொல்லுகிறது. ஆனால் இந்த ஜடம் ஸ்தூலமாயிருந்ததென்றால் சூக்ஷ்மம் நசித்தும, ஸ்தூல மென்கிற ஜடம் நசிக்காமலும் காணுகிறது. அது கொண்டு இந்த ஜடத்திற்கு ஒருக்காலமும் ஸ்தூலமென்று சொல்லக் கூடாது. செத்தது என்று சொல்லும் சமயத்தில் என்னவாகும்? அதிலில்லாமல் போனதென்று வைத்தால் ஜீவனே யாகும். அதனால் அந்த ஜீவனாகும் ஸ்தூலதேகம். அந்த ஜீவனாய் இருக்கின்ற ஸ்தூல தேகத்தில் உள்ளதாகும் சூக்ஷ்மமாய் இருக்கின்ற மனம். காரணதேகமென்று சொல்லுகிறது; அவித்தையாய், அதாவது வித்தையில்லாமல் ஒன்று மறியாமல் சுஷுப்தியாகுமென்று நீர் தானே சொல்லுகிறீர். அதாவது ஜீவன் வெளியிலே சக்தியாய் சலித்தபோது, அந்தச் சக்தியில் இருந்துண்டான அகங்காரத்திற்காகும் மாயையென்று பெயர். அந்த மாயையாகும் ஒன்று மறியாத சுஷுப்தியென்று ஏழா மத்தியாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த ஜடத்திற்கு ஸ்தூலமென்று சொல்வதின் காரணம், ஸ்தூல மாகிய ஜீவனை அறியாததனாலாகும். அது எவ்விதமென்றால் ஒரு வஸ்திரத்தினுடைய இரண்டு பக்கங்களிலும் கனமாகப் பசை தேய்த்து உலர்த்தினால் அதைத் தேய்த்தவன் தவிர, பாக்கியாருக்காகிலும் அதைப் பார்த்தால் அது வஸ்திரமென்று அறியாமல் அது என்னவோ பசை தேய்த்து உலர்த்திய ஒரு வஸ்து வென்றே சொல்ல முடியும். அவ்விதம் பசை தேய்த்து உள்ள வஸ்துவின் பேரில் சாயத்தினால் உலகத்தைப் போல் ஒரு படம் வரைந்து அதாவது ஆகாசமும், பூமியும், சமுத்திரமும், தவிர மனிதன், மிருகம், பக்ஷி, ஊர்வன வென்றும் மற்றும் நாம் சொல்லி வருகின்றவையுமடங்கிய ஒரு சித்திரம் வரைந்து இருந்தது. ஆனால் சிருஷ்டிகளில் மிருகம், பக்ஷி, ஊர்வன வென்று மற்றும் சொல்லிவருபவைகளுக்கு வழக்கத்திலில்லாத தான ஓர் நிலைமை மனுஷனென்றபிமானித்து வருகிறவர்களாகிய நமக்கு உண்டு. அதென்னவென்றால் வஸ்திரம் கட்டுவதாகும். மேல் சொன்ன பசை தேய்த் துலர்த்திய வஸ்துவின் மீது, மனிதரென்றபிமானித்து வருகிறவர்களின் ரூபத்தையும் வரைந்திருக்கிறதல்லவா? அதற்கொரு வஸ்திரம் கட்ட வேண்டும். அம்மனித உருவம் பசை தேய்த்து உலர்த்திய வஸ்துவின்மீது எழுதியதானது கொண்டு, ஒரு வஸ்திரத்தை

கொண்டு வந்து அதற்குக் கட்டுவதற்கு முடிகிறதில்லை. ஆனதினால் வஸ்திரத்தினுடைய நிறத்திலுள்ள சாயத்தினால் மேல் சொன்ன உருவத்தின் மேல் வஸ்திரம் கட்டிய பிரகாரம் தேய்த்து அதை வஸ்திரமென்று அபிமானிக்கிறது. ஆனால் அது உண்மையில் வஸ்திரமல்ல. அது வஸ்திரத்தைப் போல் எழுதியுள்ள வர்ணமாகும். ஆனால் அதில் எதார்த்த அதாவது உண்மை வஸ்திரத்தைக் காண்கிறதில்லை. உண்மை வஸ்திரத்தைக் காணும்பொழுது முன் சொன்னவை யாதொன்றும் அதன் பேரில் உண்டாயிருக்கிறதில்லை. உண்மை வஸ்திரத்தைக் காண வேண்டு மென்றால் அதன் பேரில் பூசியுள்ள பசையைப் போக்க வேண்டும். பசையைப் போக்கினால் அதன் மேல் எழுதியிருந்த யாதொன்றும் காணுவதில்லை. அவ்விதமுள்ள உண்மை வஸ்திரத்தைக் காணாமல் வஸ்திர வடிவில் சாயம் பூசி உள்ளதையே வஸ்திரமென்றபிமானித்து வருகிறோம். இவ்விதம் எழுதிய சித்திரங்களுக்கும், உண்மை வஸ்திரத்திற்கும் தம்மில் யாதொரு பந்தமுமில்லை. இந்த வஸ்திரத்தில் பசையைப் பூசியது கொண்டாகும் முன் சொன்னவைகள் எழுதக் காரணம். அதனால் அந்த பசையைப் போக்குவதற்குள்ள பிரயத்தனம் செய்ய வேண்டும். அதெப்படி யென்றால், பசை பூசியுள்ளதான வஸ்திரம் ஜலத்தில் போட்டு ஊறவைத்து துவைத்தால், அதிலிருக்கின்ற பசை நீங்கி உண்மை வஸ்திரம் காணப்படும். அப்பொழுது அதிலெழுதப்பட்ட சித்திராதிகள் ஒன்றும் காணுகிறதில்லை. இதில் வஸ்திரம் "ஸ்தூலமும்," அதன்பேரில் பூசியிருக்கிற பசை "காரணமும்," அதன்மேல் எழுதியிருக்கின்ற சித்திரங்கள் "சூக்ஷ்மமும்" ஆகின்றன. இவ்விதத்தில்தான் தானாயிருக்கின்ற ஜீவன் வஸ்திரமாயிருக்கின்ற "ஸ்தூலமும்," ஜீவனுடைய சலனத்திலிருந்து உண்டான யாதொன்று மறியாமல் சுஷுப்தியாய், மாயையாயிருக்கின்ற அகங்காரம் வஸ்திரத்தின் மேல் பூசியிருக்கின்ற பசையாகிய "காரணமும்", தானாயிருக்கின்ற ஜீவனுடைய சலனத்திலிருந்து உண்டான மனது, காரணமான பசையின் மீது வரையப்பட்ட சித்திரங்களான "சூக்ஷ்மமும்" ஆகிறது. அதனால் மேல் சொல்லியபடியுள்ள உண்மையான வஸ்திரத்தை அறியாமல், சாயத்தினால் வஸ்திரவடிவாய் எழுதப்பட்டதனையாகும் வஸ்திரமென்று அபிமானித்திருந்தது. இப்பிரகாரம் தானாகும் மாயையைக் கொண்டுண்டாகிய அகங்காரமான இந்த ஜடத்தை ஸ்தூல மென்றபிமானிக்கிறது. எப்பொழுது தனது உண்மையான ஜீவனாயிருக்கின்ற ஸ்தூலத்தை அறிகிறோமோ அப்பொழுது மற்றொன்று மில்லை. அது எப்படியென்றால் உண்மையான வஸ்திரத்தைக் கண்டு தெரிந்துகொண்டபொழுது

வேறிட்டு யாதொன்றுமில்லை. வேறுபட்டுள்ளதற்கு ஸ்தூல மென்று சொல்லக்கூடாது. ஸ்தூலமென்பது தானுயிருக்கின்ற ஜீவனும், காரணமென்பது அந்த ஜீவனுடைய சலனமா யிருக்கின்ற சக்தியிலிருந்துண்டான சுஷுப்தியாயிருக்கின்ற மாயையாகிய அகங்காரமும், சூக்ஷ்மம் என்பது ஜீவனுடைய சலன சக்தியாகிய மனமுமாகும். இவைகளுக்காகும் ஸ்தூலம், காரணம், சூக்ஷ்மமென்று சொல்லுகிறது. தவிர இப்பொழுது நாம் காரணமாயிருக்கின்ற சுஷுப்தியிலிருக்கின்றோம். அவ் வாறு நாம் சுஷுப்தியில் இருக்கிறது கொண்டு நாம் அனுபவிக் கிறோமென்று தோன்றுகிறதெல்லாம் சொற்பனமாகும். இதைப்பற்றி விவரமாக ஏழாம் அத்தியாயத்தில் சொல்லி யிருக்கின்றது. அப்பிரகாரமுள்ள சொற்பனத்திலானது கொண்டாகும், ஸ்தூல, காரண, சூக்ஷ்மமென்கிற தோற்ற முண்டானது. மேற்சொன்ன பிரகாரம் எல்லா நிலைமைகளும் நாம் சுஷுப்தியிலிருக்கின்றதனுல் சொற்பனம் தோன்றுகிற தல்லாமல் இப்படி யாதொன்றும் இல்லாததாகும்.

அத்தியாயம் 12

சி: குருவே! சுஷுப்தியென்று சொல்லுகிறது மாயை யென்றும், அந்த மாயை தன்னுடைய சக்தி வெளியில் சலித்துத் தானும் சக்தியும் கூடிக்கலந்து மயங்கிக் கிடக்கிறதாமென்றும் வருகிறது. அவ்விதம் கலந்து மயக்கிக் கிடக்கின்ற தன்னை வேருக அறிவதற்கு எவ்விதத்தில் சாத்தியப்படு மென்பதை விவரித்துச் சொல்லப் பிரார்த்திக்கின்றேன்.

கு: தானும், தன்னுடைய சக்தியிலிருந்துண்டான மாயை யும் என்று சொல்லுவது, நித்தியமும், அநித்தியமுமாகும். அவைகளை வெவ்வேறு அறியவேண்டியதற்கு ஒரு உதாரணத் தால் வெளிப்படுத்தலாம். அதாவதொரு பாத்திரத்தில் கொஞ் சம் தண்ணீர் எடுத்து, அதில் உப்பைப்போட்டால் உப்பைக் காணமுடியாது. உப்பு ஜலத்தில் லயித்துப் போகிறது. மீண்டும் உப்பைக் காணவேண்டுமென்றால் ஜலத்தைச் சுண்டச்செய்ய வேண்டும். அப்பொழுது அதுவரை பார்த்துக்கொண்டிருந்த ஜலம் சுண்டி, காணுமலிருந்த உப்பைக் காணவும் செய்கிறது. அந்தப் பிரகாரம் நித்தியமாயிருக்கின்ற 'தான்' அநித்தியமா யிருக்கின்ற மாயையில் கலந்திருக்கிறது. அந்த விதம் லயித்துக் கிடக்கின்ற தன்னை அறிய வேண்டுமென்றால் மாயையைச் சுண்டச் செய்யவேண்டும்.

அப்பொழுது அதுவரையில் பார்த்துக் கொண்டிருந்ததான மாயையாயிருக்கின்ற உலகம் நசித்து, பார்க்காமலிருந்த நித்ய மான பிரமத்தைப் பார்க்கக்கூடும். எவ்விதமென்றால் மேல் சொன்ன உப்பு கலந்திருக்கின்ற ஜலத்தைச் சுண்டச்செய் வதற்கு நெருப்பு வேண்டிவந்ததல்லவா? அதேமாதிரிதான் பிரமம் கலந்ததான மாயையாயிருக்கின்ற உலகத்தைச் சுண்டச் செய்வதற்கு அக்கினி வேண்டும். அது விவேகம் என்கிற அக்கினியாகும். ஆனால் முன் சொன்ன உப்புக்கு நாசமில்லை என்று நினைத்து ஜலத்திலிருந்து உப்பை வேருக்கி ஜலத்தைச் சுண்டச்செய்ய முடியாது. அதனால் நசிக்கின்றதான ஜலத்தை அதில் கலந்திருக்கின்ற உப்புடன் கூடி தீ எரித்துச் சுண்ட வைத்தால் நாசமுள்ள ஜலம் நசித்து, நாசமில்லாத உப்பைப் பார்க்கலாம். அந்தப் பிரகாரம்தான் நித்தியமாயிருக்கின்ற "தான்" அநித்தியமாயிருக்கின்ற மாயையாகிய உலகத்தில் கலந்ததனால், தனக்கு நாசமில்லையென்று கருதி, மாயையாய் இருக்கின்ற உலகத்திலிருந்து தன்னை வேருக்கி உலகத்தை நசிக்கச் செய்வதற்கு முடிகிறதில்லை. அதனால் நாசமுள்ளதான உலகத்தை, அதில் லயித்திருக்கின்ற நாசமில்லாத தானுயி ருக்கின்ற பிரமத்துடன் விவேகம் என்கிற விசேஷ அக்கினி

பினால் நாசமுள்ள மாயையை நசிப்பித்தால் நித்தியமாய் இருக்கின்ற தன்னையறியலாம்.

சி: குருவே! மாயையாயிருக்கின்ற உலகத்தை விவேகமென்கிற விசேஷ அக்கினிகொண்டு எவ்விதம் எரிக்கவேண்டும் என்று விவரமாகச் சொல்லித்தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கு: நீர் நித்தியனோ? அநித்தியனோ?

சி: நான் என்கிற நிலைமை அநித்தியம்.

கு: அப்பொழுது உமக்கு நாசமுண்டோ?

சி: நான் என்றுள்ள நிலைமைக்கு நாசமுண்டு.

கு: நான் என்றுள்ள நிலைமை உமக்கு இல்லை என்றால் இக்காணுகின்ற உலகம் உமக்குண்டோ?

சி: இல்லை.

கு: அப்பொழுது உமக்கு இந்த உலகம் உண்டானது எங்கிருந்தாகும்?

சி: என்னிலிருந்தாகும்.

கு: ஆனால் நீர் காணுகின்ற எல்லா நிலைமைகளும் உம்முடைய உள்ளிலிருக்கின்றதாகும். அது எவ்விதமென்றால் சாதாரணமாக உலகில் சொல்லுகிறது என்னுடைய ஊர், என்னுடைய தாயார், என்னுடைய தகப்பனார், என்னுடைய மனைவி, என்னுடைய சந்ததிகள், என்னுடைய ஜாதி, என்னுடைய கிரஹம், என்னுடைய தனம், என்றும் எனக்கு ஸ்தானம், மானம், சுத்தம், அசுத்தம், சுகம், துக்கம் சுவர்க்கம், நரகம், கோவில், வாகனம், பந்து, சத்துரு இந்த விதமெல்லாமாகும். ஆனால் இத்தகைய யாதொன்றும் நான் என்றுள்ள நிலைமையும் நித்தியமல்ல, அநித்தியமேயாகும். அப்பொழுது இவ்வளவு பெரிதாயிருக்கின்ற உலகத்தோடு கூடி நான் என்கிற அகங்காரம் உண்டானது எங்கிருந்து என்றால் மனதாயிருக்கின்ற சக்தியிலிருந்தாகும். அதற்கு உதாரணம்:—"நான் அந்த மலையேறி இறங்கி வந்ததனால் எனது ஜடம் தளர்ந்து விழுந்து போயிற்று" என்ற இந்த வாசகத்தில் "நான்" விழுந்ததில்லை, ஜடமாகும் விழுந்தது. தவிர "என்னுடைய காலின் விரல் கல்லோடு மோதி விரலில் காயம் பட்டபோது ஐயோ! என்னுடைய ஜீவன் போய் விட்டது" என்று சொல்லுகிறோம். இந்த வாசகத்திலும் நான் போகவில்லை. என்னுடைய ஜீவனாகும் போனது. அதல்லாமல் "நான் ராத்திரி மயானத்துவழியே வரும்போது ஏதோ ஒரு பயங்கரமான சத்தத்தைக்கேட்டுப் பயந்து என்னுடைய மனம் மிகவும் பிரமித்து வெலவெலத்துப் போயிற்று" இந்த வாசகத்திலும், நான் பிரமித்ததில்லை. என்னுடைய மனம்

தான் பிரமித்தது. அதனால் முன் சொன்னவர் யாரும் நானல்ல; எனது பந்துவாகுமென்று வருகிறது. அது தவிர நீர் வேறே மூன்றோ நான்கோ பேர்களுடன் கூடி ஒரு இடத்தில் பேசிக் கொண்டிருக்கிற பொழுது வேறொருவர் வந்து உம்மை மிகவும் கெட்ட வார்த்தைகளைச் சொன்னால் அச்சமயத்தில் உமக்கு அவமானமோ, வெட்கமோ, விசனமோ, அசங்கியமோ உண்டாகிறது. அதன் பிறகு நீர் அங்கிருந்துவிட்டு வீட்டிற்கு வந்து உமது சிநேகிதரிடமோ, வீட்டுக்காரரிடமோ, நான் இன்னின்னவரோடு கூடி இன்ன விடத்திலிருந்து பேசிக் கொண்டிருக்கும் பொழுது, இன்னவர் வந்து என்னை மிகவும் கெட்ட வார்த்தைகளைச் சொன்னார். அதைக் கேட்டப் பொழுது "நான் இல்லாமலாய்ப் போனேன்" என்றும் சொல்லுகிறீர். அந்த வாசகத்தில் யாரில்லாமலாய்ப் போனது? ஜடம், ஜீவன், மனம் இவை யெல்லாம் உண்டு. இவைகள் ஒன்றும் போகவில்லை. அப்பொழுது யாராகும் இல்லாமலான தென்றால் நான் என்றபிமானித்திருந்த அகங்காரமாகும். தவிர நீரும் வேறொருவரும் சம்பாஷிக்கும் சம்பாஷணையில் அவரை தோல்ப்பித்து உமக்கு ஜெயம் வந்ததானால் நீர் என்ன சொல்லுவீர்? நானும் இன்னவரும் கூடி பேசியதில் நான் அவரை தோல்ப்பித்தேனென்றும், அவரை வாய் நீர் சுண்டும்படி செய்தேனென்றும், தவிர நான் யாராகும், நான் ஸ்தானி ஆகும், மானியாகும், சமர்த்தனாகுமென்றும் மற்றும் சொல்லி தன்னைத் தானே புகழ்ந்து பேசவும் செய்கிறீர். அதற்காகும் அபிமானமாயிருக்கிற அகங்காரம் என்று சொல்லுகிறது. அந்த அகங்காரம், நசிக்கிறதாகும். அவ்விதம் நசிக்கின்றதான அகங்காரத்தினுடைய உத்பத்தி மனதிலிருந்து என்று தெளிவாகிறது. அந்த மனம் உண்டானது ஜீவனிலிருந்தாகும். அதற்காகும் சக்தியென்று சொல்லுகிறது. இதாகும் ஜீவனுடைய சக்தி. அந்த ஜீவன் சிவனாகும். அந்த சிவன்தானாகும். தானாயிருக்கின்ற சிவனுடைய சக்தியாகும் மனம். அதற்காகும் சிவசக்தியென்று சொல்லுகிறது. அந்த சக்தியையாகும் தன்னில் அடக்கவேண்டியது. அதனால் மேற் சொன்ன பிரகாரம் விசாரணைசெய்து தன்னுடைய சக்தி இன்னதென்றறிந்து அந்தச் சக்தியை வெளியினுள்ளில் பிரதி பிம்பிக்காமல் விவேகமாகிய விசேஷ அக்னி கொண்டு மேல் சொன்ன உலகத்தைத் தகிப்பித்து அதாவது எரித்து தன்னில் சேர்த்து தானாயிருக்கவேண்டும். இதற்காகும் நித்தியா நித்திய வஸ்து விவேகமென்று சொல்லுகிறது.

அத்தியாயம் 13

சி: சுவாமி தேகம் வாயுவாகு மென்றும், அதிலிருந்து உத்பத்தியானதாகும் பாக்கியுள்ளவை யெல்லா மென்றும் கற்பித்தீர்களல்லவா! தேக மென்பது அன்னமய கோசமென்றும் அதனுல் அன்னம் புசித்தாலே ஜீவித்திருக்க முடியு மென்றும், தேகம் அன்னத்தைக் கொண்டு போஷிப்பிக்கிறதாகு மென்றும் சொல்லுகிறீர். அப்படியிருக்க வாயுவாகும் தேக மென்ருல் அதற்கு அன்னத்தைப் புசிக்கவும், அன்னத்தைக் கொண்டு போஷிப்பிக்கப்பட வேண்டியதும் அதாவது வளர்ப்பிக்கப்பட வேண்டியது மில்லையல்லவா?

கு: அன்னமென்பது என்ன வென்ருகும் நீர் கருதி இருக்கிறீர்?

சி: அன்ன மென்பது ஏதொன்றைப் புசிக்கிறோமோ குடிக்கிறோமோ அவை யாவும் விசேஷமாக சாதம் ஆகும்.

கு: ஆனுல் இவைகளை மாத்திரம் புசிப்பதனுலோ குடிக்கிறதினுலோ ஜீவித்திருக்கிறதற்கு முடியுமோ?

சி: ஆம். முடியும்.

கு: ஆனுல் உலகில் இதுவரை யாரும் செத்துப் போன தில்லையா?

சி: அநேகர் செத்துப் போயிருக்கிறார்கள்.

கு: அதென்ன காரணம்? அன்னம் புசித்தாலே ஜீவித்து இருக்கலா மென்றும் நீரே சொன்னீரல்லவா? ஆனுல் செத்தவரெல்லாம் நீர் சொன்ன அன்னத்தைப் புசிக்காதவர் தானே?

சி: அவரெல்லாம் புசித்தவர் தானுகும்.

கு: அதெப்படியாகும்? அன்னம் புசித்தாலே ஜீவித்து இருக்க முடியுமென்றும், அன்னத்தைக்கொண்டு தேகத்தைப் போஷிப்பிக்கிற தென்றும் நீரே சொன்னீரல்லவா? அப்படி செய்திருந்தால் அவர் செத்துப் போவதற்குக் காரணமென்ன?

சி: ஆயுள் குறைந்து போனது கொண்டு.

கு: ஆயுள் குறைந்து போகிற தென்று சொல்வது மிகவும் தப்பிதமாகும். ஆனுல் உலகத்தில், அன்னத்தைப் புசிக்கிறதில்லை. அன்னத்தைக் கொண்டே ஜீவித்திருக்க முடிகிற தென்பதற்கு சந்தேகமில்லை. ஆனுல் அந்த அன்னத்தை நாம் அறிகிறதில்லை. அன்ன மென்பது அசனம். அசனமென்ருல் அசுவாயிருக்கின்ற பிராணனை அயனம் செய்கிறது. அயனம் என்ருல் தடுத்து நிறுத்துதல். அதாவது தன்னுள்ளிலுள்ள பிராணனை வெளியினுள் விடாமல் தன் உள்ளில் கூடி பிரம்மாந்திரம் வரை நேரே கொண்டு போகின்றதாகும். அந்தப்பிராணனென்பது ஜீவசக்தியாயிருக்கின்றவாயு.

அந்த ஜீவன் போனால் பிணம். பிணத்துக்கு ஏதேனும் புசிப்பதற்கு முடியுமா?

சி: முடிகிறதில்லை.

கு: காரணமென்ன?

சி: ஜீவசக்தியாகிய வாயு அசனம் இல்லாததினால்.

கு: அதல்லாமல் ஏறக்குறைய ஏழெட்டு நாள் வரை சோறு முதலியதுகள் புசிக்காதிருந்தால் ஜீவனில்லாமற் போகுமா?

சி: இல்லை.

கு: அதல்லாமல் ஒரு தினம் பூராவும், தாகத்திற்குத் தண்ணீருங் கூட குடிக்காமலிருந்தால் செத்துப் போவோமா?

சி: இல்லை.

கு: ஆனால் வாயு ஒரு நிமிஷநேரம் நமக்குக் கிடைக்காமல் இருந்தால் என்னவாய்த் தீரும்?

சி: செத்துப் போவோம்.

கு: அப்பொழுது நமக்கு ஆகாரமாயிருக்கின்றது எது?

சி: வாயு.

கு: அதாகும் அன்னம். அந்த வாயுவான அன்னம் உள்ள போது மாத்திரமே அசிக்கிறதற்கும் அதாவது எரிகிறதற்கும், பஜிக்கிறதற்கும் அதாவது சொதிக்கிறதற்கும், தெஹிக்கிறதற்கும் அதாவது வேகிறதற்கும், பக்ஷிக்கின்றதிற்கும் அதாவது புசிக்கின்றதற்கும் முடிகிறதாகிறது. அதற்கு உதாரணமென்ன வென்றால் ஒரு பிணத்திற்கு மேல் சொன்ன யாதொன்றும் முடிகிறதில்லை. இது கொண்டு அசிக்கிறதும், பஜிக்கிறதும், தெஹிக்கிறதும், பக்ஷிக்கிறதும் எதாகும்?

சி: வாயுவாகும்.

கு: அது கொண்டாகும் அன்னமயமென்றும், அன்னத்தினால் போஷிப்பிக்கின்றது அதாவது வளர்த்தவது அன்னமயமென்றும், அன்னமயத்திலிருந்துண்டானது சைதன்னியமென்றும், அந்தச் சைதன்னியத்தால் அதாவது தேஜஸ்ஸினால் உண்டானது உலகமென்றும் சொல்லுகிறது. அதுகொண்டு இக்காணுகின்ற உலகம் எதனுடைய சைதன்னியமாகும்?

சி: வாயுவினுடைய சைதன்னியமாகும்.

கு: அதனால் ஜீவ சக்தியாயிருக்கின்ற வாயுவாகும் அன்னம். அந்த வாயுவைப் புசித்தால் மாத்திரமே ஜீவிக்கிறதுக்கு முடிகிறது. அதுகொண்டாகும் அன்னத்தால் போஷிப்பிக்கிறதாகும் தேகமென்று சொல்லுகிறது. ஆகையினால் அன்னமாய் இருக்கின்ற அந்த வாயுவை நிறைத்து பூரிப்பிக்கவேண்டும். அவ்விதம் செய்தால் செத்துப் போகிறதில்லை.

சி: அந்த வாயுவாகும் தேகமென்றும், அது தானாகும் என்றும், அதிலிருந்து உத்பத்தியானதாகும் இந்தக்காணுகின்ற உலகமென்றும் பூர்ணமாக நம்புகிறேன். ஆனால் இவ்வளவு சிறியதான நம்மிலிருந்து எவ்வளவோ பெரியதான உலகம் எவ்விதத்தில் உத்பத்தி யாகிறதென்று வெளிப்படுத்தித் தர வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கு: இவ்வளவு சிறியதாயிருக்கின்ற நம்மிலிருந்து எவ்வளவோ பெரியதாகக் காணப்படுகிற இந்த உலகம் உத்பத்தியானதெவ்விதமென்றால் சொல்லுகிறோம். மிகவும் சிறியதாய் இருக்கின்ற விதத்திலிருந்து எவ்வளவோ பெரியதாகிற விருக்ஷம் உண்டாகிறது. இப்படியேதான் நம்முடையவும், உலகத்துடையவும் நிலைமை. அதெப்படியென்றால் உலகத்தில் மிகவும் பெறியதாயும் விசாலமாகவும் படர்ந்திருக்கிற மரம் ஆலமரமாகும். அம்மரத்தினுடைய காய் எவ்வளவோ சிறியது. அக்காயிலிருக்கின்ற வித்து அணுவிலும் சிறியதாயுள்ளதும் அதாவது ஒரு கடுகில் நாலு பாகம் செய்தால் ஒரு பாகம் எத்தனை பருமனுண்டோ அவ்வளவு மாத்திரமிருக்கிறதாகும். அவ்விதமிருக்கிற வித்திலிருந்தாகும் மிகவும் பெரியதாகிய விருக்ஷத்தின் உத்பத்தி. அவ்வித்தில்லாவிடில் அவ்விருக்ஷம் உண்டாகிறதில்லை. எவ்வளவோ பெரியதாயிருக்கின்ற அவ் விருக்ஷம் மிகவும் அணுவாயிருக்கின்ற அதனுடைய பீஜத்தில் அதாவது வித்தில் அடங்கியிருக்கிறது. வித்து காயினுடைய உள்ளிலும் அடங்கியிருக்கிறது. விருக்ஷம் அதாவது மரம் வித்தினுள்ளிருக்கின்ற பருப்பிலிருந்து முளையாக உத்பவித்து அந்தப் பருப்பு அடங்கியிருக்கின்றதான தோலின் வழியாய் வெளியே வந்து, வளர்ந்து படர்ந்துவருகிறது. பிறகு அந்தப் பருப்போ தோலோ காணுகிறதில்லை. இந்தப் பிரகாரமேதான் வித்தில் அடங்கியிருக்கிற பருப்பு ஜீவனும், பருப்பிலிருந்து உண்டான விருக்ஷம் மனதும், பருப்பு அடங்கியிருக்கின்ற தோல் அகங்காரமுமாகிறது. ஜீவனாயிருக்கின்ற பருப்பில் இருந்து மனதாகின்ற விருக்ஷம் முளைத்து அகங்காரமாய் இருக்கின்ற தோலின் வழியாய் வெளியில் வியாபிக்கிறது. அந்த அகங்காரமாயிருக்கின்ற தோலில் ஜீவனாயிருக்கின்ற பருப்பு அடங்கியிருக்கும் பொழுது மாத்திரமே வித்து என்கிற பெயருண்டு. அவ்விதமாயுள்ள வித்து ஜடமாய் இருக்கின்ற காயினுள்ளிலாகுமிருக்கிறது. அது எவ்விதம் என்றால் ஆலவிருக்ஷத்தினுடைய வித்து காயினுள்ளிலாய் இருந்தது. ஆனால் மேல் பிரகாரமுள்ள வித்திலிருந்து மனதாகின்ற விருக்ஷம் முளைத்து வெளியில் வியாபிக்கின்றதினால் வித்தைக் காண்பதில்லை. காணுகின்றது ஜடத்தையாகும். ஜடமாய்

பிருக்கின்ற காயிலிருந்து ஜீவனாயிருக்கின்ற வித்து போனதின் பிறகு இந்த ஜடத்தில் மனதாகின்ற விருக்ஷம் முளைக்கிறதில்லை. அது ஏனென்றால் ஜீவனாகிய வித்தில்லாததது கொண்டு. அதெப்படி யென்றால் ஆல விருக்ஷத்தினுடைய காயினுள்ளில் இருக்கின்ற விதையை நீக்கினால், அந்த விதையை அடங்கி இருந்த தோல் முளைக்கிறதில்லை. இந்த ஆல விருக்ஷத்திற்கு எவ்விதம் காய் உண்டாகிறதோ அதே பிரகாரத்தில்தானாகும் மனதாகின்ற விருக்ஷத்திற்கும் காய் உண்டாகிறது. அதாவது ஆலவிருக்ஷத்தினுடைய இரண்டிலைகளினுடைய மத்தியிலாகும் பூத்துக் காயுண்டாகிறது. இந்தக் காய் முதிர்ந்து பழுத்து பூமியில் விழுந்து, பின்பும் முளைத்து விருக்ஷமாகிப் ‘பூத்துக் காயுண்டாகி மேல் பிரகாரம் பழுத்துவிழுந்து, அநேக மரங்களுண்டாகிக்கொண்டிருக்கிறது. ஆனால் எல்லாப் பூக்களுக்கும் காயுண்டாகிறதில்லை. அந்தப் பூக்களில் எட்டில் ஏழு பாகம் பல விதங்களிலும் நசித்துப் போகிறது. பாக்கியுள்ளவைகளுக்கே காயுண்டாகிறது. அந்தக் காய்களும் முழுமையும் முதிர்ந்து பழுப்பதும் இல்லை. அதுவும் பலவிதத்தில் அழிந்து போகின்றது. இந்தப்பிரகாரம்தான் கற்பமுண்டாகின்றதும். காயுண்டாவது எப்படியென்றால் ஆலமரத்திலுள்ள கொம்புகள் பேரிலும், குச்சிகள் பேரிலும் மற்றும் இடங்களிலும் இலைகள் உண்டாகிறது; இரண்டிரண்டிலைகளாக உண்டாகும். அந்த இலைகளுடைய மத்தியிலாகும் மொட்டு உண்டாகிறது. அதெப்படி யென்றால் இலைகளுக்குச் சிவந்ததாகிய கரையும், மரத்திற்கு தானாகவே வெளுத்த வர்ணமாகிய பாலும் உண்டு இலைகள் விரியும்பொழுது சிவந்ததாயிருக்கின்ற கரையில் வாயுவின் வழியாய் இலைகளுண்டாகின்றதான தண்டிலிருந்து பால் விழுந்து; அந்தக் கரையுடன் சேர்ந்து மொக்குகள் உண்டாகின்றன. அதாகும் பூவாகிக் காயாகித் தீருகிறது. இந்தப் பிரகாரம் தான் மனதாகின்ற விருக்ஷம் புணருகிறதும், இரண்டிலைகளுடைய மத்தியிலாகும். அந்த இலைகளிலிருந்து இரத்த வர்ணமாகிய கரை உண்டாகும்பொழுது வாயு மார்க்கமாய் மனதாகிய மரத்திலிருந்து சுக்கிலமாகிய பால் முட்டை வடிவமாகி விழுவதும், அது ரத்த வர்ணமாகிய கரையில் பிடித்து கர்ப்பமாய்த் தீருகையும் செய்கிறது. இவ்விதமாய் கர்ப்பமுண்டான காயானது நாளடைவில் வளர்ந்து முத்திப் பழுத்து ஒன்பதோ, பத்தோ மாதங்கள் சென்று பூமியில் விழுகின்றது. அந்தக் காயாகிய குழந்தையில் ஜீவனாயிருக்கின்ற வித்தில்லையானால் அதைக் குழியில் போட்டு புதைத்து விடுகின்றோம். ஜீவனாயிருக்கின்ற வித்து உண்டென்றால் அதை வெகு ஜாக்கிரதையாகப் பத்திரப்படுத்தியும்

நாளடைவில் மனதாகின்ற மரம் முளைத்து நாளுக்கு நாள் வளர்ந்து, பெரியதாகி, புணர்ச்சியாகின்ற புஷ்பிக்கின்றதைக் கொண்டு மறுபடியும் நாளடைவில் காய் அதிக முண்டாகிக் கொண்டிருக்கவும் செய்கிறது. ஆனால் எல்லா புணர்ச்சிகளிலும் கர்ப்பம் உண்டாவதோ, எல்லா கர்ப்பமும் முத்திப் பழுத்து குழந்தைகளாக உண்டாகின்றதோ செய்கிறதில்லை. தவிர ஆல விருக்ஷத்திலிருந்து உண்டாகின்ற புஷ்பங்கள் நாம் பார்க்கிறோம். அந்தப் புஷ்பத்திற்கு ஏதேனுமோர் அடையாளம் வைத்துப் பார்த்தால் காயுண்டாவது இன்ன புஷ்பத்திலிருந்து என்று நாம் தெரிந்தறியலாம். மனதாகின்ற விருக்ஷத்தினுடைய புஷ்பங்களைக் காணுகிறதோ, இன்ன புஷ்பத்திலிருந்துண்டான காயாகுமிந்தக் குழந்தை என்று சொல்லுவதற்கு முடிகிறதில்லை மனதாகின்ற விருக்ஷத்தினுடைய புஷ்பம் காணாமல் காய் உண்டாகின்ற பிரகாரமாகத்தானே புஷ்பத்தைக் காணாமல் காயுண்டாகிற ஒரு விருக்ஷமுண்டு. அதாவது அத்தி மரமாகும். அத்தி மரத்தினுடைய புஷ்பத்தைக் காண்பதற்கு முடிகிறதில்லை. அது இருட்டில் பூத்து கொஞ்சநேரத்திற் குள்ளாக அதற்கு காயுண்டாகிறது. அதைப்பகலில் பார்க்கும்பொழுது காய் உண்டானதாய்க் காண்கின்றது. இன்ன சமயத்தில்தான் பூத்ததென்று சொல்ல முடிகிறதில்லை. ஆனால் இந்த மரம் இருள் இல்லையானால் பூப்பதில்லை. அதே பிரகாரந்தான் மனதாகிய மரம் அந்தகாரமாகிய அதாவது இருட்டாகிய அகங்காரத்தின் வழியாய்க் கொஞ்ச நேரத்தில் பூத்து, கர்ப்பமாகிய காய் அதற்கு உண்டாகிறது. அகங்காரமாகிய அந்தகாரமில்லை யென்றால் புணர்ச்சி யுண்டாவதில்லை. அதனால் அகங்காரமாகிய அந்தகாரத்தில் பூக்கிறதுகொண்டு இன்ன பூவினுடைய காய் என்று சொல்வதற்கு முடியாமலாய் வந்தது. ஆனால் ஒரு ஆல விருக்ஷத்தை நாசம் செய்தால் அதன் நிமித்தம் எத்தனை மரங்களாகும் இல்லாமல் போகிறதென்று கணக் கெடுப்பதற்கு அவ்விதம் மனதாகின்ற இதை நசிப்பித்தாலும் அதன் நிமித்தம் எத்தனை மனதாகின்ற விருக்ஷமாகும் இல்லாமலாய்ப் போகிறது என்று கணக்கெடுப்பதற்கு முடிகிறதில்லை. இம்மாதிரியுள்ள மனதாகின்ற மரத்திற்காகும் சம்சார விருக்ஷம் என்று பெயர். இந்தச் சம்சார விருக்ஷம் பூத்து காயுண்டாகி முத்தி, பழுத்து, பூமியில் விழுந்து முளைத்தும், மேல் பிரகாரமாக உண்டாகின்றதும், நசிக்கிறதும் செய்கிறது. ஆனால் எவ்வளவோ பெரிதாயிருக்கின்ற ஆலமரத்தினுடைய வித்து மிகவும் சிறியது. ஆனால் மிகப் பெரியதாகி படர்ந்து கிடக்கிற வட விருக்ஷம் அதாவது ஆலமரம் எப்படியுண்டாகின்றதோ, அதைப் போலவே நம் முள்ளிலிருந்து மனமாகி

சம்சார விருக்ஷம் முளைத்து வெளியே சக்தியாக வியாபிக்கவும் செய்து கிடக்கின்ற வட விருக்ஷமாகும் இக்காணுகின்ற உலகம். இந்தப் பிரகாரமுள்ள வடவிருக்ஷத்தினுடைய மூலத்தில் அதாவது உற்பத்தி ஸ்தானத்திலாகும தக்ஷிணாமூர்த்தியாகிய குரு இருக்கின்றது.

சி: குருவே இவ்விதமே எனினும் முன்சொன்ன விருக்ஷம் பூமியில் நிற்கின்றதாகக் காணப்படுகிறது. நாமும் அந்தப் பிர காரந்தானல்லவா யிருக்கிறோம். எந்தவிதமென்றால் என்னையே நான் உலகத்தில் காணுகின்றேன், அப்படி யிருக்கின்ற உலகம் என்னிலாகுமென்றும் சொல்லுகிறதெவ்விதம் என்று வெளிப் படுத்தித்தரவேண்டுகின்றேன்.

கு: உலகம் உம்மிலாகுமென்றும், உம்மிலிருந்தாகும் உல கம் உண்டானதென்றும், அது எவ்விதத்திலென்றால் பெரிய தான ஒரு பாத்திரத்தில் நெருப்புத் தணலிட்டு அதிலிருந்து புகை உண்டாகத்தக்க பல பொருள்களையும் போட்டு அந்தப் பாத்திரத்தில் புகை நிறையும் பொழுது, பாத்திரத்தினுடைய வாயை மூடிக் கட்டி மேல் மாடியுள்ளதான வீட்டினுடைய விசாலமான ஒரு அரையில் வைத்தால், அப்பாத்திரத்திலுள்ள புகை வெளியில் போகுமா?

சி: போவதில்லை.

கு: அதென்ன காரணம்?

சி: அந்தப் புகையை பாத்திரத்தில் அடக்கிப் பாத்திரத்தி னுடைய வாயை மூடிக் கட்டியதினால்.

கு: அந்த அரையினுடைய ஜன்னல்களையும் கதவுகளையும் மூடி மேல்சொன்ன பாத்திரத்தினுடைய வாயைக் கட்டியிருந் ததை அவிழ்த்து மூடியதைத் திறந்தாலோ?

சி: புகை பாத்திரத்திலிருந்து வெளியில் வந்து அந்த அரையில் பரவி நிறைந்திருக்கும்.

கு: அப்பொழுது புகையிருந்த பாத்திரம் எவ்விடமிருப் பதாகத் தோன்றுகிறது?

சி: புகையிலிருக்கின்றதாகத் தோன்றுகிறது.

கு: உண்மையில் புகையில் பாத்திரமிருக்கிறதோ அல்லது பாத்திரத்தில் புகையிருக்கிறதோ?

சி: புகை பாத்திரத்திலாகு மிருந்தது.

கு: ஆனால் பாத்திரத்திலிருந்த புகையை வெளியில் விடாமல், அதனுடைய வாயை மூடிக்கட்டியபொழுது, அதில் தானே அடங்கியும், எப்பொழுது அப்பாத்திரத்தினுடைய வாய் மூடிக் கட்டியதை அவிழ்த்து புகை வெளியில் பரவியதோ, அப்பொழுது அந்த அரை முழுவதும் நிரைந்து, பாத்திரத்தின் நாலு பக்கமும் அடியிலும், மேலேயும் புகை

பரவி, புகையில் பாத்திர மிருக்கிறதாகத் தோன்றவும் செய்த தாகும். உண்மையில் புகையுண்டாயிருந்தது பாத்திரத்தி லாகும். பாத்திரத்தில் புகையில்லாதிருந்தானால் வெளியில் பரவுகிறதில்லை. இந்தப் பிரகாரம்தான் நம்மிலிருக்கின்ற மனம் புகையாகி வெளியில் பரவி, அந்த மனமாகின்ற புகையி லாகும் நாம் இப்பொழுதிருக்கிறது. அது எவ்விதமென்றால் பாத்திரத்திலிருந்த புகை வெளியில் பரவி, புகையில் பாததிர மிருப்பதாகத் தோன்றியதுபோல், நம்மிலிருந்து வெளியே பரவிய மானமாகிய புகையில் நாம் இருக்கின்றதினால்தான், உலகில் நாமிருக்கின்றதாகத் தோன்றுகிறதாகும். ஆனால் முன் சொன்ன புகை உத்பத்தியானது அக்கினியிலிருந்து ஆகும். அந்த அக்கினியில்லையானால் புகை உண்டாகிற தில்லை. அதைப் போலவேதான் மனமாகின்ற புகையும், ஜீவனாயிருக்கின்ற அக்கினியிலிருந்தாகும் உண்டானது. ஜீவனாகிய அக்கினி இல்லையானால் மனமாகின்ற புகையுமில்லை. தவிர நாம் இல்லையானால் நமக்கு உலகமில்லை. அதுவுமல்லா மல் தூங்குகிறதென்று சொல்லும் சமயம் நாம் உலகத்தைக் காண்கிறதில்லை, காரணம் புகையாகி வியாபித்திருக்கின்ற மனம் நமதுள்ளில் அடங்கியது கொண்டாகும். தூக்கம் விழித்த சமயத்தில் பாத்திரத்திலிருந்து புகை வெளியில் வந்தது போல் நம்முள்ளிலிருந்து மனச் சக்தி வெளியினுள்ளில் பரவு கின்றதாகும். தவிர தூக்கம் விழித்த உடனே உலகத்தில் எல்லா நிலைமையும் ஒரே சமயத்தில் பார்க்கமுடியாமல், முறை யாய் ஒவ்வொன்றுப் காணப்படுகிறது. வெளியிலிறங்கி சஞ்சரிக்குந்தோறும் அதிகமாய் நாம் ஒவ்வொன்றும் கண்டு கொண்டிருக்கிறோம். அவ்விதம் சஞ்சரிப்பதினிடையில் தன்னிலிருந்து தானாயிருக்கின்ற ஜீவன் மனதாகிய புகையாகி வெளியினுள்ளில் போய்த் தீர்ந்தபோது பாத்திரமாயிருக்கின்ற ஜடம் விழுந்துபோகிறது. பின்பு உலகமில்லை. எப்படி யென்றால் முன் சொன்ன புகை நிறைந்த பாத்திரத்தினுடைய வாயைமூடிக் கட்டியிருந்த கட்டை அவிழ்த்துத் திறந்து அப் பாத்திரத்தைக் கையில் வைத்து வெளியில் சஞ்சரிக்கும் பொழுது புகை வெளியில் பரவி பாத்திரத்திலில்லாமலாய்ப் போய் பாத்திரம் மாத்திரம் மீதியாகிறது, புகையைக் காண்ப தில்லை. இதற்குக் காரணம் பாத்திரத்திலுள்ள அக்கினியில் புகை யுண்டாவதற்கு உண்டாயிருந்த சாமான்கள் எரியாமல் புகையாகி அக்கினி, அணைந்து போகிறதுகொண்டாகும். அவ் விதம் அந்த அக்கினி அணைந்துபோனபிறகு அதிலிருந்து புகையுண்டாகிறதில்லை. இப்பிரகாரம்தான் தன்னிலிருக்கின்ற ஜீவன் மனதாகின்ற புகையாகி வெளியினுள்ளில் போய்த்

தீரும்பொழுது தீர்ந்துபோகிறது. அதற்காகும் செத்துப் போனதென்று சொல்லுகிறது. அதாவது சத்துப்போயி. இவ் வாறு ஜடமாகிய பாத்திரத்திலே சத்தாகிய ஜீவன் மனதாகின்ற புகையாகி வெளியிலுள்ளில் போய்த் தீர்ந்துபோகிறது. அப் பொழுதே சத்துப்போய் என்றுசொல்லுகிறோம்.

அத்தியாயம் 14

சி: குருவே! மனமே குருவென்றும், அந்த மனமே வட விருக்ஷமென்றும் அந்த மனதாகிய வடவிருக்ஷத்தின் மூலத்தில் தக்ஷிணாமூர்த்தியாகிய குரு இருக்கிறதென்றும் சொன்னீர்களல்லவா? இது எவ்விதம் என்பதை விவரித்துச் சொல்ல வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

கு: மனமாகும் குருவென்றும், அந்த மனந்தானாகும் வட விருக்ஷமென்றுள்ளதற்கு, முன் அத்தியாயத்தில் சொன்ன புகையேதானாகும் உதாரணம். அதெப்படியென்றால் பாத்திரத்தினுள்ள அக்கினியிலிருந்து புகை உற்பத்தியாகி வரும்பொழுது பாத்திரத்தினுடைய வாயை அடைத்துக் கட்டியபொழுது பாத்திரத்தில் புகை யுண்டாயிருந்தது. அப்பொழுது புகை வெளியில் வாராததனால் அதைப்பார்க்க முடிகிறதில்லை. ஆனால் அந்தப் புகை பாத்திரத்தில் அடங்கியிருக்கும்பொழுதும் புகையாகத்தானிருந்தது. அந்தப் புகையேதானாகும் வெளியில் வியாபித்தது. அந்தப்படி வெளியில் வியாபித்தபொழுது மாத்திரமே புகையைக் காணமுடிகின்றது. பாத்திரத்திலடங்கி யிருந்ததும், வெளியில் வியாபித்ததும் ஒரே புகையாகத் தானிருந்தது. இந்தப்பிரகாரம் நம்முடைய மனம் உள்ளில் அடங்கியிருக்கும் பொழுதும், புகையைப்போல் வெளியினுள்ளில் வியாபித்தபோதும் ஒரே மனமாகத்தானிருந்தது. இரண்டல்ல. அப்பிரகாரம் அடங்கியிருக்கின்ற மனதுக்காகும் குருவென்று சொல்லுகிறது. வடவிருக்ஷமென்று சொல்லுவதானது இக்காணுகிற உலகமாகிய சம்சாரவிருக்ஷமாகும். இதற்குக் காரணபூதமாயிருக்கிறது மனமாகும். அந்தமனம் மேற்சொன்ன சம்சார விருக்ஷத்தினுடைய மூலத்தில் தெற்கு முகமாக இருக்கின்றது. அதனால்தான் தக்ஷிணாமூர்த்தியாகிய குரு என்று சொல்லக் காரணம்.

சி: குரு புருவ மத்தியமாகிய இருதயத்திலாகு மிருக்கிறதென்று கற்பித்தீர்களல்லவா? இப்பொழுது சம்சார விருக்ஷத்தினுடைய மூலத்தில் தெற்கு முகமாக இருக்கிறதென்றும் சொல்லுகிறீர்கள். அது எவ்விதமென்பதை தெளிவாய்ச் சொல்லித்தரும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கு: தெற்கு என்பது ஏதென்றாகும் கருதியிருக்கிறீர்?

சி: கிழக்கு பார்த்து நின்றால் வலது பக்கம் தெற்காகும்.

கு: கிழக்கு எது?

சி: சூரியன் உதிக்கும் பக்கம்.

கு: இப்படி நினைப்பது மிகவும் தப்பிதம். நீர் ஜனிக்கவில்லையானால் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்பது உமக்கு இருக்குமா?

சி: எனக்கு இல்லை.

கு: எப்பொழுதாகும் உமக்கு முன் சொன்ன பக்கங்கள் அதாவது திசைகள் உண்டாயினது?

சி: நான் ஜனித்து எனக்கு அறிவு உண்டானதற்குப்பின்.

கு: நீர் ஜனிக்கவில்லையானல் உமக்கு உருவம் உண்டோ?

சி: இல்லை.

கு: உருவமில்லையானல் ஆதி, அந்தம் என்றோ, வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்கிற யாதொரு நிலைமையுண்டோ?

சி: யாதொரு நிலைமையுமில்லை.

கு: எப்பொழுதாகும் முன்சொன்ன நிலைமைகளுண்டாகியது?

சி: நான் என்கிற நிலைமை உண்டாகிய போது.

கு: அதல்லாமல் நீர்தூங்குகிற சமயம் முன் சொன்ன யாதேனும் நிலைமைகளுண்டா?

சி: இல்லை.

கு: காரண மென்ன?

சி: நான் என்கிற நிலைமை யில்லாததனல்.

கு: நான் என்னும் நிலமை எப்பொழுதுண்டாயிற்று?

சி: தூக்கம் விழித்த பொழுது.

கு: அப்பொழுது முன் சொன்ன நிலைமைகளெல்லாம் யாருக்குள்ளதாகுய?

சி எனக்குள்ளதாகும்.

கு: அப்போது உமக்காகும் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு இருக்கின்றது. அதனல் உம்முடைய வடககு, கிழக்கு, தெற்கு, மேற்கு சொல்ல முடியுமா?

சி: முடிவதில்லை.

கு: நீர் பாடசாலையில் படித்திருக்கிறீரா?

சி: படித்திருக்கிறேன்.

கு: அந்தப் பாடசாலையில் பூகோளப் படம் பார்த்திருக்கிறீரா?

சி: பார்த்திருக்கிறேன்.

கு: அந்தப் பூகோளப் படத்திற்கு வடக்கு, தெற்குப் பக்கம் எங்கேயாகும?

சி: படத்தில் தலைப்பக்கம் வடக்கும், அடிப்பக்கம் தெற்குமாகும்.

கு: உம்முடைய மேல் பக்கம் எதாகும்?

சி: சிரசாயிருக்கின்ற மேல் பாகம்.

கு: அதற்காகும் உயர்ந்த பக்கம் வடக்கு என்று சொல்லுகிறது. அது நம்முடைய சிரஸாகும். அந்தச் சிரசில் புருவமத்தியத்திலாகும் மனதாகிய குரு அடிப் பக்கமாகிய தெற்கே கீழ்

முகமாக யிருக்கின்றது. இதனால்தான் குருவுக்குத் தக்ஷிணா மூர்த்தி என்று சொல்லக் காரணம்.

சி: வடக்கு, தெற்குப் பக்கம் இன்னதென்று தெரிகிறது. கிழக்கு, மேற்குப் பக்கம் ஏதென்பதையும் தெரிவிக்கவேண்டு மாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கு: கிழக்கு என்பது பூர்வ பாகம்; பூர்வமென்றால் முன்பு என்று பொருள்.

சி: முன்பு என்று சொல்லவேண்டுமானால் ஒரு பொருள் வேண்டியதல்லவா? ஒரு பொருளில்லாவிட்டால் எப்படி முன்பு என்று சொல்ல வேண்டியது?

கு: ஒரு வஸ்து இல்லாவிட்டால் முன்பு என்றோ, பின்பு என்றோ சொல்ல முடிகிறதில்லை. அப்படியாயின் நாம் எப் பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கின்றது எதையாகும்?

சி: நாம் பார்க்கிறது உலகத்தையாகும்.

கு: அப்பொழுது உலகு இல்லாவிட்டால் யாதேனும் உண்டா?

சி: இல்லை.

கு: அதனால் உலகத்தினுடைய முன்புக்கேயாகும் நாம் பூர்வம் என்று சொல்லுகிறது. அதாவது உத்பத்தி ஸ்தானம். ஆனால் இந்த உலகம் எங்கிருந்து உண்டானது?

சி: நம்மிலிருந்தே உண்டானது.

கு: அப்பொழுது நம்மில் எந்தப் பாகத்திலிருந்தாகும் உலகம் உண்டானது?

சி: நம்முடைய சிரசிலிருந்து.

கு: ஆனால் சிரசிலிருந்து உண்டானதென்றால் நமக்கு எப்பொழுதும் உலகத்தைப் பார்க்க முடியுமா?

சி: முடிகிறதில்லை.

கு: என்ன காரணம்? எந்தச் சமயத்தில்?

சி: அதாவது நாம் தூங்கும்பொழுது.

கு: அப்பொழுது உலகமிருக்கிறதா?

சி: இல்லை.

கு: அப்பொழுது என்னவாயிற்று?

சி: அப்பொழுது உலகம் தன்னிலடங்கியிருக்கிறது.

கு: தன்னில் உலகம் அடங்கக் காரணமென்ன?

சி: அப்பொழுது நமது ஜீவன் நம்மில் அடங்கியதனால்.

கு: எப்பொழுது உலகம் உண்டானது?

சி: தூக்கம் விழித்தபொழுது.

கு: தூக்கம் விழித்தபொழுது எங்கிருந்துண்டாயிற்று?

சி: ஜீவனிலிருந்துண்டாயிற்று.

கு: அந்த ஜீவனிலிருந்து எப்படி உண்டாயிற்று?

சி: தூக்கம் விழித்து நமது ஜீவன் உள்ளிலும் வெளியிலும் கதாகதம் அதாவது நடனம் செய்யும்பொழுது.

கு: அப்பொழுது ஜீவன் எந்த மார்க்கமாய்க் கதாகதம் அதாவது நடனம் செய்கிறது?

சி: மூக்குத் துவாரத்தின் வழியாய் உள்ளிலும் வெளியிலும் கதாகதம் செய்கிறது.

கு: ஆனால் நாம் தூங்கும்பொழுது எந்த மார்க்கமாய் கதாகதம் செய்கிறது?

சி: நமது உண்ணாக்கிலிருந்து மேலே போகிறதற்குள்ள இரண்டு துவாரங்களில கூடியாகும்.

கு: ஆனால் தூக்கம் விழித்தபொழுது எந்த இடத்தில் இருந்து ஜீவன் வெளியினுள் வருகிறது?

சி: மூக்கினுடைய உத்பத்தி ஸ்தானமாகிய சுழி முனையில் இருந்து.

கு: அப்படி கதாகதம் செய்து கொண்டிருக்கின்ற ஜீவன் வெளியினுள் போய்த் தீர்ந்தால் என்னவாகிறது?

சி: பிணமாகிறது.

கு: அந்தப் பிணத்திற்கு உலகமிருக்குமா?

சி: இருக்காது.

கு: என்ன காரணம்?

சி: அதில் ஜீவன் கதாகதம் செய்யாததனுல்.

கு: அப்பொழுது அந்த ஜீவன் வெளியின் உள்ளுக்கு எவ்வளவு நீளத்துக்குக் கதாகதம் செய்கிறது?

சி: மூக்கினுடைய உத்பத்தி ஸ்தானமுதல் அதன் நுனி வரையில்.

கு: அப்பொழுது ஜீவன் விட்டுப்போவது எவ்விட மிருந்தாகும்?

சி: மூக்கின் நுனியிலிருந்தாகும்.

கு: மூக்கின் நுனியில் ஜீவனில்லா விட்டால் உலகம் உண்டோ?

சி: மூக்கின் நுனியில் ஜீவனில்லாவிட்டால் உலகம் இல்லை.

கு: அப்பொழுது என்னவாகும்?

சி: பிணமாகும்.

கு: அதென்ன காரணம்?

சி: ஜீவன் இல்லாததனுல்.

கு: ஜீவன் இருக்கும் எல்லா சமயத்திலும் உலகு உண்டா?

சி: இல்லை.

கு: அதென்ன காரணம்?

சி: ஜீவன் உத்பத்தி ஸ்தானமாகிய சுழி முனையில் அடங்கியதனால்.

கு: அப்பொழுது உலகம் உண்டோ?

சி: இல்லை.

கு: ஆனால் இக்காணுகிற உலகத்தினுடைய அளவை எந்த அரசாங்களாலும் கூட அளவிட்டுச் சொல்ல முடிகிறதில்லை. அதை நாம் இப்பொழுது அளந்து காண்பிக்கிறோம். இந்த உலகம் ஒரு அங்குஷ்டம். அதாவது கையினுடைய பெருவிரல் நீளம் மாத்திரம் நீளமுள்ளது. இதோ பாருங்கள் நாம் இப்பொழுது என்ன செய்கிறோம்?

சி: கையின் பெருவிரலை அதாவது கட்டைவிரலை மூக்கின் உத்பத்தி ஸ்தானம் முதல் அதன் நுனிவரை வைத்து இருக்கிறீர்கள்.

கு: அப்பொழுது மூக்கின் அளவு எவ்வளவு?

சி: கட்டை விரல் நீளம் மாத்திரம் இருக்கிறது.

கு: ஆனால் மூக்கினுடைய உத்பத்தி ஸ்தானத்திலிருந்து ஜீவன் மேலே போனால் உலகம் உண்டா?

சி: இல்லை.

கு: ஆனால் மூக்கினுடைய நுனியிலிருந்து ஜீவன் விட்டுப் போனால் உலகுண்டோ?

சி: உலகு இல்லை.

கு: ஆனால் இந்த உலகம் அங்குஷ்ட மாத்திரம் அதாவது கட்டை விரல நீளத்திலிருக்கிறது. அவ்விதமுள்ள மூக்குக்கு மேலும், கீழும் உலகம் இல்லை. ஆனால் இக்காணுகின்ற உலகு, பிரகிருதியிலிருந்து அதாவது இயற்கையிலிருந்து உண்டானது. அந்தப் பிரகிருதியான சிவ சக்தி கட்டை விரல் நீளத்திலுள்ள மூக்குத் துவாரத்தில் கூடி மேலும் கீழும் கதாகதம் செய்யும்பொழுது மாத்திரமே உலகு இருக்கிறது. அதாகும் உலகம். அந்த உலகினுடைய உத்பத்தி ஸ்தானம் ஆகும் கிழக்கு. அந்த உத்பத்தி ஸ்தானத்தில் பிராணனாகிய சூரியன் அடங்கியிருக்கும் பொழுதாகும் "சூரிய உதயம்". அதைக் கொண்டு தான் சூரியன் கிழக்கிலிருந்து உதிக்கிற தென்று சொல்லக் காரணம். சூரியன் அஸ்தமிக்கிறது மேற்கு என்று சொல்லக் காரணம்; சூரியன் அஸ்தமித்த போது இருட்டாயிருக்கும். இருட்டாகக் காரணம் வெளிச்சம் இல்லாததால். எந்த இடத்திலிருந்து வெளிச்சம் உண்டாகிறதோ அந்த இடத்திலிருந்து வெளிச்சம் இல்லாது வருகின்ற சமயத்துக்காகும் அஸ்தமன மென்று சொல்வது.

சி: அது எப்படி? நாங்கள் சூரியன் கிழக்கே உதித்து மேற்கில் அஸ்தமிக்கிறதைக் கண்டு வருகிறோமல்லவா?

கு: ஆனால் சூரியன் உதிப்பதை நீர் காணுகிறதுண்டோ? அது எவ்விடமிருந்து?

சி: காணுகிறதுண்டு. ஆகாசத்திலிருந்து.

கு: ஆகாசத்திலிருந்து சூரியன் உதிக்கிறதை நீர் பார்த்து இருக்கிறீரா?

சி: ஆகாசத்திலிருந்து சூரியன் உதிக்கிறதைக் கண்டதில்லை. உதித்து உயர்ந்து வந்தபொழுது ஆகாசத்தில் பார்த்திருக்கிறேன்.

கு: அப்பொழுது சூரியன் உதிக்கிறதை நீர் பார்க்கவில்லை. உதிக்கிறதென்று கேள்வி மாத்திரம் உண்டு. சூரியன் உதித்தால் நமக்கென்னவாயிருக்கும்?

சி: பகலாயிருக்கும்.

கு: பகல் என்பதற்குத் திருஷ்டாந்தம் என்ன?

சி: பிரகாசமுண்டானது கொண்டு.

கு: இப்பொழுதென்ன சமயம்?

சி: பகல் சமயமாகும்.

கு: இப்பொழுது உமக்குப் பிரகாசமுண்டோ?

சி: உண்டு.

கு: இந்தவீட்டினுள்ளில் யாரெல்லாம் இருக்கிறார்கள் என்றும், சாமான்கள் என்னென்னவாகும் இருக்கிறது என்றும், இவ்விடத்திலிருந்தே உமக்குச் சொல்லமுடியுமா?

சி: உள்ளே போய்ப் பார்க்காமல் சொல்லமுடிவதில்லை.

கு: உமக்குப் பிரகாசம் உண்டல்லவா? எந்தக் காரணத்தால் சொல்லமுடிகிறதில்லை?

சி: சுவற்றினுடைய தடை உள்ளது கொண்டு.

கு: பிரகாசத்திற்கு மற்றொன்றினால் தடை உண்டாகிறது இல்லை. அதனால் நமக்குப் பிரகாசிக்கிறதில்லை. எவ்விதத்திலாகும் நமக்குப் பிரகாசிப்பதாகத் தோன்றுகிறதென்றால், நீர் இரவு என்று கருதுகிற இருட்டான சமயம் பிரகாசம் உண்டாகிறதில்லை. அந்தச் சமயத்தில் விளக்கில் திரியைக் கொளுத்தி வைத்தால் அத்திரியினுடைய பருமனுக்கு அனுசரித்துப் பிரகாசம் உண்டாகும். பத்து மைல் சம சதுரத்தில் பரப்புள்ளதாகிய ஒரு கண்ணாடிக் குழாய் வைக்கத் தகுந்ததான விளக்காக இருந்ததென்றால், அதனுடைய சக்திக்கு அனுசரித்து வெளிச்சமுண்டாயிருக்கிறது. அந்தச் சமயம் விளக்கின் நான்கு பக்கங்களிலுமுள்ள எல்லா வஸ்துக்களும் வெளிச்சமுள்ள தூரம் வரை நமக்குக் காணப்படுவதாயிருக்கிறது. ஆனால் அந்த விளக்கின் அருகில் விளக்கைத் தொடாமல் யாதேனுமொரு வஸ்துவைக் கொண்டு விளக்கை மறைத்து வைத்தால், மறைத்த வஸ்துவினுடைய பின்பாகம் இருட்டாகக்

காணுகிறது. அதன் காரணம் சுயமாகிய நிலைமை இருட்டு ஆகும். அந்த இருட்டில் வெளிச்சம் வைத்ததாயிருந்தது. அந்த வெளிச்சத்துக்குத் தடை நேரிட்டபோது சுய நிலையான இருள்தான் ஆனதாகும். இந்த விதம்தான் இப்பொழுது நமக்குப் பிரகாசிக்கிறதில்லை. இருட்டாகும். இருட்டில் விளக்கு ஏற்றி வைத்ததற்குச் சமமாக இந்த இருட்டில் ஒரு பிரகாச வஸ்து உண்டாயிருந்தது. அப்பிரகாசத்திற்குத் தடை நேரிட்ட பொழுது பிரகாசம் காணுகிறதில்லை. இருட்டாகும் காரணம், முன் சொன்ன விளக்கினுடைய பிரகாசத்திற்குத் தடை நேரிட்ட பொழுது உண்டானது போலாகும். ஆனால் சூரியன் உதிக்கிறது ஆகாசத்திலாகும். அந்த ஆகாசம் இன்னதென்று ஐந்தாம் அத்தியாயத்தில் விவரித்துச் சொல்லியிருக்கின்றது. சூரியன் என்றால் பிராணனாகும். அந்தப் பிராணனை, முன் சொன்ன சிரசாகின்ற ஆகாசத்தில் அசையாமல் நிறுத்தினால் பகலாகும். பகலென்று சொல்லுகிறது, பரமாத்துமாவாகின்ற மனதினைச் சிரசினில் பிரகாசிக்கும் பொழுதாகும். அந்தச் சந்தர்ப்பத்தில் சூரியன் உதித்து, பிரகாசித்தது பகலாகும். பின்பு இருட்டில்லை. அப்பிரகாரம் சூரியனுதித்தால், யாதொரு தடையுமில்லாமலே எல்லா நிலைமைகளும் காணப்படுவதும், அறியப்படுவதுமாகும். அதற்கு யாதொரு காலமுமில்லை. இப்பொழுது நமக்கு இருட்டாகும். அந்த இருட்டிலாகும் இப்பொழுது பிரகாச முண்டென்று தோன்றுகிறது. இதை இரவு என்று சொல்லக் காரணம்; தானாயிருக்கின்ற ஜோதி, சிவ சக்தியாயிருக்கின்ற மூன்று குணங்களாகி வெளியினுள்ளில் வந்து வியாபித்திருக்கிறது. அதாவது சாத்வீகம், ராஜஸம், தாமஸம் இவைகளாகும். அந்த சக்தியிலிருந்து உத்பவித்துள்ள மூன்று குணங்களையும் ஒன்றாகச் சேர்த்து அவைகளினுடைய உத்பத்தியாயிருக்கிற சக்தியோடு சேர்த்து புருவமத்தியத்தில் நிறுத்தி, அங்கேயே மனதையும், கண்களையும் அசையாமல் நிறுத்த வேண்டும். அப்பொழுது பிரகாசிக்கும். அச்சமயத்திலாகும் ஆகாசத்தில் சூரியன் உதித்துப் பகலாகின்றது. இப்பொழுது சூரியன் உதிக்கவில்லை. சூரியன் உதித்தால் பின் இருட்டாவதில்லை.

சி: சுவாமி! இப்பொழுது இதோ பாருங்கள் சூரியனைக் காண்கிறோம். இது என்னவென்றாகும் சொல்ல வேண்டியது?

கு: இக்காணப்படுகிறது, நம்மிலிருக்கின்ற சக்தி பிரதிபிம்பித்துக் காணுகின்றதாகும். காரணம், நீர் கண்களை மூடிப் பாரும். பிரகாசமுண்டோ? யாதேனும் காணுகிறதுண்டோ?

சி: பிரகாசமில்லை; காணுகிறதுமில்லை.

கு: கண்களை மூடிய போது என்ன காரணத்தால் காணாது இருந்ததும், பிரகாசிக்காதிருந்ததும்?

சி: கண்களை மூடியது கொண்டு.

கு: நமக்கு எப்பொழுதாகும் காணுகிறதும், பிரகாசிக்கிறதும் செய்கிறது?

சி: கண்களைத் திறந்தபொழுது.

கு: அப்பொழுது எவ்விடமிருந்தாகும் பிரகாசிக்கின்றதும் காணுகிறதும்?

சி: அவனவனிலிருந்தாகும்.

கு: ஆனால் மத்தியான சமயத்தில் ஆயிரங் கோடி சூரியர்கள் ஒன்றாய்ச் சேர்ந்து உதித்தாலுள்ள பிரகாசம் எப்படியிருக்குமோ, அப்பிரகாரத்திலுள்ள பிரகாசத்தோடு கூடியதாகும் நம்மிலுள்ள சைதன்னியம். அந்தச் சைதன்னியத்திலிருந்துண்டான ஜீவ சக்தியிலிருந்து விகாராதிகளுண்டாகிறது. அப்பொழுது பின்னப் பிரகாசமாகிறது. அந்தப் பின்னப் பிரகாசத்தின் வழியாய் நம்மிலிருக்கின்ற சைதன்னியத்தை நம்மிலிருந்து பிரதிபிம்பித்துக் காண்கிறோம். இப்பிரகாரம் பிரதிபிம்பித்துப் பிரகாசிக்கப்படுகின்ற மேல்சொன்ன சூரியனை, இப்பொழுது நம்மால் பார்க்கமுடியாது. பார்த்தால் அதி கடோரமாகிய கிரணங்களால் அதாவது கதிரால் கண்கள் மூடிப்போகின்றது. அது எவ்விதமென்றால் நாம் ஒரு கண்ணாடியை எடுத்துப் பார்த்தால் அதில் நம்முடைய என்னவெல்லாம் பாகங்கள் பிரதிபிம்பித்துக் காணுகிறதோ, அந்தப் பாகத்திலுள்ள எல்லா நிலைமைகளும், நமக்கு யாதொரு கஷ்டமுமில்லாமல் சுகமாய்ப் பார்க்கலாம். அது இப்பொழுது சூரியன் என்று சொல்லி வருகிறதான கிரணத்திற்கு நேரே முன் சொன்ன கண்ணாடியைப் பிடித்தால், அந்தக் கிரணத்தோடு கூடி பிரதிபிம்பிக்கின்ற பிரகாசத்தில் நமக்குப் பார்ப்பதற்கு முடியுமா?

சி: முடியாது.

கு: காரணம்; அதிஜொலிப்புள்ள பிரகாசம்கொண்டு பார்ப்பதற்கு முடியாமல், கண்கள் கூசி மூடிப்போகின்றது. இந்தப் பிரகாரம்தான் பத்தாம் அத்தியாயத்தில் சொல்லியபடி ஜீவ சக்தியாகிய வாயுவிலிருந்து மனம் உத்பவித்து பளிங்கு வர்ணமாயிருக்கின்ற முட்டை வடிவில் வெளியினுள்ளில் நம்மிலிருந்து முன் சொல்லிய பிராணன் பிரகாசமாகிப் பிரதிபிம்பித்ததாகும் இக்காணுகின்ற சூரியன். அதை நாம் அகங்காரத்தினால் பார்க்கிறது கொண்டாகும் சூரியன் மிகவும் ஜொலிக்கின்றதாய் பார்க்க முடியாமலிருக்கின்றது. எப்பொழுது அப்படி பிரதிபிம்பிக்க விடாமல் தன்னில் அடக்குகின்றோமோ அப்பொழுது நமக்குப் பகலாகும்.

சி: இவ்விதமானால் இரவென்றும், பகலென்றும் இரண்டு நிலைமைகள் உண்டாகக் காரணமென்ன?

கு: நமக்கு இப்பொழுது இரவென்றும், இருட்டென்றும் சொல்லி யிருக்கிற தல்லவா? அந்த இருட்டில் நம்மிலிருக்கின்ற பிராணன் வெளியினுள்ளில் பிரகாசிக்கின்ற சமயத்தில் பகலென்றும், வெளியினுள்ளில் பிரகாசிக்கின்ற பிராணன் எப்பொழுது நம் உள்ளில் தானே அடங்குகிறதோ, அப்பொழுது இரவென்றும் சொல்லுகிறது. அது எவ்விதமென்றால் நாம் இரவென்று சொல்லுகிற சமயத்தில், இக் காணுகிற வீட்டிற்குள் முன் வாசலுக்கு நேரே ஒரு விளக்கு கொளுத்தி வைத்தால் வெளியே அந்த வாசலுக்கு நேரே அப் பிரகாசத்தினுடைய சக்தி எவ்வளவு தூரம் செல்லுகின்றதோ, அவ்வளவு தூரம்வரை வெளிச்சமிருக்கும். அந்த வாசலை மூடினால் வெளியில் இருட்டாயும் காணுகிறது. அதைப்போலவே நம்முடைய புருவ மத்தியில் பிராணனைச் சூரியனையிருக்கின்ற பிரகாசம் அகங்காரமாயிருக்கிற வாசலின் வழியாய், வெளியினுள்ளில் வியாபித்துப் பிரகாசிக்கின்றது. அப்பொழுது நமக்குப் பகலென்றும், அந்த அகங்காரமாயிருக்கின்ற கதவு மூடி வெளியினுள்ளில் பிரகாசிக்காமல் வரும்பொழுது நமக்கு இரவென்றும் சொல்லுகிறதாகும். இதாகும் நாம் சொல்லி வருகிற இரவினுடையதும், பகலினுடையதும் நிலைமை. இது நமக்கு இரவும் பகலுமல்ல. இந்த நிலைமை தூக்கமாகும். அதனால் இரவும் பகலும் உண்டென்றுள்ளது. இந்தத் தூக்கத்தில் தோன்றுகிற சொற்பனமாகும்.

அத்தியாயம் 15

சி: குருவே, முன் அத்தியாயத்தில் பிராணனுயிருக்கின்ற சூரியன் எப்பொழுது புருவ மத்தியத்தில் பிரகாசிக்கின்றதோ அப்பொழுது யாதொரு காலமுமில்லையென்று கற்பித்தீர்களல்லவா! ஆனால் பூதம் அதாவது இறந்தகாலம், வர்த்தமானம் அதாவது நிகழ்காலம், பாவி அதாவது எதிர்காலம் என மூன்று காலங்களுண்டென்றும் அவைகளை அனுசரித்ததாகும் உலகத்தினுடைய நிலைமைகளென்றும் உலகத்தில் சொல்லி வருகிறார்கள். இப்பிரகாரம் மூன்று காலங்கள் இல்லையானால் உலகத்தில் நடந்ததும், நடக்கின்றதும், நடப்பதுமில்லை யென்றாகிறதல்லவா? அப்படியாவதற்கு இடமுண்டோ?

கு: இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று சொல்லுகிறது எந்தெந்த காலங்களைக் குறித்தாகும்?

சி: இறந்தகாலமென்பது நடந்ததும், அதாவது முடிந்ததும், நிகழ்காலமென்பது நடக்கின்றதும், எதிர்காலமென்பது இனிமேல் நடப்பது அதாவது வருவதுமாகும்.

கு: அது எவ்விதமாகும் அப்படி வருகின்றது? இதோ பாருங்கள்; இக்காணுகின்றதென்னவாகும்?

சி: இது ஒரு புத்தகமாகும்.

கு: இதை நாம் இப்பொழுதென்ன செய்யப்போகிறோம்?

சி: அதை நீங்கள் கையினால் தொடுவதற்குப் போகிறீர்கள். அதாவது பாவிக்கிறீர்கள்.

கு: அதற்கு என்ன காலமாகும்?

சி: எதிர் காலமாகும்.

கு: இப்பொழுது என்ன செய்கிறோம்?

சி: அந்தப் புத்தகத்தைப் பிடித்து எடுக்கிறீர்கள்.

கு: இதென்ன காலமாகும்?

சி: நிகழ்காலமாகும்.

கு: இந்தப் புத்தகத்தை இப்பொழுது என்ன செய்தோம்?

சி: எடுத்தீர்கள்.

கு: அதென்ன காலமாகும்?

சி: இறந்த காலமாகும்.

கு: அப்பொழுது இறந்த காலம், நிகழ்காலம், எதிர் காலமோ? அல்லது எதிர்காலம், நிகழ்காலம், இறந்தகாலம் என்றோ! எப்படிச் சொல்ல வேண்டும்?

சி: எதிர் காலம், நிகழ் காலம், இறந்த காலம் என்றாகும்.

கு: ஆனால் நீர் ஏதாவது செய்ய வேண்டுமானால் அதாவது எதிரில்லாமல் செய்வதற்கு முடியுமா?

சி: முடியாது.

கு; அதெப்படி யென்றால் நீர் இங்கே வருவதற்காக உம்முடைய வீட்டிலிருந்து புறப்பட நினைக்கிறது எதிர் காலமும், இங்கு வந்து சேருவதற்காக நடக்கின்றது நிகழ் காலமும், இவ்விடம் வந்து சேர்ந்தது இறந்த காலமுமாகிறது. எதிர்காலமென்று சொல்லுவது பாவியாகும். பாவி என்றால் சலனம் அதாவது அசைவு. ஒன்றுமில்லாத நிலைமையிலிருந்து ஆகும் எதிர் காலமாகிய சலனம் அதாவது அசைவு உத்பத்தி யாகின்றது. அதெப்படி யென்றால் ஜடத்திற்கு அதாவது உடம்பிற்கு அசைவாகிய எதிர் அதாவது பாவி காலமில்லை யென்றால் யாதொரு தொழிலும் செய்வதற்கு முடிகிறதில்லை. அதெப்படி யென்றால் உமக்கு இந்த இருக்கும் இடத்தில் இருந்தே எழுந்திருக்க வேண்டும். ஆனால் உம்முடைய காலும் கையும் வைத்திருந்த இடத்திலிருந்து அசைக்காமலிருந்தால் எழுந்திருக்க முடியுமா?

சி: முடியாது.

கு: அதென்ன காரண மென்றால் சலனம் அதாவது அசைவு இல்லாமலிருந்ததினாலாகும். சலிக்கின்றது ஜீவசக்தி ஆன வாயுவாகும். அது பாவியாகின்றது. அதாகும் எதிர். அந்த வாயுவிலிருந்து உத்பவித்த மனமாகும் வர்த்தமானமாய் நடக்கின்ற நிகழ்காலம். அந்த மனதினால் உண்டாக்கப்பட்ட இந்த ஜடமாகும் பூதமாயிருக்கின்ற முடிந்த காலம் அதாவது இறந்த காலம். அது எப்படி யென்றால் ஜீவ சக்தியாய் எதிர் காலமாயிருக்கின்ற வாயுவும், நிகழ்காலமாயிருக்கின்ற மனதும் இல்லையானால் சம்போகம் உண்டாகிறதில்லை. அதனால் நிகழ் காலமாயிருக்கின்ற மனம், பூதமாய் இறந்ததாய் முடிந்ததாய் இருக்கிற ஜடத்தைப் புணர்ச்சியினால் உண்டாக்குகிறது. அது எவ்வித மென்றால் மனம் ரஜோ குணமாகும். ரஜோ குணமாய் இருக்கின்ற மனம், பூதமாய் இறந்ததாய் முடிந்த காலமாகிய ஜடத்தைச் சிருஷ்டித்தது. அச்சிருஷ்டியைச் சாத்வீகமாய் ஜீவ சக்தியாய், பாவியாய் அதாவது எதிர் காலமாயிருக்கின்ற வாயு ரக்ஷிக்கிறது. சாத்வீகமாய் இருக்கின்ற அந்த வாயுவும் ரஜோ குணமாயிருக்கின்ற மனதும் உள்ள போது நான் என்கிற தேகாபிமானமாகிய அகங்காரம் உண்டாகிறது. அப்பொழுது மூன்று காலமாகிய நிலைமைகள் ஒன்று கூடியுாகும் இக் காணப் படுகிற பூதங்களை அதாவது இறந்ததுகளை உண்டாக்குகின்றது. அதனால் நாம் ஏதோன்று கேட்பதும், காணுவதும், அறிவதும் செய்கிறோமோ அதெல்லாம் முடிந்த காலமான இறந்ததாகும். அப்படி உண்டாகிறதற்கு நடக்கின்ற அதாவது உதவுகின்ற வஸ்து மனமாகும். அந்த மனமாகும் தொழில். தொழில்

மனமாகிறதினுல் அது நடந்து கொண்டிருக்கிற வர்த்தமானம் ஆகிய நிகழாகும். அந்தத் தொழிலாயிருக்கின்ற மனம் உண்டாவதற்குக் காரணம், ஜீவசக்தியாகிய வாயுவாகும். அது பவிஷ்யத் காலமான் அதாவது முன்பு உண்டானதான பாவி காலமாகிய அதாவது எதிர் காலமுமாகின்றது. பாவி ஆகிய அதாவது எதிராயிருக்கின்ற அந்த வாயு இல்லையாளுல் வர்த்தமான நிகழாக நடக்கின்ற காலமான தொழிலான மனதோ, இறந்ததாய் முடிந்த காலமான அகங்காரமோ உண்டாகிறதில்லை. இவையெல்லாம் உண்டாகின்றது பாவி ஆகிய எதிராய், பவிஷ்யத் காலமான ஜீவசக்தியாயிருக்கின்ற வாயுவிலிருந்தாகும். காரணம் நாம் தூங்கும் சமயம் முன் சொன்ன மூன்று காலமுமில்லை. அப்பொழுது யாதொன்றையும் அறிகிறதுமில்லை. அப்பொழுது தன்னுடைய சக்தி உத்பத்தியாகி வெளியினுள்ளில் வாயுவாகி சலிக்கிறதில்லை. எப்பொழுது தன்னுடைய சக்தி வெளியினுள்ளில் வியாபித்து சலிக்கின்றதோ அப்பொழுது வாயு என்று பெயர். அதனுல் எதிர் காலமான வாயுவிலிருந்தாகும் எல்லாவற்றினுடைய உத்பத்தி. ஆனதினுல் வெளியினுள்ளில் எப்பொழுது மனம் இருக்கின்றதோ, அப்பொழுது எதிர் என்கிற பவிஷ்யத் காலமல்லாமல், வேறு தனித் தனியாக யாதொரு காலமுமில்லை. அவ்விதம் பாவியாகிய எதிராயிருக்கின்ற பவிஷ்யத் காலமென்று சொல்லுகிற ஜீவசக்தியான வாயுவா யிருக்கின்ற வஸ்து, எப்பொழுது வெளியினுள்ளில் சலிக்காமல் தன்னுடைய உத்பத்தி ஸ்தானமாகிய புருவமத்தியில் லயிக்கின்றதோ அப்பொழுது காலம் நசிக்கிறது. அந்தச் சந்தர்ப்பத்தில் தானுய்த் தன்மயமாய்த் தீருகிறது. அதனுல்; தானுய், பிரம்ம ஜோதியாயிருக்கின்ற "தான் தானே", எப்பொழுது ஆகாச மாய்த் தீருகிறதோ அப்பொழுது அதற்குள்ளில் சலிக்கிறது ஜீவ சக்தியாகிய வாயுவாகும். அந்த வாயுவிற்குத்தான் எதிரா யிருக்கின்ற பவிஷ்யத் காலமென்றும், மாயையென்றும், சக்தியென்றும் சொல்லுகிறது. அது தன்னுடைய சலனம் ஆனதுகொண்டு அதற்குப் பிரம்ம மாயையென்றும், புருஷப் பிரகிருதி யென்றும், சிவசக்தி யென்றும் மற்றும் சொல்லி வருகிறது. ஆனுல் தானுய், பிரம்ம ஜோதியாய், தன்னுடைய சக்தியாய், எதிராய் அதாவது பவிஷ்யத்காலமாகிற வாயு எப்பொழுது தானுகிய பிரம்மத்தில் தானே ஐக்கியப் படுகின்றதோ, அப்பொழுது சர்வமும் தன்னில் தானே லயித்து, தானுகி, தன்மயமாய்த் தீருகிறது. இதற்காகும் கைவல்லியம் என்று சொல்லுகிறது.

அத்தியாயம் 16

சி: சுவாமி குருவே! உலகில் பழைய காலம் முதல் பரம் பரையாக விரதம் முதலியவை அனுஷ்டித்து க்ஷேத்திரோப வாசம் முதலானவைகள் செய்தால் மாத்திரமே முத்தி சித்திக்குமென்று சொல்லி வருகிறார்கள். தவிர சாஸ்திரங்களிலும் அவ்விதமே இருப்பதாகச் சொல்லி அனுஷ்டித்தும் வருகிறார்கள். இதன் உண்மை என்ன என்பதைத் தெரிவிக்கக் கோருகிறேன்.

கு: என்னென்னவாகும் விரதாதிகளும், உபவாசாதிகளும்?

சி: ஏகாதசி, பிரதோஷம், சிவராத்திரி முதலிய அநேக விரதங்களும், க்ஷேத்திரோபவாசாதிகளுமாகும்.

கு: நீர் ஏகாதசி முதலிய அநேக விரதங்களென்று சொல்லுகிறீர் அல்லவா? இவைகள் முத்திக்கு வேண்டியதாயிருந்தால் ஒன்றே போதுமாக இருந்ததல்லவா? அநேகம் தேவையில்லை. ஆனால் இவ்வித விரதங்களை எந்த விதத்தில் அனுஷ்டித்து வருகிறார்கள்?

சி: சொல்லுகிறேன்; ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து வருகிறது எவ்விதமென்றால், சிலர் அன்று காலையில் சூரிய உதயத்திற்கெல்லாம் எழுந்திருந்து, குளித்து, சந்தனம் பூசி விஷ்ணு நாமங்களை ஜெபித்தும், விஷ்ணு க்ஷேத்திர தரிசனம்செய்து, அரிசி, உளுந்து முதலியவைகளை நீக்கி இளநீர், பழம் முதலியவைகளைப் புசித்துத் திருப்தியோடு கூடியவர்களாய் ஏகாதசி மகாத்மியம் முதலிய கிரந்த பாராயணம் செய்து, பகல் பொழுதைப் போக்கியும், இரவில் தூங்குகிறதுமாகும். சிலர் தூங்காமலுமாயிருக்கிறார்கள். பிரதோஷ விரதம் அனுஷ்டித்து வருகிறது, அன்று தினம் காலையில் எழுந்திருந்து குளித்து விபூதி ருத்திராக்ஷங்கள் தரித்து சிவநாம சங்கீர்த்தனம்பாடி சிவக்ஷேத்திரங்களில் தரிசனம் செய்து, பகல் சமயம் யாதொரு ஆகாரமும் சாப்பிடாமல் திரிஸந்தியா சமயமாகிய மாலை நேரத்தில் பிரதோஷ சமயம் அதாவது சூரியன் அஸ்தமித்துப் பகலும் இரவுமாய் சந்திக்கின்ற சமயத்தில் குளித்து சிவக்ஷேத்திர தரிசனம், பூஜை, நைவேத்தியம் முதலியவைகளைச் செய்தும், செய்வித்துப், உச்சிஷ்டம் அதாவது நைவேத்தியம் செய்துள்ளதைச் சாப்பிட்டும் தூங்குகிறார்கள். சிவராத்திரி விரதமென்பது வருஷத்தில் ஒன்றே இருக்கிறது. அன்றைய தினம் காலையில் எழுந்து குளித்து, விபூதி, உருத்திராக்ஷம் முதலியதுகள் தரித்தும், சிவநாம சங்கீர்த்தனம் செய்தும், சிவக்ஷேத்திரத்திற்குச் சென்று தரிசனம், பிரதக்ஷணம் முதலி

யவைகளைச் செய்தும், பகலில் பூராவும் நிராகாரனாய் அதாவது ஆகாரமின்றி சயன பிரதக்ஷணம் அதாவது கண்கட்டிப் படுத்து உருண்டு க்ஷேத்திரத்தை வலம் சுற்றி வருகிறது முதலியதுகள் செய்து இரவு சிவபூஜைக்குப் பிறகு, அபிஷேகம் செய்துள்ளதை மாத்திரம் புசித்தும், சிலர் பலவிதமான பலகாரங்கள் புசித்தும், ஓரோரு புராணங்கள் வாசித்தும், பலவிதமான ஆட்டங்களாடியும், மற்றும் அன்றிரவு முழுவதும் தூங்காமல் சூரிய உதயம் வரை தூக்கம் வராத விதத்தில் என்னென்னவோ செய்து வருகிறார்கள்.

கு: இவ்வித விரத தினங்களில் இப்படிச் சொல்லிய பிரகாரமாயுள்ள தொழில்களல்லாமல் வேறே ஏதேனும் தொழில்களையும் செய்கிறதுண்டா?

சி: அவரவர் பிரதி தினம் செய்கிற எல்லாதொழில்களையும் செய்கிறதுண்டு.

கு: ஆனால் மேல் சொல்லிய தினங்களில் அரிசி முதலிய சில தானியங்களை நீக்கி, மற்றுள்ள பொருள்களைக் கொண்டு உண்டாக்கிய உணவினைத் திருப்தியாகப் புசித்து பிரதி தினமும் நடத்தி வருகிற தொழில்களும் செய்தால் மோக்ஷம் கிடைக்குமானால், சில பிரதேசங்களில் பிரதி தினம் கோதுமை, சோளம், கம்பு, சாமை, கேழ்வரகு, இவை முதலியதுகளால் செய்த உணவுகளைப் புசித்துத் தினம் செய்யும் தொழில்களைச் செய்து வருகிறவர்களெல்லாருக்கும் மோக்ஷம் கிடைக்கவேண்டியதல்லவா? ஆனால் இவ்வித விரதங்களை அந்த விஸ்வாசத்துடன் அதாவது குருட்டு நம்பிக்கையுடன் அனுஷ்டித்து, யாதொரு ஆலோசனையுமில்லாமல் ஜனங்கள் அவனவனிலிருக்கின்ற பிராணனை அதோ கதியாக்கி நாசம் செய்கின்றதல்லாமல், உண்மைத் தத்துவத்தைத் தெரிந்து அவருக்கு மோக்ஷம் கிடைப்பதற்குள்ள மார்க்கத்தைப் பார்க்காமலும் நசித்துப் போகின்றார்கள்.

ஆனால் ஏகாதசி விரதமென்பது என்னவென்றால் தன்னிலிருந்து தசேந்திரியங்களின் வழியாக வெளியினுள்ளில் வியாபிக்கின்ற சக்தியைத் தன்னிலேயே ஒன்றாக்கி நிறுத்துகிறதாகும். அதென்னவென்றால் கண்களால் பார்த்து அறிகிறதும், செவிகளால் கேட்டு அறிகிறதும், மூக்கினால் முகர்ந்து அறிகிறதும், நாவினால் ருசித்து அறிகிறதும், தொக்கு அதாவது தோலினால் தொட்டு அறிகிறதும், வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் இவைகளினுடைய தொழில்களை அறிகின்றதுமாகிய மனோசக்தியை, தன்னிலேயே ஒன்றாக்கி நிறுத்துகின்றதாகும் ஏகாதசி விரதம். ஆனால் இவ்வகைத் தொழில்களை அறிகின்ற அறிவு எதுவென்றால், தன்னிலிருக்கின்ற ஜீவசக்தி முன்

சொன்ன வாக்கு முதலான ஐந்து இந்திரியங்களின் மூலம், மேல்சொன்ன கண் முதல் ஐந்து துவாரங்களின் வழியாய் வெளியினுள்ளில் வந்து அறிகின்ற அறிவு எதுவோ அதுவே யாகும். எப்படியென்றால் நாம் கண் முதலியவைகளைக்கொண்டு அறிகின்ற அறிவும், கை, கால் முதலியவைகளைக் கொண்டு செய்கின்ற தொழில்களும் உண்டாவதற்குள்ள காரணம், இப்பொழுது நாம் தூக்கமென்று சொல்லுகிற நிலைமையிலிராமல் தொழிலாகிய சொற்பனத்திலிருக்கின்றதினாலாகும். எப்பொழுது தொழிலென்கிற சொற்பனத்தை விட்டு தூக்கமென்கிற நிலைமையிலிருக்கின்றோமோ அச்சமயத்தில் மேற்சொன்ன தசேந்திரியங்களைக் கொண்டு யாதொரு அறிவோ, தொழிலோ, உண்டாவதில்லை. அறிவிற்குத் தசேந்திரியங்கள் உத்திரவாதியல்ல. மனமாகும் உத்திரவாதி. அந்த மனம் உண்டாவதற்குக் காரணம் மேல்சொன்ன செவி, கண், முதலிய ஐந்துவித துவாரங்களின் வழியாக ஜீவ சக்தியாய், கர்மமாயிருக்கின்ற வாயு வெளியினுள்ளில் பிரவேசிக்கிறது கொண்டாகும். அது நிமித்தமாகும் மேற்சொன்ன ஐந்திற்கும் கர்மேந்திரியங்கள் என்று பெயர். அதாவது கர்மமாயிருக்கின்ற வாயுவிற்கு வெளியினுள்ளில் போகவும், வரவும் உள்ள வழியானதனால் அதற்குக் கர்மேந்திரியம் என்றும், அப்பிரகாரம் வெளியினுள்ளில் கர்மமாயிருக்கின்ற வாயுவோடு கூடி சலித்துக்கொண்டிருக்கும் மனதினுடைய உத்பத்தி ஸ்தானமாகிய பிரமரந்திரத்தில், ஜீவ சக்தியாகி சலித்துக்கொண்டிருக்கிற வாயுவை அசையவிடாமல் நிறுத்துகின்றதாகும் ஏகாதசி விரதம்.

சி: சுவாமி! இந்த ஐந்து துவாரங்களுக்கு ஞானேந்திரியங்கள் என்றும், வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் இவைகளுக்கு கர்மேந்திரியங்கள் என்றும் உலகத்தார் சொல்லி வருகிறார்களே! இப்பொழுது சுவாமி சொல்லுவது விபரீதமாயிருக்கிறதல்லவா?

கு: ஏன்; மெய், வாய், கண், மூக்கு, செவி இவைகளுக்கு ஞானேந்திரியங்கள் என்றும், வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் இவைகளுக்கு கர்மேந்திரியங்கள் என்றும் சொல்லக் காரணம்?

சி: மெய், வாய், கண், மூக்கு, செவி, இவைகளினால் தொட்டறிகிறதும், ருசித்தறிகிறதும், பார்த்தறிகிறதும், முகர்ந்து அறிகிறதும், கேட்டறிகிறதும் என்று இவ்வண்ணம் அறிகிறதினால் இவைகளுக்கு ஞானேந்திரியங்களென்றும், வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் இவைகளால் கர்மங்

களைச் செய்கிறதனால் கர்மேந்திரியங்களென்றும் சொல்லு கிறது.

கு: ஆனால் கர்மம் என்பது என்னவென்று நீங்கள் எண்ணி யிருக்கிறீர்கள்?

சி: கர்மம் என்பது உலகத்தில் தொழில் என்று கருதி வந்தது தவறென்றும், கர்மம் என்பது ஒரு வஸ்துவென்றும், அது வாயுவாகும் என்றும் இப்பொழுது தெரிந்து கொண்டேன்.

கு: ஆனால் மெய், வாய், கண், மூக்கு, செவிகள் முதலா னவைகளினால் ஞானம் உண்டாகின்றதில்லை. அது ஞானத் திற்கு அதிகாரமுடையதல்ல. அது புறமாகிய அதாவது வீடாகிற இந்த ஜடத்தின் கதவுகளும், ஜன்னல்களுமாகும். அக்கதவுகளின் வழியாகக் கர்மமாய் ஜீவசக்தியாயிருக்கின்ற வாயு, பரமாத்மாவாய் மனசாகின்ற விஷ்ணுவிற்கு, வெளிக் குள்ளில் போக்குவரவிற்குள்ள மூக்கு, வாய் முதலான கதவு களும், கண், செவி, முதலான ஜன்னல்களும் ஆகும். அதனால் அவைகளுக்கு யாதொரு பொறுப்பும், அறிவுமில்லை. தவிர வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் இவைகள் என்ன வென்று நீங்கள் எண்ணியிருக்கிறீர்கள்?

சி: அவைகள் நாக்கு, கைகள், கால்கள், குதம் (அதாவது மலத்துவாரத்துடன் சேர்ந்தது), உபஸ்தம் பெண்குறி அதாவது பெண்கள் மூத்திர துவாரம் இவைகள் என்றுகும் உலகத்தார் சொல்லி வருகிறார்கள்.

கு: ஆனால் இதெல்லாம் தவறு. இவைகளெல்லாம் தொழில் செய்வதற்குள்ள ஆயுதங்களும், இடங்களும் ஆகும். என்னவென்றால் நவத் துவாரங்களும், ஐந்து இந்திரியங்களும், சகல ஜீவ ஜாலங்களுக்கும் இருக்கிறது. நீர் சொன்னபடி இருக்குமானால் ஸ்திரீகளுக்கும், புருஷன்மார்க்கும் இது காணுவதில்லை. ஆனால் நவத் துவாரத்தைப்பற்றி இதில் முன்பே சொல்லப்பட்டிருக்கிறது. அதில் லிங்கம் என்பது மூத்திர துவாரம் அல்லவென்றும், அது ஈஸ்வர லிங்க மென்றும், அது நவத் துவாரத்தில் பட்டதில்லை யென்றும், நவத் துவாரம் இன்னின்னவைகளாகுமென்றும், சொல்லி யிருக்கிறதல்லவா? அந்த லிங்கம் ஆணுக்கும், பெண்ணுக்கும் இருக்கிறதென்று சொல்லி யிருக்கிறதல்லவா? இப்பொழுது நீர் சொல்லியது வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் என் பதில், பாயு என்பது குதம் என்றும், உபஸ்தம் என்பது பெண் குறி அதாவது ஸ்திரீகளுடைய மூத்திர துவாரம் என்றும் ஆகும். அப்படிப் பார்க்கும்போது நவத்துவாரத்தில் பட்ட குதத்திற்குத்தான் கர்மேந்திரியத்தில் பட்ட பாயு என்று

சொல்லுகிறது. அதுபடி ஒருபோதும் வருவதற்கில்லை. என்னவென்றால் இரண்டு பேர் உண்டாகும்போது இரண்டு பொருளும் உண்டாகவேண்டும். ஏனென்றால் குதத்திற்குள்ள தொழில் வேறும், பாயுவிற்குள்ள தொழில் வேறும் ஆகும். அப்பொழுது இரண்டிற்கும் வேறு வேறு தொழிலானது கொண்டு இரண்டிற்கும் இரண்டு பொருளுண்டாயிருக்க வேண்டும். ஆனால் பாயுவை நாம் பார்ப்பதும் இல்லை. உபஸ்தம் பெண்களுக்கு உரியதானால் நமக்கு இல்லையே? அப்பொழுது நமக்கு பஞ்சேந்திரியங்களில் பாயுவை நாம் பார்ப்பதற்கு முடியாது. உபஸ்தம் நமக்கு இல்லை. அப்படி வருவதற்கு வழியுண்டா? ஆனால் பஞ்சேந்திரியங்கள் இன்னின்னவைகள் என்று உலகோருக்குத் தெரிகிறதில்லை. அது நீங்கள் கூறியதல்ல. அது என்னவென்றால் குதம், உபஸ்தம், லிங்கம் இதுகள் கோப்பியம் அதாவது ரகசியமாயிருக்கிறதென்று உலகத்தில் சொல்லுகிறது. அது இப்பொழுது உலகத்தில் சொல்லி வருகிறதான ஆண் குறியான புருஷர்க்குள்ள மூத்திர துவாரம் லிங்கம் என்றும், பெண் குறியான ஸ்திரீகளுக்குள்ள மூத்திர துவாரம் உபஸ்தம் என்றும், உலகத்தில் சர்வஜீவிகளுக்கும் மல விசர்ச்சனம் அதாவது மலங்கழிக்கும் மலத் துவாரத்துக்குக் குதம் என்று சொல்லிவருகிறது. அது ரொம்பவும் தப்பிதம். ஏனென்றால் இதுகள் ரகசியமாயிருப்பவையல்ல. பரசியம் அதாவது வெளிப்படையாய் பார்த்துக் கொண்டிருக்கிறதாகும். இதுகளை இப்பொழுது ரகசியம் என்றும் சொல்லிவரக் காரணம் வஸ்திரம் அதாவது துணி கட்டி மறைத்து இருப்பதனல். மறைத்துவைத்திருக்கிறதனல் ரகசியமல்ல. ஏனென்றால் நாம் ஜனித்தபொழுது மறைவில் இல்லை. அப்பொழுது பரசியமாய் அதாவது வெளிப்படையாய்த்தானிருக்கிறது. அதை 4, 5 வயதிற்குப் பிறகுதான் வஸ்திரம் அதாவது துணி முதலானதுகளால் மறைத்து வைத்தது. அதனல் இப்பொழுது சொல்லி வருகிறதல்ல மேல்சொன்னவைகள். ஆகையினல் மேல்சொன்னவைகள் ஜனித்தபோதே இரகசியமுள்ளதாகும். அது என்னவென்றால் விவரித்துச் சொல்லுவோம்:—வாக்கு என்று சொன்னது சப்தமும், பாணி என்று சொன்னது பரமாத்மாவாயிருக்கின்ற மனசாகிற விஷ்ணுவிற்கு உள்ள நான்கு கைகளாகும். இந்தக் கைகளில் நான்கு ஆயுதங்கள் தாங்கியிருக்கிறர். அதாவது சங்கு, சக்கர, கதா, பத்மம் ஆகும். அதில் சங்கினல் ஆன உபயோகம் என்ன?

சி: சப்தம்.

கு: சக்கரத்தினல் உள்ள உபயோகம் என்ன?

சி: சத்துருக்களை அழிக்க.
கு: கதையினாலோ?
சி: அதுவும் சத்துருக்களை அழிக்க.
கு: பத்மத்தினாலோ?
சி: அது அலங்காரத்திற்காகவே பிடித்திருக்கிறார்.
கு: ஆனால் நீர் சொன்ன பிரகாரத்தில் அல்ல அவைகள் நிலைமை. சப்தத்தைக் கேட்பதற்கும், உண்டாக்குவதற்கும் உள்ளது காது. அந்தக் காதாகும் பரமாத்மா யிருக்கின்ற மனசாகின்ற விஷ்ணுவிற்கு ஒரு கை. சக்கரம் என்பது சுற்றிக் கொண்டிருப்பது. அது நம்முடைய கண் ஆகும். அது மனசாகும். அந்த மனசு சுற்றிக்கொண்டிருப்பதனால் பல விதமாகப் பார்க்க வழி உண்டானது. கதை என்று சொன்னால் கதிச்சுக்கொண்டிருப்பது. அதாவது நடனம் செய்துகொண்டிருப்பது. அது என்னவென்றால் நமது ஜீவசக்தியா யிருக்கின்ற வாயுவாகும். அதற்குப் போக்குவரத்துக்கு உபயோகமாயிருக்கின்றது மூக்கு. அந்த மூக்காகும் பரமாத்துமாவாயிருக்கின்ற விஷ்ணுவிற்கு மற்றொரு கை. பத்மம் அதாவது ஜீவசக்தியா யிருக்கின்ற வாயு வெளியில் வந்த பொழுது நாம் என்றுள்ள அகங்காரமாகிய தாமரை உண்டானது. அதாவது அக்ஷரமாயிருக்கின்ற தானே ஆகாசமானபோது, அது தாமரையாயிருக்கின்ற இருதய கமலமாகும். அது வாயின் வழியாகவே ஆகும். அதாகும் பரமாத்துமாவான விஷ்ணுவிற்கு வேறொருகை. பாணி என்று சொன்னால் பரமாத்துமாமான சக்தியாய் தீர்ந்தது. அப்போது மேல் சொன்ன நான்கு கைகளாய் பரமாத்மாவா யிருக்கின்ற மனது வெளியினுள்ளில் வியாபித்திருக்கிறது. பாதம் என்பது சொஸ்தானம் அதாவது சொந்த இடம். பாயு என்றால் ஊத்து உண்டாகிற இடம். அதாவது ஊறுகிற இடம். உபஸ்தம் என்றால் உபஸ்திதி செய்கிறது. அதாவது உப+ ஸ்திதி. உப=சேர்ந்தது. ஸ்திதி ஸ்திரமாயிருக்கிறது. அது எதனோடென்றால் லிங்கத்துடன் ஸ்திரமாய்ச் சேர்ந்திருக்கின்றது. அந்த லிங்கத்திற்கே ஈஸ்வரலிங்கமென்று பெயர். அது நம்முடைய புருவமத்தியில் இருக்கின்றதாகும். அந்த லிங்கம் இருப்பது உபஸ்தத்தில் ஆகும். அதனாற்றான் உபஸ்தம் என்று சொல்லக்காரணம். உபஸ்தம் என்பது யோனி. அந்தயோனி உத்பத்திஸ்தானம். அந்த உற்பத்தி எங்கேயிருந்துண்டாகிறது என்றால் ஸ்திரீகளினுடைய மூத்திரத் துவாரத்திலிருந்தல்ல. அந்த மூத்திரத் துவாரம் வெளியில் வருவதற்குள்ள ஒரு வழியாகும். யார் வருவதற்கென்றால் குழந்தை வருவதற்கு. அந்த குழந்தை எங்கே

பிருந்தது என்றால் அப்பெண்களின் வயிற்றில். பெண்களின் வயற்றில் குழந்தை இல்லையென்றால் வெளியில் வருவதற்கு முடியாது. ஆகையினால் அது உற்பத்தி ஸ்தானம் அல்ல. அந்த குழந்தை வயற்றில் உண்டாக வேண்டுமானால் என்ன வேண்டும் என்றால் சுக்கில சுரோணிதம் உண்டாயிருக்க வேண்டும். அந்தச் சுக்கில சுரோணிதம் எங்கிருந்து உண்டா இன்றதென்றால் ஆண், பெண் சேர்க்கையிலிருந்து உண்டா கிறது. அந்தச் சேர்க்கையின் நிமித்தம் உண்டாகிற சுக்கிலம் பிரம்மமாகும். அந்த பிரம்மமாயிருக்கின்ற சுக்கிலம் ஸம் போகம் நிமித்தம் நரகத் துவார வழியாய் கும்பிபாக நரகத்தில் சென்று விழுவதற்கும், அந்தக் கும்பிபாக நரகத்திலிருந்து வெளியில் வருவதற்குள்ள நரகக் கதவாகும் ஸ்திரீகள் சம்போக ஸ்தலம். அதாவது பெண் குறி என்று சொல்வது. அது எப்படியென்றால் லிங்க மூலத்திலிருக்கின்ற பிரம்ம சொரூப மாயிருக்கின்ற சுக்கிலம் சம்போகம் நிமித்தம் மேல் சொன்ன பிரகாரம் உண்டாகின்றது. அதற்கொரு உதாரணம்:—நீர் சிவன்கோவிலில் போயிருக்கிறீர் அல்லவா?

சி: ஆம்; போயிருக்கிறேன்.

கு: அந்தச் சிவன் கோயிலில் என்ன இருக்கிறது?

சி: சிவலிங்கம் இருக்கிறது.

கு: அது எதிலிருக்கிறது.

சி: அது கோயிலுக்குள்ளில் கல்லினால் ஒரு பீடம் செய்து, அந்தப் பீடத்தில் யோனி வடிவில் ஒரு குழி உண் டாக்கி, அந்தக் குழியில் லிங்கத்தை ஸ்தாபித்திருக்கிறது.

கு: அப்போது லிங்கம் எவ்விடம் இருக்கிறது?

சி: யோனியில் இருக்கிறது.

கு: அப்பொழுது லிங்கம் யோனியில் இருப்பதனால் தான் அதற்கு உபஸ்தம் என்று சொல்லக் காரணம். அப்படி யிருக்கின்ற லிங்கத்தின்மேல் என்னவோ அபிஷேகம் செய்த தானால் * அந்தத் திராவக ரூபமான பொருள் எவையானாலும் அது ஊறிவருகிற இடம் மேல் காட்டியபடி பாயு என்றும், அது கீழே குதிக்கிற இடம் குதம் என்றும் பெயர். அது எவ்விடமிருந்து என்றால் ஸ்தானத்திலிருந் தாகும். அதாவது பாதத்திலிருந்து. ஆகையினால் வாக்கு, பாணி, பாதம், பாயு உபஸ்தம் என்பவைகள் இவைகளாகும். இவைகள் ஞானேந்திரியங்களாகும். அதாவது பாதம் என்ற சொஸ்தானத்திலிருந்து பரமாத்மாவாய் விஷ்ணு, மனச் சக்தி யாய் நான்கு கைகளாய் வெளிக்குள்ளில் பாயு என்ற இடத்தி லிருந்து ஊறிக் குதத்தின் வழியாக வெளியே வருவதனால் அந்த நான்கு கைகளையும் அடக்கி ஜீவசக்தியை அந்தக் குதத்தின்

வழியாய் மேலே உத்பத்தி ஸ்தானத்தில் கொண்டுபோய் சேர்க்கும் பொழுதாகும் ஞானம் உண்டாகின்றது. அது எப்படி என்றால் காதுகளினால் கேட்டறிதற்கும், கண்களினால் பார்த்தறிதற்கும், மூக்கினால் கமித்து அதாவது போய் முகர்ந்து அறிவதற்கும், மற்றும் வழியுண்டாக்குவதுமாய், வாயினால், அகாரமாய் ஆகாசம் உண்டாக்கிப் பல பொருள் களும் உண்டாக்கித் தீர்க்கின்றதுமாகிய நான்கு வழிகளின் வாயிலாக வெளிக்குள்ளில் விடாமல், தன்னுள்ளில் ஆந்திரிய மாய்க் கிடக்கின்ற, குதம்மார்க்கமாய் அதாவது தன் உள்வழி யாய்த் தன்னுடைய உத்பத்தி ஸ்தானத்தைச் சென்று சேர்ந்த பொழுது நமக்கு ஞானம் உண்டாகின்றது. அதாவது முன் சொன்ன நான்கு கைகளும் வெளிக்குள்ளில் போக இட மில்லாமல் தனக்குள்ளே அடங்கும்போது தான் ஞான முண்டாகிறது. அதற்குத்தான் ஞானேந்திரியம் என்று பெயர். இதல்லாமல் நீர்சொன்னதான நாவு, கை, கால், குதம், மூத்திரத் துவாரம் இவைகள் ஐந்தும் கர்மேந்திரியமோ, ஞானேந்திரியமோ அல்ல. அவைகள் எல்லாம் தொழில் செய்வதற்குரிய ஆயுதமும் இடமுமாகும். அப்படியிருக் கின்ற மனம் அதனுடைய சொஸ்தானத்தில் ஸ்திதி செய் கின்றதாகும். அதாவது நிலைநிற்கின்ற தாகும். அவ்விதம் ஸ்திதிசெய்கின்ற அதாவது நிலை நிற்கின்ற மனதிற்காகும் விஷ்ணுவென்று சொல்லுகிறது. அந்த விஷ்ணு அனந்த சயனனாயிருக்கிறது. அனந்தசயனனென்றால் ஆதி, அந்தம், அதாவது அடி, முடி, அகம், புறம், அதாவது உள்-வெளி, இந்த நிலைமைகளில்லாமலிருக்கிற பதவியாகும். அதானது தன்னிலிருந்து சலித்துக் கொண்டிருக்கின்ற மனம் சலன மில்லாமல் சொஸ்தானத்தில் லயிக்கின்ற நிலைமையாகும். இதற் காகும் ஏகாதசி விரதம் அனுஷ்டித்தால் விஷ்ணு பதம் பிரா பிக்கும் அதாவது அடையலாமென்று சொல்லக் காரணம்.

பிரதோஷமென்பது திரயோதசி கூடிய தினமாகுமென்று சொல்லுகிறது. ஆனால் அதனுடைய உண்மை; தசேந்திரியங் களுடன் தன்னுடைய சக்தி, சத்துவ, ரஜோ, தமோ குணங் களாகி வெளியினுள்ளில் வியாபிக்கிறதை முன் சொன்ன மூன்று குணங்களோடு கூடி அந்தரங்கத்தில் அதாவது உள்ளில் ஜீவனாகிய சிவனோடு ஐக்கியப்படுகிறதாகும். சிவராத்திரியும் அந்தப் பிரகாரம் தானே பாகியத்தில் அதாவது வெளியி னுள்ளில் மூன்று விதமாய் மாயையில் பிரகாசித்த பிரகாசம், அந்தரங்கத்தில் அதாவது உள்ளில் ஜீவனாகிய சிவனோடு ஐக்கியப்படுகிறதாகும். இந்தப் பிரகாரத்திலாகும் விரதங்களி னுடைய நிலைமை. இதல்லாமல் சிவராத்திரி வருஷத்தில்

ஒன்றே யாகும். அது சிவனுடைய ராத்திரியென்றுகும் சொல்லுகிறது. ஆனல் வருஷத்தில் இரவும் பகலுமாக 365 தினங்களுண்டு. அதில் ஒரு தினத்தின் ராத்திரி மாத்திரம் சிவனுக்கிருக்கிறதென்றும், பாக்கியெல்லாம் பகலாகுமென்றும் ஒருக்காலும் நம்புவதற்கிடமில்லை. ஏனென்றுல் பகல் எத்தனை சமயமோ அதாவது நேரமோ அத்தனை நேரம் ராத்திரியு முண்டாகும். இதில் 364 இரவும் பகலும் கூடிய தினம் முழுவதும் சிவனுக்குப் பகலாகியும், 365-ம் நாளாகிய ஒரு தினம் ராத்திரிமாத்திரம் சிவனுக்கு ராத்திரியாக வருவதற்குக் காரண மில்லை. இவ்வகை யாதொன்றும் ஆலோசிக்காமல் ஏகாதசி யென்றும், பிரதோஷ மென்றும், சிவராத்திரியென்றும், கேள்விப்படுவதும், சாஸ்திராதிகளை வாசித்துப் படிக்கவும் செய்து ஜனங்கள் அதனுடைய யாதொரு தத்துவமு மறியாமல் அர்த்தம் தவறுகக் கருதி ஏதேனும் சிலகோஷ்டிகள் அதாவது ஆட்டங்களைக் காண்பிக்கிருர்களென்று மாத்திரமே சொல்வதற் கிடமிருக்கிறது. ஆனல் விரதங்கள் மட்டுமல்ல; உலகமும் அதில் நடக்கிற நிலைமைகளும் தன்னுடைய சக்தி வெளியி னுள்ளில் வியாபித்து, அத்தச் சக்தியிலிருந் துண்டானதாகும். அதனுல் தன்னுடைய சக்தியை வெளியினுள்ளில் விடாமல் தன்னிலேயே லயிக்கச்செய்து, தானும் தன்மயமாயாவதற் குள்ள மார்க்கத்தை அதாவது வழியைக் கண்டறிந்து, அந்த மார்க்கத்தில் கூடி தன்னுடைய சக்தியை முன் சொன்ன விதம் லயிக்கச் செய்து, தானும் தன்மயமாயிருக்க வேண்டிய தாகும். இதற்காகும் மோக்ஷமென்று சொல்லுகிறது. இதல்லாமல் நீர்சொன்ன பிரகாரம் ஏகாதசி முதலிய பல விரதங்களையும் அனுஷ்டித்து தன்னுடையநித்திய ஆகாரங்களை விட்டும் வழக்கமாய்ச் சாப்பிடும் நேரம் தவறி, ஏதோ சில பலகாரங்களைத் தின்று வயிற்றை நிறைத்து விரதமாகு மென்றும் சொல்லி யாதொரு பலனடையாமலும், யாதொரு தத்துவமுமறியாமலும் தன்னுடைய சக்தி அதோகதியாய் நசித்துப்போவதற்கும் இடமாகிறது.

சி: விரதங்களைப்பற்றி இவ்விதமென்றுல் க்ஷேத்திரங்களில் உபவசிப்பதைப் பற்றி என்னவாகும் தாங்கள் கற்பிப்பது?

கு: க்ஷேத்திரங்களில் உபவசிக்கிற தென்று நீர்சொன்னீ ரல்லவா? ஆனல் க்ஷேத்திரம் எத்தனை உண்டு? உபவாசம் என்ன வாகும்?

சி: அநேக க்ஷேத்திரங்கள் உண்டு. அவைகளில் ஆகார மில்லாமலிருக்கிறது உபவாசமென்று சொல்லுகிறது.

கு: அந்தக்ஷேத்திரங்கள் எவை எவை என்று நீர் சொல்லுவீர்?

சி: சிவக்ஷேத்திரம், விஷ்ணு க்ஷேத்திரம், கணபதி க்ஷேத்திரம், சுப்பிரமண்ய க்ஷேத்திரம், ஐயன் க்ஷேத்திரம், பகவதி க்ஷேத்திரம் முதலான அநேக க்ஷேத்திரங்களுண்டு.

கு: நீர் அநேக க்ஷேத்திரங்கள் சொன்னீரல்லவா? அவ்வகை க்ஷேத்திரங்களில் என்னவாகும் உள்ளது?

சி: அங்கே சங்கற்பித்துப் பிரதிஷ்டை செய்துள்ள ஈஸ்வரர்களிருக்கின்றன.

கு: அங்கு என்ன பிரதிஷ்டித்திருக்கிறது?

சி: பிம்பங்கள்; அதாவது விக்ரஹங்களுண்டாக்கி அதை ஈஸ்வரராகு மென்று சங்கற்பித்துப் பிரதிஷ்டித்திருக்கிறதாகும்.

கு: பிம்பங்கள் எவைகளைக் கொண்டாகும் உண்டாக்கியது?

சி: உலோகங்கள், சிலைகள் முதலியவைகளைக் கொண்டாகும்.

கு: எந்தெந்த உலோகங்களைக் கொண்டும், சிலைகளைக் கொண்டும் பிம்பங்கள் உண்டாக்குகிறது?

சி: பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் இவைகளைக் கொண்டும், பாதாள அஞ்சனம், கிருஷ்ண சிலை அதாவது கருங்கல் இவைகளைக்கொண்டும், சிலது பலா, தேக்கு முதலிய மரங்களைக் கொண்டுமாகும்.

கு: உலோகங்களைக்கொண்டும், சிலைகளைக் கொண்டும், மரங்களைக் கொண்டும் ஈஸ்வரர்களை உண்டாக்குவது யாராகும்?

சி: உலோகங்களைக் கொண்டு உண்டாக்குவதில் சிலவற்றைத் தட்டானும், சிலவற்றைக் கன்னானும், சிலைகளைக் கொண்டுள்ளதை கற்கொத்தனும் மரங்களைக் கொண்டுள்ளதை தச்சனுமாகும்

கு: அப்பொழுது ஈஸ்வரனோ முதலிலுண்டானது அல்லது ஈஸ்வரனைமேல் சொல்லிய விதம் உண்டாக்கியவரோ முதலிலுண்டானது?

சி: ஈஸ்வரனுகும் முதலிலுண்டானது.

கு: ஈஸ்வரனுகும் முதலிலுண்டானதென்றால் மேல் சொன்னவர்கள் எப்படி, எவ்விதத்தில் ஈஸ்வரனை உண்டாக்கியது? தவிர மேல்சொன்ன கூட்டத்தாரில்லையானுல் நமக்கு ஈஸ்வரனைப் பூஜிப்பதற்கு முடியாதல்லவா?

சி: இதைப்பற்றி ஆலோசிக்கும்பொழுது தட்டான், கன்னன் முதலியவர்களாகும் முதலிலுண்டானவர்களென்று வருகிறது.

கு: இது நமக்கு ஈஸ்வர சேவை செய்வதற்காக அவர்களே உண்டாக்கி ஏற்படுத்திக் கொடுத்ததாகுமா?

சி: அப்படியல்ல. பக்தர்களான ஜனங்கள் இவ்விதத்தில் உண்டாக்குவித்துப் பிராம்மணரைக் கொண்டு பிரதிஷ்டிப்பிக்கின்றதாரும்.

கு: அப்பொழுது ஈஸ்வரன் உண்டாகிறதற்கு முன்பே மேல்சொன்ன தட்டான் முதலிய வேலைக்காரர்களும் பக்தர்களும், பிராம்மணர்களும் உண்டாயிருந்தார்களென்று வருகிறது. அதல்லாமல் பிராம்மணராகும் பிரதிஷ்டிக்கின்றதென்று சொன்னீரல்லவா? அவர் ஈஸ்வரனைப் பிரதிஷ்டிப்பது எவ்விதமாகும்?

சி: க்ஷேத்திரங்களில் ஸ்ரீகோவிலினுள்ளில் அதாவது மூலஸ்தானத்தில் அஷ்டகந்தம் இடித்தரைத்துச் சேர்த்த கூட்டு அதாவது சேர்க்கையில் முன் சொன்ன விக்கிரகங்களை வைத்துக் கெட்டிப்படுத்தி அதில் பிராணப் பிரதிஷ்டைசெய்து, பூஜை நைவேத்தியம் முதலியது செய்து வருகிறது இவ்விதமாகும்.

கு: இவ்விதம் பூஜை நைவேத்தியம் முதலியவைகள் செய்கிறதை அந்தப் பிம்பம் அறிகிறதோ, புசிக்கிறதோ செய்கிறதுண்டா?

சி: உண்டென்றுதான் நம்பிக்கை.

கு: இதுவரை மேல்சொன்ன பிரகாரம் நிவேதித்த ஆஹாரப் பொருள்களை ஒரு பிம்பம் புசித்ததாய் நீர் கேட்டதோ, கண்டதோ, அறிந்ததோ உண்டா?

சி: நான் கேட்டதும், கண்டதும், அறிந்ததும் இல்லை.

கு: அந்தப் பிம்பம் ஏதேனும் சப்திக்குமோ?

சி: யாதொன்றும் சப்திக்கவில்லை.

கு: அதல்லாமல் மரத்தின் துண்டாயிருந்தது ஈஸ்வரனென்றால் இக்காணுகின்ற தூணும், குத்துகிற உரலும், உலக்கையும் ஈஸ்வரனல்லவா? நீர் அவைகளையும் பஜனை செய்யவேண்டியதல்லவா? அதாவது ஓரே மரத்தினுடைய ஒரு துண்டுகொண்டு ஈஸ்வரனையும், மற்றொரு துண்டுகொண்டு உரலினையும் வேறொரு துண்டுகொண்டு உலக்கையையும் உண்டாக்கியதாகும். அதனைப் பஜனை செய்தும், பூஜிக்கவும், தொழவும், அதாவது கும்பிடவும் வேண்டியதல்லவா? அந்த மூன்று வஸ்துக்களையும் மரத்துண்டு கொண்டுண்டாக்கியது ஒருவன்தானே யல்லவா? நீர் என்ன காரணத்தால் உரலையும், உலக்கையையும் மேல்சொன்ன பிரகாரம் செய்கிறதில்லை?

சி: அது ஒரு உருவமாய் உண்டாக்கப்படவில்லை.

கு: அப்பொழுது ஈஸ்வர உருவத்தை உண்டாக்கியது ஆசாரியாகுமென்று வருகிறது. ஆனால் ஈஸ்வர உருவத்தை

உண்டாக்கிய ஆசாரியை யல்லவா பூஜிக்கவேண்டியது?

சி: ஆசாரி மேல் சொன்ன ஈஸ்வர உருவத்தை உண்டாக்கியதென்று மாத்திரமே இருக்கிறது. அதற்கு வேண்டியதான பிராணப் பிரதிஷ்டை, பூஜை, நைவேத்தியம் முதலிய துகளைச் செய்து நிலைநிறுத்தியபொழுது மாத்திரமே, அதற்குச் சக்தியுண்டாயிருந்தது.

கு: அவ்விதம் செய்தது யாராகும்?

சி: பிராம்மணராகும்.

கு: ஆனால் அந்தப் பிராம்மணரைப் பூஜித்தால் போதாதா? மரம், கல், உலோகம் முதலியவைகளைக் கொண்டு உண்டாக்கிய பாவைகளை, அதாவது பொம்மைகளைப் பஜிக்கவேண்டுமா?

சி: சுவாமி! அந்தப் பிரதிஷ்டைக்கு யாதொரு சக்தியுமில்லை என்று சொல்லுகிறீர்கள்?

கு: ஆம்! ஏனென்றால் பிராணப் பிரதிஷ்டையென்று சொன்னால் பிராணனை ஸ்தாபிப்பது அல்லது நிலைநிறுத்துவது என்று அர்த்தமாகும். பிராணனென்பது தன்னில்தானேயிருக்கிற வஸ்துவாகும். அப்படி தன்னுள்ளிலிருக்கின்ற பிராணனை உலோகங்களைக் கொண்டோ மற்றோ உண்டாக்கியதான பொம்மைகளில் பிரதிஷ்டித்ததென்றதானால் அது, பிரதிஷ்டித்தவருடைய பிராணன் அச்சமயம் அவரிலிருந்து நசித்துப் பிணமாயிருக்க வேண்டும். அந்தப் பிரகாரம் பிராணப் பிரதிஷ்டை செய்தயாராகிலும் தற்சமயம் பிணமாய்ப் போயிருக்கிறார்களென்று கேட்டதோ, கண்டதோ அறிந்ததோ உண்டாயிருந்ததா?

சி: கேட்டதும், கண்டதும், அறிந்ததுமில்லை.

கு: ஆனால் தன்னுள்ளிலிருக்கின்ற பிராணனை முன் சொன்ன பொம்மைகளில் பிரதிஷ்டித்து அவைகளுக்குச் சக்தி கொடுக்கத் தக்கத்திறமையுள்ளவர் ஒருவர் உண்டாயிருந்தாரேயானால் அதிலும் எவ்வளவோ பெரிதான குணம் உலகத்தில் உண்டாவதற்கிடமிருக்கிறது. அது என்ன வென்றால் உலகத்தில் அநேக ஜனங்கள் செத்துப் போகிறார்கள். செத்துப் போகிறதென்பது பிராணன் நசிக்கிறதல்லவா? அப்பிரகாரம் பிராணன் நசித்தபொழுது முன்சொன்ன பொம்மையில் பிராணனைப் பிரதிஷ்டிப்பதற்குச் சக்தி உள்ளவருக்குச் சத்துப் போன ஜடத்தில் பிராணனைப் பிரதிஷ்டித்து அதற்குச் சக்தியைக் கொடுத்தால் எவ்வளவோ பெரிய உபகாரமாயிருக்கு மல்லவா? அதுவுமல்லாது இப்பிரகாரம் பிரதிஷ்டித்துள்ள இடத்திற்குப் போகும்பொழுது உமதெண்ணம் அவ்விடத்தில் யார் இருக்கிறதென்றாகும்?

சி: ஈஸ்வரனிருக்கிறதென்றாகும்.

கு: ஆனால், நீர் அவ்விடத்திற்குச் சென்ற பிறகு எவ்விதம் கும்பிடுகின்றீர்? என்னவாகும் கும்பிடும் சமயத்தில் உம்முடைய எண்ணம்?

சி: என்னுடைய கைகளிரண்டும் கூப்பிச்சேர்த்து எனது நெஞ்சில் வைத்துக் கும்பிட்டு "என்னுடைய ஈஸ்வரா! என்னைக் காப்பாற்றவேண்டும்" என்றாகும்.

கு: அது நீர் செய்வது மிகவும் தவறாகும். அது ஏனென்றால் கோயிலில் பிரதிஷ்டித்துள்ள அந்தப் பொம்மையாகும் ஈஸ்வரன் என்பதாயிருந்தது, நீர் அவ்விடம் போகும் பொழுதுள்ள சங்கற்பம். அந்தப் பிரகாரம் சங்கற்பித்தது கொண்டாகும் நீர் அவ்விடப்போகிறதற்கிடமாயிற்று. அப்படி சங்கல்பித்த நிலைமைக்கு "என்னுடைய ஈஸ்வரா" என்று சொல்லி அவனவனுடைய நெஞ்சில் கைகள்வைத்துக் கும்பிடுவதுகூடாது. அங்கே பிரதிஷ்டித்துள்ள பொம்மையுடைய நெஞ்சில் கைகளிரண்டும் கூப்பி வைத்துக் கோயிலினுள்ளில் பொம்மையில் பிரதிஷ்டித்துள்ள ஈஸ்வரா என்றாகும் சொல்ல வேண்டியிருந்தது. அப்பிரகாரம் செய்கிறதில்லை. 'காரணம் என்னவென்றால், உம்மில் ஈஸ்வரனில்லாவிடில் மற்றொரு இடத்தில் ஈஸ்வரனில்லை. உம்முடைய சக்தி வெளியினுள்ளில் வியாபித்து உம்மால் சங்கற்பிக்கப் பட்டதாகும். அதல்லாமல் அப்பிரதிஷ்டையில் யாதொரு சக்தியுமில்லை. ஏனென்றால் நீர் முன்சொன்ன பிராணபிரதிஷ்டை செய்தது என்று சொல்ல வேண்டுமானால், முன் சொன்ன பிம்பங்களை எடுத்து மற்றொரு சகாயமுமில்லாமல், தன்னுடைய பிராணனைக் கொண்டு மாத்திரம் நிலைநிறுத்தி, யாதொரு அசைவு மில்லாமலிருக்கவும் வேண்டியிருந்தது. அவ்விதமில்லாமல் சிமைச்சுண்ணாம்பு கொண்டோ அல்லது சிமண்டு கொண்டோ, அஷ்டகந்தம் கொண்டோ, கட்டி உரப்பித்து நிறுத்துகிறதற்குப் பிராணப் பிரதிஷ்டையென்று சொல்லக் கூடாது. அதெவ்விதமென்றால் இதோ பாருங்கள்! இங்கு நிற்கிற கதவு நிலையை யாரால் உண்டாக்கப்பட்டதாகும்?

சி: ஆசாரி உண்டாக்கியதாகும்.

கு: அதை அவ்விடம் கட்டி நிறுத்தியது யார்?

சி: அது கட்டிட வேலை செய்யும் கொத்தனாலாகும்.

கு: அதை எந்தப் பிரகாரத்தில் கட்டி நிறுத்தியது?

சி: அந்தக் கதவு நிலையை வைத்துக் கல்படுத்திச் சுண்ணாம்பு போட்டு அதிலாகும் கட்டி நிறுத்தியது.

கு: ஆனால் இக்காணுகின்ற கதவு நிலை ஒரு ஆசாரியால் உண்டாக்கப் படுவதும், கொத்தனால் கட்டி நிறுத்திய பிரகாரம் தான், பொம்மைகளை உண்டாக்குவதற்கு தெரிந்தவர் அவைகளை

உண்டாக்குவதும் கட்டி நிறுத்துவதற்குத் தெரிந்தவர் அஷ்ட கந்தத்தினலோ சீமைச் சுண்ணும்பினலோ, சிமிண்டியினலோ வைத்துக் கட்டி நிறுத்துவதும் செய்கிறார்கள். இவ்விதம் நிறுத்திய பொம்மைகளாகும் ஈஸ்வரனென்று வைத்து நாம் பஜிக்கின்றோம். அது எவ்விதமென்றால் நம்முடைய கை விரல்களைச் சேர்த்து குழியாகப் பிடித்து நிறைய பாயசம் விட்டுப்பிடித்தால், அந்தப் பாயசத்திலிருந்து நீர், கை விரல்களினுடைய ஐந்து சந்துகளின் வழியாய் புறங்கைத் தண்டையின் மேல் கூடி முழங்கை வரை ஒழுகிக் கொண்டிருக்கிறது. அந்த நீரை நக்க வேண்டுமென்று நினைத்துக் கையைக் கவிழ்த்துப் பிடித்துப் புறங்கைத்தண்டையின் மேலே ஒழுகுகிற நீரினை நக்கும்போது கையிலிருந்த பாயஸம் போய்விடுகிறது. மறுபடியும் நக்குவதற்கு நினைத்தால் நீரில்லை. காரணம்? பாயசத்திலிருந்தாகும் அந்த நீர் ஒழுகியிருந்தது. அந்த நீரை மோகித்து; பாயஸத்தைப் பாராமல் புறங்கையிலொழுகிய நீரை நக்கியபொழுது, அந்த நீர் ஒழுகிக்கொண்டிருந்த பாயசம் போய்விட்டதன் நிமித்தம் பாயஸத்தினுடைய ருசி அறியவில்லை. நீரொழுகிக்கொண்டிருந்த பாயஸத்தையே முதலில் புசித்திருந்தால், நீர் ஒழுகவோ, பாயஸம் போய்விடவோ இல்லாமலாயிருந்தது. இதேபிரகாரம்தான், அவனவனி லிருக்கின்ற ஈஸ்வரனை உபேக்ஷித்து அதாவது விட்டு விட்டு, பிரதிஷ்டையாகிய பொம்மையை ஈஸ்வரனென்று சங்கற்பித்து நம் உள்ளிலிருக்கின்ற ஈஸ்வர சக்தியை ஐந்து துவாரங்களான பஞ்சேந்திரியங்களின் வழியாக வெளியினுள்ளில் ஒழுகவிட்டு நசித்துப் போகின்றோம். அது மிகவும் தப்பிதமாகும். எவ்விதமென்றால் நம்முடைய இருதய ஸ்தானமாகிய புருவமத்தியத்திலிருக்கிற ஈஸ்வரனிலிருந்தே யாகும் சக்தி ஒழுகிக்கொண்டிருக்கிறது. அவ்விதமாய் ஒழுகிக்கொண்டிருக்கின்ற சக்தியினுடைய உத்பத்திஸ்தானமறியாமல் அந்தச் சக்தியை மோஹித்து அதில் பிரமித்து மேல்சொன்ன ஈஸ்வரனைவிட்டு விடுகிறோம். ஈஸ்வரனிலிருந்து ஒழுகிக்கொண்டிருக்கின்ற சக்தியை மோகித்தது கொண்டு ஈஸ்வரனுடைய நிலைமையை அறிவதற்கு முடியாமலாய்ப் போனது. சக்தி உத்பத்தியான ஈஸ்வரனைச் சேவிக்கிறதானல் தன்னிலிருந்து சக்தி ஒழுகுவதற்கோ, ஈஸ்வரன் இல்லாமற் போவதற்கோ காரணமில்லை. ஆனல் பிராணப் பிரதிஷ்டை என்பது மேல் சொன்ன விதத்தில் ஈஸ்வரசக்தியை ஒழுகுவதற்கு விடாமல் உத்பத்திஸ்தானமான புருவமத்தியத்தில் சலிக்காமல் நிறுத்துவதாகும். அதற்காகும் "பஞ்சப் பிராண பிரதிஷ்டை" என்று சொல்லுகிறது. அவ்விதத்தில் பிரதிஷ்டித்திருக்கிறதாகும் க்ஷேத்திரமென்று சொல்லுகிறது.

அதாவது காத்திர க்ஷேத்திரமாகும். அது உடம்பாகும். அந்த க்ஷேத்திரத்திற்கு ஒன்பது வாசல்களுண்டு. இவ்விதமாகும் பிராணப் பிரதிஷ்டை. இதல்லாமல் உலோகங்களைக் கொண்டோ, மரங்களைக் கொண்டோ பொம்மைகளை உண்டாக்கிச் சீமைச் சுண்ணும்பினலோ, அஷ்டகந்தத்தினலோ, சிமிண்டினலோ கட்டி நிறுத்துவதற்குப் பிராணப் பிரதிஷ்டை என்று பெயரும் சொல்லி யாதொரு விபரமில்லாமலும், தன்னைத் தானறியாமலும் தன்னுடைய சக்தியைக் கொண்டு அங்கேயாகும், இங்கேயாகும் என்றும் மற்று பல சங்கற்பங்கள் செய்து மேல் சொன்ன சக்தியை அறியாமல் அதோகதியாகி நசித்துப் போகின்றதல்லாமல் உலகினர் க்ஷேத்ரோபவாசம் செய்கிறதில்லை. க்ஷேத்ரோபவாச மென்பது க்ஷேத்திரத்தில் உபவசிக்குக என்றாகும். க்ஷேத்திரம் காத்திர க்ஷேத்திரமாகும். உபவசிக்குக என்பது கூடியிருக்கிறதென்பதாகும். அதாவது ஜீவேசுவர ஐக்யம். அது முன் சொன்ன காத்திரக்ஷேத்திரத்தில் பிரதிஷ்டாஸ்தலமாகிய புருவ மத்தியத்தில் ஜீவன் ஈஸ்வரன் இடத்தில் ஐக்யமாயிருக்கிற நிலைமைக்காகும் க்ஷேத்ரோபவாச மென்று சொல்லுகிறது.

சி: சுவாமி! காத்திர க்ஷேத்திரமாகும் க்ஷேத்திரமென்றும் அதற்கு ஒன்பது வாசல்களுண்டென்றும் சொன்னீர்கள் அல்லவா? அந்த வாசல்களெவையாகும்?

கு: அந்த வாசல்களே நவத் துவாரங்கள்.

சி: அப்பொழுது இந்த ஜடம் முழுவதும் க்ஷேத்திரந்தானே? ஜடத்திற்கல்லவா நவத்துவாரங்களிருக்கின்றன?

கு: ஜடம்முழுவதும் க்ஷேத்திரமல்ல. ஜடத்தில் ஒரு பாகம் மாத்திரமே க்ஷேத்திரமிருக்கிறது. ஜடத்திலுள்ள எல்லாத் துவாரங்களும் நவத்துவாரத்தில் பட்டவையல்ல. நவத் துவாரங்களென்பது க்ஷேத்திரத்தினுடைய துவாரங்கள் மாத்திரமே நவத்துவாரங்களாகியுள்ளது.

சி: சுவாமி! ஜடத்தில் எந்தப் பாகமாகும் க்ஷேத்திரம்?

கு: சிரசிற்கு மாத்திரமே க்ஷேத்திரமென்று சொல்ல முடியும். அதெப்படி யென்றால் இதோ பாருங்கள் ஒரு தோட்டம். அந்தத் தோட்டத்தின் வடகிழக்கு பாகத்தில் அதாவது ஈசான கோணத்தில் மாத்திரமே க்ஷேத்திரமிருக்கிறது. மற்ற பாகங்கள் அதைச் சுற்றியுள்ள இடமாகும். இதைப் போலவேதான் ஜடத்தை உலகமாகவும், ஜடத்தினுடைய மேல் பாகம் வடக்காகியு மிருக்கிறது. அந்த மேல் பாகமான வடக்குபாகம் காணப்படுகிறது க்ஷேத்திரமாகும். அந்த க்ஷேத்திரம் சிரசாகும். அந்தச் சிரசுக்காகும் நவத்துவாரங்கள் இருக்கிறது.

சி: சுவாமி எப்படியாகும் சிரசில் மாத்திரம் நவத் துவாரங்களுண்டாயிருக்கிறது?

கு: நவத்துவாரங்களென்று சொல்வது எவை யெவைகள் என்றாகும் நீர் கருதியிருக்கின்றீர்?

சி: நவத்துவாரங்களென்பது இரண்டு செவிகள், இரண்டு கண்கள், மூக்கின் இரண்டு துவாரங்கள், ஒரு வாய், மூத்திரத் துவாரமான ஒரு லிங்கம், மலத்துவாரமான ஒரு குதம், இப்படி ஒன்பதாகுமென்று நான் கருதியிருக்கிறேன்.

கு: நீர் நவத்துவாரங்களில் லிங்கமென்பது மூத்திரத் துவாரமாகுமென்றும், குதமென்பது மலத் துவாரமாகுமென்றும் சொன்னீரல்லவா? இந்த இரண்டு துவாரங்களும் சிரசி லிருந்து வேறாகி ஜடத்தினுடைய மிகவும் கீழ் பாகத்தில் ஆகும் இருக்கிறது. பாக்கி ஏழு துவாரங்களும் சிரசில் தானாகும். நவத்துவாரங்களிலிரண்டு துவாரங்கள் மாத்திரம் சிரசிலிருந்து வேறாகி, ஜடத்தினுடைய கீழ் பாகத்தும், மற்றும் ஏழு துவாரங்கள் சிரசில்தானே வருவதற்கிடமில்லை. ஏனென்றால் லிங்கமென்பது மிகவும் சிரேஷ்டமாயுள்ளதாகும். அது நீர் மூத்திரத் துவாரமாகக் கருதியிருக்கின்றது மிகவும் தப்பித மாகும். லிங்கமென்பது சிவ லிங்கமாகும். அது மூத்திரத் துவாரமல்ல. இது ஸ்திரீ புருஷர் என்று சொல்லி வருகிற எல்லா சிருஷ்டிகட்கும் உள்ளதாகும். அந்த லிங்கம் க்ஷேத்தி ரத்திலாகும், பிரதிஷ்டித்துள்ளது. அந்த க்ஷேத்திரம் அதாவது நம்முடைய சிரசாகும். அதற்காகும் ஒன்பது வாசல் உள்ள க்ஷேத்திரம் எனப்படுகிறது. முன் சொன்ன பிரகாரம் மண் சுவர்களால் சூழப்பட்டுள்ள ஒரு தோட்டத்தினுடைய ஈசானிய மூலை என்று சொல்லுகிற இடத்திலாயிருக்கும் க்ஷேத்திரம். அந்த க்ஷேத்திரத்தினுடைய உள்ளில் போகிற தற்கு நான்கு பாகங்களிலும் கோபுரங்களுண்டு. அந்தக் கோபுர வாயில் வழியாய்க் கடந்து நாலம்பலத்தில் அதாவது சிற்றம்பலத்தில் போகலாம். அந்த நாலம்பலமாயிருக்கின்ற சிற்றம்பலத்திற்கு மூன்று வாசல்களுண்டு. அந்த நாலம்பலத்தி னுடைய வாசல் கடந்து ஸ்ரீ கோவில் அதாவது மூலஸ்தானத் தின் வெளியில் முன்னிருக்கும் நமஸ்கார மண்டபத்திற்குச் செல்லலாம். அவ்விடமிருந்து மூலஸ்தானத்திற்குள்ளில் செல்வதற்கு நேராக இரண்டு வாசல்களுண்டு. நமஸ்கார மண்டபத்திலிருந்து அந்த வாசலைக் கடந்து சென்றால் பிரதிஷ்டை ஸ்தலம் காணலாம்.

இதே பிரகாரம்தான் நம்முடைய காதுகள், கண்கள், கோபுர வாயில்களாகின்றன. இவைகளைக் கடந்து சென்றால் சிற்றம்பலமாகிய அதாவது நாலம்பலமாகிய மேல் வாய்க்குப்

போகலாம். சுற்றம்பலமென்று சொல்லக் காரணம் வாயை கம்மென்று மூடிக்கொண்டிருக்கும் சமயம், மேல் சொன்ன யிடத்தில் வாயு நிறைந்து சுழன்று கொண்டிருக்கிறது கொண்டாகும். அச் சுற்றம்பலத்திற்கு மூன்று வாயில்க ளுண்டு. அவைகள் மூக்கினுடைய இரண்டு துவாரங்கள், வாய் இவைகளாகும். அச் சுற்றம்பலத்தைக் கடந்து சென்றால் அவ்விடம் மூலஸ்தானத்தின் முன்பிலுள்ள நமஸ் கார மண்டபமாகிய வாயினுடைய மேல் பாகமான அண் ணுக்கு என்று சொல்லுகிற ஒரு இடமுண்டு. அந்த அண் ணுக்கிலிருந்து நேரே மேல் பாகத்தில் மூலஸ்தானத்திற்குச் செல்வதற்கு வாயில்களாகிய இரண்டு துவாரங்களுண்டு. அந்தத் துவாரங்கள் வழியாய் ஜீவன் கடந்துபோனால் மூல ஸ்தானத்தில் பிரதிஷ்டித்திருக்கின்ற சிவலிங்கம் காணலாம். அந்தத் துவாரங்களுக்காகும் குதம் என்று சொல்லுகிறது. அந்தக் குதத்திலிருந்துதான் சப்தமுண்டாகிறது. அது எவ்வித மென்றால் முன் சொன்ன நமஸ்கார மண்டபத்தில் தூக்கியிருக்கிற மணி அடித்தாகும் மூலஸ்தானத்திற்குள்ளில் போகிறதும், வெளியில் வருகிறதும். இப்பிரகாரந்தான் நமஸ் கார மண்டபமாகிய அண்ணுக்கிலிருந்து, மூலஸ்தானத்திற் குள்ளில் ஜீவசக்தியாகிய வாயு கடக்கும் பொழுது, உள்ளில் அடங்கிய சப்தமும், வெளிக்கு ஜீவசக்தியாகிய வாயு வரும்பொழுது பேச்சாகிய சப்தமும் உண்டாகிறது. அது கொண்டாகும் "குதம்" என்பது. "கோ" அதாவது சப்தத்தினைத் தானம் செய்கிறதென்று சொல்லுகிறது. "கோ" என்றால் சப்தம். அந்தச் சப்தம் உண்டாகிறதற்கு முன் சொன்ன அண்ணுக்கின்வழிகூடி இரண்டு துவா ரங்கள் மேல் பாகத்திலிருக்கிறதுண்டு. அந்த துவாரங் களும், மூக்கினுடைய துவாரங்களும் தம்மில் சேருகிறது புருவ மத்தியத்திற்குக் கீழாக இருக்கிற இடத்திலாகும். அவ் விடமிருந்தாகும் ஆகாச அம்சமாகிய சப்தம் உண்டாகிறது. அதற்கு உதாரணம்:—மூக்கில்லாதவருக்குத் தெளிவாய் பேசுவதற்கு முடிவதில்லை. காரணம் முன் சொன்ன துவாரங் களிலிருந்து சப்தம் உண்டாகும்பொழுது, வாயு தடையில் லாமல் ஒன்றாய் வெளியினுள்ளில் போகின்றது. அந்த மூக்கு இருக்கும்பொழுது சப்தமாகிய வாயுவிற்குத் தடை உண் டாகி அடங்கித் தெளிவாய்ப் பேசுகிறது. அதெப்படியெனில் கிராமபோன் என்கிற பெட்டிப் பாட்டுகளை நீர் கேட்டிருப்பீர் அல்லவா? அந்தக் கிராமபோனினுடைய சப்தம் உண்டாகிறது, பெட்டியினுடையமேலே பாட்டுகளடங்கிய ஒரு பிளேட் அதாவது தட்டு வைத்து, அதில் சப்தமுண்டாகிற ஸவுண்டு

பாக்ஸ் அதாவது ஒலிக்கருவியில் நீடில் அதாவது ஊசி பிடிப்பித்து, அப்பெட்டிக்குச் சாவி கொடுத்து, ப்ளேட் அதாவது தட்டு சுற்றும்பொழுது முன் சொன்ன ஊசியைப் பிளேட்டின் மேல் தொடவைத்தபொழுது பிளேட் சுற்றுவதனால் சப்தம் உண்டாகின்றது. ஆனால் அதிலிருந்து உண்டாகிற பாட்டு தெளிவாய்க் கேட்கிறதில்லை. காரணம அந்தச் சப்தம் உண்டாகின்றதான இடத்தில ஒரு குழல் அதாவது ஹாரன் வைக்கவேண்டியது, வைககாததனாலாகும். அந்தக் குழல் வைக்காததனால் சப்தம் உதபததியாகுமிடத்தில் அடக்கமில்லாமல், அதிலிருந்துண்டாகிற வாயு வெளியில் வியாபித்துப்போகிறது. எப்பொழுது அக்குழல் வைக்கிறோமோ, அப்பொழுது மேல்சொல்லிய வாயு அககுழலின் வழியாய் வெளியினுள் வருகின்றது. அச்சமயத்தில் அதிலிருந்து உண்டாகின்ற பாட்டுகள், சிறு குழந்தைகளும் தெரிந்து கொள்ளத்தக்கவிதத்தில் தெளிவாய்க் கேட்கின்றது. இந்தப் பிரகாரத்தில் முன் சொன்ன புருவமத்தியின் கீழே சப்தம் உண்டாகின்ற இடத்திலிருந்து, குழலாயிருக்கின்ற மூக்கினுடைய உதவியால் தெளிவாய்ச் சப்தம் உண்டாகின்றது. அதனால் அண்ணாக்கின் வழியாக மேல் பக்கமாயிருக்கிற இரண்டு துவாரங்களுக்காகும் குதம் என்று சொல்லுகிறது. உள்ளிலுள்ள இந்த இரண்டு துவாரங்களும் வெளியினுள்ளில் உள்ள கண்ணிரண்டும், மூக்கினுடைய துவாரமிரண்டும், காது இரண்டும், வா யொன்றும் கூடி ஏழு துவாரங்களும் சேர்ந்து ஒன்பது துவாரங்களாகிறது இவ்விதம் ஒன்பது வாயிலுள்ள க்ஷேத்திரமாகும் சிரசு. அந்த க்ஷேத்திரத்தில் பிரதிஷ்டித்து உள்ளதாகும் லிங்கம். அதற்காகும் சிவலிங்க மென்று சொல்லுகிறது. அந்தச் சிவலிங்கத்தினுடைய மூலத்திலாகும் சுக்கிலம் இருக்கின்றது. அதானது புருவ மத்தியததிலாகும். அதல்லாமல் லிங்கம் மூத்திரத்துவாரமல்ல. லிங்கமெனபது மூத்திரத்துவாரமாயிருந்தால் மூத்திரத் துவாரத்தினுடைய மூலத்தில் ஆகும் சுக்கில மிருக்க வேண்டியது. எவ்விதத்தில் யோசித்தாலும், மூத்திரத்துவாரத்தினுடைய மூலத்தில் அல்ல சுக்கிலமிருக்கிறது. முன் சொன்ன லிங்க மூலத்திலாகும் சுக்கிலம் இருக்கிறது. அதற்கு அநேக உதாரணம் இருப்பதும் அல்லாமல் புணர்ச்சி சமயம் சுக்கிலம் இளகுகிறதைக் கொண்டும் தெரியலாம். அந்த விபரத்தைப் பற்றி முன் நான்காம் அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றது. இதுவும் அல்லாமல் ராமேசுவர பிரதிஷ்டை என்று சொல்லுகிற ஒரு சித்திரப் படம் காணுகிறதுண்டு. அந்தப் படத்தில் ஒரு சிவலிங்கமும், அச்சிவலிங்கம் பாதாளத்திற்குத் தாழ்ந்துபோவது கொண்டு,

அப்படி போகாதிருப்பதற்கு வேண்டி பார்வதி அதைக் கட்டிப் பிடித்திருப்பதாகவும் காணப்படுகிறது. அது உண்மையேயாகும். நம்முடைய புருவமத்தியத்தில் பிரதிஷ்டித்த சிவலிங்கம், அதற்குக் கீழாக உள்ளதான பாதாளத்தில் சப்தரூபமாய்த் தகித்து அதாவது எரிந்து நசித்துப் போகாமல் பிடித்து நிறுத்துவது குண்டலினி சக்தியாகும். அந்தக் குண்டலினி சக்தியாகும் முன் சொன்ன பார்வதி. தவிர மேல் சொன்ன சித்திரப் படத்திலுள்ள சிவலிங்கத்தினுடைய மூலத்தில் வெளுத்த வர்ணத்தில் நாகர பாஷையில் "ஓம்" என்ற ஓரெழுத்து எழுதியதாய்க் காணுகிறது. அதுவும் உண்மையேயாகும். "ஓம்" என்பது பிரம்மமாகும். அது சுக்கிலமாகும். அந்தப் பிரம்ம சொரூபமாய் இருக்கின்ற சுக்கிலம் முன் சொன்ன குண்டலினி சக்தியால் கட்டப்பட்ட சிவலிங்கத்தினுடைய மூலத்திலாகுமிருக்கின்றது. அது புருவ மத்தியமாகும். இவ்விதத்திலாகும் க்ஷேத்திரம் அதாவது கோவில், பிரதிஷ்டை, முதலியவைகளுடைய நிலைமைகள். இவ்விதமுள்ள காத்திர க்ஷேத்திரத்தினுடைய அதாவது கோவிலின் யாதொரு நிலைமையை அறியாமல் க்ஷேத்திரங்களென்று அதாவது கோயில்களென்று சொல்லி பல இடங்களிலும், பல கட்டடங்களுண்டாக்கி அவைகளில் உலோகங்களைக் கொண்டும், மரங்களைக் கொண்டும், பொம்மைகளை நிர்மித்து அதாவது உண்டாக்கிக் குழித்து அதில் ஸ்தாபித்து அதாவது நிலைநிறுத்தி, இதாகும் ஈஸ்வரன் என்றும் சொல்லி பஜித்தும், தானும் காத்திர க்ஷேத்திரத்தில் உள்ள ஜீவசக்தியை வெளியினுள்ளில் விட்டு மற்றொன்றில் சங்கல்பித்து, அதோகதியாகி அதாவது கீழ்நோக்காக ஜனங்கள் நசித்துப் போகின்றதல்லாமல் க்ஷேத்ரோபவாசம் ஒருக்காலமும் அவர்களுக்குச் சித்திக்கிறதில்லை அதாவது கிடைக்கிறதில்லை. க்ஷேத்ரோபவாசம் கிடைக்கவேண்டுமென்றால், முன் சொன்ன காத்திர க்ஷேத்திரத்தில் ஜீவன் உபவசிக்கவேண்டும். அப்பொழுது க்ஷேத்ரோபவாசம் சித்திக்கும் அதாவது கிடைக்கும். அவ்விதம் யாரொருவர் செய்கிறார்களோ, அவர்களுக்கு ஜீவன் ஊர்த்துவகதியாகி, அதாவது மேல்கதியாகி மேல் சொன்ன சிவலிங்கத்தில் போய்ச் சேர்ந்து எல்லா அறிவும் சித்தித்துத் தன்னில் லயித்துத் தானாய்த் தன்மயமாய்க் கைவல்லியத்தை அடைகிறது. அதுவுமல்லாமல் தாங்கள் ஈசுவர சேவை செய்வது ஈஸ்வரனோடு சேரவேண்டியதற்கோ அல்லது வேறுபட்டுப் போகவேண்டியதற்கோ?

சி: ஈஸ்வரனோடு சேருவதற்கு வேண்டி.

கு: ஈஸ்வரனிடத்தில் சேர வேண்டுவதான தாங்கள் க்ஷேத்திரத்தில் அதாவது கோயிலில் போய் எங்கே நின்று ஈஸ்

வானைக் கும்பிடுகிறீர்கள்?

சி: க்ஷேத்திரத்தில் அதாவது கோயிலில் சென்று மூலஸ்தானத்திற்கும், கெர்ப்பக்கிரகத்திற்கும் வெளியில் நின்று கொண்டாகும்.

கு: அப்பொழுது மூலஸ்தானத்தினுள்ளிலோ, கெர்ப்பக்கிரகத்தினுள்ளிலோ, தாங்கள் கடந்து போக முடியுமா?

சி: முடிகிறதில்லை.

கு: அதனுள்ளில் குழித்து ஸ்தாபித்துள்ள பொம்மைகளை எதெதனால் உண்டாக்கப் பட்டதாகும்?

சி: கல், மரம் முதலியவைகளைக் கொண்டாகும்.

கு: ஆனால் எவ்வளவோ ஜனங்கள் மிதித்து நடந்து தேய்ந்திருக்கின்றதும், எவ்வளவோ ஜனங்கள் அதன் மேலிருந்து மலங்கழித்துமுள்ள கல்லிலிருந்து ஒரு துண்டை வெட்டி எடுத்து, கல் கொத்தன் அதை இப்புறம், அப்புறம், திருப்பி மிதித்து உட்கார்ந்து பொம்மையை உண்டாக்கி, அதைக் கோயிலில் மூலஸ்தானம் என்ற இடத்தில் குழித்து ஸ்தாபித்ததனை, அதாவது நிலை நிறுத்தியதனை நமக்குத் தொடக்கூடாது என்றும், அதை ஸ்தாபித்துள்ள ஸ்தலத்தினுள் நாம் போகக்கூடாதென்றும் இருக்கிறபொழுது நாம் எல்லாம் எப்பொழுது எந்தக்காலத்தில் ஈஸ்வரனோடு சேருவது? இது என்ன ஒரு அந்த விசுவாசம்; அதாவது குருட்டு நம்பிக்கை. தவிர இது எவ்வளவு ஏமாற்றலாகும். அதுவல்லாமல் அந்தப் பொம்மையின் மேல் கரப்பான் பூச்சி, பல்லி, எலி, அரணை, ஓணான், மூஞ்சூறு முதலிய ஜீவிகள் அதன் மேலேறி நடக்கின்றதும், வௌவால்கள் அதன் மேல் ஒட்டியிருந்து மல மூத்திரம் கழிக்கவும் செய்கிறது. அதையெல்லாம் காலையிலெழுந்திருந்து பெருக்கி வாரி வெளியில் போடுகிறதை நாம் காணுகிறது அல்லவா? அப்பொழுது இது என்ன ஒரு அநியாயம்? இந்த மேற் சொன்ன ஜீவிகளைக் காட்டிலும், மிகவும் நிகிஷ்ட அதாவது கீழான ஜீவிகளாகுமோ நாம். அதுவுமல்லாமல் பிராம்மணன் முதல் சண்டாளர் அதாவது சக்கிலியர் பறையர் வரை அபிமானித்து ஸ்தாபித்தவருடைய எச்சிலும், அவர்கள் மென்று துப்பிய தானகரி, கருவாடுகளுடைய எலும்பு, முள்ளு முதலியவைகளைத் தின்று நடக்கிற பூனை மேல் சொல்லிய கோயிலுக்குள்ளில் சென்று அதிலுள்ள விக்கிரகம் என்றபிமானித்திருக்கின்ற பொம்மைகளை நக்குகின்றது. ஆனால் நமக்கு அதனுள்ளில் போகக்கூடாது. இதென்ன ஒரு அநியாயம்! அதுவல்லாமல் உலகத்திலுள்ள சர்வ ஜீவிகளும் மலம் கழிப்பதுண்டு, நாமும் அதே மாதிரி செய்வதுண்டு. அந்த "பீ" அதாவது மலத்தின்மேல் ஈக்கள் வந்திருக்கிறதுண்டு.

அப்பொழுது அந்த ஈக்களுடைய காலில் "பீ" ஒட்டியிருக்கும். அப்படி நாமும் வெளியில ஆக்கிய அதாவது கழிந்த மலத்தில் அதாவது "பீ" மேல் ஈக்களிருக்கிறது. அந்த ஈக்கள் தம் காலில் ஒட்டிய மலத்தோடு பறந்து சென்று மேல்சொன்ன பொம்மைகளின்மேல் கொண்டுபோய் வைக்கிறது. ஆனல் நமக்கோ அதற்குள்ளில் போகக்கூடாது. இவற்றையெல்லாம் ஆலோசிப்பதானல், நமக்கென்ன புத்தியிருக்கிறது? மேல் சொன்ன காரியங்களை ஆலோசித்து அறியாமல் நாம் ஏமாற்றப் பட்டுக் குருட்டு நம்பிக்கையில் ஆழ்ந்திருக்கிறோம். இப்படியா யிருக்குமோ ஈஸ்வரசேவை, என்று சொல்லுவது?

சி: சுவாமி! இவைகளை எல்லாம் யோசனை செய்யும்போது நமக்கு யாதொரு ஆலோசனையுமில்லாமல் ஏமாற்றத்தில் பட்டு புத்தியில்லாமலிருக்கிறதல்லாமல் வேறென்னவாகும் சொல்ல வேண்டுவது. சுவாமி! அதல்லாமல் ஸ்திரீ, புருஷர் முதலிய சிருஷ்டிகளுக்கெல்லாம் லிங்கம் உண்டென்பதாகச் சொன் னீர்கள் அல்லவா? ஸ்திரீகளுக்குள்ளதை லிங்கமென்று சொல் லுவதில்லையே? உபஸ்தமென்று தானே சொல்லுவது. இதன் நிலைமை என்னவாகும்?

கு: ஓஹோ! எல்லா சிருஷ்டிகளுக்கும் உபஸ்தமும் லிங்கமும் உண்டு. ஸ்திரீயென்று சொல்லிவருகிறவர்களுக்கு மாத்திரமே உபஸ்தமும், புருஷரென்று சொல்லி வருகிறவர் களுக்கு மாத்திரமே லிங்கமிருக்கிறதென்று கருதவேண்டாம். ஏனென்றால் நவத் துவாரங்களில் ஒரு துவாரம் லிங்கம் ஆகுமென்றும், நீர்தான் முன்பு சொன்னீரல்லவா? அந்த நிலைமைக்கு ஸ்திரீகளென்று சொல்லி வருபவர்களுக்கும் லிங்கம் இருக்கிறதென்று வருகிறது. தவிர, வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் என்கிற ஐந்து இந்திரியங்களில் ஒரு இந் திரியம் உபஸ்தம் என்று நீர் சொன்னீர் அல்லவா? அந்த நிலை மைக்கும் புருஷரென்று சொல்லி வருகிறவர்களுக்கும் உபஸ்தம் உண்டென்று வருகிறது. அதனல் லிங்கம் உபஸ்தம் என்கிற இரண்டும் எல்லா சிருஷ்டிகளுக்கும் உண்டாயிருக்கிறதாகும். லிங்கம் என்பது முன் சொன்ன பிரகாரமாகும். உபஸ்த மென்பது உப+ஸ்திதம். உப=சேர்ந்தது, ஸ்திதம்=இருக் கின்றது. அப்பொழுது உபஸ்தமென்பது சேர்ந்திருக்கின்றது. அதாவது சிவலிங்கத்துடன் சேர்ந்திருக்கிறது. அதாகும் "யோனி". அந்த 'யோனி'யாகும் உத்பத்தி ஸ்தானம். இதற் காகும் சக்தியோனி என்று சொல்லுகிறது. இவ்விதமல்லாமல் இப்பொழுது ஸ்திரீகளென்று சொல்லி வருகிறவர்கள் குழந்தைகளைப் பிரசவிக்கின்ற இடம் யோனியல்ல. அப்பிர காரம் பிரசவிக்கவேணுமானல் முன்பு என்ன உண்டாயிருக்க

வேண்டும்?

சி: கர்ப்பம் உண்டாயிருக்கவேண்டும்.

கு: கர்ப்பம் உண்டாவதற்கு என்ன வேண்டும்?

சி: சம்போகம் அதாவது புணர்ச்சி வேண்டும்.

கு: சம்போகம் செய்தால் மாத்திரம் கர்ப்பமுண்டாகுமா?

சி: சம்போக மாத்திரம் போதாது. சுக்கிலமும் உண்டாயிருக்கவேண்டும்.

கு: அவ்விதம் சுக்கிலம் உத்பத்தியாகின்ற இடத்திற்கே "யோனி" என்று பெயர். அதுவே சக்தியோனி. அந்தச் சக்தி யோனியாயிருக்கின்ற பிரம்மரந்திரத்தி லிருந்தாகும் உலகத்தினுடைய உத்பத்தி. சக்தியென்பது ஸ்திரீயாகும். இதற்காகும் ஸ்திரீயோனியென்று சொல்லுகிறதற்கு காரணம். ஜீவன் புருஷனாகும். அதாவது ஜீவன் எப்பொழுது புறமாயிருக்கிற ஜடத்தின் உள்ளில் அதாவது தன்னில் தானே அடங்குகின்றதோ, அப்பொழுது புருஷனாகின்றது. அப்பொழுது முன் சொன்ன சிவலிங்கத்தை அறிகிறதாகும். அது எப்பொழுது புருஷனாகிறதோ அப்பொழுது மாத்திரமே தன்னுடைய லிங்கத்தை அறியப்படுகிறதாகும். ஆனதினால் தான் அதற்கு புருஷலிங்கம் என்ற பெயராயிற்று. இவ்விதமாகும் யோனியினுடையவும், லிங்கத்தினுடையவும் முன் விவரித்த குதத்தினுடையவும் நிலைமை. இது கொண்டாகும் இது மூன்றும் இரகசியம் என்று சொல்லக்காரணம். இவ்விதம் யாதொன்றும் அறியாமல் மூத்திரத்துவாரமாய் நீர் ஒழுகிப் போகிற ஜலதாரைக்கு யோனியாகு மென்றும், லிங்கமாகுமென்றும், மலத் துவாரமாகுமென்றும் உலகத்தில் கருதி ஜனங்கள் மூடர்களாயிருக்கிறார்கள். இவ்விதம் குருட்டு நம்பிக்கை உண்டாகக் காரணம், அனுபோகஸ்தர்கள், தங்களுடைய அனுபவங்களை எழுதி வைத்திருக்கின்றதை வாசித்துப் படித்து, நான் அனுபோகஸ்தனாகும், எனக்கு எல்லாம் தெரியும் என்று நடித்து, அனுபவம் இன்னதென்றறியாமல் உலகத்தில் சாஸ்திராதிகளுடைய பொருளைத் தெரியாதே, அதற்கு எதிராய்க் கிரஹித்து அதாவது கருதி உலகவாசிகளைச் சொல்லி கருத வைப்பதனாலாகும். அப்பொழுது உலகவாசிகள் "இவர் அநேக சாஸ்திரங்களைப் படித்துள்ளவராகும். அதனால் இவர் சொல்லுவது சரியாகத்தானிருக்கு மென்றும்" கருதி யாதொரு விபரமுமில்லாமலாய்ப் போனது. இந்த விதத்திலுள்ள தப்பிதமான கருதுதல் நிமித்தம் ஆகும் உண்மை வெளிப்படாமல் புத்திமுட்டி அதாவது அறிவுகெட்டு முழுகி, அதோ கதியாய் ஜனங்கள் மூட நம்பிக்கையில் நசித்துப் போவதற்கு இடமானது.

அத்தியாயம் 17

சி: சுவாமி! இதுவரை சொல்லி வந்ததில் யோகங்களைப் பற்றி யாதொன்றும் கற்பிக்கவில்லையல்லவா? ஆனால் யோகங்களுண்டென்று சாஸ்திரங்களில் காணுகையும், ஜனங்கள் கருதவும் செய்திருக்கிறார்கள். இவ்விஷயத்தைப் பற்றிச் சொல்லித் தரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கு: பலயோகங்களென்பது என்னவெல்லாமாகும்?

சி: கர்மயோகம், ஹடயோகம், ராஜயோகம் முதலான அஷ்டாங்க யோகங்களுண்டென்றாகும் அறிகிறது.

கு: ஆனால் யோகமென்கிற சொல்லுக்குப் பொருள் என்னவென்றாகும் நீர் கருதியிருக்கிறீர்?

சி: யோகமென்பது சேர்க்கையாகும்.

கு: என்னென்னவாகும் சேரவேண்டியது?

சி: ஜீவனும் ஈஸ்வரனும்.

கு: எத்தனை ஜீவனும், எத்தனை ஈஸ்வரனுமுண்டு?

சி: ஓரே ஜீவனும், ஓரே ஈஸ்வரனும்.

கு: ஆனால் ஒரு ஜீவனும், ஒரு ஈஸ்வரனும் சேருவதற்கு இத்தனை யோகங்கள் உண்டாவதற்கு இடமில்லை. என்னவென்றால், யோகமென்பது ஒன்றே யாகின்றது. அது ஜீவ ஈஸ்வரரோரைக்கியமாகும். அதற்குப் பல ஆசாரியர்கள் காரணங்களினால் பல பெயர்களும் கொடுத்திருப்பதல்லாமல் அநேக யோகங்களில்லை. எல்லாம் ஒன்றுதானாகும். எப்படியென்றால் கர்மம் என்பது ஜீவசக்தியா யிருக்கின்ற வாயுவாகுமென்று முன் எட்டாம் அத்தியாயத்தில் சொல்லியிருக்கின்றதல்லவா? அந்த வாயுவினுடைய உத்பத்திஸ்தானமாகிய ஆகாசமான பிரம்மரந்திரத்தில் ஜீவசக்தியாகிய வாயு சேருகின்றதற்காகும் 'கர்மயோக'மென்று பெயர். ஹடயோகம் என்பது பலாத்காரமான யோகம் என்று உலகோர் கருதியிருக்கிறார்கள். அந்தக் கருத்து சரியல்ல. என்னவென்றால், "ஹ" என்பது பிரகிருதி; அதாவது மாயையாகும். "ட" என்பது அடக்குகிறது. அதாவது மூடுகிறதாகும். எதை யென்றால் தன்னிலிருந்து பிரகிருதியாகி வெளியினுள்ளில் வியாபித்திருக்கிற பிரகாசத்தையாகும். அந்தப் பிரகிருதியிலிருந்தாகும் நமக்குப் பிரகாசிக்கின்றது. அந்தப் பிரகிருதியான சூரியனாயிருக்கின்ற பிராணனுடைய கிரணம் வெளிக்குள்ளில் வியாபித்திருக்கிறது. அவ்விதம் வியாபித்திருக்கிற சூரியனுடைய சக்தியாகும் சந்திரன். அதன் நிமித்தமாகும் 'பிராணபானன்' என்று சொல்லக் காரணம். ஆனால் பிராணனென்பது சூரியனும், அபான னென்பது சந்திரனுமாகும். அவ்விதம் அபானனாயிருக்

இன்ற சந்திரனும் மனம். அதனால் பிராணனாயிருக்கின்ற சூரியனும், மனமாகின்ற சந்திரனும் ஐக்கியமாகின்றதாகும் "ஹடயோகம்". இதைக் கொண்டாகும் ஹட யோகமென்பது சூரிய சந்திரர்களை ஐக்கியப்படுத்துகிறதாகு மென்று உலகில் சொல்லிவருகிறது. ராஜயோகம் என்பது ராஜ+யோகம். இதில் ராஜா என்பது ரஜோ குணமாய் விஷ்ணுவாயிருக்கின்ற மனமாகும். யோகமென்பது சேர்க்கையாகும். அந்த மனதைப் பற்றி முன் ஒன்பதாம் அத்தியாயத்தில் விவரமாகச் சொல்லியிருக்கிறது. அப்பிரகாரமுள்ள மனம் தன்னுடைய உத்பத்திஸ்தானமாகிய புருவ மத்தியத்தில் சலன மில்லாமல் அதாவது அசையாமல் நிற்கிற நிலைமைக்காகும் ராஜயோகமென்று பெயர். இவ்விதத்திலாகும் யோகங்களி னுடைய நிலைமை. ஆனால் எட்டு நிலைமைகள் எப்பொழுது ஒன்றாகச் சேருகின்றதோ அப்பொழுது யோகமாகின்றது. அதென்ன வென்றால் காமம், குரோதம், லோபம், மோகம் மதம், மாத்ஸரியம் அதாவது விரோதம், டம்பம், அசூயை அதாவது பொறாமை ஆகிய இவைகளாகும் எட்டு நிலைமைகள். இவைகளுண்டாகிறது முன் சொல்லப்பட்ட பிரகிருதியாயிருக் கின்ற சலனத்திலிருந்தாகும்; அதாவது அசைவிலிருந்தாகும். அந்தச் சலனம் வெளியினுள்ளில் சலிக்காமல் எப்பொழுது தன்னில் தானே லயிக்கின்றதோ, அந்தச் சந்தர்ப்பத்தில் மேல் சொன்ன எட்டு விருத்திகளும் அதாவது நிலைமைகளும் அவைகளினுடைய உத்பத்திஸ்தானமாகிய பிரகிருதியிலே லயித்து, அன்னியத்துவ மில்லாமல் அதாவது வேறிட்டில்லாமல் தானாய்த் தீருகிறது. அதற்காகும் அஷ்டாங்கயோக மென்று பெயர். அதல்லாமல் ஜீவனும் ஈஸ்வரனும் என்பது இரண்டல்ல ஒன்றே தானாகும்.

அதெப்படி யென்றால் ஈஸ்வரனென்பது தன்னுடைய மேல் பக்கத்தில் ஆகாசமாகிய பிரம்மரந்திரத்திலிருக்கின்றது. அந்த ஈஸ்வரன் தானேயாகும் கீழாகிவிட்டுப் போகாமல் தன்னுள்ளில் கூடி கதா கதம் அதாவது நடனம் செய்து கொண்டிருக்கின்ற ஜீவனாகிறது. அந்த ஜீவன் தன்னிலிருந்து வெளியினுள்ளில் வாயு ரூபமாகச் சலித்துக்கொண்டிருப்பதற் குப் பரமாத்மா வென்று பெயர். அந்தப் பரமாத்மாவேயாகும் மனம். அந்த மனமாகும் விஷ்ணு. அந்த விஷ்ணுவாகும் விஸ்வம்பரனாயிருக்கிறது. அது கொண்டாகும் பரமாத்மாவா யிருக்கின்ற வாயுவிலிருந்து உலகம் உண்டானதென்று சொல்லக் காரணம். அப்படியாயுள்ள மனமாகிய பிம்பத்தில் பிரதிபிம்பித்துக் காணப்படுவன வெல்லாம் நம்முடைய ஜீவனேயாகும். அதெவ்விதமென்றால் ஒரு கண்ணாடியில்

நாம் பார்க்கும்பொழுது, நம்மையே அந்தக் கண்ணுடியில் பிரதிபிம்பித்துக் காண்கிறோம். இவ்விதத்திலேயே தான் மனதாகின்ற கண்ணுடியில் பார்க்கும்பொழுது, நமக்கு என்னென்ன விகாரங்கள் அதாவது தோற்றங்கள் உண்டாகின்றனவோ, அந்த விகாரங்களேயாகும் நமக்கு வெளியினுள்ளில் நம்முடைய ஜீவனே, விகார ரூபமாகப் பின்னமாய் அதாவது வேறாய்ப் பிரதிபிம்பித்துக் காணுகின்றது. இவ்விதம் பிரதி பிம்பித்துக் காண்கிறது 'நான்' என்கிற அகங்காரத்தினுலாகும். எப்பொழுது நான் என்றுள்ள அகங்காரம் நசிக்கின்றதோ, அப்பொழுது யாதொன்றும் காணப் படுகிறதில்லை. அந்த அகங்காரத்தின் நிமித்தியமாகும் ஈஸ்வரனும், ஜீவனும் என்றுள்ள வித்தியாசமுண்டானது. அதெப்படியென்றுல், ஒரு ஆற்றில் கூடி ஓடுகிற நீரில் ஒரு கோலினுடைய ஒருபாகத்தைத் தாழ்த்திப் பிடித்தால் தண்ணீர் அக்கோலினுடைய இரண்டு பாகங்களிலும் ஓடுகிறது. ஆனுல் இரண்டாகவில்லை. ஜலத்தினுடைய ஒட்டத்திற்குப் பின்னமேற் பட்டு இரண்டாய் ஓடுகிறதாய் நமக்குத் தோன்றுகிறது. அக் கோலை எடுத்தால் ஒட்டத்தினுடைய பின்னத்துவம் அதாவது வேறுபாடு தீர்ந்து ஜலம் ஒன்றுய் ஓடுகிறது. இந்தப் பிரகாரத்தில்தான் ஜீவனுடைய வெளியினுள்ளுக்குள்ள ஒட்டத்தில் மனம் நான் என்கிற அகங்காரமாயிருக்கின்ற கோலைப் பிடித்தபோது ஜீவன் என்றும், ஈஸ்வரன் என்றும் இரண்டு நிலைமைகளாய்த் தோன்றுகிறது. எப்பொழுது அகங்காரமாயிருக்கின்ற கோலை எடுக்கிறதோ அப்பொழுது இரண்டில்லாமல் ஜீவேசுவர ஐக்கியம் என்றுய்த் தீருகிறது. ஆனுல் உலக முழுவதும் நிற்கிறது நான் என்றுள்ள ஓரே முடிப்பின் மேலிலாகும். அதானது ஒரு கயிறுகொண்டு சங்கிலி கோர்க்கும் பிரகாரம் அதனுடைய ஒரு தலைப்பிலிருந்து முடிந்து முடிந்து கடைசியில் மறு தலைப்பில் ஒரு கட்டு கட்டி இழுத்தால் அந்தக் கோர்த்த முடிச்சுகள் அவிழ்ந்து போகிறதில்லை. ஆனுல் கடைசியாய்க் கட்டியுள்ள அந்த ஓரே கட்டை அவிழ்த்து இழுத்தால் எல்லா முடிச்சுகளும் அவிழ்ந்து முன்போலவே ஓரே கயிருகித் தீருகிறது. இதே பிரகாரத்தில்தான் கர்மமாய் வாயுவான நூலினுல் விகாராதிகளாய் முடிச்சுகட்டி இழுத்துக் கொண்டிருக்கின்றது. அப்படி இழுத்துக்கொண்டிருக்கின்ற போது நன்றுய் முறுக்கேறுவதல்லாமல் அவிழ்ந்து போகிறதில்லை. அவிழ்க்க வேண்டுமானுல் மேல்சொன்ன கயிற்றினுடைய கடைசியிலுள்ள ஒரு கட்டை அவிழ்த்து இழுத்த பிரகாரம், நானென்றுள்ள அகங்காரமாயிருக்கிற ஒற்றைக் கட்டை அவிழ்த்து இழுத்தால் எல்லா முடிச்சுகளும்

அமிழ்ந்து ஓரே வஸ்துவாகத் தீருகின்றது. அந்த வஸ்து சலனமில்லாமல் தன்னில் லயிக்கும்பொழுது தானாய்த் தன்மயமாய்த் தீருகிறது. அப்பொழுது எல்லா யோகங்களும் அதில் அடங்குகிறது. இதல்லாமல் யோகங்கள் அநேக முண்டென்று கருதி நானா பிரகாரத்தில் ஒவ்வொரு தொழில் செய்வதில் யோகமாகிறதில்லை. ஆசாரியர்கள் பல பெயர்களைச் சொன்னது ஓரே யோகததிற்குத் தானாகும். அதெவ்விதமென்றால் ஓரே வஸ்துவிற்குத்தான் பல பெயர்கள் சொல்லுகிறது. ஆனால் அது பாஷை வித்தியாசமாகும். இதே பிரகாரந்தான் யோகத்திற்கு ஒவ்வொரு காரணங்களால் ஆசாரியர்கள் ஒவ்வொருவரும் யுக்திக்கு அநுசரித்து ஒவ்வொரு பெயர் சொல்லியதாகும். இதல்லாமல் யோகம் அநேகமில்லை. அதனால் வெளியினுள்ளில் வியாபித்து, சலித்து, பிரமித்துக்கொண்டிருக்கிற தன்னுடைய சக்தி எப்பொழுது வெளியினுள்ளில் சலிக்காமல் தன்னில்தானே லயிக்கின்றதோ, அப்பொழுது யோகமாகின்றது. இவ்விதமாகும் யோகத்தினுடைய நிலைமை.

அத்தியாயம் 18

சி: சுவாமி! பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்றிப்படி நான்கு வருணங்களிருக்கின்றனவென்றும், அவைகளில் சூத்திரர்களில் அநேக ஜாதிகளிருக்கின்றதாயும் சொல்லி வருகின்றார்களே; அதன் நிலைமைகளையும் சொல்லித் தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கு: இவைகளில் பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர் சூத்திரர் என்று சொல்லப்படுபவர்கள் யார் யார்?

சி: பிராம்மணர் என்று சொல்லி வருகிறது, நம்பூதிரிகள், எம்பிராந்திரிகள் அதாவது போத்திகள், பட்டர்களிவர்களாகும். நம்பூதிரிமார்கள் மலையாளப் பிராம்மணர்களென்றும், எம்பிரான்மார்கள் தொளு பிராம்மணர்களென்றும், பட்டர்மார்கள் கர்னுடக பிராம்மணர்களென்றும், பட்டன்மார்கள் என்று சொல்லி வருகிற பார்ப்பார்மார்களைப் பரதேசப் பிராம்மணர்கள் அதாவது தமிழ் பிராம்மணர்களென்றுகும் சொல்லி வருகிறுர்கள். க்ஷத்திரியர் என்பவர் பூர்வ காலத்தில் ராஜ்ய பரிபாலனம் செய்துவந்த சூரிய சந்திர வம்சத்திலுண்டானவராகிய இராஜாக்களாகும். வைசியர் என்பவர் வடதேசத்தார்களான சில ஷேட்டுமார்களும், கன்னட ராஜ்யத்தில் செட்டுமார்களென்று சொல்லுகிறவரும், தமிழ் தேசத்திலிருக்கிற செட்டிமார்களென்று சொல்லி வருகிற வியாபாரிகளுமாகும். சூத்திரர் என்பவர் மேற்சொல்லியவர்கள் போக பாக்கி எல்லோருமாகும்.

கு: பிராம்மணரை நீர் தொட்டுக் காண்பிக்க முடியுமா?

சி: முடியும்.

கு: யாரையாகும்?

சி: முன்சொன்ன நம்பூதிரி முதலியவர்களையாகும்.

கு: அவர்களைப் பிராம்மணர்களென்று எவ்விதம் நீர் மானித்தீர்?

சி: அவர்களுக்குப் பூணூல் உள்ளதனுல்.

கு: பூணூல் உள்ளவர்களையெல்லாம் பிராம்மணர்களாகுமென்று தீர்மானித்தது மிகவும் தப்பிதமாகும். ஏனென்றுல் ஆசாரி, கோமுட்டி, செட்டி, வாணியர், சேணியர் அதாவது சாலியர், கொங்கணி என்று சொல்லி வருகிறவர்களுக்கும், மற்றும் இம்மாதிரியுள்ள பல கூட்டத்தினருக்கும் பூணூல் உண்டு. இவர்களெல்லாம் பிராம்மணர்கள்தானே?

சி: இல்லை.

கு: என்ன காரணம்? பூணூலுள்ளவர்களெல்லாம் பிராம்மணர்களாகுமென்றல்லவா நீர் சொன்னது.

சி: பூணூல் உள்ளது கொண்டுமட்டுமல்ல பிராம்மணர்களென்று சொல்லுகிறது. அவர்களுடைய தொழிலுக்கு அனுசரித்தாகும்.

கு: என்னென்னதாகும் பிராம்மணர்களுடைய தொழில்?

சி: வேதமோதுதல், க்ஷேத்ராதிகளில் பூஜை முதலியவைகள் செய்கிறதனுலாகும்.

கு: க்ஷத்திரியர்களின் தொழில் என்ன?

சி: துஷ்டநிக்ரஹம்; அதாவது துஷ்டர்களைச் சிக்ஷைகள் செய்து, சிஷ்டர்களை பரிபாலிப்பது; அதாவது நற்குணமுடையவர்களைக் காப்பாற்றுவது.

கு: வைசியர்களுடைய தொழிலோ?

சி: கோ ரக்ஷை அதாவது பசுவைக் காப்பாற்றல், கிருஷி அதாவது வேளாண்மை, வாணிபம் அதாவது வியாபாரம் இவைகளாகும்.

கு: சூத்திரர்களுக்கோ?

சி: பிராம்மண பாதசேவையாகும்.

கு: ஓஹோ! அவ்விதமாகுமென்றால் ஒரு பறையனென்று அபிமானித்து ஸ்தாபித்துச் சொல்லி வருகிறவனை அழைத்து வந்து சுத்தமாக்கி நடத்தி வேதாப்பியாசம் செய்வித்துப் பூஜாக் கிரமங்களும் படிப்பித்து ஒரு பூணூலும் தரிக்க வைத்துப் பிராம்மணர்களென்று சொல்லி வருபவர்களுடைய கூட்டத்தில் நிறுத்தினால் அவன் பிராம்மணனாகும் என்று நீர் சம்மதிப்பீரா?

சி: சம்மதிக்கமாட்டேன்.

கு: என்ன காரணம்?

சி: அவன் பறையனானதுகொண்டு.

கு: நீர் முன்பறியாத ஒரு பறையனென்றபிமானித்து வருபவனை மேற்சொன்ன விதமாக்கி பிராம்மணர்களென்றபிமானித்து வருபவர்களுடைய கூட்டத்தில் நிறுத்தினால் நீர் அவனை இன்னவனென்று அறிவீரா?

சி: அறிகிறதில்லை.

கு: என்ன காரணம்? பிராம்மணரென்கிற ஒரு ஜாதி உண்டென்றால் நீர் அவரைத் தனியே தெரிந்து அறிய வேண்டியதல்லவா? தவிர நீர் ஜனித்திருக்கவில்லையானால் பிராம்மணர் க்ஷத்திரியர் முதலான யாவரும் உமக்குண்டோ?

சி: இல்லை.

கு: ஆனல் இவைகள் யாவும் எப்பொழு துண்டாயிற்று?

சி: நான் ஜனித்ததற்குப் பிறகு.

கு: அதிருக்கட்டும்; நீர்படுத்துத் தூங்குகிறேனென்று சொல்லி வருகிற சமயத்தில் மேல் சொன்ன நான்கு வருணங்

கள் உமக்குண்டோ?

சி: இல்லை.

கு: அதென்ன காரணம்?

சி: அப்பொழுது என்னுடைய மனம் எனதுள்ளில் அடங்கி யாதொன்றுமில்லாதிருக்கின்ற நிலைமையிலிருக்கின்ற தனுலாகும்.

கு: இவைகளெல்லாம் எப்பொழுதாகும் உண்டாயின?

சி: தூக்கம் விழித்தபொழுது.

கு: அப்பொழுது எவ்விடமிருந்தாகும் உண்டாகிறது?

சி: என்னுடைய மனதிலிருந்தாகும்.

கு: ஆனல் மேல் சொன்ன நான்கு வருணங்கள் உள்ளது உண்மையாகும். அவைகளை விவரிக்கலாம்: பிராம்மனர் தம்மில் தொட்டால் குளிக்கவேண்டுமா?

சி: அவர் தம்மில் தொட்டால் குளிக்கவேண்டியதில்லை.

கு: க்ஷத்திரியரும் அவர் தம்மில் தொட்டால் குளிக்க வேண்டுமா?

சி: அவர் தம்மில் தொட்டால் குளிக்கவேண்டியதில்லை.

கு: வைசியரும் அவர் தம்மில் தொட்டால் குளிக்க வேண்டுமா?

சி: குளிக்க வேண்டியதில்லை.

கு: சூத்திரரும் அவர் தம்மில் தொட்டால் குளிக்க வேண்டுமா?

சி: தொட்டால் குளிக்கவேண்டு மாத்திரமல்ல. அடுத்து வந்தால் குளிக்க வேண்டியவர்களும் உண்டு. அவரில் சிலரை 40-ம், 72-ம், அடியில் அதிகம் தூரத்தில் நிறுத்தவேண்டிய தாயுமுண்டு. தொட்டால் குளியில்லாதவரு முண்டு.

கு: நீரிப்பொழுது சொன்னதெல்லாம் சரியாகும். ஆனல் நீர் கருதியது போலல்ல முன் சொன்ன நான்கு வருணங்களும் உம்மிலிருந்தே உண்டாகிறதாகும். அதாவது மனம், சித்தம், புத்தி, அகங்காரம் இதுகளாகும். அதாவது மனம் பிராம் மணனும், சித்தம் என்பது பிரகாசமாகையால் அது க்ஷத்திரிய னும், புத்தி என்பது வைசியனும், அகங்கார மென்பது சூத்திரனுமாகும். எவ்விதமென்றால் பிராம்மணனென்பவன் நித்யாநித்ய வஸ்து விவேகம் செய்கின்றவனுகும். நித்யா நித்யவஸ்து விவேகத்தைப்பற்றி, ஆறும், பனிரெண்டா மத்தியாயங்களிலும் சொல்லியிருக்கின்றது. அவ்விதம் நித்திய அநித்திய வஸ்து தெரிந்துகொள்ளும்பொழுது அவர் பிராம் மணனுகிறார். அவராகும் வைதீகன். அதுகொண்டு வேதத்தி னுடைய அதிகாரஸ்தன் பிராம்மணனுகும். பிராம்மணன் தவிர மற்றெவரும் வேதத்திற்கு அதிகாரஸ்தனல்ல. வேத

மென்பது அறிவாகும். அறிவினுடைய அதிகாரி மனமாகும். மனமில்லையானால் யாதொரு அறிவுமில்லை. இதனால்தான் வேதத்தினுடைய அதிகாரஸ்தன் பிராம்மணனென்று சொல்லக் காரணம். அந்தப் பிராம்மணன் மனமாகும்.

உலகத்தில் பிராம்மணனைக் காட்டிலும் கீர்த்தி க்ஷத்திரியனாகிறது. அந்த க்ஷத்திரியன் சித்தாயிருக்கின்ற பிரகாசமாகும். க்ஷத்திரியனுடைய தொழில் துஷ்ட நிக்ரஹம்செய்து சிஷ்டபரிபாலனம் செய்கிறதாகுமென்று சொன்னீரல்லவா? துஷ்டரென்று சொல்லுகிறது நம்மிலிருந்துண்டாகிற ராகத்துவேஷாதி முதலான துர்விசாரங்களாகும். சிஷ்டனென்பது மனமாகும். மனதிற்கு மற்ற துர்விசாரங்களைக் கொண்டு வேதமாயிருக்கின்ற அறிவிற்குத் தடைகள் வருகிறது. அந்தத் தடைகளை க்ஷத்திரியனாயிருக்கின்ற பிரகாசத்தால் வெட்டி நசிப்பித்து மனதிற்கு அறிவை நிறுத்துவதாகும் சிஷ்டபரிபாலனம்.

வைசியனுக்குக் கோ ரக்ஷை, கிருஷி, வாணிபம் முதலாயுள்ள தொழில்களாகும். அது புத்திக்காகும். ஏனென்றால் கோ என்பது சப்தமாகும். சப்தத்தை ரக்ஷிக்கவேண்டியது புத்தியாகும். கிருஷி, வாணிபம் முதலானதும் புத்தியுள்ளவனே செய்கிறதற்கு முடிவதாகும். அதல்லாமல் உலகத்தில் அவன் புத்தியில்லாதவன், ஒரு பேச்சு பேசுவதற்குக்கூட புத்தியில்லை என்று சொல்லி வருகிறது. ஆகையால் புத்தியாயிருக்கிற வைசியன் "கோ"வினை ரக்ஷிக்கவேண்டும். எப்படி என்றால் தன்னிலிருந்து உண்டாகின்ற சப்தத்தைத் தன்னிற் தானே நிறுத்தவேண்டும். எப்பொழுது தன்னுடைய சப்தத்தை நசிக்காமல் தன்னில்தானே நிறுத்துகின்றோமோ அப்பொழுது கிருஷியாகின்றது. கிருஷி என்பது சிரசில் சுழிமுனையில் தன்னுடைய சக்தியை அடக்குகிறதாகும். அப்பொழுது சப்தம் தன்னில்தானே லயிக்கின்றது. இதாகும் கிருஷி: அவ்விதம் கிருஷி செய்திருக்கிற சக்தியைக்கொண்டு தன்னில்தானே வியாபிக்கச் செய்வதாகும் வியாபாரம். அவ்விதம் செய்து பக்ஷணசாதனங்கள் அதாவது ஊண்பொருள்கள் பிராம்மணனுக்குக் கொடுக்க வேண்டியது வைசியனுடைய தொழிலாகும். பக்ஷண பதார்த்தங்கள் அதாவது உணவுப் பொருள்கள் கிடைக்காவிடில் பிராம்மணன் நசித்துப் போகிறது. அதனால் இச்சொல்லிய விதத்தில் சக்தியைத் தன்னிலேயே அடக்கி வியாபிக்கச் செய்தால் மனம் விசாரங்களாகி வெளியினுள்ளில் நசித்துப் போகிறதில்லை. அப்பொழுது பிராம்மணனாயிருக்கின்ற மனதுக்கு நாசமில்லாமல் தன்னில் தானே லயிக்கிறது. இதாகும் வைசியனாயிருக்கின்ற புத்தியி

னுடைய தொழில்.

சூத்திரன் என்று சொல்லுகிறது 'நான்' என்கிற அகங்காரமாகும். நான் என்கிற அகங்காரத்திற்காகும் அநேக ஜாதிகளுள்ளது. ஜாதிகளென்று சொல்லுகிறது பல விசாரங்களாகும். அதாவது நான் ஸ்தானி, மானி, பண்டிதன், மற்றவன் சண்டாளன், மூடன், பறையன் என்றிப்படி பலவகைப்பட்ட விசாரம் முதலியவைகளாகும். சண்டாளன் என்று சொல்லுகிறது திருடுவது, பொய் சொல்லுவது, சதிசெய்வது, கொலை செய்வது, விபசரிப்பது முதலான துர்விர்த்திகள் அதாவது கெட்ட தொழில்கள் செய்கின்றவரும், செய்ய வேண்டுமென்கிற விசாரத்தோடுள்ளவருமாகும். இந்த ஜாதிகளையாகும் மிகவும் தூரம் நிறுத்துவதற்குச் சொல்லியிருக்கிறது. இதற்காகும் சூத்திரரைத் தீண்டக் கூடாது என்றும் சூத்திரரில் அநேக ஜாதிகளுண்டென்றும் சொல்லுகிறது. ஆனால் சூத்திரனாயிருக்கின்ற அகங்காரத்தினால் உண்டாக்கப்பட்ட மேற்சொன்ன எல்லா விசாரங்களையும் தொழில்களையும் விட்டுப் பிராம்மணனாயிருக்கின்ற மனதினுடைய பாதசேவையாகும் செய்யவேண்டியது. பாதமென்பது ஸ்தானமாகும். அதனால் மனதினுடைய ஸ்தானமாகிய புருவமத்தியத்தைச் சேவிக்கிறது. இதாகும் அகங்காரமாயிருக்கின்ற சூத்திரனுடைய தொழில்.

இதல்லாமல் "நான் பிராம்மணனாகும், வேத சாஸ்திர புராணாதிகளெல்லாம் எனக்கு மாத்திரமே படிக்கக் கூடும், மற்றவர் யாரும் படிக்கக் கூடாது, மற்றவன் சூத்திரனாகும், சண்டாளனாகும், அசுத்தனாகும், அவனைத் தூர நிறுத்த வேண்டும்" என்று இப்படி அபிமானித்துக்கொண்டு மேல் சொன்ன அகங்காரத்தினுடைய சேஷ்டைகளான களவு, கொலை, விபசாரம் முதலிய சண்டாளத் தொழில்களைச் செய்கிறவர் யாரோ அவர் சண்டாளராகும். பிராம்மணரல்ல. பிராம்மணர் யென்பவர், தன்னிலிருந்து சலித்து வெளிக்குள்ளில் வியாபித்திருக்கிற மனதை, தானாய் நித்தியமாயிருக்கின்ற தன்னில்தானே லயிக்கச் செய்து தன் மயமாகின்றவராகும் பிராம்மணர். க்ஷத்திரியர் என்பவர் "நான் க்ஷத்திரியனாகும், துஷ்டர்களை நிக்ரஹிக்கவேண்டும்" என்று கருதி, துப்பாக்கியினாலும், வாளினாலும், மற்ற பலவிதங்களினாலும் ஒவ்வொருவரையும் கொலை செய்பவர் க்ஷத்திரியரல்ல. அப்படிச் செய்கின்றவர் நானென்றுள்ள அகங்காரத்தின் துர்விர்த்தி, அதாவது கெட்ட தொழில் செய்கின்றவராகும். அதனால் அவரும் சண்டாளராகும். ஆனால் க்ஷத்திரியனென்பது தன்னுடைய ஜீவனை தன்னில் பிரகாசிப்பித்து, ராகத் துவேஷாதிக

ளாயிருக்கின்ற சத்துருக்களை நசிப்பித்துத் தன்னுடைய மனதிற்கு யாதொரு அசைவுமில்லாமல் அதாவது சலன மில்லாமல் ஸ்திரப்படுத்துகின்றவராகும் அதாவது நிலைக்கச் செய்கின்றவராகும்.

வைசியர் என்பவர் கோ ரக்ஷை, கிருஷி, வாணிபம் என்று நினைத்துப் பசு, எருமை, இவைகளினுடைய கழுத்தில் கயிற் றினால் முடிச்சிட்டுக் கட்டிக் கஷ்டப்படுத்தி அவை பிரசவித் துண்டாகின்ற கன்றுகளை வேறு படுத்திக் கட்டியும், அந்தக் கன்றுகள் குடிக்கவேண்டியதான பாலை கறந்தெடுத்தும், விற்கிறதும், பசுவினாலுண்டான காளைகளையும், எருமையி லிருந்துண்டான போத்து அதாவது கிடாக்களையும், எருமை களையும் மற்றும் பிடித்துக் கழுத்தில் நுகம் வைத்து பாரமா யுள்ள கலப்பையைக் கட்டி இழுக்கச் செய்வதும், வியாபார மென்று கருதி பல சரக்குகளைச் சேகரித்து எடையிலும், அளவிலும், விலையிலும், மோசம் செய்தும், அதிக லாபம் எடுத்தும் வியாபாரம் செய்வது. இதைச் செய்கின்றவர் வைசியரல்ல. இவ்விதம் செய்கின்றவர் நான் என்கிற அகங் காரத்தின் துர்விர்த்தியால் செய்கின்றவராகும். அவரும் சண்டாளரேயாவர். ஆனால் வைசியர் என்பது பேச்சாயிருக் கின்ற சப்தத்தைத் தன்னிலடக்கி கிருஷிசெய்து முன்சொன்ன விதத்தில் செய்கிறவராகும்.

சூத்திரரென்பவர் பிராம்மணரென்றும் மற்றும் அபி மானித்து வருபவருக்கு அடிமைத் தொழில்களைச் செய்து, பாதசேவை செய்தும் பல ஜீவஹிம்சைகளும், மதுபானம் முதலான கெட்ட தொழில்களும் செய்து நடக்கின்றவர் சூத்திரரல்ல. அவரும் அகங்கார விர்த்தியால் செய்கின்றவ ராகும். அதனால் அவ்விதம் நடக்கின்றவரும் சண்டாள ராகும். ஆனால் சூத்திரரென்பது தனது மனதினுடைய உற்பத்தி ஸ்தானமாகிய புருவமத்தியத்தை ஆஸ்ரயித்து அதாவது சேவை செய்து, அவ்விடத்திற்குத் தன்னுடைய ஜீவனைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்குவேண்டி எத்தனம் செய் கின்றவராகும் சூத்திரர். இதற்காகும் பிராம்மணபாதசேவை.

ஆகையினால் மேல் சொன்ன நான்கு வருணங்களும் ஒன்றிலேயே உற்பத்தியாகி ஒன்றிலேயே அடங்குவதானது கொண்டு ஜாதியென்பது இல்லவே யில்லை யென்று நன்கு புலப்படுகின்றது. அது கொண்டு நான்கு ஜாதிகள் கிடையாது. இவ்வித ஜாதிகளெல்லாம் அவனவனுண்டாகி அவனவனி லுள்ளதான குணமாயிருக்கின்ற ஜீவன், கர்மமாகி, வாயுவாகி வெளியிலுள்ளில் வியாபித்தபொழுது, அதிலிருந்து நான்கு வருணங்களாகி உண்டாவதும், அது தன்னில் தானே சிருஷ்

டிக்கவும் செய்ததாகும். அதாவது மனம், சித்தம், புத்தி, அகங்காரம் இவைகளாகும். இவைகளிலிருந்தாகும் எல்லா நிலைமைகளும் உண்டாயின. இதல்லாமல் பிராம்மணனென்றோ க்ஷத்திரியனென்றோ, வைசியனென்றோ, சூத்திரனென்றோ ஒரு சிருஷ்டியும் உண்டாயிருக்கவில்லை. இவ்விதம் எல்லா சிருஷ்டிகளும் தன்னுடைய சக்தி வெளியினுள்ளில் வியாபித்த பொழுது; அதிலிருந்து உண்டாகி தன்னைத்தானறியாமல் அந்தகாரத்தில் பட்டுப்போனதாகும். எப்பொழுது தன்னைத் தான் அறிகிறதோ அப்பொழுது மற்றொன்றில்லை. தன்னைத் தான் அறிய வேண்டுமென்றால், மற்றுள்ள தன்னுடைய பிராந்தை அதாவது பைத்தியச் செய்கைகளை விட்டு தன்னுடைய சக்தி தன்னில் தானே லயிக்கவேண்டும். அப்பொழுது தன்னைத்தானறியலாம். அச்சந்தர்ப்பத்தில் தானாய் தன் மயமாய்த் தீருகிறோம். அதற்கே கைவல்லியமென்று பெயர்.

அத்தியாயம் 19

சி: சுவாமி! முன் அத்தியாயத்தில் மதுபானத்தைப்பற்றிக் குற்றம் சொன்னீர்களல்லவா? ஆனால் மதுபானம் நிமித்தம் ஞானம் உண்டானதாகச் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். தவிர சக்தி பூஜையில் மதுபானம் செய்யாதிருக்க முடிவதில்லை யென்று சொல்லி வருகிறதும், அப்படியே நடந்து வருகிறதும் செய்கிறது. அப்படியிருக்க, அதைப்பற்றி விரோதம் சொல்லுவதன் காரணமென்ன?

கு: மதுபானம் கொண்டு யாருக்காகும் ஞான முண்டான தாகக் கேட்டிருக்கிறீர்?

சி: மலையாளத்தில் எல்லா ஜாதிகளுக்கும் வித்தியாப் பியாசம் கிடைப்பதற்கு வழி ஏற்படுத்திய கேரள குருவாகிய துஞ்சத்து ராமானுஜ எழுத்தச்சன் என்கிற மஹானுக்கும்.

கு: இது நீர் ஏதேனும் சாஸ்திரங்களைப் படித்ததோ அல்லது வேறு யாரேனும் சொல்லிக் கேள்விப்பட்டதோ?

சி: உலகவாசிகள் சொல்லக் கேட்டறிந்ததேயாகும்.

கு: அந்த மஹான் சாப்பிட்ட மது எப்படியுள்ளதாகு மென்று நீர் கேள்விப்பட்டிருக்கிறீர்?

சி: சாதாரணமாக உலகில் நடப்பிலுள்ள மது என்று சொல்லுகிற மத்யங்கள்.

கு: அவை என்னவெல்லாமாகும்?

சி: கள், சாராயம் முதலியனவாகும்.

கு: இவைகள் எப்படி உண்டாகின்றன?

சி: கள் என்பது தென்னை, பனை, ஈந்து முதலிய மரங் களினுடைய பாளைகளைச் சீவி எடுக்கின்றதும், அக் கள்ளைக் காய்ச்சி உண்டாக்குகின்றது சாராயமுமாகும்.

கு: ஆனால் நீர் சொன்ன விதத்திலுள்ள மதுவகைகளைத் துஞ்சத்து எழுத்தச்சன் என்கிற மஹான் சாப்பிட்டதில்லை. அந்த மஹான் சாப்பிட்டிருந்த மத்யம் எண்சாண் பனையின் தலையில் ஊறிய மத்யமாகும். அந்தப் பனையின் தலையென்பது ஜடத்தினுடைய ஏழு சாணுக்கு மேல் பாகமாகிய எட்டாவது சாணாகிய சிரசாகும். அந்த சிரசிலிருக்கின்றதாகும் மத்யம் அதாவது மது. அம் மதுவை லம்பிகா முத்திரையினால் பானம் செய்கிறதாகும். அதாவது லம்பிகா என்றால் லம்+ அம்பிகா. லம்=பிரகாசம். அம்பிகா = லோகமாதாவாகிய சக்தி. அந்தச் சக்தி தன்னுடைய சிரசினுள்ளில் அடங்கும் போது அமிர்தமிறங்கும். அதானது தன்னிலிருந்து வெளிக் குள்ளில் வியாபித்திருக்கின்ற சக்தி தன்னில் தானே லயித்து, திங்கி, விங்கி, அதாவது நிறைந்து, உப்பி வரும்பொழுது

சிரசிலிருக்கிற அமிர்தம் இளகுகின்றதாகும். அந்த அமிர்தத்தைப் பானம் செய்து சதா ஆனந்த மத்தனாகலாம். இந்தவிதமுள்ள மதுவையாகும் அந்த மஹான் சாப்பிட்டிருந்தார். இதை ஆலோசிக்காமலும், அறியாமலும், உலகவாசிகள் தப்பிதமாகக் கருதி கேரள குருவாயும், மஹாஞானியாயிருந்த, துஞ்சத்து எழுத்தச்சன் என்கிற ஜகத்குருவாகிய மஹானை நீர் சொன்னதான கள்ளும், சாராயமும் குடித்தாரென்று ஓர் அபவாதம் சொல்லி அந்த மஹானைக் குற்றப்படுத்தியும் அந்த மஹான் செய்ததை, நாங்களும் செய்யக்கூடாதோ என்று அஹம்பாவம் நடித்தும் அந்த மஹான் சாப்பிட்ட மதுவைத் தெரியாமல் புத்தியில்லாமலும் நீர் சொன்னதான கள்ளும் சாராயமும் குடித்தும் முன்னோர்கள் தேடிவைத்துள்ள முதல் அதாவது பொருள் நாசப்படுத்தி மிகவும் அயோக்கியர்களாகித் தங்களில் கலகம் செய்து, அடிதடியும் குத்தும், வெட்டும், காயமும் பட்டு வழக்கும் பிராதுமாய், அபராதம், சிறைத்தண்டனை முதலிய தண்டனைகள் அனுபவித்தும் வருகிறார்கள்.

தவிர நீர் சக்தி பூஜை செய்கிறதென்றும் அப்பொழுது மதுபானம் செய்பாதிருக்க முடியாதென்றும் சொன்னது உண்மையாகும். அதென்னவென்றால் சக்தியென்பது தன்னிலிருந்துண்டானதாகும். அந்தச் சக்தி வெளியினுள்ளில் வியாபித்ததனால் நானாவிதத்திலாய் ஜனங்கள் மோகாந்தகாரர்களாகி இருக்கிறார்கள். அவ்விதமுள்ள அந்தகாரத்தை நீக்குவதற்கு அந்தச் சக்தியை தன்னில்தானே சேர்க்கிறதாகும் வேண்டியது. அதைச் சேர்க்க வேண்டியது ஜீவனாகும். அந்த ஜீவன் சக்தியைப் பூஜிக்கின்றது. இதற்காகும் சிவன் சக்தியைப் பூஜிக்கிறதென்று சொல்லுகிறது. அது எவ்விதமென்றால் தன்னிலிருந்து வெளியினுள்ளில் வியாபித்து பின்னமாய் அதாவது வெவ்வேறாய்ப் பந்திக்கப்பட்டிருக்கின்ற தன்னுடைய சக்தியை அந்தப் பந்தத்திலிருந்து ஜீவனாகிய சிவன் வேறுபடுத்தி பிரம்மரந்திரத்தில் சேர்க்கின்றதாகும் "சக்தி பூஜை". அப்பிரகாரம் பூஜிக்கும்பொழுது மத்தகத்திலுள்ளதாகிய மது இறங்கி, அந்த மதுவையாகும் மஹான்கள் பானம் செய்தது. இதனால்தான் சக்தி பூஜையில் மதுபானம் செய்பாதிருக்க முடியாது என்று சொல்லக் காரணம். இவ்விதமாகும் சக்தி பூஜை. இதனை யறியாமல் சக்தி பூஜை என்று சொல்லி ஆடு, கோழி, முதலியவைகளைக் கொன்று அவைகளுடைய ஜீவனை நசிப்பித்து, அந்தப் பிணங்களை சமையல் செய்து, அப்பம், வடை, கட்டு முதலியவைகளை உண்டாக்கியும், மதுவென்று சொல்லி கள்ளும் சாராயம்

முதலியவைகளைக் கொண்டு வந்து ஒரு அறைக்குள்ளில் பீடம், விளக்கு முதலானவைகளை வைத்து, மேல்சொன்ன பிணம் முதலியதுகளைக் கொண்டும் மற்று முண்டாக்கினவைகளையும், மேல்சொன்ன பீடத்தின் சமீபம் வைத்து, பூஜை செய்கிற தென்று சங்கல்பித்து, சில புஷ்பங்களைப் பீடத்தின்மேலும் மேல்சொன்ன சாமான்களின் மேலும் வாரி இறைத்து, பூஜை செய்து முடித்து, மேல்சொன்ன பிணத்தையும் கூட்டு முதலிய பலஹாரங்களையும் வயிறு நிறைய தின்றும், கள் சாராயம் முதலியவற்றைக் குடித்தும், உணர்வில்லாமல் விழுந்து, கை, கால் ஒடிந்தும், பல், உதடு காயப்பட்டும் பாதொரு விபரமு மில்லாமலாகிப் போகின்றார்கள். அப்படி செய்வதற்குச் சக்தி பூஜை என்று சொல்ல முடியாது. ஆனால் உண்மை சக்தி பூஜை மேல் சொல்லப்பட்ட பிரகாரத்திலாகும். அவ்வித மூள்ள பூஜையாகும் செய்யவேண்டியது. அந்தப்படி தன் னுடைய சக்தியை யாரொருவர் தன்னில் லபிப்பதற்காகப் பூஜிக் கின்றாரோ, அவருக்குத் தன்னிலிருந்துண்டாகின்ற மதுவை பானம் செய்து ஆனந்தமத்தனாய், சர்வக்ஞனாக இருக்கலாம். அந்த மதுவுக்குத்தான் அமிர்தமென்று சொல்லுவது. இப்படிச் சொல்லிய மதுவைத்தான் முன்சொன்ன மஹான் சாப்பிட்டிருந்தது. நீர் சொன்ன கள்ளும் சாராயமுமல்ல,

அத்தியாயம் 20

சி: சத்குருவே! உலகில் நான்கு மதங்களுண்டென்று சொல்லுவதும், அதற்கனுசரித்து ஜனங்கள் நடந்தும் வருகிறார்கள். அது எவ்விதம் உண்டானதாகும்?

கு: எவை எவையாகும் நான்கு மதங்கள்?

சி: இந்துமதம், புத்தமதம், கிறிஸ்துமதம், முஹம்மதிய மதம் இவைகளாகும்.

கு: அதில் நாம் எம்மதஸ்தர்களாகும்?

சி: இந்துமதஸ்தர்களாகும்.

கு: நாம் இந்துமதக்காரர்களென்பதற்கு ஆதாரம் என்னவாகும்?

சி: ஈஸ்வர சேவை முதலியது சரிவர நாமேசெய்து வருகிறோம். அதனாலாகும் நமக்கு இந்துமதஸ்தரென்று பெயர்.

கு: இதுவரையிலும் நாம் ஈஸ்வர சேவை செய்திருக்கிறோம் என்று இப்பொழுது உமக்கு தோன்றுகிறது உண்டா?

சி: இதுவரையில் செய்ததுபற்றி ஆலோசிக்கும் பொழுது நாம் ஈஸ்வர சேவை செய்யவே இல்லை.

கு: ஈஸ்வர சேவை செய்யாதவர்களை இந்துக்களென்று சொல்ல இடமுண்டோ?

சி: சொல்ல இடமில்லை.

கு: ஆனால் உலகத்தில் நானுமதங்களுண்டென்று சொல்லுகிறது பைத்தியத்தனமாகும். ஏனென்றால் மதங்கள் முதலியது யாதொன்றுமில்லை. அப்படி உண்டென்று சொன்னால் 'தானே' ஒரு மதமல்லால் வேறு மதமில்லை. அந்த ஓரே மதத்திற்காகும் ஈஸ்வர மதம் என்று பெயர். அதனால் உலகத்தில் ஈஸ்வர மதமான ஏகமதமல்லால் வேறே மதமில்லை. இந்துமதம் என்பது இந்துமதமாகும். இந்து அதாவது இந்து என்பது சந்திரனாகும். மதம் என்பது ஸ்தாபனமாகும். எதையாகும் ஸ்தாபிக்கவேண்டிய தென்றால் சந்திரனையாகும். சந்திரன் என்பது மனமாகும். அந்த மனமாகின்ற சந்திரனை ஈஸ்வரனாயிருக்கின்ற ஜீவனில் ஸ்தாபிப்பது அதாவது நிறுத்துவது இந்துமதம். இவ்விதம் யாதொருவர் செய்கிறாரோ அவர் இந்துமதஸ்தராகும். இவ்விதமல்லாதவர்; இந்துமதக்காரராகும், புத்தமதக்காரராகும், கிறிஸ்துமதக்காரராகும், மஹம்மதிய மதக்காரராகும் என்று அபிமானிக்கிறதல்லாமல், மதத்தைப்பற்றிய யாதொரு அறிவும் உள்ளவரல்ல, யாதொரு மதஸ்தருமல்ல. அது எவ்விதமென்றால் இந்துமதக்காரரென்று அபிமானித்து வருகின்றவரில் பட்டவரும் எழுபத்

திரண்டு அடி விலகி நிற்கவேண்டிய வருமான நாயாடி என்கிற ஒரு ஜாதிக்காரருண்டு. அவருக்குப் பொது ரஸ்தாவிலும், மற்றும் நடக்க விடாமல் மேல் பிரகாரம் தூர நிறுத்தி கஷ்டப் படுத்தி சர்க்கார் பாதையில் கூட நடக்கமுடியாமல் வந்ததன் நிமித்தம் மகம்மது மதஸ்தர்கள் என்று அபிமானித்து வருகிற வர்களுடன் சேர்ந்து பல, கைத்தொழில்கள் செய்து உப ஜீவனம் செய்து வருவதும் அவர் மகம்மதியர்கள் என்றபி மானித்து வருகிறதும் செய்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு மகம்மது மதத்தைப் பற்றிய யாதொரு அறிவுமில்லை. அவர் களுக்கு மகம்மது மதத்தில் அதிகப்பட்டால் மூன்றவார்த்தை கள் தெரியும் அதாவது "ஹல்லா" "ஹல்லாஹு" "பிஸ்மில்லா" இவைகளாகும். இந்த வார்த்தைகளினுடைய பொருள்களாக ட்டும், மகம்மது மதத்தைப்பற்றிய யாதொரு தத்துவத்தை யாகட்டும் அறியாமல் மேல் சொன்ன வார்த்தைகளை மாத்திரம் உச்சரித்துக்கொண்டு நான் முகம்மதியனாகும் என்று அபிமானித்து நடக்கிறார்கள். இவ்விதத்தில்தான் எல்லா மதஸ்தர்களும் மதத்தினுடைய யாதொரு பொருளுமறியாமல் நான் இந்துமதமாகும், புத்தமதமாகும், கிறிஸ்துமதமாகும், முகம்மதிய மதமாகும் என்று அனுசரித்திருக்கிறதென்று, முன்சொன்ன நாயாடி அபிமானித்து நடக்கிறதுபோல அபி மானித்து நடக்கின்றதல்லாமல் மதங்களைப்பற்றி யாதொரு தத்துவபோதமோ, அறிவோ, கிரஹிக்கவோ அவருக்கு இருக்க வில்லை. உண்மையில் ஆலோசித்தால் இவ்வகை யாதொரு மதமும் இல்லாததாகும். எல்லாம் மேல்சொன்ன ஈஸ்வர மதமாகும். அவ்விதமுள்ள ஈஸ்வர மதத்தை அறியாமலிருந்த ஒரு காலத்தில் புத்தன் என்கிற ஒரு மஹான் உண்டாகியும், அவர் ஈஸ்வர மதத்தினுடைய தத்துவத்தைக் கிரஹித்து, ஈஸ் வர விசாரணை செய்யவேண்டியதற்குள்ள உண்மை மார்க்கத்தை ஸ்தாபிக்கவும் செய்தார். அதற்கு அந்த மஹான் ஒரு புரோஹிதராக இருந்தார். அப்புரோஹிதராகிய புத்தர் என்கிற மகான் ஸ்தாபித்ததன் நிமித்தம் அதற்கு அவருடைய பெயரை அனுசரித்து புத்தமதம் என்ற பெயருண்டாயிற்று. அம்மஹான் ஸ்தாபித்துள்ளது ஈஸ்வர மதமாகும். புத்தமத மல்ல. அம்மஹானுடைய பெயர் புத்தரென்பதாயிருந்தது கொண்டு இப்பொழுதும் அதற்குப் புத்த மதமென்று சொல்லி வருகிறது. ஆனால் அந்த மஹானுக்குப் புத்தரென்றல்லாமல் சுக்கிரனென்ற பெயராயிருந்தால் அவரால் ஸ்தாபிக்கப்பட்ட மதத்திற்கு என்ன மதமென்றாகும் பெயர் சொல்லுவது?

சி: சுக்கிர மதமென்றாகும்.

கு: அப்பொழுது புத்த மத மென்கிற ஒரு மதம்

உண்டாகுமோ?

சி: இல்லை.

கு: இதே பிரகாரத்தில்தான் ஒரு காலத்தில் கிறிஸ்து என்கிற ஒரு மஹான் உண்டாகியும், இன்னொரு காலத்தில் முஹம்மது என்கிற ஒரு மஹான் உண்டாகியும் அவர்களும் ஈஸ்வர விசாரணை செய்யவேண்டியதற்குள்ள நியாயமான ஒரே மார்க்கத்தை ஸ்தாபித்தார்கள். அதுவும் மேல் சொன்ன ஈஸ்வர மதமாகவே இருந்தது. அவ்விதம் ஈஸ்வர மதத்தை ஸ்தாபிப்பதற்கு மேல்சொன்ன மஹான்கள் ஓரோர் புரோகிதராய்த் தீர்ந்தார்கள். அந்தப் புரோகிதர்களாகிய கிறிஸ்து என்கிற மஹானும், முஹம்மது என்கிற மஹானும், ஸ்தாபித்ததன் நிமித்தம் கிறிஸ்து மதமென்றும், முஹம்மது மதமென்றும் பெயர்களுண்டாயிருக்கின்றன. அம் மஹான்களுடைய பெயர்களுக்கு அனுசரித்தாகும் அம்மதங்களுக்கும் தனித்தனியாகப் பெயர்கள் வரக்காரணம். கிறிஸ்து என்ற மஹானுக்கு ஜியார்ஜு என்றும், முகம்மது என்ற மகானுக்கு சேக்குட்டி என்றும் பெயர்களிருந்திருந்தபோனால்; அந்த மதங்களுக்கு இப்பொழுது என்னவாகும் பெயர்கள் சொல்லவேண்டும்?

சி: ஜியார்ஜ் மத மென்றும், சேக்குட்டி மதமென்றும் ஆகும்.

கு: அப்பொழுது மேல்சொன்னதான மதங்கள் உண்டோ?

சி: இல்லை.

கு: ஆனால் மதங்களுக்கு எதை அனுசரித்து வித்தியாசமான பெயர்கள் உண்டாயின?

சி: குருநாதன்மார்களுடைய பெயர்களை அனுசரித்தாகும்.

கு: ஆனால் குருநாதன்மார்களாகிய அந்த மஹான்கள் எந்த மதத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள்?

சி: ஈஸ்வர மதத்தையேயாகும்.

கு: அப்பொழுது எத்தனை மதங்களிருக்கும்?

சி: ஈஸ்வர மதம் என்கிற ஒன்றுமாத்திரம்.

கு: ஆனால் ஈஸ்வர மதமென்கிற ஒரே ஒரு மதமல்லாமல் வேறு யாதொரு மதமுமில்லை. அப்படியுள்ள ஈஸ்வர மதத்தை இன்னதென்றறியாமல் அநேக கட்டிடங்களைக் கட்டிவைத்து அவைகளுக்குத் தேவாலய மென்றும், சர்ச்சு அதாவது மாதாக் கோயிலென்றும், பள்ளிவாசலென்றும் சொல்லிக்கொண்டு அவைகளில் சிலதில் பொம்மைகளை ஸ்தாபித்து, அவைகளை ஈஸ்வரனென்று சங்கல்பித்து அவ்விடங்களில் புத்தியில்லாதவர்களாகி ஜீவகாருண்யமில்லாமலும், க்ரூர குணமுடையவராய்

காபலி யென்றும், அஸ்வபலியென்றும், அஜபலியென்றும் குக்குட பலியென்றும் மற்றும் சொல்லி, மனிதரென்றும், குதிரை யென்றும், ஆடுயென்றும், கோழியென்றும் அபிமானித்து வருபவைகளையும், மற்றும் பல ஜீவிகளையும் அறுத்து அதிகடினமான கொரேச் செயல்களைச் செய்து கொண்டிருக்கும் காலங்களில் மேல் சொன்ன மகான்கள் உண்டாகியும், அவர்களுக்குப் புத்தி சக்தியுண்டாயிருந்ததால் இதனுடைய உண்மையை ஆலோசித்துத் தெரிந்து உலகத்தில் மிகவும் திரேகப்பிரயாசை அனுபவித்தும், கஷ்டப்பட்டும் மேல் சொன்ன கொலைகள் தப்பிதமென்றும், உண்மையான மார்க்கம் இன்னதாகுமென்றும், அதாவது உலகம் என்பது தன்னுடைய சக்தியிலிருந்து உண்டானதென்றும், அந்தச் சக்தியைத் தன்னில் தானே லபிக்கச் செய்யவேண்டியதென்றும், அதாகும் உண்மையென்றும், மற்றவை யெல்லாம் தவறுதலாகுமென்றும் அவர்கள் ஸ்தாபித்திருக்கின்றார்கள். அதனால் உலகத்தில் எந்தெந்த மகான்கள் உண்டாகியிருந்தார்களோ அவர்கள் எல்லாம் சொன்னது முன்சொன்ன ஒரே மார்க்கந்தானாகும். அந்த மார்க்கத்தையாகும் இப்பொழுது நாம் உமக்குக் காண்பித்துக் கொடுத்திருப்பதாகும். இதாகும் உண்மை.

அத்தியாயம் 21

சி: சுவாமி! பிரம்மோபதேசமாகும் மோக்ஷம் கிடைப்பதற்கு வேண்டுமென்றும், அது மஹா வாக்கியங்களாகிய சதுர் வாக்கியங்கள் அதாவது நான்கு சொற்கள் என்றும் உலகத்தில் சொல்லி வருகிறார்கள். நான்காம் அத்தியாத்தில் இதைக் கண்டிக்கவும் அதாவது மறுக்கவும் செய்திருக்கிறீர்களல்லவா? ஆனால் சதுர் வாக்கியங்களினுடைய உண்மை என்ன வென்று அருள் புரியும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கு: சதுர் வாக்கியங்களென்பது என்னென்னவாகும்?

சி: "பிரக்ஞானம் பிரம்மம்," "அஹம்பிரம்மாஸ்மி," "தத்வமஸி," "அயம் ஆத்மா பிரம்மம்" என்பவைகளாகும்.

கு: இந்தச் சதுர் வாக்கியங்கள் என்ன செய்யவேண்டுமென்றாகும் உபதேசிக்கின்றது?

சி: அவைகளின் பொருள்களை அறிந்து மனனம் செய்துகொண்டிருக்க வேண்டுமென்றாகும் உபதேசிக்கிறது.

கு: ஆனால் இந்த நான்கு வாக்கியங்களின் பொருள் என்ன வாகுமென்று நீர் கருதியிருக்கின்றீர்?

சி: ""பிரக்ஞானம் பிரம்மம்" என்றால் பிரகர்ஷிக்கப் பட்ட அறிவு. அதாவது வேறிட்டு, வேறிட்டு, அறியப்படுகிற அறிவுகளெல்லாம் பிரம்மமாகுமென்றும், "அஹம்பிரம்மாஸ்மி" என்றால் நான் பிரம்மமாய் பவிக்கின்றேன் என்றும், "தத்வமஸி" என்றால், அது நீயாகி பவிக்கின்றதென்றும் "அயம் ஆத்மா பிரம்மம்" என்றால், இந்த ஆத்மா பிரம்மமென்றாகும்" என நான் கருதியிருக்கின்றேன்.

கு: இவ்வாக்கியங்களினுடைய மேல் சொன்ன பொருள்களை மனனம் செய்வதால் மோக்ஷம் கிடைக்குமா? அப்படிச் செய்கிறதெப்படியென்றால் கற்கண்டு என்னும் ஒரு பொருளைப் பற்றி கீழே சொல்லும் விதம் தியானம் செய்கிறது போலாகும். அதாவது கற்கண்டு என்னும் பொருளொன்று உண்டு, அது இனிப்புள்ளது, வெள்ளை நிறமானது, அது தின்பதற்கு நல்லது என்கிற நான்கு வாக்கியங்களை தியானித்திருந்தால், கற்கண்டு இன்னதென்றறியவோ அதன் இனிப்பு தெரிகிறதற்கோ, அதன் நிறத்தைப் பார்க்கவோ, அதன் ருசியை உணரவோ அந்த எண்ணங்கள் கற்கண்டாக வருவதற்கோ முடியுமா?

சி: அது ஒருக்காலும் முடிகிறதல்ல. அதை அனுபவித்தால் மாத்திரமே அதனுடைய நிலைமை அறிய முடியும்.

கு: ஆனால் மகா வாக்கியங்களை நீர் சொன்ன பிரகாரம் பொருள் விசாரம் செய்கிறது கொண்டு ஒருக்காலமும் பிரம்மத்தை அறிகிறதில்லை. தவிர இந்தவாக்கியங்களினுடைய பொருள் நீர் சொன்ன பிரகாரமுமல்ல. "பிரக்ஞானம் பிரம்மம்" என்றால் பிரதிபலிக்கப் பட்டிருக்கின்ற அறிவு பிரம்மமென்றாகும். அதாவது தன்னிலிருந்து பிரதி பிம்பிக்கப் பட்டிருக்கின்ற வஸ்துக்களை அறிகின்ற அறிவு எதோ அது பிரம்மம். அது எப்படி யென்றால், காதுகளினால் கேட்டறிகிறதும், கண்களினால் பார்த்தறிகிறதும், மூக்கினால் முகர்ந்தறிகிறதும், நாவினால் ருசித்தறிகிறதும், தொக்கினால் அதாவது தோலினால் தொட்டறிகிறதுமாகின்ற இந்த ஐந்து நிலைமையில் அறிகிறதற்குள்ள காரணமாகிய அறிவாகும் பிரம்மம். இந்த ஐந்துவித துவாரங்களல்ல அறிகின்றதென்று பதினாறும் அத்தியாயத்தில் சொல்லப் பட்டிருக்கிறதல்லவா? அந்த அறிவு எது வென்றால் மனமாகும். அந்த மனம் தன்னிலிருந்து பின்னமாகி வெளியினுள்ளில் பல விதத்திலும் பிரகாசிக்கப் பட்டிருக்கிறது. அந்தப் பிரகாசம் தன்னுடைய மனது பிரதிபலிக்கின்றது அதாவது பிரதி பிம்பிக்கின்றதாகும். அப்படி பிரகாசித்திருக்கின்ற மன சக்தி பின்னமின்றி தன்னில் தானே அடங்கி நிற்கின்றதற்காகும் 'பிரக்ஞானம் பிரம்மம்" என்று சொல்லுகிறது. ஆகையினால் தன்னிலிருந்து பிரதி பிம்பிக்கப் பட்டிருக்கின்ற பிரகாசம் தன்னில் தானே சலிக்காதே அதாவது அசைவுபடாமல் வரும் பொழுது "பிரக்ஞானம் பிரம்மம்" என்பதான தியானமோ, தியானிப்பதற்கு மற்றொன்றோ இல்லை.

"அஹம்பிரம்மாஸ்மி" என்றால் அகாரமாயிருக்கிறவெளியினுள்ளில் தானாயிருக்கின்ற பிரம்மம், "ஹம்" என்ற பிரகிருதி அதாவது இயற்கை தன்னிலிருந்து மாயையாய்ச் சலித்துக் கொண்டிருக்கின்ற சலனம் இல்லாமல், உத்பத்தி ஸ்தானமாகிய தன்னில்தானே அடங்குகிறதற்காகிறது. அந்தச்சந்தர்ப்பத்தில் "அஹம்பிரம்மாஸ்மி" என்கிற தியானமோ தியானிப்பதற்கு மற்றொன்றோ இல்லை. "தத்வமஸி" என்றால் தத்+துவம்+ அஸி. தத் என்றால் பிரம்மம். துவம் என்பது நீ அதாவது "ந" என்பது சூன்யமும், "ஈ" என்பது சக்தியும், அதாவது தானாயிருக்கின்ற சக்தி தன்னிலிருந்து வெளியினுள்ளில் சலித்து வியாபித்து நசித்துக் கொண்டிருக்கிற மன:சக்தி. அஸியென்றால் பவிக்கின்றது. அதாவது ஆகின்றது என்றும் பொருள் படுகிறது. தத்வமஸி என்பது, தத் என்னும் பிரம்மத்திலிருந்து த்வம் அதாவது நீ என்னும் மன:சக்தி வெளியினுள்ளில் வியாபித்து நானாவிதமாக சலித்துக் கொண்டிருப்பது

சலிக்காமல் பிரம்மத்தில் லயித்திருக்கின்ற நிலைமையாகும். அந்தச் சமயத்தில் நானுவிதத்தில் சலித்துப் பிரமித்துக்கொண்டிருக்கிற மனःசக்தி பிரம்மமாய்த் தீருகிறது. அப்பொழுது தத்துவமஸி என்கிற தியானமோ, தியானிப்பதற்கு மற்றென்றோ இல்லை.

"அயம் ஆத்மா பிரம்மம்" என்றால் அயம்+ஆத்மா+பிரம்மம். அயம் = இ, ஆத்மா = ஆத்மா, பிரம்மம்=பிரம்மம் எனவும் பொருள்படுகிறது. அயம் என்பது இ என்கிற சக்தி. அந்தச் சக்தி வெளியினுள்ளில் நானுவிதத்தில் பிரவேசித்து பிரகாசித்துக் கொண்டிருக்கிறதாகும். அப்பிரகாசம் வெளியினுள்ளில் பிரகாசிக்காமல் தன்னுள்ளிலிருக்கின்ற ஆத்மாவில் பிரகாசித்துச் சலனமில்லாமலிருக்கின்ற நிலைமையாகிறது. அப்பொழுது அயம் ஆத்மா பிரம்மம் என்ற தியானமோ தியானிப்பதற்கு மற்றென்றோ இல்லை.

ஆனால் இந்த நான்கு வாக்கியங்களை பிரம்மோபதேசமாகத் தியானிப்பதற்குச் சொல்லப்பட்டனவல்ல. இவ்விதமாகும் பிரம்மத்தினுடைய நிலைமை என்று அறியும் பொருட்டாகும் சொல்லப்பட்டிருக்கின்றது. இதல்லாமல் பிரம்மத்தினுடைய நிலைமை அறிவதற்கு இரண்டு வாக்கியங்கள் அதாவது இரண்டு சொற்களும்கூட உண்டு. அதில் ஒன்று "பிரம்மஜோதிரஹம்" என்றாகும். அதாவது பிரம்மம்+ஜோதிஸ்+அஹம் அதாவது தான்தானேபிரம்மஜோதிஸ் என்று பொருளாகிறது. அந்த பிரம்மஜோதிஸ் ஆகாசமான வெளியினுள்ளில் "ஹம்" என்ற பிரகிருதியாகி பின்னமாய் அதாவது வேறாய் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. அந்தப்பிரகாசம் பின்னப்படாமல் ஓரே பிரகாசமாகி ஆதியந்த விஹீனமாய் அதாவது அடிமுடியில்லாததாய் தன்னிலடங்குகிற நிலைமையாகும். அப்பொழுது பிரம்மஜோதிரஹம் என்கிற தியனமோ, தியானிப்பதற்கு மற்றென்றோ இல்லை.

ஆறாவது வாக்கியம் "பிரம்ம ஸத் ஜகத்மித்யா" என்றாகும். அதாவது பிரம்மம்+ஸத்+ஜகத்+மித்யா. அதானது தானாயிருக்கின்ற பிரம்மம் தன்னிலிருந்துண்டாயிருக்கிற சலனம் தன்னில் லயித்து ஆதியந்தவிஹீனமாய் அதாவது அடிமுடியில்லாததாய்த் தானாய், தன் மயமாயிருக்கின்ற நிலைமையாகும். அப்பொழுது பிரம்மம் மாத்திரமாகிறது. அச்சமயத்தில் பிரம்மம்ஸத்ஜகத் மித்யா என்னும் தியானமோ தியானிப்பதற்கு மற்றென்றோ இல்லை. இதல்லாமல் நானுவிதத்திலுள்ள மந்திராதிகளைக் கொண்டும் மும்மூர்த்திகளென்றும் சங்கல்பித்து தியானிக்கிறதுகொண்டும், பலவிதத்திலுள்ள விரதாதிகள் அனுஷ்டித்து பட்டினியிருந்து ரோகம் கொள்ளுவதினாலேயோ, பல ஜீவ

வதைகள்செய்து யாகம் ஓமங்களென்று சொல்லி ஒவ்வொன்று செய்வது கொண்டும் சக்தி பூஜை என்று சொல்லி பூஜை செய்து, கள், சாராயம், பிணம் முதலியதுகளைத் தின்றும் தலை சுற்றி, நினைவு தடுமாறி விழுந்து, பல், உதடு, முதலியவை களைக் காயப்படுத்திக் கொள்ளுவது கொண்டும், காசி, ராமேஸ்வரம் முதலிய இடங்களுக்காமென்று நினைத்து, ஒவ்வோரிடங்களில் சுற்றித்திரிந்து, நடந்து, அலைந்து, ரோக மடைந்து, புத்திமுட்டி அதாவது கஷ்டப்பட்டு, கெங்கா ஸ்நானமென்றும், சேதுஸ்நானம் என்றெண்ணி ஒவ்வோர் ஆறுகளிலும், உப்புஜலம் நிறைந்த சமுத்திரங்களிலும், மற்றும் குளித்து ஸ்நானம் செய்து, சொறி, சிரங்கு, முதலானதுகளை அடைவது கொண்டும் கைவல்லியம் கிடைக் கிறதில்லை. இவ்விதம் செய்வதுகொண்டு தன்னுடைய ஜீவ சக்தி அதோகதியாய் நசித்துப்போகிறதல்லாமல் தன்மயமாய்த் தீருகிறதில்லை. தன்மயமாகவேணுமானால் முன் சொல்லிய பிரகாரம் தன்னுடையசக்தி தன்னில் தானே லயிக்கவேண்டும். இதல்லாமல் வேறே யாதொரு வழியுமில்லை.

அத்தியாயம் 22

சி: குருவே! இதுவரையிலும் ஷடாதாரங்களைப் பற்றி யாதொன்றும் சொல்லவில்லை. ஷடாதாரங்களைக் கடந்து ஜீவன் பிரம்மரந்திரத்தில் ஐக்கியப்பட்டால் மாத்திரமே மோக்ஷ மென்று சொல்லுகிறார்கள். இதனுடைய பொருள் என்ன வென்று விவரமாகச் சொல்லித்தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கு: ஷடாதாரங்கள் என்பது எவையாகும்? அவைகளி னுடைய பெயர்களென்னவெல்லாமாகும்?

சி: மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநா ஹதம், விசுத்தி, ஆக்ஞா இவைகளென்ற சொல்லுகிறார்கள்.

கு: இந்த ஆறு ஆதாரங்கள் எந்தெந்த நிலைமையில் ஆகு மிருக்கிறது.

சி: மூலாதாரம் என்பது குதமாகும். அதாவது இது வரையிலும் குதமென்று சொல்லி வந்திருக்கிற மலத் துவாரத் தோடு தொட்டு மேலேயிருக்கிறது. சுவாதிஷ்டானமென்பது இதுவரையில் லிங்கமென்று சொல்லிவருகிற மூத்திரத் துவாரத்தினுடைய அடியிலிருக்கின்றது. மணிபூரகம் என்பது இதுவரையில் நாபி என்று சொல்லி வருகிற தொப்புளடியோடு சேர்ந்திருக்கிறதாகும். அனாஹதம் என்பது இதுவரையில் இருதயமென்று சொல்லி வந்திருந்த மார்பினுடைய மத்திய மான, அதாவது நடுவிலான நெஞ்சுக் குழியிலாகும். விசுத்தி என்பது இதுவரையில் கண்டம் என்று சொல்லி வந்திருந்த தொண்டைக் குழியிலாகும். ஆக்ஞா என்பது லலாடமா யிருக்கின்ற புருவமத்தியமாகும்.

கு: இவ்விதத்திலுள்ள ஆறு ஆதாரங்களும் மேலே சொல்லி வந்த இடங்களில் எவ்விதத்திலாகு மிருக்கிறதென்று உம்முடைய நம்பிக்கை?

சி: அவைகள் ஒவ்வொன்றும் படிப்படியாய் மேலே மேலே இருக்கின்றதென்றும், அவைகளில் ஒவ்வொரு படியாகிய ஆதாரம், கடந்து, கடந்து பிராணன் பிரம்மரந்திரத்தில் சென்று சேருகிறதாகுமென்று என்னுடைய நம்பிக்கை.

கு: அப்படியானால் முதலாதாரமெது?

சி: மூலாதாரம்.

கு: மூலாதாரமெங்கே யிருக்கிறது?

சி: மூலமாயிருக்கின்ற மலத் துவாரத்தோடு சேர்ந்திருக் கிறதனால் அதற்கு மூலாதார மென்று சொல்லுகிறது.

கு: ஆனால் பிராணன் நமக்கு உள்ளிலோ, வெளியிலோ இருக்கிறது?

சி: பிராணன் உள்ளிலாகு மிருக்கின்றது.

கு: உள்ளிலிருக்கின்ற பிராணனை மலத் துவாரம் வழியாய் கடத்திக்கொண்டு போகின்றது எவ்விதத்திலாகும்? அதுவு மல்லாமல் தாங்கள் சொன்ன பிரகாரம் மலத் துவாரம்தான் மூலாதாரம் என்பதானல் அந்த வழியாக ஜீவனைப் பிரம்ம ரந்திரத்தில் கொண்டுபோக வேண்டுமானல் நமது உள்ளில் உள்ள ஜீவனை வெளியில் விட்டு அல்லாமல் முன் சொன்ன மலத் துவாரத்தின் வழியாக மேலே கொண்டுபோக முடியுமா?

சி: முடியாது.

கு அவ்விதம் உள்ளில் உள்ள ஜீவனை வெளியில் விட்டால் என்னவாகும்?

சி: சவம் அதாவது பிணமாய்ப் போகும்.

கு: அப்பொழுது நீர் சொன்னதான மலத் துவாரம் என்பதுதான் மூலாதாரம் என்றால் உள்ளில் இருக்கும் ஜீவனை வெளியில் விட்டால் சவமாய்ப் போகும் என்று நீரே சொன்னீர். அப்படியிருக்க மூலாதாரம் மலத் துவாரமா யிருப்பதற்கு வழியுண்டா?

சி: வழியில்லை.

கு: அதுவுமன்றி ஆதாரங்கள் ஒவ்வொன்றும் மேலே மேலே அடுக்கடுக்காய் இருக்கின்ற தென்றும் அவைகளில் பிராணன் ஒவ்வொன்றும் கிரமப்படித் தாண்டித் தாண்டி பிரம்மாந்திரத்தில் சேரவேண்டும் என்று சொல்லியிருக்கிற தல்லவா? அது நம்முடைய மலத் துவாரம் முதல் பிரம்மாந் திரம் வரை அடுக்கடுக்காய் இருக்கிறதில்லை என்பதைக் குறித்து உதாரணம் சொல்லுகிறேன். அதாவது தனியாக ஏதாகிலும் ஒரு வழியாகப் போகும்போது திடீர் என்று நமக்குத் தெரியாமல் ஒரு வெடிச் சத்தமோ, வேறோ கேட்டு நாம் திடீர் என்று பயப்படும்போது நம் ஜீவன் என்னவாகிறது?

சி: அப்பொழுது நமது ஜீவன் திடீர் என்று மேலே ஏறிப்போகிறது.

கு: அது எவ்விடமிருந்து ஏறிப்போகிறது: நமது உள்ளில் இருந்தோ? வெளியில் இருந்தோ?

சி: நமது உள்ளில் இருந்தேதான்.

கு: அப்படி உள்ளில் இருக்கின்ற ஜீவன் திடீரென்று மேலே ஏறிப்போனல் அவர் எந்த நிலையில் இருப்பார்?

சி: அவருக்கு யாதொன்றும் தெரியாமல் யாதொரு உணர்வும் தெளிவுமில்லாமலும் விழுந்து கிடப்பார்.

கு: அதற்குக் காரணம் என்ன?

சி: ஜீவன் மேலே போனதினல்.

கு: அப்பொழுது நமக்கு மலத்துவாரம் முதல் ஆறு ஆதாரங்கள் அடுக்கடுக்காய் மேலே போவதற்கு இருந்ததானால் நாம் பயப்பட்டு ஜீவன் மேலே ஓடிப் போகும்போது நீர் மேல் சொல்லிய ஆதாரங்கள் ஒன்றுமே காணுவதற்கில்லையல்லவா? அப்படியிருந்திருக்குமானால் ஜீவன் அவைகளைத் தட்டித் திறந்திருக்கவேண்டுமல்லவா? அதுவும் உண்டாகவில்லையல்லவா? அதுவுமன்றி நாம் தூங்கும்போது நம்முடைய ஜீவன் நமது உள்ளிலேயே கதாகதம் அதாவது நடனம் செய்துகொண்டிருந்தது. அதற்குத்தான் "சமீரணன்" என்று பெயர். சமீரணனைப்பற்றி முதல் அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் சமீரணன் உள்ளிலேயே மேலும் கீழும் கதாகதம் அதாவது நடனம் செய்து பிரம்மரந்திரத்தோடு தாக்கிக் கொண்டிருக்கின்ற கதியாகும். அப்பொழுதும் ஆராதாரங்கள் அடுக்கடுக்காய் உள்ளதாகக் காண்கிறதோ, அறிகிறதோ இல்லை. தவிர மூலம் என்றால் என்ன?

சி: மூலம் என்பது தூர் அதாவது அடி அதாவது உத்பத்தி ஸ்தானம்.

கு: அப்படியானால் நம்முடைய தூர் எது?

சி: மேல்சொல்லிய மூலமாயிருக்கிற மலத்துவாரமாகும்.

கு: இது மிகவும் தப்பிதமாகும். மூலம் என்பது தூரா கின்றது. அது முதலிலுண்டாகின்ற ஸ்தலமாகும். அதை மலத்துவாரமென்று சொல்வதற்கு ஒரு பொழுதும் முடியாது. மலத்துவாரம் முதற்கு ஒரு சிருஷ்டி உண்டாகிறதில்லை. அதற்கு உதாரணம் என்னவென்றால் ஸ்திரீகள் பிரசவிக்கின்றதானால் குழந்தையினுடைய மலத்துவாரம் முதலில் வெளியே வருகிறதுண்டோ?

சி: இல்லை.

கு பின் எந்தப் பாகமாகும் முதலில் வெளி வருகிறது?

சி: சிரசு அதாவது தலை.

கு: ஆனால் மலத்துவாரத்திலிருந்து தொடங்கி சிருஷ்டியானதென்றால், மலத்துவாரமல்லவா முதலாக வெளியே வரவேண்டியது? என்றால் அது அல்ல. மூலமென்பது தூர்மூலம். அது நம்முடைய சிரசாகின்றது. நம்முடைய சிருஷ்டி சிரசிலிருந்து ஆரம்பிக்கின்றதாகும். சிரசில்லாதிருந்தால் யாதொன்றுமில்லை. அதுவுமல்லாமல் நாம் ஒரு உருவம் எழுதுவதானால் அதனுடைய எந்தப் பாகமாகும் முதலில் எழுதுகிறது.

சி: முகம்.

கு: அப்பொழுது மூலம் எதாகும்?

சி: சிரசு.

கு: அதல்லாமல் விருக்ஷம் முதலியபவைகள் எங்கே நிற்கின்றன?

சி: பூமியில்.

கு: அவ்விருக்ஷம் முதலியபவைகளினுடைய உத்பத்தி எதிலிருந்து?

சி: வித்திலிருந்து.

கு: வித்தின் எந்தப் பாகத்திலிருந்து முளைக்கிறது?

சி: வித்தினுடைய முகத்திலிருந்து.

கு: வித்தினுடைய முகம் மேல் பக்கமோ, கீழ் பக்கமோ இருக்கிறது?

சி: மேல் பக்கத்தில்.

கு: ஆனால் உலகத்திலிருக்கிற சர்வ சராசரங்களினுடைய உத்பத்தி எந்தப் பாகத்திலிருந்து?

சி: மேல் பக்கத்திலிருந்து.

கு: அப்பிரகாரம் உண்டாகி பூமியிலிருக்கின்றதாகிய தாவரங்கள் ஆகாரத்தையும், தண்ணீரையும் எந்தப் பாகத்தினால் எடுக்கிறது?

சி: தூரினால் அதாவது உத்பத்தி ஸ்தானத்தால்.

கு: அதல்லாமல் தாவரத்தினுடைய கிளைகளுக்கோ அதன் குச்சிகளுக்கோ, அக்ரம் அதாவது முனைக்கோ, தண்ணீரோ, உரமோ, அதாவது எருவோயிட்டால் பிரயோசனப்படுகின்றனவா?

சி: இல்லை.

கு: என்ன காரணம்?

சி: அதனுடைய தூரில்போடாததனால்.

கு: ஆனால் அவைகள் ஆகாரம் முதலியபவை எடுக்கிறது எதனால்.

சி: அதனுடைய மூலமாயிருக்கின்ற தூருகொண்டு.

கு: நீர் சொல்லும் பிரகாரம் நம்முடைய உத்பத்தி ஸ்தானம் மலத்துவாரமாயிருந்ததானால் அதனால் ஆஹாரம் எடுக்கவும், தண்ணீர் குடிக்கவும் நமக்கு முடியுமா?

சி: முடியாது.

கு: என்ன காரணம்? நம்முடைய மூலமாயிருக்கின்ற தூர் மலத்துவாரமாயிருந்ததானால் அதனால் அல்லவா நாமும் ஆகாராதிகள் எடுக்கவேண்டியது?

சி: ஆம்! அப்படிச் செய்வதற்கு நம்முடைய மூலமாயிருக்கின்ற தூர் அதல்லாததனால் முடிகிறதில்லை.

கு: ஆனால் நாம் ஆகாரம் எடுக்கிறதும், தண்ணீர் குடிக்கிறதும் எதனால்?

சி மூலமாயிருக்கின்ற சிரசினுடைய ஒரு பாகமான

மூகத்திலுள்ள வாயைக்கொண்டு.

கு: மூலம் என்பது கிழங்கு அதாவது உத்பத்திஸ்தானம். அது அவனவனுடைய சிரசாகும். அவனவனுடைய சிரசிலிருந்தாகும் எல்லா உத்பத்திகளும். அதுகொண்டு சலித்துக் கொண்டிருக்கின்ற சகல ஜீவன்களுடைய தூரும் மேல் பக்கத்திலிருக்கின்றது. அது சிரசாகும். அதுகொண்டு மூலாதாரம் முதலான எல்லா ஆதாரங்களும் அடங்கியிருக்கிறது சிரசிலாகும். நீங்கள் சொன்ன பிரகாரத்தில் அல்ல. மூலாதாரமென்பது. மூலம் + ஆதாரம். மூலம் = உத்பத்தி, ஆதாரம் = ஸ்தானம். அதனுல் உத்பத்தி ஸ்தானம். அந்த உத்பத்தி ஸ்தானம் நான் என்கிற அகங்காரமாயிருக்கின்ற நிலைமைக்காகும். அந்த நிலைமைக்கு ஆதாரம் மனமாகும். அந்த மனதிற்கு ஆதாரம் ஜீவனுகும். அது எதனுலென்றுல் ஜீவனில்லாவிட்டால் என்னவாகும்?

சி: பிணமாகிறது.

கு: ஒரு பிணத்திற்கு இந்த எவ்விதமான நிலைமையுமுண்டோ?

சி: இல்லை.

கு: காரணம் என்னவாகும்?

சி: ஜீவன் இல்லாததனுல்.

கு: ஜீவனில்லாவிட்டால் ஆதாரங்களோ, உலகமோ, ஏதாகிலுமுண்டா?

சி: ஒன்றுமில்லை.

கு: ஆனுல் ஜீவனிருக்கிற எல்லா சமயங்களிலும் இக்காணப்படுகிற உலகுண்டோ?

சி: இல்லை, தூங்கும்பொழுது இவைகளொன்றும் அறிவதோ, காண்பதோ இல்லை.

கு: ஆனுல் இவைகள் எல்லாம் எந்தச் சமயத்திலாகும் உண்டாகின்றது?

சி: தூக்கம் விழித்தபொழுது.

கு: அப்பொழுது என்னவாகும் உண்டாகியது?

சி: நான் என்கிற அகங்காரம்.

கு: அந்த அகங்காரம் எங்கிருந்து உண்டாயிற்று?

சி: மனதிலிருந்து.

கு: ஆனுல் ஜீவன், மனம், அகங்காரம் என்கிற மூன்று நிலைமைகள் நமக்கு உண்டு. இவைகளில் ஒவ்வொன்றுக்கும் ஜாக்கிரதை, சுழுப்தி, சொப்பனம் என்கிற மூன்று நிலைமைகளுமுண்டு. அதில் நானென்கிற அகங்காரத்திற்குள்ள மூன்று நிலைமை, ஜாக்கிரதை, சுழுப்தி, சொப்பனம் இவைகளாகும். இதைப்பற்றி ஏழாம் அத்தியாயத்தில் விவரித்திருக்கின்றது.

ஆனால் அதுகள் அகங்காரத்திற்குள்ள நிலைமைகளாகும். அவைகளிப்பொழுது நாமனுபவிக்கின்ற ஜாக்கிரதை, சுழுப்தி, சொப்பனமாகும். உண்மையில் சொப்பனம், சுழுப்தி, ஜாக்கிரதை என்றாகிறது. அதாவது சொப்பனத்தினுடையவும் ஜாக்கிரதையினுடையவும், மத்தியில் சுழுப்தி. அப்பொழுது முன் சொப்பனமும், அதன் பிறகு சுழுப்தியும், அதன் பிறகு ஜாக்கிரதையுமாகிறது. அது பிரகாரம் உலகத்தில் அனுபவம் காணுகிறதில்லை. முதல் சுழுப்தியும், அதாவது தூக்கமும், அதற்குப் பிறகு அந்தத் தூக்கத்தில் சொப்பனமும், அந்தச் சொப்பனத்தினுடைய கடைசியில் திடீரென்று தூக்கம் விழித்து ஜாக்கிரதையுமாகவும் காணுகிறது. இதெல்லாம் அகங்காரத்திற்குள்ளதாகும். ஏனென்றால் இப்பொழுது நாமனுபவிக்கிறது நானென்று சொல்லுகிற அகங்காரத்திற்குள்ள ஜாக்கிரதையாகும். அது மனதினுடைய தொழிலாகும். இப்பொழுது நாம் தூக்கமென்று சொல்லுகிறது அகங்காரத்திற்குள்ளதாகும். அது மனதினுடைய தொழில் விட்ட அதாவது வேலை விட்ட சமயம். அந்தத் தூக்க சமயத்தில் காணுகின்ற சொப்பனமும் அகங்காரத்திற்குள்ளதாகும். அது மனம் தன்னால் செய்யப்பட்ட தொழிலைக் குறித்து ஆலோசிக்கின்றதாகும். இந்த மூன்று நிலைமைகளும் நாம் இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இப் பிரகாரம் அகங்கார மூலமாய் அனுபவித்துக் கொண்டிருக்கிற இந்த மூன்று நிலைமைகளையும் விட்டு நானென்கிற தன்னுடைய உத்பத்தி ஸ்தானமாகிய மனதில் போய்ச் சேருகின்றதாகும் முதல் ஸ்தானம். அதாகும் உத்பத்திஸ்தானம். அதற்காகும் மூலாதாரம் என்று சொல்லுகிறது. அப்பொழுது நானென்கிற அகங்காரம் தன்னுடைய உத்பத்தி ஸ்தானமாகிய மனதில் போய்ச் சேருகின்ற சமயம். அது மனதினுடைய சொப்பன நிலைமை. அது எப்படியென்றால், அகங்காரம் சொஸ்தானத்தில் அதாவது வெளியினுள்ளில் ஏதாவது சங்கல்ப்பிக்கின்றதற்கோ, பிரத்யேகமாய், அதாவது தனியாய் அறிவதற்கோ, கிரஹிப்பதற்கோ, அதாவது தெரிவதற்கோ மனதிற்கு முடிகின்றதில்லை. ஸ்தாபனைச் சக்தியெல்லாம் நானென்கிற அகங்காரத்திற்கே இருக்கின்றதனால் அந்த அகங்காரம் தன்னுடைய உத்பத்தி ஸ்தானமாகிய மனதில் அடங்கின சமயம் பாகியத்தில் அதாவது வெளியினுள்ளில் யாதொன்றும் தெரிவதற்கு மனதிற்கு முடிகிறதில்லை. இது மனதினுடைய சொப்பனமாகும். அதாவது நான் என்கிற அகங்காரம் உத்பத்தி ஸ்தானத்தில் சேருகின்றதனால். இந்த நிலைமைக்காகும் மூலாதாரமென்று சொல்லுகிறது.

சுவாதிஷ்டானம் என்பது தன்னுடைய அடிஸ்தானம். அதாவது சுவஸ்தானம். சுவ+ஸ்தானம். சுவ=தான் அதாவது தன்னுடைய, ஸ்தானம்=இருப்பிடம். அதாவது தன்னுடைய இருப்பிடம். எப்பொழுது அகங்காரம் மனதில் அடங்குகின்றதோ, அது மனதிற்கு தொழிலில்லாமல், தன்னுடைய சொஸ்தானத்தில் பிரவேசிக்கின்ற சமயம். அந்த அவஸ்தை மனதினுடைய சுழுப்தியாகிறது. அதெப்படியென்றால் அப்பொழுது மனதிற்கு யாதொரு அறிவுமில்லாமல் ஒன்றுமில்லாதிருக்கின்ற நிலைமை. அது எவ்விதமெனில் நாம் இப்பொழுது பகல் என்று சொல்லுகின்ற சமயத்தில் வெளியிலிருந்து ஒரு வீட்டினுடைய அறையினுள்ளில் சென்றால் அப்பொழுது அதனுள்ளில் மிகவும் இருட்டாய் யாதொன்றும் அறியாத விதத்தில் ஒரு பிரமதை அதாவது திகைப்பு உண்டாகின்ற நிலைமையாகும். இது சர்வ ஜனங்களுக்கும் அனுபவமல்லவா? அந்தப் பிரகாரம் வெளியிலிருந்து அகங்காரமாயிருக்கின்ற நானென்கிற நிலைமை மனதில் சேருகிற சமயம் மனம் தன்னுடைய பாகிய விருத்தியெல்லாம் விட்டுத் தன்னுடைய சொஸ்தானத்தில் பிரவேசிக்கிறது. அச்சமயம் மனதிற்கு யாதொரு பிரகாசமோ, அறிவோ யில்லாமல் சுத்த இருட்டாய் ஒன்றும் அறியாமலிருக்கின்ற அவஸ்தையாகின்றது. அது மனதினுடைய சுழுப்தியாகின்றது. இதாகும் சுவாதிஷ்டானம் என்கிற நிலைமை.

மணிபூரகம் என்பது மனதினுடைய ஜாக்கிரதா அவஸ்தையாகின்றது. அதாவது மணி என்பது மனம். பூரகமென்பது நிறைப்பது. அப்பொழுது மணியாயிருக்கின்ற மனம் வேறொன்றும் இல்லாமல் ஜீவனோடு சேர்ந்து தானாகி நிறைகின்றது. அப்பொழுது அவ்விடம் ரொம்பவும் பிரகாசமாய் ஜொலிக்கின்றது. அது எப்படியென்றால் மேல் சொன்ன வீட்டினுடைய சிறிய ஒரு அறையின் உள்ளில் சென்றபொழுது முதலில் இருட்டாயும் அவ்விடம் கொஞ்ச நேரம் இருக்கும் பொழுது நல்ல பிரகாசமாகி அங்கிருக்கின்ற எல்லா நிலைமைகளும் சுகமாய்க் காணுவதும் அறிவதும் செய்கிறது. இது உலகத்தில் ஜனங்களுக்கு அனுபவம் இருக்கிறதாகும். அது பிரகாரம் மனம் சொஸ்தானத்தில் பிரவேசிக்கும் பொழுது முதலில் இருட்டாய்த் தோன்றுவதும், அந்த மனம் வெளியினுள்ளில் செல்லாமல் தன்னுடைய சொஸ்தானத்தில் அடங்கி நிறைந்த பொழுது அவ்விடம் நல்ல சுகத்துடன் வெளிப்பட்டுக் காண்பதும், அறிகின்றதும் செய்யும். இது மனதினுடைய ஜாக்கிரதையாகிறது. இதாகும் மணிபூரகம் என்ற நிலைமை.

அனுஹதம் என்பது, அனு+ஹதம். அனு=அக்கினி, ஹதம்=நாசம். அதாவது அக்கினி சொரூபமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிற மனம் தன்னுடைய உத்பத்தி ஸ்தானமாகிய ஜீவனில் லயிக்கின்றது. அப்பொழுது அது ஜீவனுக்கு சொப்பனமாகிறது. எப்படியென்றால் பிரகாசமாயிருக்கின்ற மனம், ஜீவனில் லயித்த சமயம், அதுவரையில் உண்டாயிருந்த சோபை அதாவது பிரகாசம் இன்னதென்று அறிவதற்கு முடியாமல் சொப்பன துல்லியமாயிருக்கும். இது ஜீவனுடைய சொப்பன நிலைமை. இதற்கு அனுஹதமென்று பெயர்.

விசுத்தி என்று சொல்லுவது, வி+சுத்தி. வி=விசேஷம் அதாவது அறிவு. சுத்தி=நிர்மலம். அதாவது அறிவு நிர்மலம் ஆகிறது. அப்பொழுது ஒன்றும் தெரியாத விதத்தில் யாதொரு அறிவுமில்லாமல் நிச்சலமாய் அதாவது சலனமில்லாமல் ஜீவன் மாத்திரமாயிருக்கின்ற நிலைமை. அந்த நிலைமை ஜீவனுடைய சுஷுப்தி. அந்த ஜீவனிலிருந்து உத்பத்தியாகிய மனதிலிருந்துண்டான எல்லா களங்கங்களும் நாசமாகி ஜீவனில் மனம் லயித்து, அந்த ஜீவன் மாத்திரமாய் ஒன்றும் அறியாமலிருக்கின்ற நிலைமையாகும் சுழுப்தி. இதாகும் விசுத்தி என்ற நிலைமை.

ஆக்ஞை என்பது ஜீவன் சிவனாகி உத்பத்தி ஸ்தானமாயிருக்கின்ற ஆனந்தத்தில் லயித்து, மற்றொன்றும் இல்லாமல் ஆனந்தித்துக் கொண்டிருக்கின்ற நிலைமை. அது ஜீவனுடைய ஜாக்கிரதை. அதற்காகும் ஆக்ஞை என்று பெயர். இந்தப் பிரகாரமாகும் ஷடாதாரங்களினுடைய நிலைமை. இதுவேயாகும் பிரம்மானந்தம். ஆனால் பிரம்மானந்தம் இன்னதென்று சொல்லித் தெரிவிக்க யாருக்கும் முடிகிறதில்லையென்றும் அதாவது பால் பாயஸம் சாப்பிட்டவருக்கு அதனுடைய ருசி' தெரிகின்றதல்லாமல் அதைச் சாப்பிடாதவருக்கு அதனுடைய ருசியைத் தெரியவோ, தெரியப்படுத்துவதற்கோ முடிகிறதில்லையென்றும் வேதாந்திகள் சொல்லி வருகிறார்கள். ஆனால் பிரம்மானந்தத்தைச் சொல்லித் தெரிவிக்க முடியும். அது எப்படியென்றால் சர்வ ஜீவிகளும் பிரம்மானந்தம் என்பதை அனுபவித்து வருகிறது. அதானது, தான் சதா உபஜீவனம் செய்து ஜீவித்திருப்பதற்கு வேண்டியதான தன்னுடைய சொந்த சொத்தைத் தான் தானே திருடி நசிப்பிக்கிறது. அதெப்படி என்றால் அந்தச் சொத்தைத் திருடுகிறதற்குப்போய் அதைத் தொடும் சமயத்தில் உண்டாகின்ற நிலைமையாகும் பிரம்மானந்தம்.

சி: சுவாமி! அவனவன் உபஜீவனம் செய்து ஜீவித்திருப்பதற்கு வேண்டியதான அவனவனுடைய சொந்தச் சொத்தை அவனவன் தானே திருடி நாசம் செய்வானா?

கு: ஆம் நாசம் செய்கிறான். உலகத்திலிருக்கிற சர்வ ஜீவிகளும் அவரவர் என்றென்றைக்கும் உபஜீவனம் செய்து ஜீவித்திருப்பதற்கு வேண்டியதான சொத்தை அவரவர் திருடி நாசம் செய்துகொண்டிருக்கிறதனாலாகும் செத்துப் போகின்றதற்குக் காரணமாகின்றது. அது எப்படியென்றால் இப்பொழுது உலகத்திலிருக்கின்ற சர்வ ஜீவிகளும் ரொம்பவும் ஆக்ரஹம் அதாவது ஆசைப்படுகின்றதும், ஆசைப்பட்டுக் கொண்டிருப்பதும், மைதுனத்திலாகும் அதாவது ஸ்திரீ புருஷ சேர்க்கைக்காகும். ஆனால் உலகத்தில் எவ்வித தொழில் செய்யும்பொழுதும் மனம் அதில் நில்லாமல் பின்னம் பின்னமாய் அதாவது விட்டு விட்டு ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால் ஸ்திரீ புருஷ சேர்க்கை சமயத்தில் மனம் யாதொன்றிலும் செல்லாமல் அதாவது காதுகளால் கேட்டறிவதற்கோ, கண்களால் பார்த்தறிவதற்கோ, மூக்கினால் முகர்ந்தறிவதற்கோ. நாவினால் ருசித்தறிவதற்கோ, தொக்கினால் அதாவது தோலினால் தொட்டறிவதற்கோ ஐந்துவிதமாய் வெளியினுள்ளில் செல்லாமல் ஜீவனோடு சேர்ந்து தன்னுள்ளில் அடங்கி தன்னுள்ளில் கூடி மேலும் கீழுமாய் நடனம் அதாவது கதாகதம் செய்து அதாவது கீழ் மேலாக சலித்து தன்னுடைய ஜீவசக்தி மேலே போய் பிரம்மரந்திரத்திலிருக்கின்ற சுக்கிலத்தைத் தொடுகின்ற சமயம் உண்டாகிற நிலைமை இன்னதென்று விவரித்துச் சொல்ல யாருக்காகிலும் முடிகிறதுண்டா?

சி: முடிகிறதில்லை.

கு: அதாகும் பிரம்மானந்தம். எப்படியென்றால் பிரம்மமென்பது சுக்கிலம். அந்தச் சுக்கிலமாயிருக்கின்ற பிரம்மத்தை ஜீவன் சென்று தொடுகின்ற சமயத்தில் மிகவும் சிறிய ஒரு நொடிப்பொழுது அதாவது இமைப்பொழுதிலுள்ள நிலைமை அதாவது இன்னவிதத்தில் என்று யாதொருவருக்கும் சொல்ல முடிகிறதில்லை. அதாகும் ஆனந்தம். இதற்காகும் ஆனந்தத்திலிருந்து உத்பத்தியாகிறதென்றும், ஆனந்தத்திலிருக்க வேண்டியதென்றும், ஆனந்தத்தில் லயிக்கவேண்டியதென்றும் சொல்லக் காரணம். ஆனால் இப்பொழுது உலகத்தில் ஆனந்தத்திலிருந்து உத்பத்தியாகின்றதல்லாமல் ஆனந்தத்திலிருக்கவோ, ஆனந்தத்தில் லயிக்கவோ செய்கிறதில்லை. காரணம் மேல்சொன்ன பிரகாரம் பிரம்ம சொரூபமாயிருக்கின்ற சுக்கிலத்தைத் திருடி நசிப்பிக்கின்றதனால் ஒன்றும் அறியாமல் அதோ கதியாய் நசித்துப் போகின்றதினாலாகும். அது கொண்டு மேல்சொன்ன பிரகாரம் உண்டாகிற ஆனந்தத்தில் ஜீவன் சென்று லயிக்கின்றதாகும் பிரம்மானந்தம். அப்பிரகாரம் பிரம்மசொரூபமாயிருக்கின்ற சுக்கிலத்தைப் பானம்

செய்து, லயித்து, என்றென்றைக்கும் உபஜீவனம் செய்து ஜீவித்திருக்கவேண்டிய சொத்து சுக்கிலமாகின்றது. அதை நாம் நினைக்காமல் நிமிஷ நேரத்தில் உள்ள சுகத்தை விரும்பி தான், என்றென்றைக்கும் உபஜீவனம் செய்து ஜீவித்திருக்க வேண்டிய தன்னுடைய சொந்த சொத்தைத் தானே திருடி நாசம் செய்கிறோம். அதனால் மேல்சொன்ன சம்போக சமயத்தில் எந்தப் பிரகாரத்தில் ஜீவன் நம் உள்ளில்தானே அடங்கி உள்ளிலேயே கீழும் மேலுமாய் நடந்து ஜீவன் சுக்கிலத்தை திருடப் போகின்றதோ, அதே பிரகாரத்தில் ஜீவன் உள்ளில் தானே கீழும் மேலுமாய் நடந்து மேலேயுள்ள பிரம்மமாயிருக்கின்ற சுக்கிலத்தில் லயித்தால் என்றென்றைக்கும் ஆனந்தமத்தனுயிருக்கலாம். இதற்காகும் "பிரம்மானந்தம்" என்று சொல்லுகிறது.

உலகவாசிகள் இதைத் தெரியாமலும், ஆலோசிக்காமலும், அவனவனுடைய சக்தியை வெளியினுள்ளில் விட்டுப் பல திலும், பலவிதத்திலும், பந்தப்படுத்தி அவைகளில் பிரமித்து நசித்துப் போகின்றார்கள். ஆனல் தன்னைத்தான் அறியவேண்டுமென்றும் உலகத்தில் சொல்லி வருகிறது. அவ்விதம் சொல்லி வருகிறதல்லாமல் தன்னைத்தான் எவரும் பார்க்கின்றதில்லை. தன்னைத்தான் அறியவேண்டுமானல், தன்னைத்தானே பார்க்கவேண்டும். தன்னைத்தான் பார்க்காமல் மற்று ஒவ்வொன்றினைப் பார்த்துக்கொண்டிருந்தால், தான் இன்னதென்று அறியாமல் நசித்துப் போகின்றார்கள். அதுகொண்டு உலகவாசிகளாகிய சர்வ ஜீவிகளும் அவனவனிலிருந்து உண்டாகின்ற சக்தியை அவனவனில் கூடி மேல்சொன்ன பிரகாரம் பிரம்மமாயிருக்கின்ற சுக்கிலத்தில் லயித்து, தானகி, தன் மயமாய்க் கைவல்லியத்தைப் பிராபித்து சதா ஆனந்தமத்தன்மார்களாயிருப்பதற்காக வேண்டி பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம்.

ஓம்.

சிதம்பரா வாஸா மகண்டமீஸம்
சதாசிவாம் ஸம் மனுஜாவதாரம்
சதா சிவாநந்த மஸேஷகாம
சதாபிரதாதா மகம்பஜாமி.

தோன்றிலகோம் குருகடாக்ஷ மதின்னுமேலா
பொன்றும் மஹாதுரிதவன் கடலே கடப்பான்
வன்னிச்சிடட்டே குருவின் கழலேவனும்கை
வந்தெத்திடட்டே புருஷார்த்த சதுஷ்கமெலாம்.

The M. L. J. (Branch) Press, Tirupuvanam T.D.R.—C. 5000.

பிழைத் திருத்தம்

அத்தியாயம்	பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	19	40	ா	ர்
2	21	32	கோ	கோ
2	23	36	சிருக்ஷ்டி	சிருஷ்டி
2	29	6	யிருந்ததல்ல	யிருந்தல்ல
	,,	25	முற்றுப்புள்ளி	கேள்விக்குறி
3	47	26	கழிக்கவும்	கமிக்கவும்
4	56	19	முற்றுப்புள்ளி	கால்புள்ளி
,,	64	35	ஸ்வர	ஈஸ்வர
,,	66	40	ஜாதி ஒரு	ஒரு ஜாதி
,,	68	8	இவைகளிலிருந்த தெல்லாம்	இவைகளிலிருந் தெல்லாம்
5	78	1	காலியாண	காலியான
,,	92	24	த்னில்	தன்னில்
7	122	9	முற்றுப்புள்ளி	கால்புள்ளி
8	130	12	அதெல்லாமல்	அதல்லாமல்
12	161	4	மயக்கிச்	மயங்கிச்
13	164	37	பிரம்மாக்திரம்	பிரம்மாஸ்திரம்
,,	165	38	செல்லுகிறது	சொல்லுகிறது
,,	166	10	விதத்திலிருந்து	வித்திலிருந்து
,,	168	5	காப்பமும்	கர்ப்பமும்
,,	,,	,,	பழுதது	பழுத்து
,,	,,	23	பூதது	பூத்து
,,	170	9	மானமாகிய	மனமாகிய
14	176	23	விரவ	விரல்
,,	180	23	முற்றுப்புள்ளி	கால்புள்ளி
16	189	24	பரமாத்துமாமான	பரமாத்துமாவான
,,	,,	30	ஸ்திதி	ஸ்திதி=
,,	201	12	அககுழல்	அக்குழல்
18	213	24	தன்னிப்	தன்னில்
,,	,,	25	சல்	சப்
,,	215	23	மரனித்து	மானித்து
,,	,,	24	யாதசேவை	பாதசேவை
19	217	33	லம	லம்
21	224	5	அத்திபாத்தில்	அத்தியாயத்தில்
22	228	7	ஷடாதாரங்கள்	ஷடாதாரங்கள்
	232	9	முற்றுப்புள்ளி	கால்புள்ளி
	233	39	முற்றுப்புள்ளி	கால்புள்ளி



HIS HOLINESS

Swami Sivananda Paramahamsa.